உ

ஓம் நமசிவாய



"பாடும் பணியே பணி"

# அமுத நாதம்

பன்னாலை – தெல்லிப்பளை

திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை

(1939 – 2019)

18.01.2020

பொதுசன நூலகம்
20 FEB 2020
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் நமசிவாய
"பாடும் பணியே பணி"




பொதுசனநூலகம்
20 FEB 2020
மாநகரசபை
யாழ்ப்பாணம்

# அமுத நாதம்

பன்னாலை – தெல்லிப்பளை
திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை
(1939 – 2019)
18.01.2020

9599(P)
PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சரம் பாலசுப்பிரமணியர் ஆலயம்



வல்லுவத்தை வைரவர் ஆலயம்



குருநாதர் ஆலயம்



வீரபத்திரர் ஆலயம்



திருச்சரம் கணபதீஸ்வரம் ஆலயம்



பன்னாலை சிவபூதவராயர் ஆலயம்



சாமுண்டாதேவி சமேத ஞானவைரவர்



வரத்தலம் கற்பக விநாயகர் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடியார் தொண்டர் மடாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபை உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நிர்வாக சபை

| | | |
|---|---|---|
| போசகர் | :- | திரு.க.நடராஜர் |
| | | திரு.சி.வேலாயுதம் |
| தலைவர் | :- | திரு.க.ஜெயக்குமார் |
| செயலாளர் | :- | திரு.க.பவிவரசு |
| உபதலைவர் | :- | திரு.க.சிவலிங்கம் |
| உபசெயலாளர் | :- | திரு.க.மகேஸ்வரன் |
| பொருளாளர் | :- | திரு.ந.துரைரத்தினம் |
| உறுப்பினர்கள் | :- | திரு.வி.பாலசுப்பிரமணியம் |
| | | திரு.ந.திருலோகநாதன் |
| | | செல்வன் கை.லோகிதாஸ் |
| | | திருமதி ஈ.இந்திராணி |
| | | திருமதி பா.கலாவதி |
| | | திரு.மு.கிரிதரன் |
| | | திரு.இ.கணேசதாசன் |
| | | திரு.க.செல்வரூபன் |

# அமுதவிழாக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.இ.ஜெயக்குமார் |
| செயலாளர் | :- | செல்வி கை.ரஜீதா |
| பொருளாளர் | :- | திரு.ந.துரைரத்தினம் |

# மலர்க்குழு

திரு.நி.பாபுதரன் (மலராசிரியர்)
திரு.இ.கணேசானந்தன்
திரு.செ.சதீஸ்குமார்
திரு.சு.கணேசதாசன்
திருமதி ஈ.இந்திராணி
திருமதி கி.சுபோதினி
செல்வி கை.ரஜீதா

# நிதிக்குழு

திரு.ந.துரைரட்ணம்
திரு.மு.கிரிதரன்
திரு.க.சிவலிங்கம்
திரு.பா.கலாவதி
திருமதி மா.கோமதி
செல்வி இ.ஸ்ரீவாணி

# பரீட்சைக்குழு

திரு.நி.பாபுதரன்
திருமதி ஈ.இந்திராணி
செல்வி கை.ரஜீதா
திருமதி து.வற்சலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


❖ மலராசிரியரின் உள்ளத்திலிருந்து 06
❖ ஆசியுரை 07 - 11
❖ வாழ்த்துச்செய்தி 12 - 15
❖ சபைத் தலைவர் உள்ளத்திலிருந்து... 16
❖ திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபையின் வரலாற்றுப் பார்வை 16 i - 16 iii
❖ பன்னாலையூர் தல வரலாறுகள் 17 - 32
❖ மடங்களும் ஆதீனங்களும் 33 - 34
❖ உடம்பினை வளர்க்கும் உபாயம் 35 - 38
❖ மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதி 39 - 42
❖ யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராணம் கலாசாரம் - ஒரு மீள் வாசிப்பு 43 - 49
❖ அமுதால் உன்னைப் பெறலாமே 50 - 52
❖ வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும் 53 - 57
❖ எல்லோருக்குமாக கல்வியின் இலட்சியம் 58 - 62
❖ சமயம் காட்டிய விஞ்ஞானம் 63 - 67
❖ விஞ்ஞானத்தின் மூலம் சைவசமயமே 68 - 71
❖ திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் தொன்மம் 72 - 85
❖ சைவ சித்தாந்தத்தில் பதிக் கோட்பாடு 86 - 89
❖ ஈழத்துக் கவிதை மரபில் சோமசுந்தரப் புலவர் 90 - 94
❖ சிவனுக்கு உகந்த திருவெம்பாவை விரதம் 95 - 97
❖ ஆடும் பெருமானின் ஆனந்த தாண்டவம் 98 - 100
❖ ஆதிரை நாளில் சிவன் 101 - 103
❖ சைவசமயம் வழி காட்டும் ஆன்மீக வாழ்வு 104 - 107
❖ அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம் 108 - 111
❖ இந்து அறநெறிப் பாடசாலைகளின் முக்கியத்துவம் 112 - 114
❖ வாழ்வியல் இந்துவாய் இருந்திடு மானிடா.... 115
❖ மகிழ்ச்சியான உலகை உருவாக்குவோம் 116 - 117
❖ ஆரோக்கிய வாழ்வு தரும் யோகக்கலைக்கு... 118 - 123
❖ பாவங்களின் ஊடாக ரஸங்களின் வெளிப்பாடு 124 - 125
❖ வேண்டாம் இக்கவலை 126 - 127
❖ ஜீவகாருண்யம் 128 - 129
❖ சக்தி வழிபாடு 130 - 131
❖ பஞ்ச (5ன்) மகிமை 132 - 133
❖ சமயநெறி 134
❖ பெரியபுராணம் 135
❖ நடராஜப் பெருமானும் ஆருத்ராதரிசனமும் 136 - 138



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தாபகர்



அமரர் கா.கதிர்காமத்தம்பி

திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை
ஆரம்பித்து வைத்தவர் 1939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...

பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையின் எண்பதாவது ஆண்டு நிறைவினை அமுதவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவினை மெருகூட்டிச் சிறப் பிக்கும் வகையில் சபையின் தோற்றமும் வளர்ச்சியும் செயற்பாடுகளும், அறநெறி பாட சாலையின் செயற்பாடுகளும் வளர்ச்சியும், சாதனைகளும், மெய்யறிவாளர்கள் பேரறி வாளர்கள் சைவ சமயக் கட்டுரைகளைச் சமூக நோக்குடன் எதிர்கால சந்ததியினருக்கு வெளிப் படுத்தும் சிறந்த பொக்கிசமாக "அமுதநாதம்" எனும் மலரினை தங்கள் கரங்களில் புன்னகை பூத்துச் சிவமணம் பரப்ப மலர்க்குழுவினர்களாகிய நாம் பிரவேசித்துள்ளோம்.

பன்னாலையம்பதியின் பவளமேனியழகன் தில்லைக் கூத்தன் ஆடும் சிவனடியார் மடம் முதலாய தலங்கள் ரிஷிகள், முனிவர் குகை கொண்டு வாழ்பதி இடங்களும் மூத் தோர்கள் சபையோர்கள் வழி இன்றுவரை பேணும் ஒழுங்குகள் அமைவுகளை ஒளிரச் செய் யும் நாதமாகும்.

மேலும் பவள மேனியழகன் உடுக்கோசை போல், தீச்சுடர்போல் ஒலி ஒளியாய் அருளாசியுரைகள், வாழ்த்துரை வாழ்த்துப்பாமாலைகள் ஒளிரும் நாதமாகும்.

நாதனின் புகழ் திருவாசகத்தை நுண்ணறிவோடு கூறிடும் பக்தி நெறி, ஆசாரம், வாழ்வியல், சைவ சித்தாந்தம் எனும் நோக்கில் பேரறிவாளர் ஒளிரச் செய்த நாதமாகும்.

அறத்தின் வழி அறநெறிப் பாடசாலையின் கல்விக்கலை, சாதனைகள் அனைத்தின் நிழல்களைத் தாங்கிய நாதமாயும், வர்த்தக பெருமக்களினால் விளம்பரங்களை வாரி வழங்கியிட்டு, மதிப்பீட்டுரை வழங்கிய அறிஞர்களுக்கும் முதல்ப் பிரதியையும், சிறப்புப் பிரதிகளையும் பெற்றுக் கௌரவித்த தனவந்தார்கள் அனைவருக்கும் அன்பிற்கும் கடமைக்கும் உரியவனாவேன்.

இப் பெருங்காரியத்தினை ஆக்குவதற்கு என்னுடன் தோளோடு தோள் நின்ற மலர்க்குழுவினர்க்கும், அமுதவிழா குழுவினர்க்கும் நிர்வாக சபையினர்க்கும் முதுபெரும் புலவர்கள், குருமகா சந்நிதானம், குருமார்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மெய்யறிவாளர்கள், பணிப்பாளர், ஆசிரியர்கள் முதலான அறிஞர்கள் நிழல்படங்களைச் சேகரித்து தந்தோர்கள் வர்த்தகத் தனவந்தர்கள் அனைவருடைய செல்வக்கரங்களோடு சிந்தனை முத்துக்களை "அமுதநாதம்" எனும் மலரை சிறந்த முறையில் வடிவமைத்துப் படிப்போர் கேட்போரை சிவநெறிக்கு இட்டுச் செல்ல செய்த எவகிறீன் அச் சகத்தினர் முதலான அனைத்து நல் உள்ளங்களிற்கும் தில்லைக் கூத்தனின் திருவருள் கிடைக்க பிரார்த்திப்பதோடு என் உள்ளம் கனிந்த பலகோடி நன்றி கள் கூறி மகிழ்கிறேன்.

"நமச்சிவாய வாழ்க! நாதன்தாழ் வாழ்க"

**திரு. "செஞ்சொற்சுடர்" க.நித்தியபாபுதரன்**
**(அமுதவிழாக்குழு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமுதவிழாக்குழு உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமுதநாதம் மலர்க்குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
# ஆசியுரை



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

சிவநேயச் செல்வர்களே!

"நாங்கள் பெருமானைப்பாடி நலன் நிகழப்..... என" திருவெம்பாவை பதிகத்தினை மாணிவாசகர் அருளியதன் மணி வார்த்தையினை சிவனடியார்கள் மார்கழி மாதத்தில் பாடி நலன் பெற்று வருகின்றனர். அவ் வழி ஆண்டுதோறும் திருவெம்பாவை காலத்தில் சிவநெறியூராம் பன்னாலைச் சிவபக்தர்கள் 'அதிகாலையில் துயில் எழுந்து திருப்பள்ளியெழுச்சியுடன் திருவெம்பாவை பாடல்களை வீதிகள் தோறும் பாடிப் பரமன் பாதம் வணங்கு கிறார்கள்.

இச்சிவநெறியில் சிறுவர்கள், பெரியோர்கள், முதியோர் என்னும் வேறுபாடு இன்றி திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனைச் சபையாய் வாக்கும் வாழ்வும் ஒன்றிச் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து ஓதுவார்கள். சிவனருள் பெற்றோரே ஆவார்கள். அந்நிலையில் மணிவாசகர் கூறுவது போல்,

"இன்னிசைவீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்...." என்பதற்கு அமைய சங்கு வாத்தியம், சேமக்கலம், மணியோசை அதிகாலையில் ஒலிக்கச் செய்து பரமன் புகழ் பாடுதலால் பஞ்சபூதம் புனிதம் அடைந்து, பீடைகள் நீங்கி, பகைகள் விலகி சிவபொலிவு நிறைந்திடும் என்பர். இறுதிநாள் நடராஜர் தரிசனம் அருத்தரா தரிசனம் ஆகும். இதனை ஞானசம்பந்தர் கூறுகிறார்.
"ஆதிரைநாள் காணாது போதியோ பூம்பாவை"

என்பதன் வழி நாமெல்லோரும் திருவாதிரை தரிசனம் கண்டு எற்றைக்கும் திருவருள் உடையோம் என வாழ வேண்டும். அந்நிலையில் இச்சபையின் பொன்விழா, வைரவிழா பவள விழா நிகழ்வுகள் தம்பணி சிறந்தோங்கி வாழ அமுத ஆசார சீலர்களாய் சிவநெறி தழைத்திட இச்சபைக்கு தொண்டாற்றும் தொண்டர்களும் பல்லாண்டு காலங்கள் இன்னமும் நிலைபெற பரமனின் திருவருள் கிடைத்திட என் அருளாசி நிறைந்திடத் தில்லைக்கூத்தனை வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதவிழாக் காணும் திருவெம்பாவைச் சபை



**சிவஸ்ரீ சதாசிவசுகுமாரக் குருக்கள்,**
**ஸ்ரீ நீலாயதாக்ஷி ஸமேத ஸ்ரீகாயாரோஹண**
**தேவஸ்தானம், திருநெல்வேலி.**

ஆதியும் அந்தமும் இல்லா ஆடல் வல்லானின் திருவடிகளைப் போற்றிப் பணிந்து சீர்பூத்த பன்னாலைப் பதியினிலே சிறப்பாகச் செயற்பட்டு வரும் பன்னாலை திருவெம்பாவைச் சபை அமுதவிழாக் காணும் இந்நன்நாளிலே தொண்டர்களின் சமயப்பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்குவதோடு சைவ சமயப் பாரம்பரியங்கள் அகில உலகு எங்கும் பரவ வேண்டு மென இறைவன் திருவருள் துணைகொண்டு எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

இந்தச் சபையினது, திருவெம்பாவைக் காலங்களில் பண்டைய மர பின்படி சங்குநாதம் சேமக்கலவாத்தியம், மணியோசையோடு திருப்பள்ளி யெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியவாறு, அதிகாலை வேளை யிலே கிராமத்தில் உள்ள ஆலயங்கள் தோறும் ஊர்வலமாகச் சென்று பக்தி மணம் கமழச் செய்துவருவது இன்றும் நடைபெறுகின்றது. இதோடு நின்று விடாமல் திருவெம்பாவை பூர்த்தி நாளாகிய மார்கழித் திருவாதிரை நன் நாளில் பன்னாலை சிவனடியார் தொண்டர் மடாலயத்தில் எழுந்தருளியிருக் கும் சிவகாமசுந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பர நடராஜப் பெருமானுக்கும் மணிவாசகப் பெருமானுக்கும் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து மாணிக்க வாசக சுவாமிகளை கிராமப் பிரதக்ஷ்ணமாகப் பன்னாலை ஸ்ரீ சிவபூதவராயர் ஆலயத்தைச் சென்றடைந்து விஷேட பூஜை வழிபாடுகள் செய்து வருவதும் திருவெம்பாவைச் சபையின் பணிகளில் மிகச் சிறந்த பணியாகும். திரு வெம்பாவைக் காலத்தில் சபை அங்கத்தவர்களோடு கூடிச் சென்று பாடல்கள் பாடிவரும் சிறுவர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களுக்குப் பரிசுப்பொருட் களை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க தொண்டாகும்.

எங்கெல்லாம் இறைபணியாளர்கள் நிறைந்துள்ளார்களோ அங்கெல் லாம் இறைவனின் திருவருளும் நிறைந்திருக்கும். மிளிர்ந்துவரும் தங்கள் சபையினரின் பணியால் மக்கள் மத்தியில் சாந்தியும் சமாதானமும், அன்பும் அறமும், சமய அறிவும் குருபக்தியும் தெய்வபக்தியும் வளர எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதங்களைப் பணிந்து நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**"வாழ்க தொண்டர் வளர்க நின்பணி"**

**"சுபமஸ்து"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீர்திருநாள்
# அமுதவிழா வாழ்த்துக்கள்



**சிவஸ்ரீராம் சண்முகானந்தக் குருக்கள்**
**பிரதம குருக்கள் திருஷீச்சரம்**
**தர்மாதினகர்த்தா.**

திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை பன்னாலையம்பதியிலே முத்திரிஷிமான் காலமீறாக சிவனடியார் மடத்திலிருந்து மிக அருகேயுள்ள திருஷீச்சரம், வரஸ்தலம் பிள்ளையார், சிவபூதவராயர் ஆலயம், வயிரவர் ஆலயம் ஆக பன்னாலைம்பதியை சூழவுள்ள பல ஆலயங்கள் ஊடே மார் கழித்திங்கள் மலரும் வேளையில் அதிகாலை எழுந்து பன்னாலையம் பதியை வலமாக வந்து திருவெம்பாவை திருவாசகம் ஓதுவாரும் பல சிவனடி யார் கூட்டத்துடன் கலந்து வருகின்ற காட்சி வருடா வருடம் மார்கழியில் விழா கொண்டாடுவார்கள். அறநெறிகள் மூலம் சைவச்சிறார்களுக்கும் பஜனை செய்வோர்களுக்கும் திறமைச் சித்தியெய்தியவர்களுக்குமாக பற்பல பரிசில்கள் வழங்கி வருகின்ற காட்சியும் ஆக்கமும் ஊக்கமும் ஒருங்கே நிகழ்கின்ற வரலாற்றின் மிக முக்கியத்துவம் விளங்க, பன்னாலையம் பதியிலே தமிழும் சைவமும் தழைத்தோங்கி விளைகின்ற புண்ணிய பூமியாகும். இந்தப் பூமியிலே சிவனுய்யக் கொண்கின்றவாறு எண்பதாவது அகவையில் அமுதவிழா கொண்டாடுகிறார்கள் என்றால் நம்முன்னோர் கண்கண்ட தெய்வமாக வணங்கிய வாழ்த்தொலிகள், சங்கநாதம் முழங்க, மணியோசை சேமங்கல ஒலியுடன் தீபங்கள் ஏற்றி அன்றுமுதல் இன்றும் எந்நாளும் பொன்னாளாக விளங்க திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபையினர்க்கு திருஷீச்சரப் பெருமான் கிருபாகடாட்சம் நல்க வாழ்த்துகின் றோம். எமது நல்லாசிகளும் உரித்தாக வாழ்த்துகின்றோம். இவ் வையகத் தில் அமுதா விழா புதுப்பொலிவுடன் திகழ வாழ்த்துகின்றோம்.

**"வாழ்க இவ்வையகம் வாழ்க"**
**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவமுதவிழா காணும்
# திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபையினர்க்கு
# குருவருளும் திருவருளும் நல்லாசிகள் உரித்தாகட்டும்



திருவீச்சரம் இந்து தர்மஸாஷ்திரிகள்
வாஸ்தவ நிபுணர் அன்பர் ஷர்மாஜீ
**ஸ்ரீ மஹாகணபதீஸ்வரம்,**
பன்னாலை, தெல்லிப்பழை

சைவத் தமிழ் விளங்கும் செந்தமிழ் நாடாம் பன்னாலையம்பதியிலே ஆண்டாண்டு காலங்காலமாகத் திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை யானது பன்னாலை எனும் திருவூரை திருவாசகத்தேனமிர்தத்தால் குளிர வைத்து இவ்வூர்க் கிராமங்கள் தோறும் அதிகாலையில் எழுந்தருளி தெய்வீகத் தலங்கள் ஈறாக கொட்டும் மழையிலும் பனியிலும் நனைந்துவரும் பக்தர்கள் சிவனடியார்கள் கூட்டங்கூட்டமாக கிரிவலம் வந்தருளும் காட்சியும் வைகறையில் திருவெம்பாவை ஓதுவார் காட்சியும் திருவாசகம் முற்றோதல் காட்சியும் மார்கழி மாதம் முழுவதும் ஓதுவார்கள் மார்கழி பூஜை முதலாக தெய்வீகம் மலரும் காட்சியும் ஆதிரை நன்னாளில் திருபொன்னூசல் பாடி திருத் தில்லைக் கூத்தன் எழுந்தருளி உலாவரும் காட்சியும் பன்னாலையூர் எங்கனும் மக்கள் தரிசனம் செய்தும் திருப்பாசுரம் ஓதிமாகேஸ்வரபூஜைகள் செய்தும் சிறப்புற இறையருளாசிகளுடன் வாழ்கின்றவூர் வளருகின்றவூர் பன்னாலையம்பதி யாகும்.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" எனும் தெய்வீகப் புலவர் நல்லாசிகளுடன் அமுதவிழாக் காணும் திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபையினர்க்கு நல்வாழ்த் துக்களுடன் எந்நாளும் பொன்னாளாக விளங்க வாழ்த்தி வணங்கி நல்லாசி களுடன் அமுதவிழா சிறப்புற மலர்வெளியீடாக எமது நல்லாசிகள் யாவர்க்கும் உரித்தாகும்.

எண்பதாவது அகவையில் பன்னாலை திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனைசபை அமுதவிழா பொலிவுற வாழ்த்துகின்றோம். அறம் பொருளாகிய இன்ப வீட்டில் வாழவேண்டும் வளரவேண்டும் அவர்கள் அறப் பணி மேலோங்க எல்லாம் வல்ல ஆடல் வல்லான் தில்லைக் கூத்தன் வாயிலாக அவன் அருளாலே அவன்தாழ் வணங்கி வாழ்த்துகின்றோம். தென் னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க வளமுடன் வாழ்க.

**நன்றி வணக்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



**பிரமஸ்ரீ ம.மகேந்திரசர்மா**
**பன்னாலை வர்த்தலம்**
**கற்பக விநாயகர் தேவஸ்தானம்.**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" சைவமும் தமிழும் தழைத்தோங்கும் எமது பன்னாலைக் கிராமத்திலே, மக்களிடையே ஆன்மீக சிந்தனையும் ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் உணர்த் தும் நோக்கிலே 1939 ஆம் ஆண்டு திருவெம்பாவைச் சபையானது ஆரம்பிக் கப்பட்டு எண்பதாவதாண்டிலே கால் பதித்து அமுதவிழா தனைக் கொண்டாடு வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இச் சபையானது, திருவெம்பாவைக் காலத்திலே சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை கூட்டுப் பிரார்த்தனையிலே ஈடுபடச் செய்து இக் கிரா மத்தையே ஓர் ஆன்மீகம் சார்ந்த கிராமமாக மாற்றி விடுகிறது இதனால், மக் களிடையே ஆன்மீக சிந்தனை கடவுள் பக்தி என்பன மேலோங்குகிறது. திரு வெம்பாவை இறுதி நாள் அதாவது மார்கழித் திருவாதிரை தினத்தன்று கூட் டுப் பிரார்த்தனையில் ஈடுபட்ட அனைவரையும் கௌரவிக்கும் முகமாக பரிசில் களை வழங்கி மக்களிடையே இறைநம்பிக்கையை வலுவடையச் செய்கிறது.

திருவெம்பாவை இறுதி நாள் சிவனடியார் தொண்டர் மடாலயத்தில் காணப்படும் மாணிக்கவாசக சுவாமியின் திருவுருவச் சிலையை எடுத்துச் சென்று சிவபூதவராயர் ஆலயத்திலே மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேட பூஜைகள் இடம்பெறுவதுண்டு. பத்து நாட்களும் கூட்டுப் பிரார்த்தனையுடன் வீதியுலா வரும் அடியவர்கட்கு கிராமத்து மக்கள் ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு வீடாக பிரசாதங்களை வழங்குவது வழக்கமாகும்.

இச் சபையானது எண்பது ஆண்டுகள் தனது சேவையினைத் தளராது ஆற்றுவதற்கு முன்நின்று உழைத்த திருவெம்பாவைச் சபைத் தொண்டர்கள் அனைவரிற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு சபையானது மென்மேலும் பல ஆண்டுகளை கடந்து இன்னும் பல விழாக்களைக் காண வேண்டும் எனவும் இச் சபையின் புகழ் எட்டுத் திக்கிலும் பரவ வேண்டும் என எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றேன்.

**"சர்வேஜனகா சுகினோ பவந்து**
**சமஸ்தசன் மங்கலானிபவந்து"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப்பிள்ளை,**
**தலைவர், அதிக இலங்கைச் சைவப்புலவர் சங்கம்.**

"பன்னாலை - தெல்லிப்பளை திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனைச் சபை ஆரம் பித்து இவ்வருடம் எண்பது ஆண்டுப் பணி நிறைவில் பூரித்து மலர் வெளியிட்டு விளங்குவது யாவர்க்கும் மகிழ்ச்சியையும் பெருமையையுந் தருகின்றது.

மனித வாழ்வில் வெள்ளிவிழா மணிவிழா வைரவிழா கண்டு "அமுத விழா" காண்பது அருமையில் அருமையாம். ஆயிரம் பிறைகண்டபெருமை இதற்கு அரண் செய்கின்ற தென்பர்.

1939ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பெற்ற இச்சபை அன்று தொட்டு இன்றுவரை பெரியோர்களால் வழி நடத்தப்பெற்று எதிர்காலச் சந்ததிகளாய் சிறார்களையும் வழிவழியாளாய்ச் சமுதாயச் சிற்பிகளாக வாழவைக்கும் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றமை போற்றுதற்குரியது. பாராட்டுக்கேற்புடைத்து.

சைவப் பெருமக்களுக்கு மார்கழி மாதம் மிகச் சிறப்பானது. அம்புலத் தாடும் பெரு மானின் திருவாதிரைத் திருநாள் சிறப்புக்குரிய மாதம் இதுவே.

"ஆதிரை நாள் காணாது போதியோபூம்பாவால்" என்று ஞானசம்பந்தப் பெருமான் அருளியதை நினைவிற் கொண்டு சிறப்புணர்வோம்.

பனி நிறைந்த மார்கழித் திங்களில் அதிகாலை துயில் நீங்கி எழுந்து நீராடி ஆலய தரிசனம் செய்து திருவெம்பாப் பூஜை காண்பதும், திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாப் பாடல் களைப் பாடிக்கொண்டு ஊர்வலம் வருவதும் சைவப்பெருமக்களின் பண்டைநாள் தொட்டுப் பயின்றுவரும் பண்பாட்டுப் பழக்க வழக்கம் ஆகும்.

மணிவாசகப் பெருமான் திருவெம்பாப் பாடல்களைப் பாடியதன் மூலம் எமக்குள் விளங்கும் திருவருட் சத்தியை வெளிப்படுத்தும் முகமாக நம்மைப் பாட வைத்துள்ளார்.

திருவெம்பாக் காலத்தில் சைவத்திரு முறைகள் பன்னிரண்டுள் திருவாசகத் திரு முறையை மட்டும் ஓதுவதை மரபாக சைவப் பெருமக்கள் கடைப்பிடித்து வருகின்றமை அறியலாம்.

கற்றறிந்தோம், சைவப் பண்பாட்டினை வாழ்வியலாகக் கொண்டவர் கள் மார்கழி மாதம் முழுவதுமே திருவாசகத்தினை மாத்திரமே ஓதி வருவதும் ஏனைய திருமுறைகளைக் காப்பிட்டு வைப்பதும் சிந்தனைக்குரியதாகும்.

திருவாதிரைத் திருநாளை முன்னிட்டு வரும் பத்து நாள்களும் சைவப் பெருமக்கள் துயில் நீங்கி திருவெம்பாப் பாடல்களைப் பாடி இறைவனை வணங்கித் தாம் இன்புறுவதோடு ஏனையவர்களையும் துயில் நீங்கி எழச் செய்து இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்து இன்பம் அடையச் செய்வர்.

பெரியரவர்களும் சிறுவர்களும் ஒன்றிணைந்து திருவெம்பாப் பாடல் களைப் பாடிப் பணிந்து ஊர்வலம் வரும் அருமைக்காட்சி பெரமை உடைத்து, அளவிடற்கரியது.

இத்தகைய தொண்டினைக் கடந்த எண்பது வருடங்களாகச் செய்கின்ற சபையினையும் இக்காலச் சபை நிருவாக உறுப்பினர்களையும் பாராட்டி வாழ்த்தி வணங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**அ. உமாமகேஸ்வரன்,**
பணிப்பாளர் இந்து சமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்

1939 ஆம் ஆண்டு, "பாடும் பணியே பணி" என்ற மகுட வாக்கியத்தோடு, அமரர், அதிபர் கா.கதிர்காமத்தம்பி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது தெல்லிப்பளை, பன்னாலை, திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை. வடபுலத்தில், பெயர் சொல்லக் கூடிய அளவிற்கு ஆன்மிகப் பணி ஆற்றி வருஞ் சமய நிறுவனங்களுள் ஒன்றாகி, இன்று 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது மட்டற்ற மகிழ்வைத் தருகிறது. பன்னாலை, திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபை, பல சாதனைகளை நிலை நாட்டிவரும் பன்னாலை, ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் ஒவ்வொரு படிநிலை வளர்ச்சியிலும் மிக அர்ப்பணிப்போடு நின்று செயற்பட்டு வருகிறது. ஊரே விழாக்கோலம் பூணும் அளவுக்குத் திருவாதிரையில் மாணிக்கவாசகர் சிலையைப் பக்திப் பரவசத்தோடு ஊர்வலமாய்க் கொண்டு வருவதோடு, குரு பூஜைகள், திருவெம்பாவைக் கால வீதியுலாப் பஜனைகள், இளம் இந்துச் சிறார்களுக்கிடையே தோரணங் கட்டுதல், கோலம் போடுதல், பஞ்ச புராணம் ஓதுதல், பஜனைகள் எனப் போட்டிகளை நடாத்தி, எதிர்காலச் சமூகம் ஆரோக்கியமானதொரு வாழ்க்கை வாழ அடித்தளம் இடும் பணியைச் சிறப்புற ஆற்றிவரும் பன்னாலை, திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபையின் இம் மலர் வெளியீட்டு விழா நிகழ்வு சிறப்புற்றமையவும் மென்மேலும் இவர்கள் தம் பணி சிறக்கவும் எம்பெருமானை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

9599 (P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

வே.நந்தீஸ்வரர்
செயலாளர், கனடா இந்து மாமன்றம்

பன்னாலை திருவெம்பாவை சபையினர் அமுதவிழா கொண்டாடு கின்றனர் என்பதை அறிந்து, கனடாவாழ் தமிழ் சைவ பன்னாலை மக்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். நான் சிறுவனாக பன்னாலையில் வாழ்ந்தபோது, மார்கழி மாதத்தில் பொழுது புலர்வதற்கு முன் எழுந்து, ஒருவரையொருவர் துயிலெழுப்பி, கூட்டமாக திருவெம்பாவை பாடல்கள் பாடிக் கொண்டு, தெருத்தெருவாகச் சென்று, ஊரில் உள்ள ஐந்து ஆலயங்களையும் தரிசித்து, ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி, தில்லைச் சிற்றம்பலத்து ஈசன், அத்தன், ஆனந்தன், தீயாடும் கூத்தன் என்று பலவாறு இறைவனைப் பாடி வழிபட்டது இன்றும் என் நினைவில் உள்ளன. இந்த இனிமையான நாட்களை எப்படி மறக்க முடியும் !

பன்னாலை திருவெம்பாவைச் சபையினர் 80 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, இளம் சிறார்களை ஊக்குவிக்க தமிழ், சைவம், பண் ணிசை, பேச்சு, சைவ வினாவிடைப் போட்டிகள் வைத்து முதன்மை மாண வர்களைத் தேர்ந்தெடுத்துப் பரிசில்கள் வழங்கி, அவர்களை சமயத்தில் ஈடுபடச் செய்வது மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. புகழ்பூத்த பேச்சாளர்கள், நாதஸ்வரக் கலைஞர்கள், பண்ணிசை விற்பன்னர்கள், கலைஞர்கள் அனைவரினதும் சிறப்பு நிகழ்ச்சிகளுடன் அமுதவிழா சிறப்புற நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைவ தோடு, இச்சபையின் ஆரம்ப காலம் தொட்டு, இன்றுவரையுள்ள தலைவர்கள், அனைத்து நிர்வாக உறுப் பினர்கள், தொண்டர்கள், அனைவரையும் பாராட்டுவதுடன், திருவெம்பாவை சபை மேலும் வளரவும் பல சேவைகள் செய்யவும் அமுதவிழா சிறப்புடன் நடைபெறவும் எல்லாம் வல்ல இறைவனின் அனுக்கிரகத்துடன் கனடா இந்து மாமன்றம் ஆசிகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றது.

***"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

சி.சக்திகிரீவன், தலைவர்,
இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்.

பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபையின் 80 ஆவது நிறைவையொட்டி வெளியிடும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்கு வதையிட்டு மட்டற்ற மகிழ்சசியடைகின்றேன். ஆதியும், அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியான சிவபெருமானின் திருவடியை அடைவதே ஆன்ம இலட்சணம். என்றோ ஓர் பிறப்பில் இறைவனின் இவ்வான்மா உணர்ந்தடை யும் என்பது சைவசித்தாந்தத் தெளிவு.

திரோதான சக்தியே போகங்களை ஊட்டி ஊட்டி அன்பாலடையவைக் கும் அனுட்டினம் கொண்டது. இதனை உணர்ந்த அருட்செல்பவரான மணி வாசகப் பெருமான் அச்சக்தியை வியந்து வியந்து பாடியதே திருவெம்பாவை.

ஆன்மா மலவிருளுக்குள் அமிழாது திருவருட்சக்திக்குள் மூழ்கி விழிக்கும் திறம் பேசும் மணிவாசகர். வாழி ஈதென் உறக்கமோ வாய்திறவாய் ஆழியான் அன்புடமை ஆமாறும். இவ்வாறே என்று அள்ளி வீசுகிறார் அருட்தமிழை.

ஆண்மையுள்ளவன் அப்பெருமான் மட்டுமே. ஏனைய உயிரனைத் தும் பெண்மையே. இவற்றையெல்லாம் அற்புதமாகக்கூறும் திருவெம்பாவை பாடும்தொறும் தித்திப்பை இதனை சிவபெருமானே ஏற்கிறார். பாவை பாடிய வாயால் கோவை பாடுக என்று என்பது சான்றாகிவிட்டது.

ஆதலால் திருவெம்பாவைக் காலத்தில் திருவெம்பாவை தவிர்ந்த வேறேது திருப்பாடலையும் பாடக்கூடாதென்பது நாவலர் வகுத்த சட்டம். வல்லவன் வகுத்ததே வாய்க்காமல் என்பதற்கமைய அதனைச் சைவ உலகம் ஏற்றுக்கொள்கிறது.

இவ்வூரைச் சேர்ந்த காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி ஆசிரியர் அவர கள் திருவெம்பாவைக் காலத்தில் திருவண்ணாமலைக்குச் சென்ற போது அங்கு அடியார் கூடிக் கூடிக் பாடித வார்ததைக் கண்டு மகிழ்கிறார். அவ்விதம் பன்னாலையையும் திருவண்ணாமலை ஆக்கிவிட்டார். 1939 ஆம் ஆண்டில் அப்பெரியார் தொடக்கிய பணி இன்று வரை தொடர்கிறது. இன்றும் தொடரும் இப்பணியோடு எமது ஊரைச் சேர்ந்த ஏழாலை சைவசித்தாந்தப் பேறறிஞர் ஐ. பொன்னையா (அருளானந்த சிவம் அவர்களின் மாணவன சைவசித்ததாந்தம் பெருங்கடல் அமரர் வீ. சங்கரப்பிள்ளை அவர்களும் இணைந்து கொண்டார் என்பதை அறிந்து ஆனந்தமடைகின்றேன்.

இன்று பல்வேறு அறிஞர்கள் பெரியவர்கள் இப்பணியுடன் இணைந் துள்ளனர். இத்தகைய பணியில் இளமைதொட்டு இணைந்தவர். ஆயிரம் பிறை கண்ட அனுபவஸதர். நம் முன்னாள் தெல்லிப்பழை உ. அ. அதிபரும் உழவன் பருமான க.நடராஜர் என்பதை அறிகிற போது எமது உளம் மேலும் பூரிக்கிறது.

இன்று இப்பணியில் இவ்வூர் இளைஞர்கள் முனைப்புடன் ஈடுபடுவது எமது வழிபாடு தெய்வமான ஞானப் பெருங் கூத்தனின் அருட்செயலே. இத்தகை இவ்வருட்சபை ஊழிதொறும் நின்று செயற்பட எமது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

நமச்சிவாய வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனைச் சபைத் தலைவர் உள்ளத்திலிருந்து...

இ.ஜெயக்குமார்,
தலைவர்,
திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபை.

வயலும் வயல் சார்ந்த இனிமையாக விளங்கும் எமது பன்னாலை கிராமத்தின் திருவெம்பாவை சபை நிறுவனத்தினூடாக மாணவர்களையும் ஏனையோரையும் அதிகாலையில் துயிலெழுப்பி அவர்களை பன்னாலை கிராமத்தினூடாக திருப்பள்ளியெழுச்சிப்பாடல்களையும் மற்றும் சிவபுராணம் போன்ற ஸ்தோத்திரங்களை சிறுவர் மனதில் பதியும்படி செய்த அமரர் சைவப்புலவர், திருவெம்பாவை ஸ்தாபகர் கதிர்காம தம்பி மற்றும் ஆசிரிய மணி பொன்னையா அவர்களையும் பன்னாலை வாழ் மக்கள் அன்புடன் நினைவு கூறுவர். மேற்குறிப்பிட்டோர் வழி வந்தவர்களுள் சைவப்புலவரும் எமது கிராமத்தின் மைந்தனுமான அமரர் நித்திய தசீதரன் அவர்கள் போன்ற இளம் பண்டிதர் எம்மை விட்டுப் பிரிந்தது எமது துரதிஸ்டம் என்றே கருத வேண்டும். மண்ணுலகம் விட்டு வின்னுலகம் சென்ற எமது பண்டிதர்கள் அனைவரும் இறைவன் அருகிலிருந்து எமது அமுத மலர் வெளியீட்டு நிகழ்வை அமுதகானமாக சிறப்பிக்க வேண்டும் என இறைவனையும் இறைவனடி சேர்ந்தவர்களையும் வேண்டி நிற்கின்றோம்.

நன்றி
தென்னாருடைய சிவனே போற்றி
எம் நாட்டவர்க்கும் இறைவா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனை சபையின் வரலாற்றுப் பார்வை

தமிழோடு, சைவத்தை வளர்த்தெடுத்த பெரியார் பலர் வாழ்ந்த பார்புகழும் பன்னாலையம்பதியில், ஏறத்தாழ நூற்றாண்டு பழமை வாய்ந்த ஆலயமாக சிவபூதராயர் ஆலயம் விளங்குகிறது. சைவத் திருப்பணிகளை ஊர்மக்களிடையே வழங்கி, சமய அனுட் டானங்களை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு **'பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனைச் சபை"** என்றோர் அமைப்பை இவ்வாலயத்தில் உருவாக்கினர். எண்பது ஆண்டுகால பழமையையும், வரலாற்றுப் பெருமையையும், திருப்பணிகளையும் தன்னகத்தே கொண்ட இச்சபை, இவ்வாண்டு மார்கழி மாதம் தனது அமுதவிழாவைக் கொண்டாடவுள்ளது.

எமது கிராமத்து ஆசிரியமணி அமரர் காசிப்பிள்ளை கதிர்காமத்தம்பி அவர்கள் 1938 ஆம் ஆண்டில் தென்னிந்திய திருத்தல யாத்திரை சென்றபோது சிதம்பரத்தின் திருவீதிகள் தோறும் ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடிவருவதைக்கண்டு, கவரப்பட்டு, உந்தப்பட்டு எமது கிராமத்திலும் இவ்வாறானதொரு வழிபாட்டை கடைப்பிடிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று அப்போதே திடசங்கற்பம் பூண்டார். நாடு திரும்பியதும், அவர்கள் பன்னாலையைச் சேர்ந்த அமரர் சைவ சித்தாந்த சாகரம் விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை இவர்கள் இருவரினதும், பன்னாலைசேர் கனகசபை வித்தியாசாலை மாணவர்களான அமரர்கள் வைத்திலிங்கம் பொன்னையா, செல்லையா வரதராஜப்பெருமாள், சுப்பிரமணியம் மாணிக்கம், பொன்னம்பலம் முத்துக்குமாரு, கந்தையா திருநாவுக்கரசு (ஓதுவார்), வேலுப்பிள்ளை முருகையா அவரது உடன்பிறப்பு திரு. விஜயரத்தினம் ஆகியோருடனும் விழிசிட்டியைச் சேர்ந்த அமரர்கள் சின்னத்தம்பி இராமலிங்கம், பூராசா என அழைக்கப்பட்ட சிவஞானம், தையிட்டிப்புலத்தைச் சேர்ந்த கந்தையா அவரது உடன்பிறப்பு மயில்வாகனம் ஆகியோருடன் கிராமத்துப் பெரியோர், இளைஞர்கள், மாணவர்கள், சிறுவர்கள் என அனைவரையும் ஒன்றுதிரட்டி 1939 ஆம் ஆண்டு மார்கழி மாதம் திருவெம்பாவை கூட்டு வழிபாட்டினை பன்னாலையம்பதியில் ஆரம்பித்து வைத்தார்.

1939 ஆம் ஆண்டுதொடக்கம் இன்றுவரை ஆண்டுதோறும், திருவெம்பாவைத் தினங்கள் பத்திலும் தொண்டர் குழாத்தினர், ஒருவரையொருவர் துயிலெழுப்பி பனி, மழை, குளிர் பாராது நீராடி, நீறாடி, ஆசார சீலராய் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, சிவபுராணம் ஆகியவற்றோடு சங்கு, சேமக்கலம், மணி, தாளம், சுருதி போன்வற்றையும் இசைத்து ஆலய கிராம வீதிகளில் ஆண்கள் பண்ணோடு இசைபாடி வருகின்றனர். திருவெம்பாவை விரத காலத்தின் ஆரம்ப நாளில் அடியார்கள் அனைவரும் அதிகாலைப் பொழுது பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து ஏனைய ஒன்பது நாட்களும் பன்னாலை ஊரிலுள்ள திருத்தலங்களில் ஆரம்பமாகி கிராம வலம் மேற்கொண்டு அவ் ஆலயத்தியே நிறைவு செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பாவையின் இறுதிநாளன்று சிவனடியார் மடத்தில் நள்ளிரவு ஆருத்ரா அபிசேகம் நடைபெற்று மாணிக்க வாசகர் சுவாமிகளை திருவெம்பாவைக் கூட்டுப் பிரார்த்தனை அடியார்கள் பன்னாலைத் திருவீதியூடாக வலம் வந்து சிவபூதவராஜா ஆலயத்தில் அதிகாலை அபிசேக ஆராதனைகள் இடம்பெற்று திருவெம்பாவை பூஜை இனிதே நிறைவுறும்.

கடந்த எண்பது வருடங்களாக நிகழ்ந்து வருகின்ற இப்பாடும் பணியில் ஆண்கள் மட்டுமல்லாது எமது கிராமத்துப் பெண்களும் வயது வேறுபாடின்றி தனியே தம்மையும் இணைத்துக் கொள்ள வேண்டுமென்பதே எமது அவா. மணிவாசகர் காலத்தில் இவ்விரு பக்திப் பாடல்களை அக்காலப் பெண்கள் பக்தியோடு பாடி ஊரை வலம் வருவார்களேயானால், அவர்களது பிரார்த்தனை, அவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. திருவெம்பாவை பாடப்பட்டதன் நோக்கமும் அதுவாகவே இருந்திருக்கும் என்பது எமது நம்பிக்கை.

தற்போது, எமது கிராமத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வரத்தலம் கற்பக விநாயகர், சொரிகுடைபதி சிவபூதராயர், திருசீச்சரம் சுப்பிரமணியர், அடியார் திருமட சிவகாமி சமேத நடராஜர், வீரபத்திரர், மயிலையம்பதி ஞானவைரவர், வல்லுவத்தை கந்த ஞானவைரவர் குருநாதர் ஆகிய ஆலய திருவீதி வழியூடாக இக்கூட்டு வழிபாடு இடம்பெற்று வருகின்றது. பக்திப் பரவசத்தோடு, இவ்வழிபாட்டில் பங்குபற்றியோர் பலரும் கல்விமான்களாகி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரிந்து சிறப்பாக வாழ்ந்தனர். வாழ்ந்து வருகின்றனர். இக்கூட்டு வழிபாட்டில் பங்குபற்றுவோர் உட்பட ஏனைய அடியார் குடும்பத்தினர் அதிகாலையில் துயில் நீத்து தத்தமது வீட்டில் தேநீர், சிற்றுண்டி வகையறாக்களையும் தயாரித்துக் கொடுத்து அடியார்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதோடு, ஏனையோர் பொருளுதவியும் பணவுதவியும் வழங்கி வந்தனர் / வருகின்றனர்.

எமது சபையின் கூட்டு வழிபாடு நடைபெற்ற போது துக்க சம்பவம் ஒன்று நிகழ்ந்ததை மீள்பதிவுக்காக இங்கு குறிப்படுவது பொருத்தமெனக் கருதுகிறோம். 1963 ஆம் ஆண்டு எமது கூட்டு வழிபாடு கிராம வீதியுடாக இடம்பெற்று வரும்போது வீரபத்திரர் ஆலய திருமஞ்சக் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து அகாலமரணத்தைத் தழுவிய செல்வன் காசிப்பிள்ளை விநாயகமூர்த்தி கணேசமூர்த்தி என்பவருக்கு எமது சபை ஆத்மசாந்திப் பிரார்த்தனை, இரங்கற் கூட்டம் என்பவற்றை நிகழ்த்தியதோடு அமரரின் நினைவாக "திருமுறைத்திரட்டு" என்ற நூலையும் வெளியிட்டது.

எமது சபை, ஆன்மீகத்தில் இளம் சமுதாயத்தினரை ஈடுபடுத்தும் நோக்கில் தனியே கூட்டு வழிபாட்டோடு நின்று விடாது பாலர் தரம் முதல் உயர்தரம் வரையான மாணவ மாணவியரிடையே நான்கு பிரிவுகளாக மனனம், பண்ணிசை, கட்டுரை, கோலமிடல், திருமாலை புனைதல் போன்ற போட்டிகளை நடாத்தி முதல் மூன்று இடங்களைப் பெற்றோருக்குச் சான்றிதழ்களுடன் பரிசில்களையும் பன்னாலை அறநெறிப் பாடசாலையூடாக வழங்கி வருகிறது.

இவ்வாறு பன்னாலைக் கிராமத்து மக்களிடையே சைவத்தையும், தமிழையும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தெடுப்பதில் முன்னிற்கும் எமது கூட்டுப்பிரார்த்தனைச் சபை 1964 ஆம் ஆண்டு தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடியதோடு, தொடர்ந்து வருடாவருடம் தனது வழமையான பிரார்த்தனையையும் நடாத்தி வந்தது.

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1989 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் திகதி இந்திய, இலங்கை அரச தலைவர்களுக்கிடையே, இலங்கையில் இரு இனங்களுக்கிடையே, அமைதியை நிலைநாட்டுவதற்காக ஓர் ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதனைத் தொடர்ந்து இந்திய அமைதி காக்கும் படை எமது பகுதிகளிலும் நிலைகொண்டிருந்தது. இச்சூழலிலும் எமது கூட்டுப் பிரார்த்தனைச் சபை 1989 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒரு மலர் வெளியீட்டுடன் (பொன்விழா மலர்) தனது பொன்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. இவ் நிகழ்வு 1990.01.10 ஆம் திகதி நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

1991.03.31 ஆம் திகதி இந்திய அமைதி காக்கும் படையினர் தமது தாயகம் திரும்பிய பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் மீண்டும் ஆரம்பமாகியது. இதனால் எமது கிராம மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்தனர். கூட்டுப்பிரார்த்தனைச் சபை நாட்டின் அசாதாரண நிலையினால் ஏற்பட்ட இடப்பெயர்வு காலத்திலும் திருவெம்பாவை இறுதிநாளன்று ஊர் பெரியோர்கள் ஒன்றுகூடி பன்னாலையூர் தெய்வங்களை நினைவுகூர்ந்து குறிப்பிட்ட ஒரு கிராமத்தில் தொடர்ச்சியாக வழிபாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் படிப்படியாக எமது மக்கள் இக்கிராமத்தில் மீள்குடியேறியதைத் தொடர்ந்து 1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒரு நூல் வெளியீட்டுடன் வைரவிழாவையும் சிறப்பாக கொண்டாடினர்.

இவ்வாறு சிவனுக்குகந்த மார்கழி மாத திருவாதிரையில் தமிழோடு" சைவத் திருப்பணியை கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக முன்னெடுத்துச் சிறப்பித்து 2014ஆம் ஆண்டு இச் சபையின் வளர்ச்சியின் எடுத்துக்காட்டாக 2015-01-18 அன்று பவள விழாவை வெகு சிறப்பாக நடாத்தியது. இதன்போது அன்றைய தலைவர் திரு.சி.வேலாயுதம் அவர்களின் தலைமையில் சிவபூதராயர் ஆலயத்திலிருந்து பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த வட மாகாண முதலமைச்சர் திரு.சி.வீ.விக்னேஸ்வரன் முதலானோரை மங்கல வாத்தியங்கள் புடைசூழ கற்பக விநாயகர் திருமண மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு விழாவை சிறப்பாக நடாத்தியதுடன் "பவள நாதம்" நூல் வெளியீடும், திருசீச்சரம் ஆலய திருப்பணி ஊண்டியல் திறப்பும் சிறப்பாக இடம்பெற்றது.

தொடர்ந்து, தனது அயராத வளர்ச்சியினால் அமுதவிழா நிகழ்த்துவது சைவத்தையும் தமிழையும் மேலும் உயர்வடையச் செய்வதுடன் இதன் பணி மேலும் தொடர எல்லாம் வல்ல ஆனந்த நடராஜப் பெருமானின் திருவடி போற்றி நிற்கின்றோம்.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

**திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனை சபையினர்,**
**பன்னாலை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சைவ சமயம் என்றால் என்ன?



உலகின் மிகப் பழமையான மதம் சைவ சமயம். கருணைமிக்க சிவபெருமானை வணங்கும் இச்சமயம் சிறந்த ஒழுக்கங்களையும், உயர்ந்த தத்துவ ஞானத்தையும், குருவையும் மையப்படுத்தி, பக்தி மற்றும் ராஜயோக நெறிகளையும் வலியுறுத்தி நமக்குள்ளே சிவனோடு ஒன்றாவதை வலியுறுத்து கிறது. சைவசமயம் தொன்மையானது, தொடக்கம் இல்லாதது. உண்மையில் கால வரம்பற்றது. தற் போது இந்து சமயம் என்ற பெயரில் பல பன்முக சம யங்களின் தோற்றத்திற்கு அதுவே ஆணிவேர். சிவ வழிபாட்டின் மூலத்தை ஆராய்ச்சி செய்யும் கல்வி யறிஞர்கள் அதன் தோற்றத்தை 8000 ஆண்டு களுக்கு முன்னர் நாகரீக வளர்ச்சி அடைந்திருந்த சிந்துவெளி நாகரீக காலத்துக்கு இட்டுச் செல்கிறார்கள். ஆனால் சைவசமயம் இல்லாத காலமே இல்லை என்று புனித நூல்கள் கூறுகின்றன. சைவ சமயத்தில் தத்துவ ஞானம், பாரம்பரியம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆறு உட்பிரிவுகள் உள்ளன. அவை சைவ சிந்தாந்தம், காஷ்மீர் சைவம், பாசுபத சைவம், வீரசைவம், சிவ அத்வைதம், சித்த சித்தாந்தம் ஆகியன. அவை தத்துவ ஞான ரீதியாகவும், சரித்திர ரீதியாகவும், மொழிவாரியாகவும், புவியமைப்பு ரீதியாகவும் பல வகைகளில் வேறுபடுகின்றன. எனினும் ஒத்த நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் மிகப்பெரிய அளவில் அவை பகிர்ந்துகொள்கின்றன. அந்த ஆறு பிரிவினரும் வேதங்களையும் சைவ ஆகமங்களையும் பகிர்ந்து கொள்கின்றனர். ஆறு பிரிவினரும் சிவபெருமானை சர்வசக்தி படைத்த சர்வேஸ்வரனாக ஏற்றுக் கொள்வதுடன், அவரை உள் நின்று உறைபவராகவும் எல்லை கடந்தவராகவும், இஷ்ட தெய்வமாக வழிபடப்படு பவராகவும், தியானத்தின் மூலம் அவர் எல்லா வடிவங்களையும் கடந்த முழுமுதற் பொரு ளாகவும் பரம்பொருளாகவும் மெய்யுணர்வு பெற்று உணர்கின்றனர். எல்லாப் பிரிவினரும் பின்வரும் முதன்மையான ஆகம கோட்பாடுகளை ஏற்கின்றனர்:

1) சிவபெருமானின் ஐம்பெரும் சக்திகள் (ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்)
2) பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள் (இறை, உயிர், தளை) இருப்பின் மூலப்பொருளாக இருக்கின்றனு
3) மும்மலங்கள் அல்லது தளைகள் (ஆணவம், கன்மம், மாயை)
4) சிவனின் திரிசக்திகள் இச்சா, கிரியா, ஞானசக்தி (விருப்பம், செயல், ஞானம்)
5) 36 தத்துவங்கள் அல்லது தோற்றத்தின் பிரிவுகள்
6) சற்குருவின் அவசியமும் தீக்கையின் அவசியமும்
7) மந்திரத்தின் சக்தி
8) சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை ஆன்மீகப் படிகள் (தொண்டு, பக்தி, சங்கமம், ஞானம்)

சிவபெருமான் இமய மலையில் வீற்றிருக்கிறார். இது ஐந்து முகங்கள் பத்து கைகள் உள்ள சதாசிவ திருமேனி. அந்த ஐந்து முகங்கள் ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய அவரின் ஐந்தாற்றல்களைக் காட்டுகிறது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிகாலையில் திருவெம்பாவை பாடிச் செல்லும் அடியார்கள்



அதிகாலையில் திருவெம்பாவை பாடிச் செல்லத் தயாராகும் அடியார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பன்னாலையூர் தல வரலாறுகள்



**அருள் மிகு வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்**
**விருட்சம் - வன்னி மரம்**

பன்னாலை வரத்தலம் எனும் இடத்தில் வன்னி மரத்தின் கீழ் கவனிப்பாரற்று இருந்த விநாயகரை 'கற்பகம்' என்னும் மூதாட்டி ஆதரித்து வந்ததால் இப்பெயர் பெற்றதாக ஒரு கதையும் மாருதப் புரவீக வல்லியால் அமைக்கப்பெற்ற இரண்டாவது விநாயகர் ஆலயம் இதுவென வரலாறும் கூறுகின்றது.

கிழக்கு நோக்கி அமைந்திருக்கும் இந்த ஆலயம் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம் தம்ப மண்டபம் வசந்த மண்டபம் ஆகியவை அமையப் பெற்றுள்ளது. மகா மண்டபத்தில் வட புறம் தெற்கு நோக்கி எழுந்தருளியும், தம்ப மண்டபத்தில் மூஷிகம், பலி பீடம், 18 அடி உயர வெள்ளி கவச கொடிக்கம்பம் என்பனவும் அமைந்துள்ளது. கொடிக்கம்பத்தின் வடபுறம் நவக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. பிரதான வாயிலில் 43 அடி உயர பஞ்சதள இராஜகோபுரம் கட்டப்பட்டுள்ளது. இதன் வடக்கே 39 அடி உயர மணிக்கோபுரம் அமைந்துள்ளது.

சுற்றுமதிலால் பிரிக்கப்பட்ட இரு வீதிகளைக் கொண்ட இக் கோயிலின் உள் வீதியில் தென் கிழக்கில் மடைப்பள்ளி, களஞ்சிய அறை என்பனவும் தென்மேற்கில் கஜலக்ஷ்மியும், தூபிக்குப் பின் சந்தான கோபாலரும், வட மேற்கே வள்ளிதெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானையுடன் முருகனும் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. மூலஸ்தானத்திற்கு வடக்கே சண்டேஸ்வரர் வட புறம் வசந்த மண்டபமும் அதன் அருகே யாகசாலையும், இதை அடுத்து நாகதம்பிரான், வயிரவர் எழுந்தருளியுள்ளனர். திருமஞ்ச கிணறு மூலஸ்தானத்திற்கு வடகிழக்கில் இரண்டாவது வீதியின் தென்கிழக்கில் உள்ள வன்னிமரத்தின் கீழ் இப்போது வயிரவர் சூலம் அற்ற நிலையிலும் மகோற்சவ முடிவு வயிரவர் பொங்கல் நடைபெற்று வருகின்றது.

1வது கும்பாபிஷேகம் - 1872ஆம் ஆண்டு - கர்ப்பக்கிரகம் அர்த்த மண்டபம், மகா மண்டபம் கட்டப்பட்டது.
நடாத்தியவர் - பிரம்மஸ்ரீ ம. பிள்ளையார் பட்டர் (இவரே முதலாவது அர்ச்சகர்)

2வது கும்பாபிஷேகம் - 1912ம் ஆண்டு - தம்ப மண்டபம், இராஜ 36 அடி ஒருவாயில் இராஜ கோபுர திருப்பணி முடிவுற்றது.
நடாத்தியவர் - பிரம்மஸ்ரீ அ. அருணாசல சாஸ்திரி

3வது கும்பாபிஷேகம் - 09.07.1956 (ஆனி மாத புனர்பூச நட்சத்திரம்)
நடாத்தியவர் - புத்தூர் சிவஸ்ரீ மார்கண்டேய குருக்கள் - வைத்தியநாதக் குருக்கள்

4வது கும்பாபிஷேகம் - 06.04.1977 (நள வருடம் பங்குனி 24ஆம் நாள் சுவாதி நட்சத் திரம்)
நடாத்தியவர் - சுன்னாகம் சிவஸ்ரீ நகேந்திரக் குருக்கள் சோமஸ்கந்தகுருக்கள்

5வது கும்பாபிஷேகம் - 04.07.2004 - கஜலக்ஷ்மி முருகன் சன்னிதி அமைத்ததுடன் வைரவர் சன்னிதிக்கு அருகில் இருந்த சந்தான கோபாலர் கஜலக்ஷ்மி சந்நிதிக்கு அருகிலும் தாபிக்கப்பட்டது.
நடாத்தியவர் - சிவஸ்ரீ. இ.சபாரத்தினக் குருக்கள்

6வது கும்பாபிஷேகம் - 18.06.2014 43அடி பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம் - பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மா தலைவர்
நடாத்தியவர் - சிவஸ்ரீ சதா சுகுமாரக்குருக்கள்

1914ஆம் ஆண்டு கொடிக்கம்பம் அமைத்து அந்த ஆண்டு திருவிழா நடாத்தியபோதும் ஊரார் - நிர்வாக கருத்து வேறுபாடு காரணமாக நிறுத்தப்பட்டு 1977.09.02 (பிங்கள வருடம் ஆவணி 17ஆம் நாள் வெள்ளிக்கிழமை) சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்களாலேயே கொடியேற்ற திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. ஆவணி அமாவாசை தினத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு 12 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். விநாயக சதுர்த்தி, புரட்டாதிச் சனி, ஐப்பசி சுக்கிர வாரங்கள், மார்கழி திருவாதிரை, தைப்பூசம், வரலஷ்சுமி விரதம், கேதாரகௌரி விரதம், பெருங்கதை ஆகிய தினங்களில் சுவாமி வீதியுலா வருவதுண்டு. விஜயதசமி தினத்தில் பன்னாலை கிராமமூடாக உலா வந்து வாழை வெட்டு நடைபெறும். உற்சவ காலம் பன்னிரு தினங்களும் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

18 தேவாங்குல உயரமுடைய பத்மாசனத்தில் வீற்றிருப்பது போன்ற கருங்கல் விக்கிரகமே மூலமூர்த்தி. ஒவ்வொரு சந்நிதியும் தனித் தனி தூபிகளையுடைய கருங்கல் விக்கிரகங்கள் பஞ்சமுக விநாயகர் ஐம்பொன்னால் செய்யப்பட்டது.

**திருப்பணி , உபகரிப்புக்கள்:**

**தம்ப மண்டபம், கொடிக்கம்பம் - பூதப்பிள்ளை அண்ணாமலைபிள்ளை மாதனை, தெல்லிப்பழை**
**வசந்த மண்டபம் - சுப்பிரமணியம் கார்த்திகேசு குடும்பம்**
**நவக்கிரகம் - வேலுப்பிள்ளை கந்தையா குடும்பம் - பன்னாலை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தான கோபாலர் - வைத்திலிங்கம் சிவசங்கரப்பிள்ளை குடும்பம்
வைரவர் - வைத்திலிங்கம் இரத்தினம் குடும்பம்
பஞ்சமுக விநாயகர் - சங்கரப்பிள்ளை நடராசன் குடும்பம்
யாகசாலை - வேலாயுதர் சண்முகம் குடும்பம்
தேர் - வைரமுத்து நவசிவாயம் குடும்பம் - பன்னாலை
சகடை - பழனி சுந்தரமூர்த்தி குடும்பம் - கொல்லங்கலட்டி
இராஜகோபுரம் - 1912 பூதப்பிள்ளை நரசிங்கம்
எலி வாகனம் - ஆறுப்பிள்ளை நாகலிங்கம்
குதிரை வாகனம் - ச. சின்னப்பு
யானை வாகனம் - நமசிவாயம் கனகராயன்
திருவூஞ்சற்பாடல் - வேலுப்பிள்ளை கனகசபை புலவர், அளவட்டி
வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் திருப்பதிகம் - அருட்கவி சி. விநாசித்தம்பி
வரத்தல ஸ்ரீ கற்பக விநாயகர் பரத்துவமாலை சீ. வினாசித்தம்பி
வரத்தலம்பதி ஸ்ரீ கற்பகவிநாயகர் இரட்டை மணிமாலை - கவிஞர் செல்லையா கதிரேசம் பிள்ளை
கோவில் கிணறு - கந்தையா பிள்ளை திருநாவுக்கரசு
தீர்த்தக் கேணி - சங்கரநாதர் கனகசபை பிள்ளை

இக்கோவில் பூசைகளை ஆங்கிலமாதம் 1 - 15 சிவஸ்ரீ இ.சபாரத்தின குருக்களும், மிகுதி பிரம்மஸ்ரீ கு.மகேஸ்வர சர்மாவும் செய்து வந்தனர். 1999ல் மீள் குடியேற்றத்தின் பின் பிரம்மஸ்ரீ மகேஸ்வர சர்மா மகேந்திரசர்மா சிறப்பாக பூசைகளை நடாத்திக் கொண் டிருக்கின்றார்.

**பன்னாலை அருள்மிகு ஸ்ரீ மஹா கணபதீஸ்வரம் ( (சின்ன) புதுப் பிள்ளையார்) ஆலயம் தல விருட்சம் வில்வமரம்**

குழந்தை பிறந்து 16ஆம் நாள் தொடக்கு கழித்தபின் வரத்தலம் கற்பக விநாயகருக்கு கோயிலுக்குள் சென்ற செல்வந்த பெண்ணிற்கு விஷேட பூசை செய்து பிரசாதம் வழங்கி யமையால் வெறுப்படைந்த சில மக்களும் ஆலய உரிமையாளருள் ஒருவருமாகிய பிரம்மஸ்ரீ கார்த்தியேயக் குருக்கள் பரமசாமி ஐயரும் அவ் ஆலயத்திற்கு மேற்கே சுமார் 60 மீற்றர் தொலைவில் வில்வமரத்தடியில் சிறிய கொட்டகை அமைத்து கருங்கல்லினால் செதுக்கிய விநாயகர் விக்கிரகம் அமைத்து வழிபட்டனர் (1935 - 1940) இதுவே சின்ன (புதுப்) பிள்ளையார் ஆலயமாக வளர்ச்சி பெற்றது.

இவ் ஆலய முதற்கும்பாபிஷேகம் சிவஸ்ரீ மார்க்கண்டேயக் குருக்கள் விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. தொடர்ந்து ஒருவேளை பூசை செய்துவந்த பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் பரமசாமி ஐயர் சிவபதமடைய அவர் புதல்வர் சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் கற்பக கிரகத்தை சீமெந்தினால் கட்டி ஓலையால் வேய்ந்து கதவு போட்டு ஒருவேளை பூசை நடத்தி வந்தார். அவரும் சிவபதம் அடைந்த பின் பிரம்மஸ்ரீ பரமசாமி ஐயர் சிவானந்தையர் 1978ஆம் ஆண்டளவில் புனரமைப்பு செய்து கர்பக்கிரக தூபி, அர்த்த மண்ட பம் கட்டி ஓடு போட்டு பூசைசெய்து வந்தார். சிவஸ்ரீ வைத்தியநாத குருக்கள் தூபி அபிஷே கத்தை நடத்தினார்.

மீண்டும் பண்டிதர் சிவானந்தையர் சோதிரத்தினக் குருக்கள் தர்மகர்த்தாவாக இருந்து தாரணவருடம் வைகாசி திங்கள் 25ஆம் நாள் (07.06.2004) திருவோண நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய்துள்ளார். அதன்போதே இந்து தர்ம சாஸ்த்திரி ஷர்மாஜி அவர்களால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்ரீ மஹா கணபதீஸ்வரம்" எனும் நாமம் சூட்டப்பட்டது.

ஆண்டில் ஒருமுறை ஆனி மாதம் 15 நாட்கள் பொங்கல் திரு விழா நடைபெறும். தற்போது ஷர்மாஜி அவர்களே அர்ச்சகராக நடாத்தி வருகின்றார்.

**பன்னாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலயம் விருட்சம் - இலுப்பை மரம்**

இற்றைக்கு 230 ஆண்டுகளுக்குமுன் பன்னாலை "நகரத்தஞ்சீமா" என்னும் குறிச்சியில் வாழ்ந்த பெந்த நன்னியர் வேளாண்மை செய்து பசு காத்து வந்தார். தன் மாட்டுத்தொழுவத்தின் அருகே இருந்த இலுப்பை மரத்தடியில் வெள்ளை கல் வைத்து குலங்காக வழிபட்டு வந்தபோது ஒருநாள் ஒரு பூதவடிவம் அவர் கனவில் தோன்றி தாம் சிவபூதவராயர் என்னும் குறிப்புக்காட்டி தன்னை இந்த இடத்திலே வழிபடலாம் என அருளி மறைந்தது. கிழக்கு நோக்கி அந்த இடத்தில் ஒரு கொட்டில் அமைத்து வழிபட்டு வந்தனர். தொடர்ந்து பெத்த நன்னியார் சிவபூதவராயரின் கற்பனை உருவை திரைச்சீலையில் வரைந்து மூலஸ்தானத்தில் ½ மீற்றர் உயர கண்ணாடியில் விம்பம் விழக்கூடியதாக அமைத்து சிவஸ்ரீ பிள்ளையார் பட்டர் முத்துச்சாமி குருக்களை அர்ச்சகராக நியமித்தார்.

அக்காலகட்டத்தில் இலுப்பை மரத்தில் சிறுவர்கள் கட்டி விளையாடிய ஊஞ்சலில் ஒரு நடு நிசியில் ஊஞ்சல் ஆடும்சத்தம் கேட்ட நாகமுத்து எழுந்து சென்று பார்த்தபோது ஊஞ்சல் ஆள் இருந்து ஆடுவதுபோல் தானாக ஆடியதை அவதானித்தார். மறுநாள் காலை அவரின் உறவினரான திருமதி சின்னதம்பி வள்ளிப்பிள்ளை அணங்காட்பட்ட (உருக்கொள்ளல்) நிலையில் தாம் சிவபூதராயரின் சக்தி என்றும் தமக்கோர் ஊஞ்சல் வேண்டும் என்றும் கேட்டதற்கிணங்க மூலஸ்தானத்திற்கு நேர் எதிராக கிழக்கு முகமாக இராட்டின ஊஞ்சல் அமைக்கப்பட்டது. மூலஸ்தானத்திற்கு ஈசானத்தில் திரு மஞ்ச கிணறும் வெட்டப்பட்டது.

தொடர்ந்து நாகமுத்துவின் மகன் சுப்பிரமணியம் 2வது, 3வது மண்டபங்களைக் கட்டி ஓடுபோட்டார். அந்தக்காலகட்டத்தில் (1930களின் பின்) அவரை ஆதரிப்போருக்கு காவல்தெய்வமாக இருந்துள்ளார். கள்வன் வீட்டிற்குள் புகுந்தபோது காட்டிக் கொடுத்திருக்கின்றார். அயலில் உள்ளவர்கள் மாதாந்தம் பொங்கிப் படைக்க பிந்தினால் மாலை மங்கும்வேளையில் பாசி படிந்த கற்கள் மூலம் ஞாபகப்படுத்துவார். வீட்டு விஷேஷங்களுக்கு பலகாரம் செய்யும் போது அவரை நினைக்கவில்லை எனில் திருமதி......... என்பவர் அணங்காட்ட படுவதன் மூலம் தெரிவிப்பார். களவுகளை காட்டிக் கொடுப்பதால் வாய் கட்டி இவரின் சக்தியை அடக்கியதாக கதையுண்டு.

இக்கோவிலின் இரு வீதிகளும் மதிலால் பிரிக்கப்பட்டுள்ளது. உள்வீதியின் தென் கிழக்கில் மடைப்பள்ளியும் தென்பகுதியில் பொங்கல் செய்யும் இடம், களஞ்சிய அறை என்பனவும் தென்மேற்கு மூலையில் பிள்ளையார் சந்நிதியும் வடமேல் மூலையில் முருகன் சந்நிதியும் ஈசானத்தில் வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. ஊஞ்சலின் வடபுறமாக 17 அடி உயர மணிக்கோபுரமும் அதற்கு வடக்கே முறையே நாகதம்பிரான், வைரவர் எழுந்தருளியுள்ளனர்.

1வது கும்பாபிஷேகம் - 1948 வைகாசி திருவோண நட்சத்திரத்தில் நடாத்தியவர் - மாவை சிவஸ்ரீ சாமிக்குருக்கள் சுப்பிரமணியக் குருக்கள் (இரத்தினக் குருக்கள்)

2வது கும்பாபிஷேகம் - 1982 பங்குனி அத்த நட்சத்திரத்தில் நடாத்தியவர் - கீரிமலை குருசாமிக் குருக்கள் நகுலேஸ்வரக் குருக்கள்

3வது கும்பாபிஷேகம் - 2001.06.03 - விசு வருடம் வைகாசி 20ஆம் திகதி சுவாதி நட்சத்திரத்தில் நடாத்தியவர் - கொக்குவில் சிவஸ்ரீ நா. பத்மநாதக் குருக்கள்.'

4வது கும்பாபிஷேகம் - 30.10.2013 - விஜய வருடம் ஐப்பசித் திங்கள் 13ம் நாளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரம்மஸ்ரீ ம.மகேந்திர சர்மா தலைமையில் சிவஸ்ரீ ப.சிவசங்கரக் குருக்களால் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.**

இங்கே பங்குனி அத்த நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு 15 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். பங்குனி குளிர்த்தி, சித்திரை பூரணை, விசாகப் பொங்கல், விஜய தசமி, திருவெம்பாவை என்பன சிறப்பான உற்சவங்கள்.

இவ் ஆலய அர்ச்சகராக சிவஸ்ரீ பிள்ளையார் பட்டர் முத்துச்சாமி குருக்களை தொடர்ந்து மாவை பிரம்மஸ்ரீ மணி ஐயரும் அவர்பின் விழிசிட்டி பிரம்மஸ்ரீ ந.நடேச சர்மாவும் பின் அராலி தெற்கு பிரம்மஸ்ரீ வைத்தியநாத சர்மா நடராச சர்மா, அதன்பின் ஆலய குருவாக சிவஸ்ரீ இரத்தினசாமி குருக்கள் சபாரத்தின குருக்களும் தற்போது பிரம்மஸ்ரீ ம. மகேந்திர சர்மாவும் அர்ச்சகராக இருக்கின்றார். இவ்வாலயத்தினுடைய நைமித்திய கிரியைகளை சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து சிறப்பாக நடத்தி வருகின்றார். விழிசிட்டியை சேர்ந்த பண்டிதர் சி. கதிரிப்பிள்ளையால் அருள்மிகு சிவபூதவராயர் திருவூஞ்சல் பாடப்பட்டது.

**பன்னாலை திருச்சீச்சரம் அருள்மிகு பாலசுப்பிரமணியர் ஆலயம்**

பன்னாலை "திருசீச்சரம்" என்னும் குறிச்சியில் இருந்த ஒரு வன்னிமரத்தில் சேட்டைத் தேவர் இருந்ததாகவும் அவ்விடமே பின்னர் இவ் ஆலயம் அமையப்பெற்றதாகவும் அறிகின்றோம்.

வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய முதற் பூசகரின் மூத்த புதல்வர் சிவஸ்ரீ முத்துச்சாமி குருக்கள், அவ் ஆலயத்தில் ஏற்பட்ட மனவேற்றுமை காரணமாக துறவுபூண்டு இந்தியா சென்று சிதம்பரத்தில் தில்லைவனத்தில் யோகப்பயிற்சி செய்தபோது ஒரு சந்நியாசி ஒரு யந்திரத் தகட்டினையும், இரகசியப் பெட்டி ஒன்றினையும் கொடுத்து மறைந்தார். அங்கே இருந்த சிதம்பரபிள்ளை உதவியால் சுப்பிரமணியர் விக்கிரகம், மயிலின் அமைப்பு, பலிபீடம் என்பவற்றைப் பெற்று அவை எல்லாவற்றுடனும் வீடு திரும்பினார். அவற்றை வீட்டிலே வைத்து விட்டு 1916ஆம் ஆண்டிலே கொழும்பு சென்று நாச்சியப்பன் செட்டியாரிடம் நிதி பெற்று வந்து இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகளை ஆரம்பித்தார். 1918ஆம் ஆண்டு இவ் விக்கிரகங் கள் பிரதிட்டை செய்யப்பட்டன.

அதன் பின் மீண்டும் இந்தியா சென்று முத்திரிஷி திருப்பாதிரிப் புலியூரில் இருந்த சிவா லயத்தில் கவனிப்பாரற்று இருந்த சிவலிங்கப்பெருமானால் கவரப்பட்டு அவ் இலிங்கத்தை யும், விநாயகர் விக்கிரகம் ஒன்றையும் கொண்டு வந்து 1924ஆம் வருடம் சித்திரை 30ஆம் நாள் புதன்கிழமை அவற்றை பிரதிட்டை செய்ததுடன் கொடித்தம்ப பிரதிட்டையையும் செய்தார்.

ஏனைய ஆலயங்களை விட இவ் ஆலய அமைப்பு பல வழிகளில் வேறுபடுகின்றது. வைரக்கற்களால் கட்டப்பட்ட கர்ப்பக்கிரகமும் அர்த்த மண்டபமும் நிலமட்டத்திலிருந்து 2மீட் டர் உயரத்தில் ஆரம்பமாகின்றது. அந்த உயரத்தில் அந்த இரு மண்டபங்களையும் சுற்றிவரக் கூடிய வீதியில் இரு மண்டபச் சுவர்களுடனும் பலிபீடங்கள் ஒவ்வொரு சுவர் அந்தத்திலும் அமைந்திருப்பது சிறப்பானது. அர்த்த மண்டபத்தையும் மகா மண்டபத்தையும் வாயிலமைப்பு தொடர்பு படுத்துகின்றது. மகா மண்டபத்தில் வடமேற்கில் சிவலிங்கப்பெருமானும் தென் மேற்கில் விநாயகப் பெருமானும் வீற்றிருக்கின்றனர்.

மண்டபத்தில்11 அடி உயர மரத்தாலான கொடிக்கம்பமும் பலிபீடமும் நந்தியிடத்து



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயூரமும் அமைந்துள்ளது. கம்பத்தின் முன் மூலாதார கணபதியும் வடபுறம் நவக்கிரகமும் பிரதிட்டை நடைபெற்றுள்ளது.

சிவபெருமானுக்கு வடக்கே திருமஞ்சக் கிணறுண்டு மதிலால் பிரிக்கப்பட்ட இரு வீதிகளில் உள் வீதியின் தென்கிழக்கில் குருமார் தங்கும் அறை, மடைப்பள்ளி, வாகனசாலை என்பன அமைக்கப்பட்டுள்ளது. வடபுறம் ஆறுமுக சாமியும் நடராஜரும் (ஐம்பொன் சிலைகள்) வீற்றிருக்கின்றனர். அதைத் தொடர்ந்து வடகிழக்கில் வசந்த மண்டபமும் யாகசாலையும், அதன் தென்புறம் சந்தான கோபாலர் வைரவர் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. பிரதான வாயி லின் தெற்கே - அடி மணி கோபுரம் கட்டப்பட்டுள்ளது.

1வது கும்பாபிஷேகம் 1918ஆம் ஆண்டு (ஜீர்ணோத்தாரண மகாகும்பாபிஷேகம்)

2வது கும்பாபிஷேகம் - விளம்பிவருடம் பங்குனித்திங்கள் 12ஆம் நாள் (25.03.1959) புதன்கிழமை அத்த நட்சத்திரம் - உதவி - மாவை குருக்கள் (பூஜாகீன அந்ரீதப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம்)

3வது கும்பாபிஷேகம் - விசு வருடம் சித்திரை 21ஆம் நாள் வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரம் (04.05.2001)
நடாத்தியவர் - சிவஸ்ரீ ராம சண்முகநாதக் குருக்கள்

4வது மகா கும்பாபிஷேகம் - துன்முகி வருடம் ஆவணித்திங்கள் 23ஆம் நாள் (08.09.2016) வியாழக்கிழமை ஸப்தமி திதி அனுச நட்சத்திரம்
நடாத்தியவர் - சிவஸ்ரீ ராமலிங்க குருக்கள் சண்முகநாதக் குருக்கள்

முன்னர் கந்தஷஷ்டி காலத்தில் வருடாந்த உற்சவம் நடைபெற்றபோதும் தற்சமயம்.........................

விஷேட தினங்களுடன், கந்தசஷ்டி, ஐப்பசி வெள்ளி, மாசிமகம் என்பன விஷேட மானவை. மாசி மகத்தன்று சுவாமி கீரிமலைக்கு எழுந்தருளி தீர்த்தமாடி அருள்பாலிப்பார். ஆலயத்தை அமைத்த சிவஸ்ரீ முத்துசாமி குருக்களை தொடர்ந்து அவருடைய மகன் சிவஸ்ரீ குமாரசாமி குருக்களும் அவரைத் தொடர்ந்து அவர் மகன் சிவஸ்ரீ முத்துச்சாமிக் குருக்களும் தற்போது அவருடைய மருமகன்(மகளின் கணவர்) சண்முகநாதக் குருக்களும் பரிபாலித்து வருகின்றனர். வள்ளிமலை கந்தன் திருவூஞ்சற்பா - இயற்றியவர் சுன்னாகம் ஸ்ரீபத் அ.குமாரசாமிப்புலவர்

பன்னாலை திருசீச்சரம் ஸ்ரீபால சுப்பிரமணியர் திருவூஞ்சல்
இயற்றியவர் - வ. நல்லப்பு

தேர் வெள்ளோட்டம்................

2016ம் ஆண்டு கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் 2017ம் ஆண்டு தொடக்கம் சித்திரை அமாவாசையை தீர்த்த உற்சவ நாளாகக் கொண்டு இருபத்தைந்து நாட்கள் மகோற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

2019ம் ஆண்டு மஞ்சவெள்வோட்டமும், மஞ்ச பவனியும் சித்திரத் தேர் வெள்வோட்டமும், சித்திரத் தேர் பவனியும் இடம்பெற்றதுடன், மகோற்சவ கால உற்சவத்திருவிழா சப்பைரத உற்சவம், தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநாதர் ஆலய வரலாறு

தொகுப்பு: **சிவப்பிரகாசம்**

நரசிங்கம் தம்பதியினர் அறுபத்திமூவர் குருபூசை மூன்று முறை செய்தார்கள் இறை பக்திமிக்கவர் வல்லுவத் தையை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் மகள் தெய்வானைப்பிள் ளையை இராசாகாசியர் தம்பதிகளின் மகன் கந்தையா என்பவரை (விசகடி வைத்தியர்) திருமணம் செய்து வைத்தார்கள். இவர் காங்கேசன்துறையில் கோயில் கொண்டு எழுந்தருளி இதுக்கும் குருநாதப் பெருமானை குல தெய்வ மாகக் கொண்டு பக்திப்பரவசத்துடன் வாழ்ந்து வந்தார். அவர்கள் நம்பிக்கையை குருநாதர் வீணடிக்கவில்லை. ஒருநாள் வீட்டுவாசல், முற்பகுதியில் கிழக்குப்பக்கமாக தென் னைக்கு நீர்பாச்சும் போது. வெண்கல வேல் ஒன்றைக் கண்டு எடுத்தனர். மெய் சிலித்தனர்.

அன்றிரவு கனவில் சிறுவன் உருவத்தில் தோன்றிய குருநாதர் நான் உன்னுடன் வந்து விட்டேன். இங்கு என்னை பூசிப்பாயாக என்று திருவாய்மலர்ந்து அருளினார். அவர்கள் கொட்டகை அமைத்து வேலைப் பிரதிஸ்டை செய்து வழிபட தொடங் கினார்கள் நித்திய பூசை செய்து வழிபட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களின் மகள் செல்லாச்சிப் பிள்ளையை கந்தையா மணம் செய்து மகிழ்ந்தார்.

இக்காலத்தில் பூஜை வழிபாடுகளை கந்தையா அரசவேலையா செய்து வந்தார். ஒவ்வொரு வெள்ளியும் பொங்கல் நெய் வேத்தியம் படைத்து பூசிப்பதில் தவறுவ தில்லை.

இவருக்குப் பின்னர் இவர் மகள் இக் காலத்தில் செல்லாச்சி பிள்ளை தம்பதியின ருக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுக்கு போகர் சுவாமிகள் அவர்கள் மூத்தவருக்கு பாலசுப்பிரமணியம் என்றும் இளையவருக்கு உமாபதி சிவம் என்றும் நாமங்களைச் சூட்டினார்கள். தொடர்ந்து பால சுப்பிரமணியம் அவர்களே பூசை வழி பாடுகளைச் செய்து வந்தார்.

1992இல் நாட்டின் சூழ்நிலைகள் காரணமாக இடம்பெயர்வு வந்து அக்காலத் தில் பாலசுப்பிரமணியம் இறைபதம் அடைந்தார். அதன் பின்னர் திரு சிவப்பிரகாசம் எமது உறவினர் குருநாதர் மேல் அளவு கடந்த பக்தி உடையவர் அவர் மூலம் தினமும் பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றது. இன்றுவரை அவர் பூசை வழிபாடுகள் செய்து வருகிறார். இக் கோயில் நூறு வருடங்களுக்கு மேலா னாது. இக் கோயிலை உமாபதி இரா சேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வர் ஸ்ரீ சங்கர் புனருத்தாரணம் செய்ய செய்ய வேண்டுமென கனவில் தோன்றி அருள் பாலித்துள்ளார். எல்லாம் வல்ல குருநாதர் துணையுடன் கும்பாபிஷேகம் நடை பெறும்.

திருவெம்பாவை கூட்டுப் பிரார்த் தனை இவ் ஆலயத்தில் இருந்து ஆரம் பித்து பஜனை பாடல்களை திருவெம் பாவை பதிகம்பாடி வலம் வருவது குறிப் பிடத்தக்கது.

✶ மக்களுடன் நேரடி வழிபாட்டுத் தன்மை.
✶ மூலஸ்தான மூர்த்தியாக வேல் உள் ளது.
✶ குரு நாதப் பெருமானின் பாதக்க மலத்தை பணிந்தவர்கள் எல்லாக் குறைகளும் நீங்கி சகல செல்வங் களையும் பெற்று சகல சௌபாக்கியங் களுடன் வாழ்வதை நாம் காண முடிகிறது.
✶ இத்தனை காலத்து சஸ்கிருத மய மாக்க நவீனமயமாக்க ஆளைகளை தாண்டிய தரிசனம்
✶ மந்திர மல்லாத மன மொழி வழிபாடு.

"தனித்து வழி நடக்குமென திடத்து மொரு வலத்தும் இரு புறத்து மருவடுத்து இரவுபகல் துணையாகும்"

- என்று அருணகிரிநாதர் வேலின் பெருமை பற்றிக் கூறுகையில் தனித்து வழி நடக்கின்ற அடியவர்களுக்கு வலப்புறமும் இடப்புறமும் முன்னும் பின்னும் இரவும் பகலும் துணையாக வேல் நின்று விளங் கும் என்று குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாலை மயிலையம்பதி
## அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்

**திருமதி கோமதி மாயகிருஷ்ணன்**
விஞ்ஞான தொழில்நுட்ப அலுவலர்

### தல விருட்சம் - திருவாத்தி

**ப**ன்னாலை மயிலையம்பதியில் வாழ்ந்த வன்னித் தம்பி வைரவி மற்றும் சம்புநாதரின் மாமன் (மனைவியின் தந்தை) ஆகியோர் ஒரு மாலைதீவு தென்னை மரத்தடியில் ஒரு கல்லை வைத்து பொங்கிப் படைத்து வழிபட்டனர். வைரவி என்பவர் இறந்த பின் அவரின் பிள்ளைகள் இக் காணியை சம்புநாதருக்கு விற்று சென்றனர்.

அக்காலத்தில் சம்புநாதர் மறவன்புலவில் நெற் காணிகளை மேற்பார்வை செய்துவரும் காலத்தில் ஒருநாள் இரவு நெல், வைக்கோல் என்பவற்றை வண்டிகளில் ஏற்றி வரும் போது அவர்களுக்கு முன் ஒரு கறுப்பு நாய் வந்ததாக வும் வீடு வந்ததும் மறைந்து விட்டதால், வைரவரே தமக்கு துணையாக வந்ததாக நம்பி 1835 ஆம் ஆண்டு அவ்விடத்தில் நின்ற ஒரு திருவாத்தி மரத்தின் கீழ் சூலத்தை நாட்டி வழிபாடு செய்து வந்தார்.

சம்புநாதர் இறந்தபின் அவரின் மகள் மீனாட்சிப் பிள்ளை வைரவரை பூசித்து வந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் தூண்டுதலால் கொழும்பு கொம்பனி தெருவில் பிரபல வியாபாரியான சம்புநாதரின் மகன் வைரமுத்து 1928ஆம் ஆண்டு இரு சிறிய மண்டபங்களாக சுண்ணாம்பினால் கட்டி, ஒன்றரை அடி உயர ஐம்பொன்னாற் செய்யப்பட்ட சூலம் 1929ல் பிரதிஸ்ட்டை செய்வித்தார். சிவத்திரு கந்தையா ஐயத்துரை அர்ச்சகராக செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பூசை செய்து வந்தார். மீனாட்சிபிள்ளை, வைரமுத்து (சயம்பு நாதரின் பிள்ளைகள்) இறக்க மீனாட்சிப் பிள்ளையின் கணவர் சிதம்பரப்பிள்ளையும் வைரமுத்துவின் மனைவி பார்வதிப் பிள்ளையும் ஆலயத்தை நிர்வகித்து வந்தனர். 1946இல் கர்ப்பகிரகம் ஓடுகள் அகற்றி சீமெந்தினாலும் தூபி மூடு சாந்தினாலும் அமைத்து அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்பன விசாலமாக அழகுற அமைக்கப்பட்டது.

தென்புறமாக மடைப்பள்ளியும் கட்டப்பட்டது. 1947 தைபூசம் தொடக்கம் சிவத்திரு அருணாசலம் பரமலிங்க ஐயர் ஆலய அர்ச்சகராக தினமும் ஒரு கால பூசை செய்து வந்தார். அதன்பின் வைரமுத்துவின் மகன் இரத்தினமும் மனைவி செல்வநாயகியும், திரு சுவாமிநாதர் பொன்னம்பலமும் மனைவி இராசம்மாவும் ஆலயத்தை நிர்வகித்தனர். தற்போது வை. இரத்தினம் குடும்பத்தினர். நிர்வகித்து வருகின்ற போதும் திருப்பணிச் சபை அமைக்கப்பட்டுள்ளது.

1வது கும்பாபிஷேகம் - 1929 ஆனி பூச நட்சத்திரம்
நடாத்தியவர் - சிவத்திரு சதாசிவபரம் தற்பரானந்தக் குருக்கள்.

2வது கும்பாபிஷேகம் - 1947 தைபூசம்.
நடாத்தியவர் - சிவத்திரு சதாசிவபரம் தற்பரானந்தக் குருக்கள்.

3வது கும்பாபிஷேகம் - 1973 ஆனிப் பூசம்.
நடாத்தியவர் - சிவத்திரு இ. நவரத்தினக் குருக்கள்.

4வது கும்பாபிஷேகம் - 07. 09. 1989 (ஆவணி 22ஆம் திகதி)

5வது கும்பாபிஷேகம் -
உபகரிப்புக்கள் :
1962 - நிருத்த மண்டபம் அமைக்கப்பட்டது.
மூலமூர்த்திக்குரிய திருவாசி - கந்தப் பிள்ளை முத்துத்தம்பி
1964 - நாய் வாகனம் - வை. இரத்தினம்
1967 - 21 அடி உயர மணிக்கோபுரம் - முருகேசு சின்னத்தம்பி
1973 - ஐம்பொன் உற்சவமூர்த்தி - இ. இராமநாதன் சட்டவிளக்கு - சி. சங்கரப் பிள்ளை
1978 - மடைப்பள்ளி விஸ்தரிப்பு - முருகேசு சின்னத்தம்பி
1979 - உள்வீதி சுற்றுமதில் - வினாசிதம்பி சரவணமுத்து வடகிழக்கு மூலையில் தொட்டி கட்டி குழாய் நீர் வசதி.
1989 - திருமஞ்சக் கிணறு - வை. இரத்தினம் குடும்பம் பழைய மடைப்பள்ளி களஞ்சிய அறையாக்கி புதிய மடைப்பள்ளி - விநாசித்தம்பி நடராசா கருங்கல் விநாயகர் விக்கிரகம் - நவரத்தினம் நடராசா குடும்பம்.
ஸ்தூபி - வை. இரத்தினம் குடும்பம்
வெள்ளி திருவாசி - சி. பாலசுப்பிரமணியம்
பஞ்சநாத மணி - சி. வேலாயுதம்
மூல பீட வெள்ளி கவசம் - ந. நடராசா
கோபுரம் - இரத்தினம் குடும்பம்

1938 இல் கதிர்காமத்தம்பி ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்டு வெள்ளிக்கிழமை தோறும் கூட்டு வழிபாடு நடைபெற்று வருகின்றது. வருடப்பிறப்பு, சித்திரை பூரணை, வைகாசி விசாகம், ஆனிப்பூசம், நவராத்திரி, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம் சிவராத்திரி விசேட பூசைகள் நடைபெறும். அலங்கார உற்சவம்.......
வைகாசி இறுதி செவ்வாய் பொங்கல் விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும். ஊஞ்சற்பா - இயற்றியவர் - நல்லப்பு சட்டம்பியார்
புதுப்பித்தவர் - பண்டிதர் பி. கதிரிப்பிள்ளை
அருட்பாமாலை - அருட்கவி வினாசித்தம்பி
தோத்திரப் பாடல்கள் - கா. கதிர்காமத்தம்பி

**வல்லுவத்தை அருள் மிகு**
**ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்**
**தரு - புளியமரம்**

1805ஆம் ஆண்டளவில் குமரப்பா என்பவரின் மனைவி தெய்வ உணர்வால் தாக்கப்பட்டு நோய்வாய் பட்டார். மருந்து மாத்திரைகள் பயனற்றபோது, சுழிபுரத்தை சேர்ந்த "கந்தஞானி" என்பவர் மூலம் அணங்காட்பட்டமையை அறிந்து அவர் குறிப்பின் படி பன்னாலை வல்லுவத்தை என்னும் குறிச்சியிலுள்ள குமரப்பா என்பவருடைய புளியங் காணியில் ஒரு புளிய மரத்தடியில் வழிபடத் தொடங்கினர்.

1817இல் மயில்வாகனம் செல்லத்துரை உபகரித்த சூலம் வழிபாட்டுக்குரியதாகியது. தொடர்ந்து அப்பர் குடும்பம் உபகரித்த பெரிய சூலமும் அதனருகில் பிரதிட்டை செய்யப்பட்டது. 1825ஆம் ஆண்டளவில் கிழக்கு வாயிலையுடைய கொட்டில் ஆலயம் அமைக்கப்பட்டது. 1827இல் நாகதம்பிரான், காளி வழிபாடுகளும் ஆரம்பமாகின. குமரப்பா மகன் சேனாதி சில காலத்தின் பின் குத்தகைப் பராமரிப்பில் அவ் நிலத்தை விட்ட போதும் ஆலய வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

பரிபாலன சபை அமைக்கப்பட்டு 1970களில் கர்ப்பக்கிரகம் வைரக்கல்லினால் கட்டப்பட்டு தூபிக் கலசம் நிறுவப்பட்டது.

இக்காலத்தில் தி. இராசதுரை என்பவர் இக்காணிக்குள் தனது பழைய இரும்புகளைப் போட்டு வியாபாரம் செய்து வந்தார். காணிக் குத்தகையை வ. பாலசிங்கம் பெற்று வந்தார். ஆலயவாசல் வடபுறம் மாற்றப்பட்டது. அவ்வேளை சி.மாசிலாமணி என்பவர் அவ் நிலத்தை விலைக்கு வாங்கிய போது தி.இராசதுரை தனது ஆட்சியில் உள்ள காணி என வழக்கு தாக்கல் செய்தார். ஆலய வழிபாடு தடைப்பட்டது. பரிபாலன சபை முயற்சியால் பூசைகள் தொடர்ந்தன. 1987இல் இராணுவ நடவடிக்கையால் சிதைவடைந்த கோவிலை தி. இராசதுரை குடும்பத்தினர். புனரமைப்பு செய்து அர்த்த மண்டபம், மகாமண்டபம் அமைத்து 25 அடி உயர மணிக்கோபுரம் அமைத்து திரு மஞ்சனக் கிணறும் அமைக்கப்பட்டது. வடகிழக்கில் மடைப்பள்ளி, களஞ்சிய அறை அமைக்கப்பட்டது.

1வது கும்பாபிஷேகம் - 1976 சித்திரை ரோகிணி நட்சத்திரம் நடாத்தியவர் - கீரிமலை சிவத்திரு சிதம்பரப்பிள்ளை ஐம்பிள்ளைக் குருக்கள்.

2வது கும்பாபிஷேகம் - 09.02.1989 தை ரேவதி நட்சத்திரம் நடாத்தியவர் - கீரிமலை சிவஸ்ரீ சி. உருத்திரபு ரேஸ்வரக் குருக்கள்

3வது கும்பாபிஷேகம்

முதல் கும்பாபிஷேகத்தின் பின் சித்திரைப் பரணியை முதலாகக் கொண்டு 12 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற்றது. 2வது கும்பாபிஷேகத்தின் பின் வருடாந்தம் தை ரேவதி நட்சத்திரத்தை முதலாகக் கொண்டு 12 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது.

ஆரம்பத்தில் அம்பனை சிவத்திரு சிதம்பரப்பிள்ளை நீலகண்டையவர் அர்ச்சகராக இருந்தார். அவரைத் தொடர்ந்து சிவத்திரு அருணாசலம் பரமலிங்கையரும் தொடர்ந்து மகன் பூவேந்திர ராசாவும் பூசை செய்தனர். 1990 ல் இருந்து அளவெட்டி வடக்கு சிவத்திரு முருகையா ஜீவசங்கரும் தற்போது...............

இக் கோவிலுக்குரிய திருவூஞ்சல் பாடல் விழிசிட்டி பண்டிதர் வேலுப்பிள்ளை பொன்னம்பலவன் என்பவரால் பாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாலை சிவனடியார் தொண்டர் மடம்

**நவிசா ஈஸ்வரானந்தம்**, ஆசிரியை,
கணேசா அறநெறிப் பாடசாலை.

**தி**ருத்தலங்களும் தீர்த்தங்களும் அருவிகளும் ஆறுகளும் மலைகளும் பல்கலைக்கழகங்களும் பயிற்றிடும் ஆசான்களும் நிறைந்து விளங்கும், ஈழமணித் திருநாட்டில் வட பால் யாழ் நகரின் மேற்கே இயற்கை எழில் கொஞ்சும் பன்னாலையம்பதி அமைந்துள்ளது. பன்னாலை பழம் பெருமையும் சிறப்பும் மிக்க ஒரு கிராமமாகும். இக் கிராமத்தில் சைவ சான்றோர்கள் பலர் வாழ்ந்து சைவம் வளர்த்திருந்தார்கள்.

பன்னாலை சேர்க் கனகசபை வித்தியாலயத்தின் ஸ்தாபகராக விளங்கும் சேர் கனகசபை திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற சைவ, சித்தாந்த மாநாட்டினை தலைமை தாங்கி நடத்தியது மட்டுமல்லாது "சேர்" பட்டம் பெற்றவரும் ஆவார். வித்துவான் சிவானந்தையர் சிதம்பர தரிசனம் செய்து புலியூர்ப் புராணம் பாடினார். இவ்விதம் பலர் எமது கிராமத்தின் பெருமையை உலகறியச் செய்திருக்கிறார்கள்.

இக் கிராமத்தில் சைவ வேளாளர் மரபில் உதித்த அமரர் திரு.சி.இளையதம்பி என்பவர் மடத்தை ஸ்தாபித்தார். அம் மடத்திற்கு சிவனடியார் தொண்டர் மடம் எனப் பெயர் சூட்டினார். திரு.சி.இளையதம்பி அவர்கள் திருமணம் செய்யாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய பிரமச்சாரியாக இருந்து தனது வாழ் நாள் முழுவதும் ஆத்மீகத்திற்காகச் செல விட்டு வாழ்ந்து வந்திருக்கிறார். அன்பு டனும் பண்புடனும் எல்லோருடனும் பழகி எல்லோரையும் சமய வழியில் ஈடுபட வைத்த பெருமகன் ஆரம்ப காலத்தில் படங் களை வைத்து வழிபட்டு வந்தார். இந்த வழிபாட்டுடன் சிவலிங்கம் அமைத்து வழி பட வேண்டும் என்ற பெரு விருப்பம் இவர் மனதில் ஏற்பட்டது. இதனால் சிவலிங்கம் ஒன்றை ஸ்தாபித்து வழிபட்டு இருக்கிறார். அதன் பின் அம்மன், நடராஜர் உருவங் களும் அமைத்து வழிபட்டு வந்திருக்கிறார் கள். அத்துடன் அவர் மனம் திருப்தி அடை யவில்லை. சைவத்தின் காவலர்களாக பல்லவர் காலத்தில் வேற்று மத ஊடுருவல் களில் இருந்து சைவத்தைப் பேணி வளர்த்து திருநீற்றின் ஒளி விளங்க வைத்த சமய குரவர் நால்வரையும் வழிபட்டார்.

இம் மடமானது ஆரம்பத்தில் நடு முற்றம் கொண்ட நாற்சார் அமைப்பாக காணப்பட்டது. இங்கு கிழக்கு நோக்கிய சிவலிங்கமும் ஐம்பொன் நடராஜர் சிலை யும் சிவகாமி அம்பிகை, மாணிக்கவாசகர் திருவுருவங்களும் காணப்படுகின்றன.

இம் மடமானது தாடியர் மடம் என்று சுருக்கமாக எல்லோராலும் அழைக்கப்படு கின்றது. இம்மடத்தின் ஸ்தாபகராக விளங் கிய திரு.சி.இளையதம்பி அவர்கள் தனது சொத்துக்கள் அனைத்தையும் இம் மடத் திற்கே அன்பளிப்புச் செய்துள்ளார். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற பொது நோக்குடன் தானுண்டு தன துண்டு என்று வாழாது ஊருண்டு உல குண்டு என்ற பொதுப் பணி ஆற்றினார். நீண்ட சடாமுடியும் வெண்ணிறத் தாடியும் தோற்றத்தில் குறுமுனி அகத்தியர் போலக் காட்சி அளித்தார். வயற் காணிகளுடன் மடத்தின் சொத்துக்களாக நாற்பத்தெட்டுப் பரப்புக் காணி இன்று ஆவணமாக அமை கிறது.

பெரியார் திரு.சி.இளையதம்பி அவர் கள் இறைபதம் அடைந்த பின் அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடரச் செய்வதற்காக நம்பிக்கை சபை உருவாக்கப்பட்டது. திரு.பொன்னம்பலம் சிவபாதசுந்தரம், திரு.இராஜசிங்கம் சின்னப்பு, திரு.சின்னக் குட்டி, இளையகுட்டி, திரு.விசுவநாதர், சங் கரப்பிள்ளை, திரு.வைத்திலிங்கம் பொன் னையா ஆகியோர் கொண்ட சபை உரு வாக்கப்பட்டு செவ்வனே பரிபாலிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு சீரும் சிறப்புமாக இயங்கி வந்த போது 1992ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வினால் ஏனைய கோயில்கள் போல பாதிக்கப்பட்டு பூஜைகள் நடை பெறாது காணப்பட்டு தற்போது "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்ற வாசகத்தோடு ஆரம்பிக்கப்பட்டுச் செயற்பாடுகள் நடைபெறு கிறன.

பெரியார் திரு.சி.இளையதம்பி அவர்கள் மடத்தை ஸ்தாபித்ததோடு மட்டும் நின்று விடாது பல செயற்பாடுகளையும் முன்னெடுத்தார் தினமும் நித்திய பூஜை கள் செய்து தவறாது வழிபட்டு வந்தார். அத்தோடு நைமித்திய பூஜைகளையும் ஆற்றினார்.

பெரியார் திரு.சி.இளையதம்பி அவர்கள் மடத்தில் நந்தவனம் அமைத்து இறைவழிபாட்டுக்கு ஏற்ற மலர்களை நந்த வனத்தில் இருந்து பெற்றதோடு மருந்து மூலிகைச் செடி கொடிகளை உருவாக்கி அடியவர்களின் நோய் பிணியையும் நீக்கி வந்தார்.

மடத்தின் தெற்குப் புறமாக நீர்த் தொட்டி அமைத்து அதில் கிணற்றில் இருந்து தினமும் நீர் துலாவினால் இறைத்து உயி ரினங்களின் தாகம் தீர்க்கின்ற மிக உத்தம மான பணியை ஆற்றி இருக்கிறார். மடத் தினை அண்டிய பகுதி வெறும் நிலப் பரப் பாக அமைந்திருந்தது. இதனை கோணா கலட்டி என்று அழைப்பார்கள். கோணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலட்டியில் மேய்ந்து வருகின்ற மாடுகளுக்கு தண்ணீர் தாகம் தீர்க்கும் புண்ணியத்தை பெரியார் செய்து வந்தார். அத்தோடு மாடு மேய்க்கும் சிறுவர்களை அன்போடு அழைத்து தான் சமைக்கும் உணவையோ அல்லது இறைவனுக்குப் படைக்கின்ற பிரசாதத்தையோ கொடுப்பதை வழக்கமாக கொண்டிருந்தார்.

பெரியார் திரு.சி.இளையதம்பி ஐயா காலத்தில் இங்கு நாயன்மார்கள் நால்வர தும் குருபூஜை மிகவும் சிறப்பாகச் செய்யப் பட்டு அடியார்களிற்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. குருபூஜை காலத்தில் திரு முறை ஓதுதல் சிறப்பாக இடம்பெற்றது.

ஆடி அமாவாசை காலத்தில் கீரி மலைக்குச் செல்லும் பக்தர்களிற்கு தாக சாந்தி நிலையம் அமைத்து அடியார்களின் தாகத்தினைப் போக்கினார்கள். அத்துடன் நவராத்திரி பூஜை, திருவெம்பாவை பூஜை, சித்திரை மாதத்தில் வருகின்ற சித்திர புத்திர நாயனார் தினம் போன்றவற்றை பெரியார் தன்னுடைய காலத்தில் மிகவும் சிறப்பாகச் செய்து வந்துள்ளார். மானம்பூத் திருவிழா அன்று பன்னாலையில் அமைந் துள்ள திருதீச்சர ஆலய முருகப் பெருமான் ஊர்வலமாக வந்து சிவனடியார் தொண்டர் மடத்தின் வன்னி மரத்தின் கீழ் வன்னி வாழை நட்டு வாழை வெட்டு நடைபெறு வது மகிழ்ச்சிகரமான ஒரு விழாவாகும்.

அத்தோடு சிவராத்திரி விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது அத் தோடு மணிவாசகர் விழாவும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. அக் காலத்தில் திருவாதவூரடிகள் புராணத் தினை வாசித்து பொருள் கூறும் மரபு இருந் திருக்கிறது.

அத்துடன் பஜனைகள் தினமும் படித்து வந்திருக்கிறார்கள். யோகப் பயிற்சி அறைகள் காணப்படுகின்றன. நூல் நிலை யம் அமைந்திருக்கிறது. நிறைய சமயப் புத்தகங்கள் காணப்பட்டது. இப் புத்தகங் கள் எம்மவரின் சமய அறிவை மிளிரச் செய்தது. ஆனால் இவை அனைத்தும் காலத்தின் கோலத்தினால் சிதைவடைந்து விட்டன. சைவ சொற்பொழிவுகள் நடை பெற்று மக்களின் சமய அறிவு வளர்க்கப் பட்டது. சைவ செயல் முறைகள் அனைத் தும் இங்கு நடைபெற்று மக்களின் சமய அறிவு வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந் தது. தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம் போன்ற ஆதினங்கள் தமிழ் நாட்டில் எவ்வாறு சமயப் பணியும் சமூகப் பணியும் ஆற்றி சமயத்தை வளர்த்த னவோ அதே பணியை எமது சிவனடியார் தொண்டர் மடமும் சிறிதளவிலேனும் செய்து எமது கிராமத்தின் சமய நெறி வளர பணியாற்றியுள்ளது என்று கூறினால் அது சற்றேனும் மிகையாகாது.

சித்தாந்த வகுப்புக்கள் நடைபெற்று மக்களின் சித்தாந்த அறிவு வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிந்துள்ளது. திருத்தீச்சரம் ஆலயத்தில் இருபத்தேழு நட்சத்திரங்களுக் கான நட்சத்திர திருவிழா நடைபெற்ற காலத்தில் சிவனடியார் தொண்டர் மடத்தில் பக்கதர்கள், கலைஞர்கள், சிற்பிகள், துறவி கள் தங்கியிருந்து சேவை புரிந்ததாகக் கூறு கின்றார்கள். மேலும் கதிர்காமம் மாவிட்ட புரம் கீரிமலை போன்ற புண்ணிய தலங் களுக்கு யாத்திரை செல்பவர்கள் இம் மடத் தில் தங்கிச் சென்றதாக கூறப்படுகிறது.

இடம்பெயர்வின் பின் கவனியாது காணப்பட்ட இம் மடத்தினை பிரம்ம ஸ்ரீ ம.மகேந்திரசர்மா அவர்களும் பல சைவ அன்பர்களும் ஒன்று கூடி 2008ம் ஆண்டு தை மாதம் அத்த நட்சத்திரத்தில் நூதான பிம்ப பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் 28.01.2008 அன்று நடைபெற்றது. இன்று இம் மடாலயத்தின் தர்மகர்த்தா சபை உறுப் பினர்களாக பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா, திரு.வி.அம்பலவாணர், திரு.க.விக்னேஸ் வரன், திரு.த.பிறேம்குமார், திரு.சு.முகுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் ஆகியோரும் இணைந்து செவ்வனே நடாத்தி வருகிறார்கள். இச் சபையின் தலைவராக பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா அவர்கள் விளங்கி வருவதுடன் நித்திய பூசகராகவும் அவரே விளங்கிச் சிறப்பித்து வருகிறார்.

இம் மடாலயத்தில் ஆரம்பத்தில் நடைபெற்றது போல நாயன்மார் குரு பூஜை, நவராத்திரி பூஜை, திருவெம்பாவை பூஜை போன்றவற்றோடு இணைந்து தைப்பொங்கல், வருடப்பிறப்பு, சித்திராப் பௌர்ணமி, சிவராத்திரி போன்ற தினங் களில் அபிடேகமும் நடைபெற்று வருகின் றது.

நடராஜருக்கு ஆறு அபிடேகங்கள் சிறப்பிற்குரியனவாகும்! அவையாவன;

01. மாசி மாதத்தில் வளர்பிறை சதுர்த்தசி திதி.
02. சித்திரை மாத திருகோண நட்சத்தி ரம்
03. ஆனி மாத உத்தர நட்சத்திரம் (ஆனி உத்தரம்)
04. ஆவணி மாதத்தில் அபரபட்ச சதுர்த் தசி திதி
05. புரட்டாதி மாத அபரபட்ச சதுர்த்தசி திதி
06. மார்கழி மாத திருவாதிரை

இவ் ஆறு அபிடேகமும் இங்கு சிறப் பாக நடைபெற்று வருகின்றது. நடராஜரை ஏனைய சிலை போல எழுந்தருள் பாலிக்க கூடாது. ஆகையால் நடராஜரின் அபிடேகங் களில் ஆனி உத்தரமும் மார்கழி திருவாதி ரையும் சிறப்பு மிக்கது. இவ்விரு தினங்களி லுமே இறைவன் ஆலயத்தை வலம் வரு வார். மார்கழி திருவாதிரை அன்று நள் ளிரவு 12.00 மணியளவில் அபிடேகம் இடம்பெற்ற பின்னர் அங்குள்ள மாணிக்க வாசகப் பெருமான் திருவீதி உலா வந்து திருவெம்பாவை பாடி பன்னாலை சிவபூத வராஜர் ஆலயத்தில் வைக்கப்பட்டு பஜனை கள் பாடப்பட்டு சொற்பொழிவுகள் நடை பெறும் பின்னர் மணிக்கவாசகரை மீண் டும் மடத்திற்கே எழுந்தருளச் செய்வார்கள். மார்கழித் திருவாதிரை அபிஷேகமும் அத னைத் தொடர்ந்து நடைபெறும் மாணிக்க வாசகர் ஊர்வலமும் திருவெம்பாவை சபை யினரால் முன்னெடுக்கப்படுகின்ற விழாக் களாகும்.

மார்கழி திருவாதிரை அபிஷேகமும் மாணிக்கவாசகர் எழுந்தருளி வரும் காட்சி யும் சிதம்பரத்தில் நடைபெறும் காட்சியை எமக்கு கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது. சிதம்பரத்திலேயும் நடராஜப் பெருமானுக்கு ஒரு வருடத்தில் ஆறு அபி டேகங்கள் சிறப்பாக நடைபெறுகின்றது. மாணிக்கவாசகப் பெருமான் எழுந்தருளச் செய்து விழாக்கோலமாக நடராஜப் பெரு மான் முன்னே நிற்று ஓதுவது போல அமையும் நடராஜப் பெருமான் ஆடல் வல் லுனராக பஞ்ச கிருத்தியங்களை விளக்கும் நிலையில் அங்கு எழுந்தருளும் காட்சி "குனித்த புருவமும்..." என்ற பாடல் மூலம் சுட்டிக் காட்டுகின்றது.

இடம்பெயர்வின் பின் மீளக் குடிய மர்ந்தபோது இம் மடத்தில் நடராஜர் அம் மன் சிலைகள் எதுவும் அற்ற நிலையில் காணப்பட்டது. பின்னர் சில காலங்களில் அம்மன் சிலையானது ஒரு அடியவரின் வீட்டில் பட அறையில் சீமெந்தினால் கட்டிய நிலையில் காணப்பட்டது. ஆனால் அவ ருக்கு இந்த சிலைகள் மடாலயத்தின் சிலை என்பது தெரியாது. அவர் இறந்த பின் உள் சென்று பார்த்த போது அம்மன் சிலை இருப் பது தெரிய வந்தது. அம்மன் சிலையை எடுத்து மடத்தில் பிரதிஷ்டை செய்தார்கள்.

அம்மன் சிலை கிடைத்த பின்பும் நடராஜர் திருவுருவம் செய்ய வேண்டும் என்ற உணர்வு ஏற்படவே தர்மகர்த்தா சபையினர் நடராஜர் உருவத்தைச் செய்து அதனை பிரதிஷ்டை செய்த காலத்தில் பழைய நடராஜர் சிலை இராணுவத்தின





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ரின் முகாம்கள் அமைந்துள்ள ஒரு இடத்தில் புதையுண்டு கிடந்தது. அவர்கள் அதனை கிராம அலுவலருக்கு அறிவிக்க அவர்கள் பொலிசாருக்கு அறிவித்தார்கள் பின் சைவ அன்பர்கள் பல நாட்கள் அலைந்து திரிந்து அந்த நடராஜர் சிலையை பெற்றுக் கொண்டார்கள்.

மடத்தில் புதிதாக செய்யப்பட்ட சிலை இருந்ததால் இச் சிலையை தற்போது மடத்தின் பூசகராகவும் பரிபாலன சபையின் தலைவராகவும் விளங்குகின்ற பிரம்ம ஸ்ரீ.ம.மகேந்திரசர்மா அவர்கள் வீட்டில் வைத்திருந்தார்கள். இவ்வாறு வைத்திருக்கும் காலத்தில் மடாலயத்தில் பூசிக்கப்பட்ட நடராஜர் சிலை ஸ்தாபிக்கப்பட்டது. மீண்டும் மடத்தில் நடராஜர் பெருமான் சிவகாமி சமேத ஆனந்த நடராஜர் பெருமானாக எழுந்தருளி அருளாட்சி புரிகின்றார். இவ் ஆலயத்தின் பெரியார் திரு.சி. இளையதம்பி என்பவரால் பூசிக்கப்பட்ட லிங்கமே மீண்டும் பூசிக்கப்பட வேண்டும் என்பதற்கிணங்க பின்பு செய்யப்பட்ட லிங்கம் இறையருளால் மறைக்கப்பட்டது என்றும் எண்ணத் தூண்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடங்களும் ஆதீனங்களும்

ம.லக்சுமிநாராயணசர்மா
ஆசிரியர்,
கணேசா அறநெறி பாடசாலை.

மடம் என்ற சொல்லின் பொருள் இருக்கை என பொருள்படும். அதாவது துறவிகள் இருக்கும் இடம் என பொருள்படும். துறவிகள் அறம், ஒழுக்கம், சமயம் என்பவற்றை வளர்க்கும் நிலையம் மடம் எனலாம். இம் மடங்களை மடாலயம், ஆதீனம் எனும் பெயர்களாலும் குறிப்பிடுவர். மடாதிபதியின் இலக்கணங்களாக கல்வி அறிவு, நல்லொழுக்கம், கலாச்சார பண்புகளில் விருப்பம், சமய அனுட்டானம் போன்றவற்றை கொண்டிருக்க வேண்டும்.

மடங்களினுடைய தோற்றத்திற்கான நோக்கங்கள் என்னவெனில் அன்னிய மத செல்வாக்கில் இருந்து சைவசமயத்தை காப்பாற்றுதல் வேண்டும். அதாவது "ஔரங்கசிய" என்ற இஸ்லாமியன் தமிழ் நாட்டின் மீது படையெடுத்து தமிழ் நாட்டு கோயில் சொத்துக்களை சூறையாடினார். சோழர்காலத்து சமூக மையங்களாக விளங்கிய கோயில்கள் சிதைக்கப்பட்டன. மக்கள் கதிகலங்கி திகைத்தார்கள். எனவே சமயத்தை பாதுகாக்க அனாதைகள், ஆதுலர்கள், முதியோர்கள், பாடசாலைகள் ஆகியோருக்கு உரிய பணிகளை மடாதீனங்கள் பொறுப்பேற்றுக் கொண்டது.

மடங்களினுடைய சமய பரிபாலனம் பற்றி நோக்குகையில் இஸ்லாமிய படையெடுபபால் அழிந்த கோயில்களை மீளவும் புனருந்தாரணம் செய்ய வேண்டிய நிலை மடங்களைச் சார்ந்தது. அடியவர்களை தலயாத்திரை, தீர்த்த யாத்திரைகளை மேற்கொள்ள ஊக்கமளித்தல், இதற்காக பாடல் பெற்ற தலங்களுக்கு அருகில் மடங்களை உருவாக்கினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடங்களால் நிறைவேற்றப்படவேண்டிய பணிகளாக பின்வருவனவற்றை குறிப்பிட லாம்.

மானியங்களை பரிபாலித்தல்

தேவார பண்ணிசை மையங்களை நிறுவுதல்

புராணங்களை எழுதுதல், நூல்களை வெளியிடுதல்

மாத இதழ்களை வெளியிடுதல்

போன்றவற்றுடன் இன்னும் பல பணிகளை குறிப்பிட முடியும்.

தமிழக ஆதீனங்களுள் திருவாவடுதுறை ஆதீனம், தர்மபுர ஆதீனம் என்பவை பிரபல்யம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. இவற்றில் திருவாவடுதுறை ஆதீனம் பாடல்பெற்ற தலங்களுக்கு அருகில் பரிபாலனம் செய்து வருகின்றது.

உ..ம்: திருவிடை மருவூர்

திருப்பெருந்துறை

திருவீழிமிழலை

குறுக்குதுறை

முதலான இருபத்தேழு கோயில்களை நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் தர்மபுர ஆதீனமானது சமஸ்கிருத கல்வியை விருத்தி செய்வதற்காக வட மொழியில் நிறுவி சென்னைப் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்டு வருகின்ற "வியாகரண சிரோன்மணி" எனும் தேர்விற்கு மாணவர்களை அனுப்பி வருகின்றனர். திறமையான சிவாச்சாரியார்களை உருவாக்கும் நோக்கில் வேதாகம பாடசாலை ஒன்றை நிறுவி அந்தணச் சிறுவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு வேத ஆகமங்களை போதித்து பரீட்சை நடாத்தி தேர்ச்சி பெறுபவர்களுக்கு "ஆகம பிரவீணா" எனும் பட்டத்தையும் வழங்கி வருகின்றனர். இவ்வாறு மேற் குறிப்பிட்டவற்றைப் போன்று இவ் இரண்டு ஆதீனங்களும் இன்றும் பல பணிகளை செய்து வருகின்றன.


தெல்லிப்பளையிலுள்ள பன்னாலை கிராமத்திலே "சிவனடியார் தொண்டர் மடாலயம்" எனும் மடம் காணப்படுகின்றது. இவ்வாலயத்திலே சித்தர்கள், துறவிகள் முன்னொரு காலத்திலே வாழ்ந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. மேலும் இம் மடாலயமானது சைவசமய நால்வருடைய குருபூசைகள் மற்றும் இன்னும் பல விழாக்களை நடாத்தி வருகின்ற. அத்தோடு இவ் மடாலயத்திற்கென பயிர் செய் புன் நிலங்கள் காணப்படுகின்றன.

நன்றி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவைச் சபையின், மற்றும் விழாக்களில் தமது அன்பளிப்புக்களை மேற்கொண்ட பேரறிவாளர்களை நினைவு கூறும் நிழல்கள்



**அமரர் வே.விஜயரட்ணம்**
(முன்னாள் போசகர்)



**அமரர் சு.ஏழூர் நாயகம்**
(ஓதுவார்)



**அமரர் திரு.க.நித்தியதசீதரன்**
(சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர் MA)
பவளநாத மலராசிரியர்



**அமரர் க.திருநாவுக்கரசு**
(ஓதுவார்)



**அமரர் செ.சண்முகசுந்தரம்**
(ஓதுவார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடம்பினை வளர்க்கும் உபாயம்

கலாபூஷணம், சைவப்புலவர்,
**சு. செல்லத்துரை**
இளவாலை வடக்கு, இளவாலை.



இறைவன் எங்கும் உள்ளவர்; எல்லாம் வல்லவர்; எல்லாம் அறிபவர்; இறைவனைக் கோயிலில் எழுந்தருளச் செய்து, அவரது அருளை வேண்டி வழிபடுகின்றோம். அவர் தன்னை வழிபடுவதற்காக,

"வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்"

அவரைச் சூழ்ந்தமாமலர் கொண்டு துதிக்கின்றோம்.
வாயாலே வாழ்த்தியும், மனதாலே நினைந்தும், உடலாலே தொழுகின றோம்.

மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களும் இறைவழிபாட்டுக்கு உரிய கருவிகள். இவை மூன்றும் எங்கள் உடம்புக்குள்ளேதான் இருக்கின்றன. எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் எங்களுக்குள்ளும் இருக்கின்றான். திருமந்திரம் தந்த திருமூலர்

"உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினை எடுத்து ஓம்புகிறேனே"

என்றும்

"உடம்பினை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும், "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" என்றும் எங்கள் உடம்பு இறைவன் இருக்கும் கோயில், ஆதலால் இதனைப் புனிதமாகப் பேண வேண்டும் என உய்த்துணர வைக்கின்றார்.

தாயுமானவ சுவாமிகள்,

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்
அன்பு, மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய்பராபரமே"

எனப் பெருமானை அழைக்கின்றார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்,

"தேடிக்கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்று இறைவனைத் தனக்குள்ளே கண்டதாகக் கூறுகின்றார்.

கோயில் புனிதமான இடம்: அதுபோல எமது உடலையும் புனிதமாக வைத்திருக்க வேண்டும். புறஉடலை நீர்கொண்டு கழுவிச் சுத்தமாக்கலாம். அகத்தை எப்படிச் சுத்தமாக வைத்திருப்பது என்பதைச் சிந்திக்க வேண்டும். வள்ளுவப் பெருமான்,

"புறத்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் கொள்ளப்படும்"

என, நீரால் புறத்தைத் தூய்மையாக்குவதுபோல அகத்தை வாய்மையால் தூய்மையாக்க வேண்டும் என்கின்றார். உடம்பினுள்ளே அகத்திலே வரும் அழுக்குகள் எவை என்பதை,

"அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

என மனதில் உண்டாகும் பொறாமை, பேராசை, கோபம், தீயசொற்கள் என்பவற்றை அழுக்குகள் என்கின்றார். திருமூலரோ எல்லா அழுக்குகளுக்கும், மூல காரணமாயிருப்பவை பஞ்சமா பாதகங்கள் என்கின்றார்.

"கொலையே. களவு, கள், காமம், பொய்கூறல்
மலையான பாவங்கள்"

என்பதைக் கொண்டு கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய்கூறல் என்னும் மலை போன்ற பாவங்களைச் செய்யாது விட்டால் ஏனைய அழுக்குகள் எவையும் உள்ளத்தில் குடிகொள்ளமாட்டா; உள்ளம் தூய்மையாகும் என உணர்த்துகின்றார்.

உலகில் வாழும் உயிர்களில் ஓரறிவுள்ள புல்பூண்டு மரம் முதல் ஆறறிவு படைத்த மனிதர் ஈறாக எண்ணில்லாதவற்றில் மனிதர் மட்டுமே பகுத்தறிவாகிய நல்லது, கெட்டதை அறியும் ஆற்றல் உடையவர்கள். ஆதலால், மனிதராகிய நாம் பிறஉயிர்களுக்கு வரும் துன்பத்தை நமக்கு வரும் துன்பமாகக் கொண்டால்தான் நாம் அறிவுடையோராவோம். இதனை வள்ளுவர்,

"அறிவினால் ஆகுவதுண்டோ பிறரின் நோய்
தன்நோய் போல் போற்றாக்கடை"

என்கின்றார்.

பஞ்சமா பாதகங்களில் மிக்க கொடியது கொலை ஆகும். அதிலும் தன்னுடைய உடம்பை வளர்ப்பதற்காகப் பிறஉயிரைக் கொன்று அதன் தசையை உண்பது இரட்டிப்பான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமாகும். உயிர் நீங்கிய உடல் புலால் எனப்படும் புலாலை உண்பவர் புலையர் எனப்படுவர். கொல்லாதவராயும். புலாலை உண்ணாதவராயும் இருப்பவரை இந்த உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் கைகூப்பித் தொழும்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்பது வள்ளுவர் வாக்கு.

கொலையையும் புலாலையும் மறுத்து வாழ்பவரே சைவசமயத்தவராவர்.

இறைவனின் அருளை வேண்டித் தொழுபவர்கள் தங்கள் தசையை வளர்ப்பதற்காகப் பிறஉயிர்களின் தசையை உண்பார்களானால் அவர்களுக்கு இறைவனின் அருள் எப்படிக் கிடைக்கும்

"தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என்பது குறள், புலால் என்பது பிறிதோர் உயிரின் புண் அல்லவா. பிறஉயிரின் புண்ணை உண்ணலாமா இறந்த உயிர்களின் உடலை அடக்கம் செய்யும் இடம் சுடலை. மனிதா உன் புனிதமான வயிற்றைப் பிறபிராணிகளின் பிரேதக்குழி ஆக்கலாமா?

சிலர், கொல்பவருக்குத்தானே பாவம், நாம் கொல்வதில்லையே. புலாலை விலை கொடுத்தல்லவா வாங்குகின்றோம் என்கின்றார்கள். நீங்கள் வாங்குவதால்தான் விற்பவன் கொல்கின்றான். ஆதலால், தின்ற பாவமும் கொன்ற பாவமும் உமக்கேதான் என்கின்றார் வள்ளுவர்.

"ஆயிரம் பாவங்களைச் செய்வதிலும் பார்க்க ஒரு உயிரைக் கொல்லாமை நன்று என்பதை,

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" என்றும் தன்னுயிர் போனாலும் பிறஉயிரைக் கொல்லக்கூடாது என்பதை,

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை" - என்றும் வள்ளுவர் அறிவுறுத்துவதைக் காணலாம்.

சிலர் உடலுக்குத் தேவையான சத்துக்கள் எல்லாம் மாமிச உணவில்தான் உள்ளது. அதனால்தான் உண்கிறோம் என்கிறார்கள். இது தவறான எண்ணம். மாமிச உணவிலுள்ள எல்லாச்சத்தும் மரக்கறி உணவில் உண்டு என்பதை மாமிசம் புசிக்காத பிராமணர்கள் மற்றும் சைவர்களைப் பார்த்தாலே தெரியும். நாவின் ருசிக்கு அடிமைப்பட்டுப் புலால் உணவை உண்பதற்காகப் போலிக்காரணங்களைக் கூறுதல் அறிவுடைமையாகாது.

படைப்பிலேயேயே மனிதன் தாவர உணவை உண்பதற்கேற்ற உடலமைப்புடன் தான் படைக்கப்பட்டுள்ளான். புலால் உணவு உண்ணக்கூடிய நாய், பூனை, சிங்கம், புலி முதலான மாமிச உண்ணிகளுக்கு வாயில் கிழிக்கும் பற்கள் கூரான நீண்டவையாய் இருக்கும். வயிறும் குடலும் மிக ஒடுங்கியதாயிருக்கும். தாவர உண்ணிகளாகிய மாடு, ஆடு, யானை முதலான விலங்குகளுக்குக் கிழிக்கும் பல் இல்லை. வெட்டும் பல்லும் அரைக்கும் பல்லுமே இருக்கும். அவற்றின் குடலும் வயிறும் பெரிதாகவே இருக்கும். மனிதன் தாவர உண்ணிகள் போன்ற உடலமைப்பில் இருப்பதைக் கொண்டே அவன் தாவர உணவு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணி என்பதை உணரலாம்.

ஒரு உயிரைக் கொல்லும் போது அந்த உயிர்படும் வேதனை கொன்றவனையே சாரும். கொலை செய்பவனுக்கு அவன் இறந்தபின் என்ன நடக்கும் என்பதைத் திருமூலர் திருமந்திரம்.

“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக்காரர் வலிக்கயிற்றாற் கட்டி
செல்லிடு நில் என்று தீருவாய் நரகிடை
நில்லிடு என்று நிறுத்துவர் தாமே.”

எனக் கூறுகின்றது. நரகலோகத்தில் இவர்களுக்கு என்ன நடக்கும் கொல், வெட்டு, குத்து என்று வெறிகொண்டு திரியும் விலங்கைப் போன்ற குணமுடைய கொடியவர்களை வலிய இயமதூதுவர்கள், பாசக்கயிற்றாற் கட்டிக்கொண்டு போய், எரியும் நரகத்தீயில் செல், நில் - என்று அதட்டி விரட்டி, உருட்டித் தள்ளி விழுத்தி வதைப்பார்கள்.

புலால் உண்பவர்களுக்கு என்ன நடக்கும் என்பதை
“சொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்கள்
பொல்லாகப் பற்றித் தீ வாய் நரகிடை
மல்லாக்கத்தள்ளி மறித்து வைப்பார்களே”

எனக் கூறுகின்றது. தீயதான புலால் உணவை உண்ணும் கீழ் மக்களை இயமதூதர்கள் பலரும் காணப் பற்றி இழுத்துக் கொண்டுபோய் அவர்களின் உடலை கறையான் போல அரித்து எரியும் நரகத் தீயில் மல்லாக்கத் தள்ளிப் போட்டுப் புரட்டி எடுப்பார்கள்.

ஆதலால் மனிதர்களாகிய நாம் எமது உடலை வளர்க்கும் உபாயம் - பஞ்சமாபாதகங்களைச் செய்யாமல் கொலையையும், புலாலையும் விலக்கி அகமும் புறமும் தூயவரகளாக வாழ வேண்டும். தாயுமான சுவாமிகள் சொல்வது போல,

“கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என் இச்சைபராபரமே”

என்று உறுதிபூணுவோம்.


“ஊன் உண்வார் வீட்டில் நான் உண்பதில்லை” என விரதம் எடுப்போம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2015.01.18ஆம் திகதி பவள விழா நிகழ்வு, பவள நாதம் வெளியீட்டு நிகழ்வின் பதிவுகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதி



கலாபூஷணம்
**திருமதி கோகிலா மகேந்திரன்**

கடவுள் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் எங்கே இருக்கிறார்? சிவலோகம் என்பது பேரின்பம் நிறைந்த இடமாமே! அது எங்கே இருக்கிறது? அந்த இடத்திற்குப் போக வழி எங்கே? இவை போன்ற கேள்விகள் ஆதி சமயங்கள் தோன்றிய காலம் முதல் மனித மனத்தில் இருப்பவை. நிரந்தர இன்பத்தைத் தேடும் முயற்சி ஏறத்தாழ 300,000 வருடங்களுக்கு முன்னரே கூட - ஹோமோ சேப்பியன்ஸ் என்ற இப்போதைய மனித இனத்தின் மனதில் சமயக் கருத்துக்கள் தோன்ற முதலே கூட - இருந்திருக்கின்றது.

ஒரு புகையிரத நிலையம்! புகையிரதம் வரப் போகிறது கூட்டம் சும்மா சோ, சோ என்று அலை மோதுகிறது. பார்வைப் புலன் அற்ற சிறு பையன் ஒருவன் தலையில் தோடம்பழம் நிரம்பிய கூடையுடன், "தோடம்பழம் தோடம்பழம்! மலிவு, மலிவு!" என்று கூவி விற்றுக் கொண்டிருக்கிறான். விற்று வரும் சில்லறைகளைத் தனது கிழிந்து போன சேட் பொக்கற்றில் போட்டு வைத்திருக்கிறான். இன்று விற்பனை பரவாயில்லை. பொக்கற் கொஞ்சம் கனமாக இருக்கிறது. பல வேறு கனவுகளோடு அவன் வியாபாரத்தைத் தொடரும் நேரம் புகை வண்டி வருகிறது. மேடையில் ஆயத்தமாக நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் 'மூலை சீற்' முந்திப் பிடிக்கும் அவ சரத்தில் ஆளை ஆள் இடித்துக் கொண்டு ஓடியபோது, இந்தப் பையனை மோதி விழுத்தி விடுகிறார்கள். அவன் மேடையில் குப்புற விழுந்து கிடக்கிறான். கூடை ஒரு புறம் பழங்கள் மறுபுறம் என்று எல்லாமே சிதறிப் போயின. பொக்கற்றில் இருந்த காசும் சிந்தி விட்டது. சனக்கூட்டம் புகையிர தத்தில் ஏறிவிட்டது. வழி அனுப்ப வந்த வர்களும் கை அசைத்து, 'பை' சொல்லிப் போயினர். இவனை யாரும் கண்டு கொள்ளவில்லை. பையன் தனியே படுத் திருக்கிறான். நிலையம் அமைதியாகிவிட் டது. தனது கைகளால் நிலத்தைத் தடவிப் பார்க்கிறான். கைக்கெட்டிய தூரத்தில் கூடையோ, தோடம்பழங்களோ, சில்ல றையோ எதுவும் அகப்படவில்லை. மனம் மிகவும் வேதனைப்படுகிறது பயப்படுகிறது.

அந்த நேரம் ஒரு பெரியவரின் கை அவனைத் தொட்டுத் தூக்குகிறது. "தம்பி! விழுந்து விட்டாயா? எழுந்திரு! எங்காவது அடிபட்டுவிட்டதா? வலிக்கிறதா?" என்று குரல் கேட்கிறது. சுற்று முற்றும் பறந்திருந்த தோடம்பழங்களைப் பொறுக்கிக் கூடை யில் போட்டு அவன் கையில் கொடுக்கிறார். "உனது பழங்கள் கூடையில் இருக்கின் றன" என்கிறார். மேடையில் சிந்திக் கிடந்த சில்லறைகளைப் பொறுக்கி அவன் கையில் கொடுக்கிறார். "எவ்வளவு பணம் வைத் திருந்தாய் ராசா? முழுவதும் இருக்கிறதா, பார்!"

பையன் நெகிழ்ந்து போகிறான் அவன் கண்களில் நீர்! அவர் கேட்ட கேள்வி கள் எதற்கும் அவன் பதில் கூறவில்லை. மாறாக அவன் அவரது கையைப் பிடித்து ஒரு கேள்வி கேட்டான். "ஐயா, நீங்கள் தான் கடவுளின் அவதாரமா?"

கடவுளின் அவதாரம் எப்படி இருக் கும் என்று அவன் படித்திருக்கிறானோ அப்படி அவர் இருந்தார்!

"கடவுளைப் புறத்தே எங்கும் தேட வேண்டாம் மனித மனங்களுக்குள்ளேயே அவர் இருக்கிறார், இருக்க வைக்கலாம்" என்ற மிகப் பெரிய தத்துவத்தை மிக எளி மையாகச் சொல்லும் கதை இது.

பெரும் பெரும் கோபுரங்களைக் கொண்ட கோயில்களின் குட முழுக்குப் போவதை விட இதயக் கோயிலின் குட முழுக்கு நேரம் அங்கு வீற்றிருப்பதையே எமது இறைவன் விரும்புவான் என்று கதை கூறும் சமயமும் எங்களுடையதே.

"தேடித் தேடொணாத் தேவனை
என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்"

என்பது அப்பர் பெருமானின் வாக்கு. தன்னுள்ளே அந்தத் தேவனைக் கண்டபடி யால்தான் அவரால் எண்பத்தொரு ஆண்டு கள் வரை அருள் நிறைந்த வாழ்வை வாழ முடிந்தது.

ஏன் எங்களால் அருள் வாழ்வு வாழ முடியவில்லை? நாம் சமய விவகாரங் களை எல்லாம் படிக்கிறோம். நல்ல விட யங்களை இடையிடையாயினும் கேட்கி றோம். ஆயினும் எமது ஆழ்மனம் அதை நம்பவில்லை "கடவுள் பண்புகளை வளர்ப் பது நல்லது. கடவுள் பண்புகள் ஒன்றி ரண்டையாவது என்னால் வளர்க்க முடி யும்" என்று உள்ளுணர்வு, மைய நம்பிக் கைகளை (Core belief) வளர்த்துக் கொள்ளவில்லை. அது இன்பத்தைத் தரும் என்று தோன்றவில்லை.

நாம் எப்போதுமே மற்றவரோடு எம்மை ஒப்பிட்டு நோக்கிக் கொள்கிறோம். "அவர்கள் பொருட்செல்வம் சேர்க்கிறார் கள். கார் வாங்குகிறார்கள். பல வீடுகளுக் குச் சொந்தக்காரர் ஆகிறார்கள். எஸ்டேட் உரிமையாளர் ஆகிறார்கள். அடிக்கடி வெளிநாடுகள் பலவற்றுக்குப் போய் வரு கிறார்கள்." இவை எமக்கு வெளியே துல் லியமாகத் தெரிகின்றன. அவர்கள் எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட அதிகளவு சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று ஊகித்துக் கொள்கிறோம். (அது அநேகமாக அப்படி இருப்பதில்லை என்று எமக்குத் தெரியாது) அதைத்தான் மனம் உண்மையில் நம்புகிறது. மேடையில் பேசும் போது, "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்ற பட்டினத்தார் பாடலைக் கம்பீரமாகப் போட்டு உடைக்கலாம். ஆனால், நிஜத்தில் நிரம்பவே பணம் தேவை என்ற எண்ணத்தோடு சுழலுகிறது உள்ளம்.

"குருந்த மர நிழலில் இறைவனது சாந்த சொரூபத்தைக் கண்ட மணிவாசகர் தனது மந்திரிப் பதவியை மறந்தார். தான் கொண்டு சென்ற பெருமளவு பொன்னை மறந்தார்" என்பது வெறும் கதையாகவே எமக்குத் தோன்றுகிறது அல்லது, "அவ்வளவு அதிகாரம் மிக்க முதன் மந்திரிப் பதவியை இவ்வளவு எளிதில் கைவிட்ட முட்டாள்" என்றே மாணிக்கவாசகர் பற்றிய பதிவு எம்மிடம் நிஜத்தில் அமைகிறது. சமயம் பேசப்படும் இடங்களில் அப்படி எல்லாம் சொல்லாமல் முகமூடி போட்டுக் கொள்வோம்.

மனித மனம் அமைதி அடைவது இன்பம் பெறுவது தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மிகச் சமீப காலத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. பதினைந்து, இருபது ஆண்டுகளுக்குள்ளே! ஆயினும் அந்த மிக முக்கியமான ஆய்வுகளின் அடிப்படையில் நவீன உள நலச் சிகிச்சைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அந்தச் சிகிச்சைகள் மேலை நாடுகளிலே செய்யப்பட்டு அவை வெற்றி அடைந்தமை தொடர்பான அவதான அறிக்கைகளும் வந்து விட்டன. அந்த அடிப்படையில் "எமது எண்ணங்களே எமது மகிழ்ச்சிக்குக் காரணமாய் அமைவன" என்ற வேரைக் கொண்ட மைந்த அறிகைச் சிகிச்சை முறைகள் நவீன மருத்துவ உலகில் பிரபலம் அடைந்து விட்டன.

"உணவு, நீர், வளி, நித்திரை, அன்பு, பாதுகாப்பு, கணிப்பு" போன்ற தேவைகள் பூர்த்தியாக்கப்படத்தான் வேண்டும். அதற்கு ஓரளவு பணம் தேவைப்படும் என்பது உண்மையே. ஆயினும் தேவைக்கு மேலான வசதிகள், இன்னும் மேலான ஆடம்பரங்கள் மகிழ்ச்சிக்கு அவசியமற்றவை. நடந்து போகிறவரை விடக் காரில் போகிறவர் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதில் எந்த உண்மையும் கிடையாது" என்பதை உளநல ஆய்வுகள் நிரூபித்துவிட்டன. பெரிதாக ஒன்றும் வேண்டாம் என்று மலை உச்சியில் தியானத்தில் இருப்பவர் மிக மகிழ்வாக இருப்பதை நரம்பியல் நிபுணர்கள் மிக நவீன கருவிகள் கொண்டு அளந்து சொல்லி விட்டார்கள். இனியாவது எமது சமயம் எப்போதோ சொன்னதை நம்பலாம் அல்லவா?

"உங்களுடைய தேவைகளை மிகவும் சுருக்கிக் கொள்ளுங்கள்" என்று இமய ஜோதி சிவானந்த சரஸ்வதி கூறினார். மிக அண்மையில், 126 வயது நிரம்பிய இந்தியத் துறவி ஒருவரை விமானப் பயணத்தில் இனம் கண்ட ஊடகங்கள் இந்த வயதில் உயிரோடிருப்பதே மிகப் பெரும் உலக சாதனை! பிறகு விமானப் பயணம் வேறு செய்வது எப்படி? என்று வியந்து போய் அவரைப் போட்டு விளாக்களால் துளைத் தெடுக்க, அவர் கூறியது, "நான் வெறுமனே தானியங்களும், பருப்பும், பழமும் சாப்பிடுவேன். ஒரு பலகையைத் தலைக்கு அணையாய் வைத்தபடி வெறுந் தரையில் உறங்குவேன். வேறு என்னைப் பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை" என்பதே! "சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தார்" என்ற திருமந்திரக் கூற்றுக்கு இவர் வாழும் வாழ்க்கை உதாரணம் அல்லவா?

"மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதி" என்று இராமலிங்க அடிகளாரால் போற்றப்பட்ட இறைவனை நாம் ஒருபோதும் பெரிய செல்வந்தனாக உருக் கொடுத்துப் பார்ப்பதில்லை." வற்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோடு கலனாப் பலி தேர்ந்தெனதுள்ளம் கவர் கள்வன்" எனச் சம்பந்தரால் பேசப்படுபவனே சிவன். சாப்பிட ஒன்றும் இல்லாமல் தசை வற்றிய பிரம கபாலத்தில் உண் பொருள் கேட்டு வரும் பிச்சாண்டி அவன்! அப்படிப்பட்டவனே முகத்தில் பேரருளோடு இத்தனை கோடி உயிர்களிலும் கருணை கொண்டவனாய் இருக்கிறான்.

'ஏகன் அநேகன் இறைவனடி போற்றி' என்பது புரிந்தால் ஏகனாய் இருக்கின்ற அந்த ஒருவனே, இத்தனை உயிர்களிலும் அநேகனாயும், இருக்கிறான் என்ற தெளிவு வரும். உலகின் முதலாவது உயிரில் தோன்றிய பரம்பரை அலகு இறுதியாகத் தோன்றிய மனிதன் வரை தொடரும் உறவு பற்றி விஞ்ஞானமும் தெளிவுபடுத்தும். எல்லா உயிரியும் இறைவன் இருப்பதைத் தெளிந்தவர்கள் தம்மைப் போலவே பிறரையும் நேசிப்பர்.

"யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!" என்ற திருமந்திரப் போதனை அவர்களுக்கு அவசியமில்லை. அறிவில்லாதவர்தானே அன்பும் சிவமும் இரண்டென்று பேசுவார்?

சிவன்தான் அன்பு! சிவன்தான் கருணை! சிவன்தான் எளிமை! சிவன்தான் இனிமை!

அவனுடைய பாதங்களை இடையறாமல் மனதில் வைத்தால் அமைதியும் இன்பமும் கைகூடும். ஆனால் எம்மால் முடியவில்லை என்கிறீர்களா? நாங்கள் இறை சிந்தனைகளை மனதில் கொண்டு வர முயலும் போது, நெருக்கீடு மிக்க எண்ணங்கள் இடை புகுந்து எமது உன்னிப்பாயிருத்தலைத் (mindful ness) தடுத்து விடலாம். எமக்கு மட்டும் இந்த நிலை அல்ல. அருணகிரிநாதார் கூட அது கடினமாய் இருந்ததை இவ்வாறு சொல்வார்." சரண கமலாலயத்தை அரை நிமிட நேர மட்டில் தலமுறை தியானம் வைக்க அறியாத.."

ஆயினும் நாங்கள் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்க முடியாது. மனம் வேறு எங்கோ செல்கிறது என்பதை அவதானித்துக் கொண்டு திரும்பவும் அதை இறைவனிடம் கொண்டு வரலாம்.

'ஒன்றென்றிரு, தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம் அன்றென்றிரு" என்று பட்டினத்தார் சொல்வதை நம்பி செல்வம் திரட்டுவதை விட்டு, மனம் ஒன்றி இறைவனோடு சில நிமிடங்களாவது இருக்கவே வேண்டும். எமக்கு அவ்வப்போது உதவி செய்த மனிதர்களுக்கு நன்றி கூறுதல், நன்றிக் கடிதம் எழுதுதல், நன்றி உணர்வுடன் வாழ்தல் ஆகியவை நாம் சந்தோஷமாய் இருப்பதற்கு ஒரு சிறந்த வழி என்று உளவியல் கூறுகிறது. அப்படியாயின் நாம் இறைவனுக்கு எத்துணை நன்றி உள்ளவர்களாய் இருக்க வேண்டும்?

சுந்தரர் அதை எமக்குச் செம்மையாகக் கற்றுத் தருகிறார். தான் இறுதியாகப் பாடிய திரு நொடித்தான் மலைப் பதிகத்திலே, "தானெனை முன் படைத்தான்" என்று தன்னைப் படைத்தமைக்கு நன்றி கூறி, "ஆனை அருள் புரிந்தான் நொடித்தான் மலை உத்தமனே" என்று தான் இறுதி யாத்திரை போக யானை தந்தமைக்கும் நன்றி சொல்வார். இறைவனிடம் அதிகம் கேட்டவர் சுந்தரர், அதிகம் நட்புப் பாராட்டியவர் அவர், அதிகம் நன்றி சொன்னவரும் அவரே! நாம் அவரை உறுதியுடன் பின் பற்றலாம்.

எமது சமய தத்துவங்கள் அனைத்தையும் பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போக விட்டு, எமக்கு மதி கொடுத்த, மதியை நினைக்க நேரமின்றி மிக அவசரமாய் ஓடித் திரிவது புத்திசாலித்தனமானதாக இருக்காது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் – ஒரு மீள் வாசிப்பு



**தி.செல்வமனோகரன்**, விரிவுரையாளர்
சைவசித்தாந்தத்துறை, யாழ். பல்கலைக்கழகம்

இந்து சமயம் என்ற பொதுச்சொல் இன்று வழக்குறு நிலையில் உள்ள போதும் அதனுள் உள்ளடங்கியுள்ள பிரிவுகளும் வழிபடு நெறிகளும் கொண்டுங் கொடுத்தும் மட்டுமல்லாது பிணங்கியும் இணங்கியும் வளர்ந்து வந்துள்ளன. மேற்கிந்தியாவுக்கு விநாயக வணக்கமும் வங்காளத்துக்குச் சக்தி வணக்கமும் தென்னிந்தியாவுக்கு முருக வணக்கமும் தனித்துவமான சிறப்புடையன என ஆய்வாளர் சிலர் சுட்டுவர். இவை தம்முள் முருகவழிபாடு தமிழ் நாட்டுக்கே உரியதென்றும் கூறுவர். தமிழ் நாட்டின் ஆதிச்ச நல்லூரில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வு, அப்பகுதியானது சுமார் கி.பி 1200 ஆண்டளவில் முருகவழிபாடே முக்கியத்துவம் பெற்றிருந்தது என்கிறது. தமிழ் நாட்டின் கரையோர மாவட்டங்களின் தமிழ்க் கரையோர ஊர்களுடன் ஈழத்தின் வடபால் அமைந்த ஊர்கள் கொண்டும் கொடுத்தும் வாழ்ந்தன. அதன்வழி வரலாற்றுக் காலத்துக்கு முற்படவே கலை, கலாசாரம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் எனப் பல் தளங்களில் அவை விட்டுக்கொடுப்புடன் ஒற்றுமையைப் பேணின. முருக வழிபாட்டின் தொன்மையைப் பின்வருமாறு பட்டியற்படுத்துகிறார் ஆ.வேலுப்பிள்ளை.

1. பாண்டி நாட்டின் தென் திசையின் கீழ்த் திசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செந்தூர் அமைந்திருப்பது போல ஈழத்தின் தென் கீழ்த் திசையில் கதிர்காமம் அமைந்துள்ளது.

2. சூரபத்மனை அழிக்க வந்த முருகன் திருச்செந்தூரில் பாசறை அமைத்துத் தங்கிய தாகக் கந்தபுராணம் கூறும். அதே நோக்கோடு முருகன் கதிர்காமத்தில் பாசறை அமைத்துத் தங்கியதாக ஈழத்துச் சிங்கள மரபு கூறுகிறது.

3. வள்ளி திருமணம் தமிழ் நாட்டின் வட எல்லையிலுள்ள திருத்தணிகையில் நடை பெற்றதாகக் கந்தபுராணம் கூற அத்திருமணம் கதிர்காமத்தில் நடைபெற்றதாகச் சிங்களவர் உரைக்கின்றனர்.

இலங்கையில் கிடைத்துள்ள பழைய பிராமிச் சாசனங்களின் முதற்றொகுதியை பேராசிரியர் செனரத் பரணவிதான பதிப்பித்துள்ளார். இதில் இடம்பெற்றுள்ள ஆட்பெயர்கள் முருக வழிபாட்டின் தொன்மையைக் கூறி நிற்கின்றன. சங்கமித்தை இலங்கைக்கு வெள்ளரசு மரக் கிளையைக் கொண்டு வந்த காலத்தில் கதிர்காமப் பிரபுக்களும் அநுராதபுர நிகழ்வில் கலந்து கொண்டதாகவும் அதில் ஒரு கிளையைக் கதிர்காமத்தில் நட்டதாகவும் கூறப்படுகிறது. பேராசிரியர் பரணவிதான வெளியிட்ட பிராமிச் சாசனங்கள் பதினைந்தில் மீன் இலட்சினை காணப்படுகின்றது. இது பாண்டிய இராட்சியத்துக்கு உட்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் ஈழத்தின் வேறுபல பாகங்களில் கிடைத்த சாசனங்களில் விசாக, வேலு, குமர போன்ற சொற்கள் காணப்படுவதாகவும் கூறப்படுதல் சுட்டத்தக்கது.



**யாழ்ப்பாணம்**

“எண் சாண் உடம்புக்கு சென்னி பிரதானம் என்பர். அதுபோல ஈழத்தின் சென்னியாகத் திகழ்வது யாழ்ப்பாணம் ஆகும். ஜாதியச் செல்வாக்கும், சைவசித்தாந்த வாழ்வியலும் கெட்டித்த தனக்கேயான தனித்த பண்பாட்டையும் உடையது யாழ்ப்பாணம். பண்டைக் காலந்தொட்டு சிறந்த கல்விப் பாரம்பரியமும் புலமைத்துவ மரபுமுடையதாக இருந்து வந்துள்ளது. யாழ்ப்பாண இராட்சியம் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலிருந்து காலனித்துவத்துக்கு உட்படும் வரை சிறந்தே விளங்கியுள்ளது. ஈழத்தமிழர்களின் பூர்வீக பிரதேசங்களில் ஒன்றாக விளங்கும் இப்பிரதேசத்தில் சைவம் சிறந்து விளங்கிற்று என்பர். கச்சியப்பசிவாச்சாரியார் கந்தபுராணத்தை தமிழ்நாட்டில் அரங்கேற்றிய காலத்தில் யாழ்ப்பாணம் அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் புராணபடனம் செய்யப்பட்டதாக பண்டிதமணி குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட நிலையில் சைவாலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. சமய சம்பிரதாயங்கள் தண்டனைக்குரிய குற்றங்களாயின. மக்கள் அகரீதியாகவும் புறரீதியாகவும் ஒடுக்கப்பட்டனர். அவர்களுக்கு அச்சூழலில் கைகொடுத்தது நாட்டுப்புறவியல் சார்ந்த குறி (வேல், சூலாயுதம், கல்) வழிபாடும், புராணபடனம் உட்பட்ட நூற்படிப்புமாகும். திண்ணைக் கல்வி மரபு வளர்ந்தது. இக்கல்வி மரபில் கந்த புராணம் செல்வாக்குற்றது. அதன்வழி மனிதர்களின் பெயர்களிலும் கந்தனின் பெயர்கள் செல்வாக்குற்றன. இத்தகைய சூழலில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் ஆறுமுகநாவலரின் வருகை இடம்பெறுகின்றது. சைவமீட்டுருவாக்கச் செயற்பாட்டாளரான நாவலர் கந்தபுராண வழிநின்று சிவன் - முருகன் இணைப்பை ஏற்றுக்கொள்கிறார். இருவரும் ஒருவரே என்பதில் அசைக்க முடியா நம்பிக்கை உடையவராகத் தன் செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்.

ஈழத்தின் காலனித்துவ காலச் சைவச்சூழல் தமிழகத்தினின்றும் வேறுபட்டதும் தனித்துவமானதும் ஆகும். காலனிய அதிகாரத்தின் பிடியில் சிதைக்கப்பட்டாலும் மீட்டுருவாக்கச் செயற்பாட்டின் வழி நவீனமயப்படுத்தி புத்தாக்கம் செய்கிறார் நாவலர். பல்வேறு பிரிவுகளாக ஈழத்துத் தமிழர்களின் வழிபாடு காணப்படுகின்றது. கிராமியத்தெய்வங்கள், ஆகமக் கடவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர், அவற்றுக்குரிய வழிபாடுகள், வீரசைவம், பாசுபதம், விஷ்ணு , முருகன், சிவன், விநாய கர், வைரவர், சக்தியின் பல்வேறு வடிவங்கள் எனப் பலவாறும் ஜாதிய, குல தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் எனவும் பலவாறும் பிரிந்திருந்தன. நிறுவனமயப்பட்ட கிறிஸ்தவத்துக்கு சமாந்தரமாகவும் சமமாகவும் அதற்கு மேலாகவும் சைவத்தை மீட்டுரு செய்ய வேண்டிய சூழல், தேவை நாவலருக்கிருந்தது. ஒன்றிணைந்த சைவத்தமிழ் வழி காலூன்றி ஆகமமயப் பட்ட - நிறுவனமயப்பட்ட சைவத்தையும் உருவாக்கத் தலைப்பட்டார். சைவத்துக்கு மாற்றான தனி மனித வழிபாடுகளையும் ஆகம மரபுக்கு ஒவ்வாத வழிபாட்டு மரபுகளையும் நிராகரித்தார். அதனால், யாழ்ப்பாணத்தில் சாஸ்திரிய நிலைப்பட்ட அல்லது செவ்வியல் நிலைப்பட்ட சைவம் உருவானது. சக்தி, பிள்ளையார், விஷ்ணு, முருகன், வைரவர், வீரபத் திரர், லிங்கம் உள்ளிட்ட அனைத்தும் - கந்த புராண கருத்தியலின் வழி சிவனின் அம்சங் களாகக் கொள்ளப்பட்டு அவையும் சைவமாயின. ஈழத்தில் திருகோணமலையில் தற்காலத் தில் தோன்றிய விஷ்ணு ஆலயத்தைத் தவிர ஏனைய விஷ்ணு ஆலயங்களில் சிவாச்சாரி யார்களே பூசை செய்கின்றனர். பிரசாதமாக அங்கு திருநீறே வழங்கப்படுகிறது் திருமண் அல்ல. ஆகமம் சாரா வழிபாட்டு நிலையிலும் திருநீறே பிரதான பூசைப் பொருளாக பிரசாதமாக கலையாடி குறி சொல்பவரின் பிரதான பயன்பாட்டுப் பொருளாக அமைந்துள்ளது. இம்மரபை கூட்டிணைவை கந்தபுராண வழி நின்றே நாவலர் உருவாக்கினார்.

ஈழத்திலும் சரி யாழ்ப்பாணத்திலும் சரி அதிக செல்வாக்கோடு இருக்கும் முருக வழிபாட்டு நெறி ஆகமஞ்சாராத வழிபாட்டு நெறியே என்பது மனங்கொள்ளத்தக்கது. கதிர்காம மரபின் வழி உருவான செல்வச்சந்நிதி, முல்லைத்தீவின் குமாரபுரம், திருகோணமலையின் குமாரபுரம், வெருகல் என்பவையும் மட்டக்களப்பின் திருக்கோயில், மண்டூர், சித்தாண்டி, உகந்தை என்பனவும் வாய் கட்டிப் பூசை செய்யும் மரபினையுடையன. கதிர்காமத்தைப் போல செல்வச்சந்நிதியும் விக்கிரக வழிபாட்டை நிகழ்த்தாத ஆலயம். அங்கும் மந்திரம் இல்லை. பிராமணர் இல்லை. யாழ்ப்பாணத்தில் கதிர்காமம் எனும் பெயருடன் புங்குடுதீவு, புலோலி, வட்டுக்கோட்டை, நல்லூர் ஆகிய இடங்களில் பல ஆலயங்கள் உள்ளன.

நல்லூர் கந்தசுவாமி ஆலயம் ஒரு மடாலயம் ஆகும். கர்ப்பக்கிரகத்தில் விக்கிரகம் இல்லை; வேலாயுதமே உண்டு; விமானமும் இல்லை. ஆனால் ஆகம மரபின்படி சிவாச் சாரியார் பூசை செய்கின்ற மகோற்சவம் நடைபெறுகின்ற பெருங்கோபுரங்களை உடைய ஆலயம் ஆகும். ஆகம மரபை முழுமையாகப் பின்பற்றும் தொன்மையான யாழ்ப்பாணக் கோயில்களாக மாவிட்டபுரம், கந்தவனக் கடவை என்பன புகழ் பெற்று விளங்குகின்றன. ஈழத்து முருகன் கோயில்களில் மூன்றில் ஒரு பங்கு கோவில்கள் கந்தசுவாமி எனப் பெயர் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதேபோல சுப்பிரமணியர், வேலாயுதசாமி, கதிர் வேலாயுதசாமி, முருகமூர்த்தி, முத்துக்குமாரசுவாமி, குமரன், தண்டாயுதபாணி, சண்முகன், ஆறுமுகசுவாமி, சிவகுருநாதசுவாமி எனப் பல பெயர்கள் பயில் நிலையில் உள்ளன. யாழ்ப்பாணத்தில் இன்றும் மக்கள் செல்வாக்கு மிக்க ஆலயங்களாக இவை திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

9599(P)

### புராண படனம்

நாவலரும், பண்டிதமணியும் குறிப்பிட்டது போல இன்றும் ஆலயங்களில் புராண படனங்கள் நடைபெறுகின்றன. ஈழத்தில் நாவலர் என்றால் ஆறுமுகநாவலர் என்பது போல புராண படனம் என்றால் அது கந்தபுராண படனமே. அதேவேளை பெரிய புராணம், திருவாத வூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் உள்ளிட்ட பல நூல்களும் படனம் செய்யப் படுகின்றன. ஆனால் பாடுபவரும், பொருள் சொல்பவரும் தவிர யாரும் கேட்காத நிலையே இன்றும் காணப்படுகின்றது. படனம் செய்யும் முதியவர்களின் பின்பு அக்கலையை, மரபை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த இளையவர்கள் மிகமிகச் சொற்பமானவரே என்பது குறிப்பிடத்தக்கது. கந்தபுராண படனத்தின் முக்கிய சிறப்பு என்பதே அது முருகனாலயத்தில் மட்டுமல்லாமல் சிவன், பிள்ளையார், அம்மன் உள்ளிட்ட எல்லா ஆலயங்களிலும் பாராயணம் செய்யப்படுகிறது என்பதாகும். அதேபோல பாடசாலைகள், ஆலயங்கள், பொதுநிகழ்வுகளில் பாடப்படும் பஞ்சதோத்திரத்தின் பின் திருப்புகழும், கந்த புராண "வான்முகில் வழாது பெய்க" எனும் பாடலும் பாடப்பட்டு வருவது கந்த புராண கலாசாரத்தின் வெளிப்பாடு என்றே எண்ணத் தோன்றுகிறது.

**கந்தபுராண உரை**

நாவலரின் வழி கந்தபுராணம் மேலெழுச்சி பெறுகிறது. கந்த புராணத்தை ஏட்டிலிருந்து முதன் முதல் பதிப்பித்தவர் - அச்சாக்கம் செய்தவர் நாவலரே; அதனை வசனகாவியமாக உரைநடையில் சாதாரணரும் கற்று விளங்க எழுதியவரும் இவரே. புராண படனம், பிரசங்கம், பாடநூல், மற்றும் நூல் மேற்கோள்களின் வழி கந்தபுராணச் செய்திகளை அவர் மக்கள் மயப்படுத்தினார் யாழ்ப்பாணச் சமூகத்தை சைவசித்தாந்த மயப்படுத்தினார்; பிறப்பிலிருந்து இறப்பு, இறப்புக்குப் பின்னான கிரியைகள் என ஆகம மரபு யாழ்ப்பாணத்தவர் வாழ்வில் இரண்டறக் கலந்தது.

கந்த புராணத்தை மரபு வழியும், நவீன கல்வி வழியும் பெற்று வளர்ந்த பலர் புராணத்துக்கு உரை செய்யவும், உரைநடையில் கட்டுரைகள், கதைகள் எழுதவும் தலைப்பட்டனர். தமிழகச் சூழலில் ம.தி.பானுகவி கந்தபுராணம் முழுவதற்கும் உரை செய்துள்ளார். வடிவேலு முதலியார் இரு காண்டங்களுக்கு மட்டும் உரை செய்துள்ளார்.

இவர்கள் தவிர வேறு யாரேனும் உரை செய்தனரா என்பதை அறியமுடியவில்லை. கிருபானந்தவாரியார் போன்றோரின் கந்த புராணப் பேச்சுக்கள் நூல்களாக வந்துள்ளன. ஆனால் ஈழத்தில் பலராலும் உரைசெய்யப்பட்ட நூலாகக் கந்தபுராணமே திகழ்கிறது. உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டத்தில் ஒரு பகுதி என்பவற்றுக்கு பருத்தித்துறை பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் சிறந்த உரை செய்துள்ளார். காரை சிவசிதம்பர ஐயர் மகேந்திர காண்டத்துக்கும், கார்த்திகேசு யோகி யுத்த காண்டத்துக்கும் உரை செய்தனர். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை தட்சண காண்டத்துக்கு உரை செய்தார். வல்வை ச.வயித்தியலிங்கம் பிள்ளை தெய்வயானைப் படலம், வள்ளியம்மை படலம் என்பவற்றுக்கு உரை செய்தார். உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் வள்ளியம்மை திருமணப் படலத்துக்கும், மேலைப்புலோலி வே.சிவசிதம்பரம்பிள்ளை சூரபன்மன் வதைப்படலத்துக்கும் உரை செய்தனர். தவிர வ.நல்லையா கந்தபுராணம் முழுவதற்கும் எளிய உரை செய்துள்ளார். தவிர வீரகத்தி , சிவராஜசிங்கம் உள்ளிட்ட இன்னும் சிலர் சிற்சில படலங்களுக்கு உரை செய்துள்ளனர். உரைநடையில் கட்டுரைகள், நூல்கள் பலவற்றை ஈழத்தவர்கள் எழுதியுள்ளனர். பண்டிதமணி, கந்தபுராண கலாசாரம், கந்தபுராண போதனை எனும் இரு நூல்களையும் வேறு சில கட்டுரைகளையும் எழுதியுள்ளார். சோ.சிவபாத சுந்தரம், வீரகத்தி, தனபாலசிங்கன் உள்ளிட்ட இன்னும் பலர் கருவி நூல்களை ஆக்கித் தந்துள்ளனர்.

'வள்ளி திருமணம்' கூத்து, வள்ளியம்மை திருமணப் படலத்தின் வழி உருவானது என்பர். இது யாழ்ப்பாணத்து சைவாலயங்கள் பலவற்றிலும் நீண்ட காலமாக ஆடப்பட்டுவரும் கூத்துக்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்துக் கோயில்களை நோக்கும் பொழுது பிள்ளையார் கோயில்களை மிகப்பெரிய அளவிலும் அதற்கடுத்து முருகையன் கோயில்கள், கந்தசாமி கோயில்கள் என்று பல்வேறு வகையாக அழைக்கப்படுகின்ற முருகன் ஆலயங்கள் இடம் பெறுவதைக் காணலாம். அது மாத்திரம் அல்லாமல் பிள்ளையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களிலும், உள்வீதிகளிலும் - உள்வீதி வடமேற்கு மூலையில் முருகனுடைய உருவத் திருமேனி வைத்துப் பூஜிக்கப்படுவதைக் காணலாம்.

விரத அனுஷ்டிப்பைப் பொறுத்தவரையில் பிள்ளையார் கதை விரதத்தை அனுஷ்டிப்போர் தொகை மிகமிகப் பெரியதாகும். மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், தொண்டைமானாறு செல்வச் சந்நிதி, நல்லூர் கந்தசாமி கோயில் ஆகியவற்றில் நடைபெறும் கந்த சஷ்டி வைபவங்கள் மிகமிக முக்கியமானவை. மகோற்சவ பாரம்பரியமுள்ள எல்லாக் கோயில்களிலும் கந்தசஷ்டியின் பொழுது இறுதி நாள் அன்று சூரன் போர் நிகழ்ச்சி காட்டப்படுவது கண்கொள்ளாக் காட்சி ஆகும். யாழ்ப்பாணத்து கரவெட்டி மேற்கு தச்சன்தோப்பு பிள்ளையார் கோயிலில் கந்தசஷ்டி அன்று நடத்தப்பெற்றுவரும் சூரன் போர் மிகமிகப் பிரசித்தமானதாகும். மதச் சடங்குகளின் அடியாகவே நாடகங்கள் தோன்றுகின்றன என்ற உலக பிரசித்தி பெற்ற மதக்கொள்கை உண்மையை கந்தசஷ்டி சூரன் போரிலே காணலாம். உண்மையில் சூரன் போர் என்பது ஒரு பிரதான மதச் சடங்கு நாடகமாக ஆற்றப்படுவதாகும். சூரன் போரில் தாரன் வதம், சிங்கன் வதம் ஆகிய முடிந்து சூரனுடனான யுத்தம் நடக்கும்பொழுது சூரன் பல்வேறு வடிவங்களில் வருவார். இறுதியில் சூரன் சிரசு வெட்டப்பெற்று அவன் சேவலும் மயிலுமாக முருகனிடத்தே சேர்ந்து விடுவது சித்திரிக்கப்படும் பக்தர் பரவசமுறுவர். கந்தபுராணவழி விரத புராணங்கள் எழுச்சி பெற்றன.

எம்மிடையேயுள்ள முருக வணக்கத்தின் ஆழத்தை இவை காட்டும். மனிதர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் பொழுது தெய்வத்தின் பெயர்களாலே சூட்டுவது மரபு.

முப்பது வருட காலத்திற்கு முந்திய பெயர்களை நோக்கும் பொழுது யாழ்ப்பாணத்தில் சிவன், பிள்ளையார் தொடர்பானவையும், முருகன் தொடர்பான பெயர்கள் மிகமிகப் பெரிய அளவில் காணப்படுவதை அவதானிக்கலாம். முருக சம்பந்தமுடைய பெயர்கள் உள்ளன.

**ஆண்**

முரகன், முருகையா, முருகுப்பிள்ளை , முருகேசு , கந்தப்பு, கந்தர், கந்தன், கந்தசாமி, கந்தவேலு, கந்தவனம், வடிவேலு, ஆறுமுகம், முருகானந்தம், சிவசுப்பிரமணியம், சுப்பிரமணியசிவம், சுப்பிரமணியம், சிவகுரு , சிவகுருநாதன், சேவற்கொடியோன், கதிரைமலை, தேவசேனாதிபதி, ஆறுதிருமுருகன், திருமுருகன், கடம்பநாதன், சிவசாமி , மயில்வாகனன், மயிலேறும்பெருமாள், குமரன், குமாரசுவாமி, குமாரநாயகம், முருகவேல், கந்தவேல், கந்தவேள், கதிர்காமர், கதிர்காமநாதன், கார்த்திகேயன், கார்த்திகேசு, கார்த்திக், தணிகாசலம், தணிகாசலம்பிள்ளை, தணிகைச் செல்வன், சித்திரவடிவேல், ஆனந்தமையில், வேலுப்பிள்ளை, வேலும்மயிலும், வேலாயுதம், வேலாயுதம்பிள்ளை , வெற்றிவேல், சக்திவேல், முருகமூர்த்தி, கந்தமுருகேசன், விசாகப்பெருமாள், விசாக சுந்தரம், தங்கமயில், தங்கவேல், ஆடிவேல்க்கரசன், பழனி, பழனிப்பிள்ளை , வையாபுரிப்பிள்ளை , காங்கேயன், காங்கேசு, பழனிவேல், சண்முகம், சண்முகநாதன், குமரவேள், சண்முகராசன், சமண்முகம்பிள்ளை , சண்முகசுந்தரம், குமரேசன், முத்துக்குமாரசுவாமி, முத்துவேல், வையாபுரிநாதர், காஞ்சிமா வடிவேல் ,காஞ்சிநாதன், ஆறுமுகநாதன், வேல்முருகு , ஆறுமுகம்பிள்ளை, சக்தி வடிவேல், சத்குரு சங்காரவேல், தேவசிகாமணி, சண்முகநாயகம், சண்முகவேலன், ஸ்ரீசண்முகராசா, சேந்தன், செந்தில்குமரன், செந்தில்நாதன், செந்தில்வேல், செந்தூரன், திருச்செந்தூரன், குகமூர்த்தி, குப்பிரகாசம், குகப்பிரசாதம், குகன், முருகதாஸ், குழந்தைவேல், குழந்தை வடிவேல், குகானந்தசர்மா, குகானந்தராசா, சிவசண்முகமூர்த்தி, முருகபூபதி, சூரசம்காரம், குருசாமி, விசாகரூபன், முருகபிரான், முருகரத்தினம், வேற்பிள்ளை, குழந்தைசாமி, சரவணபவன், சரவணமுத்து, சரவணை, பரம் குன்றன், பழனி அப்பன், செல்வக்கதிரைமலை. இதில் சிவசுப்பிரமணியம் எனும் சொல் சிவமுருக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைப்பை உடையது.

**பெண்**

வள்ளி, வள்ளியம்மை, வள்ளிப்பிள்ளை, தெய்வானை, வள்ளிக்கொடி, தேவசேனா, வள்ளிமுத்து, வள்ளிநாயகி, செந்தில்மணி, செந்தில்நாயகி, செந்தில் செல்வம், கதிராசி.

அண்மைக் காலத்தில் சூட்டப்பெறும் பெயர்கள் பல ஹிந்தி மொழி வழிப்பட்டவையாக காணப்படுகின்றன. எனினும் அவற்றுள்ளும் தனித்தமிழ் பெயர்களை தமது குழந்தைகளுக் குச் சூட்ட விரும்புவோர் முருகன் பெயர்களையே சூட்டும் மரபினைக் காணலாம். பெண் களுக்கு முருகனின் துணைவியாரான தெய்வானை, வள்ளியம்மை ஆகியோரின் பெயர் கள் உண்டு முருகனைப் பற்றிய விசுவாசம் (Faith) யாழ்ப்பாணம் சமூகத்திலே எத்துணை ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதைக் காட்டுவதற்கே இவ்வுதாரணங்கள் தரப்பட் டுள்ளன. கந்த புராண எழுச்சி யாழ்ப்பாணத்தில் ஏனைய முருக நூல்களின் எழுச்சிக்கும் அவற்றைச் சைவசித்தாந்தத் தளத்தில் நோக்குவதற்கும் வழிவகுத்தது. நாவலர் திருமுரு காற்றுப்படை பதிப்பித்ததோடு உரையும் செய்து வெளியிட்டார். காரைநகர் சு.அருளம்பலம் ஆராய்ச்சியுரை எழுதினார். பலர் திருமுருகாற்றுப்படையை பதிப்பித்து வெளியிட்டனர். தவிர பஞ்சதோத்திரங்களோடு திருமுருகாற்றுப்படை, கந்தசஷ்டி கவசம் போன்றன அந்தியேட்டி நினைவு மலர்களில் அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தவிர யாழ்ப்பாணத்தவர்கள் மயூரகிரிபுராணம், திருச்செந்தூர் புராணம் போன்றவற்றுக்கும் உரையெழுதிப் பதிப்பித்தனர்.

யாழ்ப்பாண சுருட்டுக் கொட்டில்களில் புராணம் வாசிப்பவர்களே அக்கால வானொலி யாளர்களாகத் தொழிற்பட்டனர். திண்ணைகளிலும் புராணங்கள் வாசிக்கப்பட்டன. ஆதலால் கல்வியறிவில்லாதவர்களும் பெண்களும் கந்த புராணத்தில் தாடணமுடையவர்களாகக் காணப்பட்டுள்ளனர். இதனால் மக்களிடம் ஓரளவு இராக ஞானமும் காணப்பட்டது. ஆலயங் கள், திண்ணைகள் தவிர சில கிராமங்களில் கந்தபுராண மடங்களும் காணப்பட்டன. உதாரணமாக நீர்வேலி தெற்கு பிரதேசத்தில் கந்த புராணம் படிப்பதற்கென மடமமைத்து வேலாயுத சுவாமியையும் பிரதிஷ்டை செய்துள்ளனர். இம்மடம் "கந்த புராணக் கொட்டில்" என அழைக்கப்படுகின்றது. ஆலய புராணப்படிப்பு முடிவடைந்த தினத்தில் ஊரவர் கூடி சமைத்து அன்னதானம் செய்வது வழக்கமாகவும் இருந்துள்ளது. வீதிகள், ஊர்கள் என்பன கூட கந்தபுராண செல்வாக்கு உட்பட்டு இருந்தன. உ-ம்:- கந்தபுராண வீதி, குமரகோட்டம், கந்தவனக்கடவை, வள்ளிப்புனம்

**சமகாலப்போக்கு**

ஈழத்தில் கந்தபுராண மீளுருவாக்க எழுச்சியென்பது சைவசித்தாந்த - ஆகமமயப்பட்ட சைவத்தின் எழுச்சியாகவே நாவலரால் உருவாக்கப்பட்டது. ஆதலால் கந்த புராண எழுச்சி என்பது சமூக மேனிலையாக்கமாக - ஆகமக் கற்கோயில்களின் பண்பாட்டம்சமாக மேலெ ழுந்தது. ஆயினும் சுருட்டுக் கொட்டில், திண்ணை , மடங்களின் உருவாக்கம் கந்தபுரா ணத்தை மக்கள் மயப்படுத்தியதாக வைத்திருந்தது. இலங்கையின் கல்வி என்பன மத்தியதர வர்க்கத்தை உருவாக்கிற்று. மிசனரிகளுக்கு மாறாக சைவ வித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை, இந்துக் கல்லூரி, முகாமைத்துவ சபை என்பன தத்தம் பாடசாலைகளில் சமயக் கல்விக்கு முதன்மை கொடுத்தன. கந்தபுராணம் பயில் நிலைப்படுத்தப்பட்டது. சுதந்திர இலங்கையில் ஏற்பட்ட பாடசாலைகளை உள்வாங்குந் திட்டத்தில் சமய நிறுவனங்கள் பாட சாலைகளை நடாத்துவது தடைப்பட்டது. ஆயினும் இலவசக் கல்வியும், சமயக் கல்வியும் இலங்கையின் கல்விக் கொள்கையினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டது. சிறுபராயத்தில் இருந்து உயர்தரக் கல்விவரை கந்தபுராணம் பாடத்திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறையில் கந்தபுராணம் கற்பிக்கப்படுகிறது. சைவப்புலவர் , சைவசித்தாந்தப் பண்டிதர் பாடத்திட்டங்களிலும் கந்தபுராணம் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

இடப்பெயர்கள் நவீனமயப்படுத்தப்பட்டாலும் நல்லூர், கந்தவனக் கடவை, உபயகதிர் காமம், குமரகோட்டம்,குமரக்குறிஞ்சி, மஞ்சவன்னப்பதி போன்ற இடப்பெயர்கள் இன்றும் செல்வாக்குற்றுள்ளன. வீதிப்பெயர்களும் அவ்வாறே. ஆனால் ஐம்பதுகளில் மூன்று ஒரு பங்கினரின் பெயர்கள் முருகனோடு தொடர்புற்றிருக்க காற்பங்கிலும் கூட இப்பெயர்கள் குறைவாகிவிட்டது. உலகமயப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட கலாசாரமாற்றம், தொழில் நாட்ட முடைய கல்வி, தொடர்பாடல் என்பவற்றின் வழி சிறுபெயர், அழகியல், நவீனம் எனும் வகையில் பெயர்கள் வைக்கப்படுகின்றன. இடுகுறிப் பெயராயினும் Stile க்காகப் பெயர் வைக்கும் பண்பு மேலோங்கியுள்ளது. சமயக் கல்வி, விழுமியக் கல்வி போன்றவற்றில் நாட்டம் குறைவடைந்து வருகின்றது. இளைய தலைமுறையும், தொழில் - அதிக பணவரவு மிகு தொழிலுக்கான கல்வியில் மட்டுமே நாட்டம் காட்டுகின்றனர். ஆலயப்பண்பாடு குறைவடைந்து வருகின்றது. கோபுரங்கள் உயர்கின்றன அலங்காரங்கள் அதிகரிக்கின்றன ஆலய வளம் பெருகுகிறது. ஆனால் மக்களின் ஆலயப் பிரவேசம் அருகிவருகின்றது. புராண படனம் ஆங்காங்கே நிகழ்ந்துவரினும் கேட்பாரில்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்துநாகரிகத்துறை, இந்து கலாசார திணைக்களம் போன்றன கந்தபுராணத்தை வளர்க்க விரும்புகின்றன இந்துநாகரிகத்துறைப் பேராசிரியரும் இன்றைய அமர்வின் தலைவருமான பேராசிரியர் மா. வேதநாதன் கந்தபுராணத்தில் சைவசித்தாந்த சிந்தனைகள் பற்றிய ஆய் வேட்டைச் சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு நடைபெறும் இம் முருகபக்தி மாநாடு கந்தபுராணத்தைப் பலர் மீளநினைக்க உதவக் கூடும்.

இதற்குமப்பால் ஆகமமயப்பட்ட - மேனிலையாக்கம் பெற்ற சூழலிலும் கந்த வழிபாடு ஆகமம் சார்ந்தும் சாராமலும் யாழ்ப்பாணத்தில் நின்று நிலவுகிறது. யாழ்ப்பாண கோயிற் பண்பாட்டில் ஆழ, அகலக் காலூன்றி நிற்பவற்றுள் முதன்மையானவையாக முருகன் ஆலயங்களான நல்லூர், சந்நிதி, மாவிட்டபுரம் எனும் இம்மூன்று கோயில்கள் கந்தபுராண கலாசாரத்தின் வீச்சத்தை இன்றும் தந்தே நிற்கின்றன. முருகனுடன் வள்ளி, தெய்வயானை எனும் இருமரபு இணைந்தது போல ஈழத்தில் கந்தபுராணமும் நாட்டார் மரபையும் ஆகம மரபையும் துய்த்து நிற்கிறது.

அடிக்குறிப்புகள்:

1. வேலுப்பிள்ளை, ஆ., 2011, தமிழர் சமய வரலாறு, குமரன் பதிப்பகம், இலங்கை , ப. 192
2. மேற்படி, பக்.193,194
3. பூலோகசிங்கம், பொ., 2017, தமிழ் ஆய்வுச் சிந்தனைகள், குமரன் புத்தக இல்லம், பக். 339-341
4. வேலுப்பிள்ளை. ஆ., மு.கூ.நூ.ப 195
5. வேலுப்பிள்ளை,ஆ., மேற்படி,ப.199
6. சிவத்தம்பி.கா, (முன்னுரை), 2010, யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாசாரம், பக் XX-XXV





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அழுதால் உன்னைப் பெறலாமே"

கே.எஸ்.சிவஞானராஜா

மன்னாதி மன்னர்களும்
மறையோதும் வேதியரும்
மாதவம் புரிந்த இடம் பன்னாலை;
முன்னாளில் ஆசான்கள்
முறையாகப் பண்ணுகர்ந்து
முத்திபெற்ற திருவூரே பன்னாலை;
மின்னாமல் கொள்ளாமல்
மேலதிகமாய்ப் புகழாமல்
மூர்த்தி தலம் தீர்த்தமாவது பன்னாலை;
அந்நாளில் ஆன்மீகத்தின்
அற்புத மாந்தர்களை
அதிசயமாக்கியதும் பன்னாலை

இத்தகு பொன்போன்று பேறாகிய திருப்பதியில் திருவாசகம் பண்ணோடு பாடிப் பரவுகின்ற சம்பிரதாயமும் பண்பாடும் பன்னெடுங்காலந் தொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டும், தொய்வேதுமின்றி அனுசரிக்கப்பட்டும் வருகிறது. இத்தகு சிறப்புக்களின் உன்னத பேரின்ப வடிவமாக, திருவெம்பாவைப் பாடல்களை அதிகாலையில் பாடி துயிலெழுப்பி எல்லோரையும் எம்பெருமானிடம் அழைத்துச் செல்லும் கைங்கரியத்தினை, பன்னாலை வாழ் பெரியோர்கள் ஆக்கி அருளி அரங்கேற்றி வைத்திருக்கிறார்கள். இஃது ஒரு பெரும் புண்ணியமான உபகாரமாகும்.

சிவபூமியில், சிவபூஜையால், சிவபூதவராஜர் ஆலயம், சிவப்பொலிவுடன், சிவ கடாட்சம் பெறுகிறது. நூற்றாண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமை வாய்ந்த பேற்றினால் வரம் விளைகிறது. 1939ஆம் ஆண்டில், சிவ மணம்கமழ சிவமயமாகும்படியாகப் பன் னாலையில் ஒரு சிவ பாக்கிய வரம் கிடைக் கிறது. அதுவே பன்னாலை திருவெம்பா வைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையாகும்.

ஆசிரியமணியும் சைவ ஒழுக்க சீலருமாகிய அமரர் காசிப்பிள்ளை கதிர் காமத்தம்பி அவர்களது சிந்தையில் தோன்றி விந்தையோடு இன்று வரை உயிர்ப்புடன் மட்டுமல்ல ஒலிப்புடனும் தொண்டாற்றி வருகிறது. தில்லையில் ஆட்சிபுரியும் ஸ்ரீ நடராஜப் பெருமான் உலா வரும் வீதிகள் தோறும், ஆண்களும் பெண்களுமாக அதிகாலை நான்கு மணி யிலிருந்து திருப்பள்ளி எழுச்சியும் திருவெம் பாவையும் கடுங்குளிருக்குள் பாடிவரும் அதிசயத்தைப் பார்த்து அனுபவித்த பெருந் தகையாளன் கதிர்காமத்தம்பி அவர்களது உள்ளம் கவர்ந்த கள்வனாம் சிவபெரு மானின் திருவிளையாட்டினாலும் முயற்சி யினாலும், சைவசித்தாந்த சாகரம், அமரர் விஸ்வநாதர் சங்கரப்பிள்ளை அவர்கள் அனுபூதிமான்களான வைத்திலிங்கம் பொன்னையா, செல்லையா வரதராஜப் பெருமாள், சுப்பிரமணியம் மாணிக்கம், பொன்னம்பலம் முத்துக்குமாரு, கந்தையா திருநாவுக்கரசு, வேலுப்பிள்ளை முரு கையா, வேலுப்பிள்ளை விஜயரத்தினம், சின்னத்தம்பி இராமலிங்கம், சிவஞானம் (பூராசா), தையிட்டிப்புலம் கந்தையா, தையிட்டிபுலம் மயில்வாகனம் ஆகிய புர வலர்களோடு மற்றும் ஊரவர்கள், பெரி யோர்கள், இளைஞர்கள், மாணவர்கள், பாலர்கள் என ஒரு சமூகத்தினை ஒன்று திரட்டி உருவாக்கப்பட்ட இச்சபையானது, 2019 இல் தனது எண்பதாவது அமுத விழா வினை வெகு விமர்சையாகவும், சாதனை யாகவும் கொண்டாடுகின்றது. வாழ்த்துக் கள். இதற்கு அனுபவம்மிக்க ஒருவர் போஷகராயிருப்பது சபைக்கு வரமாகிறது.

**பாவனை**

திருவெம்பாவை நோன்பானது சிறப்பாகக் கன்னிப் பெண்கள் தத்தமக்கு நல்லதோர் வாழ்வும் வாழ்க்கையும் அமை யும் படியாக அதிகாலை துயிலெழுந்து தோழியர்களையும் எழுப்பி நீராடி, நாய கனாகிய அருள்புரியும் சிவபெருமானை வரம் வேண்டும் படியாக பாடியும் ஆடியும் நாடியும் தேடியும் புனல் பாய்ந்து, புனல் பொங்குமாறு பொய்கை குடைந்தும் உடை யான் பொற்பாதம் ஏத்தி பாதத்திறம் கொண் டும் சுனையில் பேரின்பம் அடைகின்றவாறு வீடு வீடாகச் சென்று துயில் எழுப்புகிறார்கள். நறுமணப் பூத் திகழும் பொய்கை குடைந்து நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழ, பங்கயப்பூம்புனல் பாய்ந்து ஆடிடவாடி பெண்ணே எம்பாவாய்! நாம் சொல்வதை ஏற்று ஆராய்ந்து பெண்ணே நீ நீராட வா! என்று வாசல்தோறும் சென்று திருக்கதவம் திறக்கிறார்கள். நித்திரையில் படுக்கையைத் தோழிகள் விட்டபாடில்லை. அட! பாசம் எல்லாம் பரஞ்சோதிக்கு என்பாயே! அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூற அள்ளூறிக் கள்ளூறத் தித்திக்கப் பேசுகின்ற நீயா புரண்டு புரண்டு படுத்துத்தூங்கு கின்றாய்! வந்துபார். எண்ணிப்பார். நமக்கு இதுவும் வேண்டும் இன்னும் வேண்டும். படிறீ! வஞ்சகியே! கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே! விண் ணுக்கு ஒரு மருந்தாகிய சிவனை உள்நெக் குருக யாம் பாடியும் நீ இன்னும் துயிலு தியோ? சீக்கிரம் எழும்பி, சிவபெருமானை ஆக்கிரமிக்க வருவாயாக! என்று தூங்கிக் கிடக்கும் நமது சோம்பேறித்தனமான மானிட வம்சத்திரனை இறையருளுக்காய் தட்டி எழுப்பி மன்றாடுகின்றார் மணிவாசகப் பெருமான்.

பெண் அடியார்கள் மூலமாக ஒரு காரியத்தினை ஒப்பேற்றுவது மிகவும் சுல பம் என்பதனால் போலும் சமயங்களிலும் இலக்கியங்களிலும் பெண்கள் பாத்திரம்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பெறுகிறது. ஐந்தொழில்களுக்கும் பெண்களே அதிபதியாக முடியும் என்பதை தற்காலம் எமக்குக் கற்றுத் தருகிறது. இந்நிலையில் ஒரு பாரம்பரிய மான கலாசாரப் பண்பாட்டினை வளர்த்து வரும் பன்னாலை திருவெம்பாவைக் கூட்டுப்பிரார்த்தனைச் சபையானது, மார்கழிமாத திருவெம்பாவை நடைபெறும் போது, திருவாசகத்தில் குறிப்பிட்டது போல பெண்களும் ஓரணியாகத் திரண்டு பெற்றோர்களின் பாதுகாப்போடு ஊரை வலம்வருவதாகிய ஒரு பூர்வாங்க ஏற்பாட்டினை இம்முறை ஆரம்பித்து வைக்கப்படவேண்டிய காலத்தின் தேவையினையும் அமுத விழா சுட்டி நிற்கின்றது.

இக்கோரிக்கை வரலாற்றில் ஓர் ஏடாக இலங்கையில் பதிவாகி வெற்றியளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. முயற்சியுங்கள். பயனுண்டு. பார்ப்போமே. திருவாசகத்தை எவர் பாடினாலும், எவர் பாடக் கேட்டாலும், எவர் வசனரூபமாக வாசித்தாலும் பொருளுணருமாறு நிகழ்த்தப்படுமாயின் அதற்குப் போதிய பலனும், பெறுபேறுகளும், காரிய சித்தியுமுண்டு. மேலும் பக்தி வைராக்கிய விசித்திரமாக,

1. மெய்யுணர்தல்
2. அறிவுறுத்தல்
3. ஆட்கொள்ளல்
4. ஆன்ம சுத்தி
5. கைம்மாறு கொடுத்தல்
6. அநுபோக சுத்தி
7. காருணியத்து இரங்கல்
8. ஆனந்தத்தில் மூழ்குதல்
9. ஆனந்தத்துப் பரவசமாதல்
10. ஆனந்தாதீதம்

ஆகிய பத்தும் இறைவனின் திருவருளுக்காக ஆன்மாவைப் பக்திமயமாக்கி சித்திபெற வைக்கும்.

"சஞ்சலம் போம் இன்பம் தழைக்கும்
இயமனையும்
அஞ்சலம் போய் வா என்று அதட்டலாம்
வஞ்சகர் செய்
மந்திரம் ஓதாது கலைவாணி தமிழ்
மூன்றெழுத்து
மந்திரம் ஓதிவரின்!"

ஆம் "இயமனையும் போய்வா என்று அதட்டலாம்" அதாவது செம்மொழியாகிய தேன்தமிழ் தோய்ந்துள்ள தேவார திருவாசகங்களை மற்றும் புராணங்களை முறைப்படி பொருளுணர்ந்து பாடினால், சஞ்சலம் அகலும். கவலை நீங்கும். நோய் நொடி துன்பம் கிட்டவும் அணுகாது. காரியம் சித்திக்கும். தனம் தானியம் கல்வி தடையின்றி பொலிவுற்றுச் செழிப்புறும். நிறைவாகச் சன்னதம் கொண்டு ஆரவாரங்களோடு வரும் இயமனையும் போய் வா(டா) என்று அதட்டலாம் என்று திருவாசகத்தினை ஓதியுணர்ந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அவர்கள் சட்டமுரைக்கின்றார். இயமனே வந்த வழி திரும்பிப் போவதற்கு சிவபுராணமும், திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவையும் கைகொடுக்கும். பிறப்பினில் புல்லாகித் தேவராகும் வரை திருவாசகம் பக்கத் துணையாகிப் பரோபகாரமளிக்கும் என்பது வரலாறாகும்.

திருப்பள்ளியெழுச்சியையும், திருவெம்பாவைப் பாடல்களையும் உளமே புகுமாறு நாம் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்குமாறு அழுது மனமுருகிப் பொருளுணர்ந்து பாடினால், சிவப்பேறினையும், தவப் பயனையும், நவகோள் கரிசனையையும் பெறலாம். வெல்லலாம். சித்தி பெறலாம், இனியென்ன பேச்சு? தவம் சிவமாகும்.

பன்னாலை பொன்னாலையாகி
எந்நாளும் மிளிர்வதற்கு
மன்னாதி மன்னர்களும்
சொன்மாலை புனைந்து
முன்னால் துயிலெழுந்து ஓடி வருவார்,
அன்னையரும் திருவெம்பாவை பாடிடுவர்!
ஆயிரம் வரம் கண்டு இச்சபை நீடு வாழுமே!
இச்சபை நூற்றாண்டில் ஓர் அதிசயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாவட்ட மட்டம் வில்லுப்பாட்டு 1ம் இடம் - 2019



மாவட்ட மட்டம் திருநீற்றின் மகிமை நாடகம் 1ம் இடம் - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வில்லுப்பாட்டு தோற்றமும் வளர்ச்சியும்

கலாபூஷணம் சு.வரதராஜ சர்மா
மிருதங்க வித்துவான்

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளே! பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!" என்று மணிவாசகப் பெருந்தகையார், இறைவனுக்குச் சூட்டிய சொல் மாலையை நாம் வில்லிசைக் கலைக்கும் சூட்ட வேண்டும். முத்தமிழ்க் கலைகளிலே மூத்த கலை வில்லுப் பாட்டு இது மட்டுமல்ல, முத்தமிழும் இணையும் ஒரு கூட்டுக்கலை , பாட்டுக்கலை , நாட்டுக்கலை!

மிகவும் மூத்தது வில்லுப்பாட்டு என்னும் ஒரு தகுதியால் மட்டும், இந்தக் கலை தனக்குரிய சிறப்பை யாரிடமும் இரந்து கேட்கவில்லை! முந்தியவை யாவுமே வந்தனத்துக்குரியதல் முந்தியிருக்கும் சத்தியினும் பிந்தி வந்த தாமரையே பெருமைக்குரியது. முந்தினாலும் ஒரு சிறப்போடு முந்தியிருக்க வேண்டும். அந்தச் சிறப்புத்தான், தந்தனத்தோம் வில்லிசையின் தலைமுறைச் சிறப்பாகும். மயிலின் மூத்த குஞ்சுதான் கொண்டைப் புகழ் கொண்டது என்பர். அவ்வண்ணம் புகழ் கொண்டது பண்டைத் தமிழ் வில்லுப்பாட்டு!

மண்ணுக்குள் தங்கிய மரத்துண்டுகள், யார் கவனிப்புமின்றியே பல்லாயிரம் ஆண்டுகள் புதையுண்டு கிடந்து, ஒரு கதையென்று வளர்ந்து, தன்னை நம்பியே தான் வாழ்ந்து,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மான ஒளியேறி ஏறி, பின்னொரு நாளில் வைரமாக வளர்ந்துவிடுகிறதே அந்த வைர வரலாறு தான் வில்லிசையின் வாழும் வரலாறு!

பாணர்கள் மீட்டும் யாழுக்கு அன்னையே வில்லிசைக் கருவிதான் என்பது இசைப்புலவர்களின் பொருந்தும் ஆராய்ச்சியாகும்! வில்லிலே மாட்டுத் தோலை உரித்து இரு துருவங்களையும் வளைத்து இணைத்துக் கட்டி, கைக்கருவியாகிய வீசு கோலால் தட்டும் பொழுது பிறப்பதே "தனத்-தனத்" ஒலி! அதைத் தழுவிய வண்ணம் வில்லின் ஓரத்தில் தாயைத் தழுவிய குழந்தைகள் போலிருந்து ஒலிப்பதே மணிகளின் நாதம்! இதில் முதலில் பிறந்த ஒலியைத் தொடர்ந்த சிந்தனைதான், யாழ்! இன்றும் வில்லைக் குறிப்பிடும்போது, விவரம் அறிந்தோர் "ஆதியாழ்" என்றே சிறப்பாகச் சொல்வர். தோலை உரித்துக் கயிறு போலாக்கித் தட்டும் போது இந்த நாதமெனில், இதனினும் மெல்லிய நரம்பினைக் கட்டி விரலினால் மெதுவாக மீட்டிக் கேட்டுப் பார்ப்போமா? இதுவே வில்லைத் தொடர்ந்த சிந்தனை!

வாழையடி வாழையென வந்த திருக்கூட்டம் என்றாரே, அதுபோல் வில்லின் வழி யாழ் பிறக்க அதில் வீணை மகள் என்றொரு நாதக் குழந்தை பிறந்தது! ஆக, வில்லிசைக் கருவி என்னும் பாட்டியின் செல்லப் பேத்திதான் சிங்கார வீணை!

இவ்வண்ணமே வில்லுப்பாட்டுக் கலையின் தோற்றமும், விரும்பி அறிந்து கொள்ள வேண்டிய கலைகளில் ஒன்றாகும்!

எந்த இசைக்கருவிக்கும் இல்லாத சந்தச்சுகம் மட்டுமல்ல, இறைமையும் வில்லுக்கு உண்டு! கதைகள் பல கூறுவதையே பிறவிக் கடமையாகக் கொண்டிருக்கும் வில் தோன்றிய கதை வணக்கத் துக்குரியதாகும்!

தென்பாண்டி நாட்டிலே, ஒரு குறு நில மன்னன் வீரர்களையும் தன் பரிவாரங்களையும் கூட்டிக் கொண்டு காட் டுக்கு வேட்டையாட வந்தான். அன்று நல்ல வேட்டை ! சிங்கம், புலி, கரடி முதல் மான், நரி, மத்தகம் வரை அத்தனையும் வேட்டையாடிக் களித்தான்! அந்த வனத்தின் மர(ற) நிழலில், மன்னனும் கூட வந்தோரும் குளுமையைச் சுவைத்துக் கொண்டிருந்தனர்! அந்தி வேளை வந்தது. அனைவரும் கூடாரங்களில் வந்து இளைப்பாறினர். எங்கோ ஒரு மான் ! ஏதோ ஒரு புலி! ஒரு மத்தகம்! குற்றுயிராகக் கிடந்தழும் அவல அழுகைக் குரல்கள் மன்னனின் செவியைச் சிந்தனையை முற்றுகையிட்டன.......!

மேதினி ஆள்வோனின் மெழுகு உள்ளம் உருகியது. இருவிழிகளும் அதனை அள்ளி அள்ளி வெளியே கொட்டிக் கொண்டிருந்தது!

"வாழும் உயிரினை வாங்கிவிடல் -
இந்த மண்ணில் எவர்க்கும் எளிதாகும்!
வீழும் உயிரை எழுப்புதலோ - ஒரு வேந்
தன் நினைக்கினும் ஆகாதய்யா!

என்னும் இருபதாம் நூற்றாண்டுக் கவிமணியின் இதய ஒலி, அந்த முடிவேந்தனின் இதயத்தில் முந்திப் போய் ஒலித்ததோ!

சிறு பிள்ளையைப் போல் தேம்பித் தேம்பி அழுதான்!

செத்துக் கொண்டிருந்த கால், அரை, முக்காற் புள்ளிகள் இதற்குள் முற்றுப் புள்ளிகள் ஆகிவிட்டன!

"இறைவா! நான் மன்னனாம்! மனிதனாம்! மதியிலும் விதியிலும் உயர்ந்தவனாம்! தென்பாண்டி மாநில ஆட்சி என்னதாம்! என்னை மதிக்கிறார்கள்! துதிக்கிறார்கள்! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறார்கள். ஆனால், வேட்டை என்ற பெயரால் வெறியாட்டம் நடத்திக்கொண்டிருக்கிறேனே சாய்ந்துவிட்ட ஒரு மான் குட்டி

அமுத நாதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யின் உயிரைக்கூடத் திருப்பிக் கொடுக்க முடியாத என் கரங்களில்தான் எத்தனை எத்தனை சட்டங்களின் பின்னல் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது என் மனச்சான்று என்னை வேட்டையாடுகிறதே! ஆடட்டும்! நன்கு ஆடட்டும்! எனது கொல்லும் அறிவைக் கொல்லட்டும்! கொல்லாமை என்னுள் கொலுவிருந்து ஆடட்டும்! வாழட்டும் உலக உயிர்கள்! ஆண்டவன் எழுதிய உயிர்ச் சித்திரங்களை அழிக்க நான் யார்? அவன் படைத்த உயிர்ப் பொம்மைகளை உடைக்க நான் யார்? ஊரும், நாடும், காடும், மலையும், என் மனையின் கொலுப் படிகள் அல்லவே! அமைச்சரே!"

"மன்னா! தன்னை உணரும் தங்களுக்குத் தகுந்த பரிகாரம் கூறுகிறேன் - கொலைக்கருவி, கலைக்கருவி ஆகட்டும்! இதுவரை தோளில் கிடந்த வில்லை மடியின் பக்கம் படுக்கப்போடுவதுபோல் போட்டு, கீழ் நுனியில் ஒரு கயிறு கட்டி, அசையா வண்ணம் வில்லின் அடிப் பகுதியை, அதோ காட்டுத்தேன் கொண்டு போக கொண்டுவந்திருக்கிறோமே - மண் குடம் - வில்லோடு இணைத்துக் கட்டி, அம்பறாத்தூணியிலிருந்து அம்புகளை எடுத்துத் தாளத்தோடு தட்டித் தட்டி தமிழில் பாடுங்கள்! தலை முறைப் பாவங்கள் எல்லாம் நீங்கும்! தமிழ்மறை திருக்குறளைப் பாடுங்கள் ! கம்பராமாயணத்தைப் பாடுங்கள், முத்தமிழ்க் காப்பியத்தைச் சிலம்பொலி செய்யுங்கள்! புறம், அகம் இதற்குப் புறம்பானதல்ல! ஒல்காப்புகழ் தொல்காப்பியம் முதல் நல் காப்பியங்களை எல்லாம் வில் காப்பியமாக - சொல் காப்பியமாக - வில்லிசைத்துப் பாடுங்கள்!"

அவ்வளவு தான்!

அரசன் மடியிலே வில்லிசைக்கலை பிறந்து விட்டது! அருகிருந்த அனைவரும் கூட்டுக்குரல் கொடுத்தனர்! ஆமோதித்தனர்! ச...ரி...சம...... மா .... க... ப... த .... மா ... க... நீ ..... என்ற சப்த ஸ்வரம் வேண்டுமானால் ஏற்றத்தாழ்வோடு இசையாய் ஒலிக்கட்டும்! ஆனால், நாம் நமக்குள் பதமாக நீ சரிசமமாக ...... அமர்ந்து பாடுவோம் ! என்று கதை பாட ஆரம்பித்தான் பூவேந்தன் ! காளிதாசன் நாவில் எழுதிய சக்தித்தாய் இந்தக் காவலன் நாவிலும் எழுதினாளோ! அவன் கவியரசன்! இவன் புவியரசன்- என்ற கட்சி பேதம், கலை மகளிடம் ஏது...?

இவ்வாறு, ஒரு வித்தையையே வேட்டையாடி வந்த வேந்தன், இயலிசைப் புலவர்களை அழைத்தான்! இந்த வில்லிசைக்கலைக்கு ஒரு புதிய உருவம் வேண்டினான்! இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கேட்டான்!

வில், உடுக்கை, குடம், தாளம், கட்டை ஆகிய ஐந்து கருவிகள் தொடக்கத்தில் பயன்பட்டன. வளர வளர பம்பை, உருமி, தக்கை, துந்துமி ஆகிய கருவிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டன. "தன் தன்" என்று குடம் ஒலிக்க, "தனத் தனத்" என்று வீசு கோல் பேச , "ஓம் ஓம்" என்று உடுக்கை ஓங்கார நாதம் முழங்க, "தந் தனத்தோம்" - என்று சொல்லியே வில்லினில் பாட வந்தருள் புரிந்து கொண்டிருந்தாள், கலைமகள் !

ராஜ கம்பீர நாடாளும் நாயகனிடம் தோன்றிய நாட்டுப்புறக்கலை, ராஜ கம்பீரத்தோடு நாடாண்டு, வீடாண்டு, நல்ல பல கோயில் சன்னிதிகளை ஆண்டு ஆளும் மன்னவனின் கொலு மண்டபங்களை ஆண்டு, பல்லாண்டு பல்லாண்டு வளர்ந்து வந்தது.

"குமிழின் புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின் வில்லாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி" என்ற கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படை (வரிகள் 180-182) வில்லின் மூத்த புகழைக் காத்து வைத்திருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவம் ஓங்கிய காலத்தில் வில்லை நேசித்து இராமபிரானை நினைத்து இக் கலைக்கு இடம்கொடுத்தனர் ! சைவம் கொடிகட்டிப் பறந்த மண்டலங்களில் சிவ பெருமானின் உடுக்கை ஒலியை இதில் கேட்டுச் சிவனே வந்தது போல் கருதிக் கொண்டாடினர்! இரண்டும் ஒன்றே என் னும் பெருமக்கள் இக்கலை , இரண்டை யும் இணைக்கும் பாலம் என்று போற்றிப் புகழ்ந்தனர்.

இன்னொரு சிறப்பும் இக்கலைக்கு உண்டு. தேசிய ஒருமைப்பாட்டையே வில் லுப்பாட்டில் காணலாம். "வில்" என்றால் நமக்கு உடன் நினைவுக்கு வருவது "இராமேசுவரம்" "உடுக்கை" யெனில், "காசி விசுவ நாதர்" வடக்கையும் தெற்கை யும் இவ்வாறு வாழ்த்தி இணைத்து வரும் கலையைச் சுவைப்பது மட்டுமா? வணங்க வும் வேண்டுமே. தெய்விகத்தின் மூலம் தேசியத்தைக் காணவும் இக்கலை வழி வகுக்கிறது.

"மோனத்து இருந்த முன்னோன் கூத்தில் உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே" என்ற சாத்தனாரின் கூத்த நூல், உடுக்கையின் மிடுக்குபற்றி அடுக்கியு ரைக்கின்றதுவே!

"உடுக்கையில் பிறந்தது ஓம் எனும் ஒலியே ஓம் எனும் ஒலியே நாட்டியத்து ஒலி யாம்" இவ்வாறு கூத்து நூலில், தொடர்ந்து வில்லிசைக் கருவியாகிய உடுக்கையின் வெற்றிக் குரலைக் கேட்க முடிகிறது.

கால வெள்ளத்தில், எத்தனையோ கதைகள்! வில்லிசையிலே பிறந்தன! நீலி கதை, கண்ணகி கதை, மகிடாசூரன் கதை, இரணியன் சம்ஹாரம், சுடலை மாடன் கதை, ஐயனார் கதை, வள்ளியம்மன் கதை, பார்வதியம்மன் கதை, மார்க் கண்டன் தபசு, அரிச்சந்திரன் கதை, கிருஷ்ணசாமி கதை, குசேலர் கதை, பெரு மாள்சாமி கதை, மாகாளியம்மன் கதை, வில்லடிச்சான் கதை (அதாவது, இராமா யணத்துக்கு மறுபெயர்), மகாபாரதக் கதை கள் - எல்லாம் வில்லிசையில் மலர்ந்த சொல்லிசை கள்! நாட்டுப்புறத்து இசையிலே மலர்ந்த காட்டுப் பூக்கள்! இவ்வாறு நுகர் வார் சிலருக்காக மட்டும் மலர்ந்திருந்த காட்டுப்பூ போன்ற வில்லிசைக் கலையை, நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படும் வண்ணம் பண்படுத்தித் தந்த முதல் பெருமை - இந்த இருபதாம் நூற்றாண்டில் - கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களையே சாரும்! பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் சீர்திருத்தக் கருத்துகளை வில்லுப்பாட்டு மூலம் நாட்டு மக்களுக்குச் சொன்ன அழி யாப் புகழும் இவருக்கே உரியது!

வில்லிசை உலகில் வித்தகர்களாகப் புகழ்பெற்ற இன்னும் சில மேதைகளை இங்கு நினைவில் கொள்வது பொருந்தும். எனது தமிழாசிரியர் நெல்லை வித்துவான் திரு. அ. க. நவநீதகிருஷ்ணன் அவர்களின் "கப்பலோட்டிய தமிழன்" - வில்லுப்பாட்டு நூல் வில்லிசை உலகுக்கே ஒரு கலங்கரை விளக்கம். தமிழ்ப் பேராசிரியர் திரு. தி. சி. கோமதிநாயகம் அவர்கள் எழுதிய "தமிழ் வில்லுப்பாட்டுகள்" - எனும் ஆராய்ச்சி ஏடு நமக்குக் கிடைத்த பெரும் பேறு!

தோவாளை சுந்தரம்பிள்ளை, நெல்லை புலவர் ஐயம்பிள்ளை, சாத்தூர் புலவர் பிச்சைக்குட்டி, கவிஞர் கொத்த மங்கலம் சுப்பு முதலியோருக்கு இக் கலை யின் வரலாற்றில் பெரும்பங்கு உண்டு. தனித்தனி பாணியில் இவர்கள் வில்லி சையை கண்ணாகப் போற்றி வளர்த்தார் கள் வாத்தியக் கருவிகளை இவர்கள் கையாண்டதில் வேறுபாடு இருந்த போதி லும், வில்லிசைத் தாளமே இவர்களின் நாடித் துடிப்பாக இருந்து நாட்டு மக்களை மகிழச் செய்தது.

நமது வானொலி நிலையம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைக்காட்சி நிலையம் இவ்விரண்டு அமைப்புகளுக்கும் வில்லிசைக் ழூ கலையின் வளர்ச்சி வரலாற்றில் மிகச் சிறந்த இடம் உண்டு. இன்றும் தேசியத் தலைவர்கள், தேச முன்னேற்றத் திட்டங்கள் ஆகியவற்றை மக்களுக்கு நன்கு எடுத்துச் சொல்ல வில்லிசைக் கலை பயன்பட்டு வருகின்றது.

நமது தமிழக அரசு, கிராமியக் கலைகளுக்கு ஊக்கம் அளிக்கும் பொழுதெல்லாம் வில்லிசைக் கலைக்குச் சிறப்பிடம் தந்து வளர்த்துவருகிறது. தமிழக அரசின் சார்பில், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம் சென்னையில் நடத்திய கிராமியக் கலைவிழாவில் (1978) வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை இரண்டு நாள்கள் நடத்திச் சிறப்பித்தது. இன்னும், இன்றும், எங்கும் நடக்கும் அரசு விழாக்களில் வில்லிசை முழக்கத்தைக் கேட்கலாம்.

வில், வயிரம் பாய்ந்த பனையில் செய்யப்பட்ட தாயினும், வானவில் போல வளைந்து கொடுத்துக் காட்சியளிக்கிறது. அவ்வண்ணமே இக் கலையும் சாதி சமய பேதமின்றி, மேலும் படித்தோர் பாமரர் வேற்றுமையின்றி, மக்களுக்கு நடுநாயகமாக இருந்து, நல்ல கருத்துகளை வழங்கி வருகிறது.

நாடு தழுவிய கலையாக, இக்கலை நல்லதோர் ஏற்றம் பெற்றுவிட்ட இந்தக் காலத்தில், வில்லிசைக் கலைஞர்கள், முற்றிலும் மக்கள் கலையாகவே இதை மாற்ற முயலவேண்டும். இதற்கென்றே இசைவளம் செழித்திருக்கும்போது, இரவல் இசையை இரந்து பெறுவானேன்?

நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் தொட்ட நேரப் பலன், இக்கலையிலிருந்த அவலச் சுவைகளெல்லாம். நீங்கி விட்டன! சிரிக்கவும் சிந்திக்கவும் என்றே இந்தச் செந்தமிழ்க்கலையைக் கலைவாணர் சீர்திருத்தி வெற்றி பெற்றிருக்கிறார். ஆகவே, இயல், இசை, நாடகம் - முத்தமிழ் மட்டுமல்லாது, நான்காவது தமிழ் என்று ஒன்றை வகுத்தேனும், அதற்கு "நகைச்சுவைத் தமிழ்" என்று பெயரிட்டேனும், நாலும் அறிந்து கொண்டு நாலும் தெரிந்தவராக வில்லிசைக் கலைஞன் மேடைக்கு வந்தால்தான், நாலுபேர் பாராட்டும் வண்ணம் நல்லபடி வளர முடியும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், எனது வில்லிசை நிகழ்ச்சி ஒன்றுக்கு, கடலூரில் தலைமைதாங்கி வாழ்த்தும் பேறு எனக்குக் கிடைத்தது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக் கட்டளைப்படியே, இன்னும் வில்லிசை நிகழ்ச்சிகளை நான் நடத்தி வருகிறேன்.

அன்னாரை வணங்கித் தொடங்கும் வில்லிசைக் கலையிலே அவரது வாழ்த்துகளையே எல்லா அரங் கங்களிலும் பெற்று வருவதாக நான் உணர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.

"பேரறிஞர் அண்ணாவின் வரலாறு" எனும் வில்லுப்பாட்டில் எனது அன்புக் கவிதை. அவருக்கே காணிக்கையாக்கி, எனது கட்டுரையை நிறைவு செய்கிறேன்

**(வில்லிசைப் பாடல்)**

அன்பினில் சிறு குழந்தை!
அறிவினில் இமயமலை!
பண்பினில் திருக்குறளாம்! - அண்ணா
பாசத்தின் இன்னுருவாம்!


பார்க்கப் பத்தாயிரம் பேர்
பழகப் பத்து லட்சம்பேர்!
பாதையில் எண்ணற்றபேர்! - அவர்க்கு
பகையிடமும் நல்ல பேர்!

"அண்ணா வாழ்க!" - என்று சொல்லும்
ஆறெழுத்துக் குள்ளேதான்
தமிழர்கள் தலையெழுத்து - இருக்
தம்பி நான் பாட வந்தேன்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# எல்லோருக்குமான கல்வியின் இலட்சியம் உட்படுத்தல் கல்வி Inclusive Education

**கலாநிதி. பாலசுப்பிரமணியம் தனபாலன்**
உபபீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

உலகிலுள்ள அனைத்துச் சமூகத்தினருக்கும் மற்றும் எல்லோருக்கும் கல்வியை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச பங்களிப்பைக் குறிக்கும் வகையில் 1990 ஆம் ஆண்டு "ஜோம்தியன் பிரகடனத்தில்" (Jomtien Declaration) எல்லோருக்குமான கல்வி இலக்குகள் உருவாக்கப்பட்டன. இப் பங்களிப்பானது 2000 ஆம் ஆண்டு செனகல் நாட்டின் டாகர் என்னுமிடத்தில் டாகர் செயல் சட்டம் (Dakar frame work of action) என்பதுடன் மீளவும் உறுதி செய்யப்பட்டது. இதன் படி எல்லோருக்குமான கல்வி இலக்கு பின்வரும் மூன்று தேர்ச்சிகளை வரையறை செய்தது. அவை, மனிதர்கள் வாழ்வதற்கும், தமது முழு இயலுமையை விருத்தி செய்வதற்கும் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்குமானவையாகும். கற்பதற்காகக் கற்றல் (Learning to learn) என்ற தேர்ச்சியினூடாக பின்வரும் விடயங்களை எல்லோருக்குமான கல்வி எடுத்தியம்புகின்றது.

- ☞ வாழ வேண்டுமானால் கற்க வேண்டும். வாழ் நாள் முழுவதற்குமான செயலாகக் கற்றல் விளங்க வேண்டும்.
- ☞ கற்றுக் கொண்ட விடயங்களை பயன்பாடுடைய செயன்முறை ரீதியான, சமூக ரீதியான கல்வி அவசியம்.
- ☞ மனித விருத்தியுடனும், மேம்பாடுகளுடனும் ஒன்றிணைந்ததாகக் கற்றல் இருப்பதுடன் அனுபவமும் - அனுபவித்தலாகவும் இருக்க வேண்டும்.

வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் கற்றலை இணைத்தல் மூலம் உடன் துலங்கல் (Impulsivity), உள்வாங்கித் தெறித்தல் (Reflectivity) ஆகிய வெளியீடுகள் ஏற்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கை முழுவதும் கற்பதற்குக் கற்றுக்கொள்ளல் செயன்முறை சுய கற்றலாக விருத்தியடைய வேண்டும். ஆனால் எமது நாடுகளில் பலருடைய கல்வி இடைநடுவில் நின்று விடுகின்றது. இது எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்க சந்தர்ப்பம் வழங்காதுவிட்டமையின் விளைவே ஆகும். இதற்குப் பல காரணங்கள் காணப்படுகின்றன.

1. குடும்பப்பின்னணி - வறுமை, பருவகால உழைப்புக்குச் செல்லல், பெற்றோர் விழிப் புணர்வின்மை, குடும்பப்பிளவுகள், நோய், அங்கவீனம், விசேட தேவைகள், பட் டினி, பாதுகாப்பின்மை.
2. பாடசாலைப் பின்னணி - பரீட்சை அச்சுறுத்தல் பயம், பிள்ளையின் தேவையை அறி யாத கவர்ச்சியற்ற கற்பித்தல், பொருத்தமற்ற தண்டனைகள், பௌதீக - ஆசிரியர் வளம் போதாமை அனுமதிப் பிரச்சினைகள்
3. கலைத்திட்டக் குறைபாடுகள்:- பரீட்சை, இலகு கல்வி, கல்விக்கும் வேலை உலகிக் கும் தொடர்பின்மை, சுய ஆளுமை விருத்திக்கு முழுமைதராத கல்வி முறை, தொழில்நுட்பக்கல்வி வசதிகளின்மை பொதுப்பரீட்சைகளில் குறைந்த அடைவு மட்டம்.
4. நாட்டு நிலமைகள்:- யுத்த தாக்கங்கள் பாதுகாப்பு பற்றிய உளநெருக்கடி சமூக கலாசாரச்சீர்கேடுகள், பொருத்தமில்லா அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்.

இவ்வாறான காரணங்களால் அங்கவீனப் பிள்ளைகள், தொழில்புரியும் பிள்ளைகள் தெருவோரச்சிறார்கள், கற்றலில் இடர்பாடுடையவர்கள், மிக வறியபிள்ளைகள், பின்தங்கிய பிரதேசங்களைச் சார்ந்தோர், மொழி - இன - பண்பாட்டு ரீதியான சிறுபான்மையினர். HIV தொற்றுடையோர், இடம்பெயர்ந்தோர், இடைவிலகியோர் ஆகியவர்கள் கல்வியைப் பெறுவதற்கான உரிமையைத் தவற விட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

உட்படுத்தற் கல்வி:-

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் கற்றலில் பங்குபற்றாமையை நீக்கி அனைவரை யும் பாடசாலையில் உட்படுத்துவதுடன் மட்டுமன்றி சம அடிப்படையில் கற்றல் - கற்பித்தல் செயல் ஒழுங்கிலும் அவர்களை உட்படுத்தலே உட்படுத்தல் கல்வியின் வரைவிலக்கணமாக உள்ளது. இது எல்லோருக்கும் கல்வியை வழங்குவதையும் சகல பிள்ளைகளினதும் தனி யாள் வேறுபாடுகள் அல்லது பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் சமமாக உட்படுத்தலைக் குறிக்கின்றது. இதனை உள்ளடக்கல் எனவும் கூறுகின்றனர். தனது செயற்படுதன்மை சகல மாணவர்களதும் அவர்களது சுய இருப்பிடத்தில் தரமாக கல்வியைப் (Quality Education) பெறுவதற்கான உரிமையை வழங்குவதாக உள்ளது. மாணவர்களது பல்வகைப்பிரச்சினைகள், தன்மைகளுக்கு ஏற்ப பாடசாலை துலங்கி தனது பண்பாடு கொள்கைகள் நடைமுறைகளைச் சீரமைத்து அனைவரையும் சம உரிமையுடன் பாட சாலைக் கல்வியில் உட்படுத்தல் என்ற இலக்கு கொண்டுள்ளது. இதன் இலட்சியத் தன்மை சகல பிள்ளைகளும் தனியார் வேறுபாடுகள் அல்லது பண்புகளைக் கருத்தில் கொள்ளாமல் பாடசாலையில் உள்ளடக்கப்படல் என்பதாகும். அத்துடன் விசேட கல்வி தேவைப்படும் பிள்ளைகளை அவர்களுக்குத் தனியான பாடசாலையென இல்லாமல் அவர்களையும் சமூகமயமாக்கி சாதாரண பாடசாலைகளில் பயிலவைக்கும் அதிஉயர் செயற்பாடாகவும் உட்படுத்தல் கல்வி உள்ளது.

சர்வதேச சூழலமைவில் உட்படுத்தல் கல்வி தொடர்பான செயலாற்றுகைகள் முதன்மை நிலையிலுள்ளன. பாடசாலையில் சகல பிள்ளைகளும் சேர்க்கப்படுவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி முழுமையான பங்குபற்றல் - அடைவினை உறுதி செய்து கல்விக்கான தகைமைகளை இனம் கண்டு நீக்குதல், மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளைப் புரிந்து கற்பிப்பதற்கான விசேட செயலாற்றுகைகளைப் பிரயோகிக்கும் அதிநவீன கற்றல் - கற்பித்தல் தந்திரோபாயமாகவும் உட்படுத்தல் கல்வி எண்ணக்கரு விரிவடைந்துள்ளது. அத்துடன் கற்றல் - கற்பித்தலின் தர மேம்பாட்டிற்கான தற்போதைய செயல் ஒழுங்கொன்றினூடாக சகல கற்போரது தேவைகளையும் நிறைவேற்றும் நோக்காயிருத்தல். இவ் உட்படுத்தல் கல்வியானது இன்று முன்பள்ளி ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்சார்கல்வி, மூன்றாம் நிலைக்கல்வி, விசேட கல்வி, முறைசாராக் கல்வி, வளர்ந்தோர் கல்வி, ஆசிரியர் கல்வி, கல்வியியலாளர் கல்வி என்பவற்றின் முதன்மை எண்ணக்கருவாகப் பரிணமித் துள்ளது.

**உட்படுத்தல் கல்விக்கான அடிப்படைகள்**

- ❖ மனித உரிமைப்பிரகடனம் (1948)
- ❖ சிறுவர் உரிமை சமவாயம் (1990)
- ❖ சலமன்கா பிரகடனம் (1994)
- ❖ புத்தாயிர விருத்தி கல்வியின் உலகப் பிரகடனம் -1990 - ஜோம்தியன்
- ❖ கல்விப்பிரகடனம் - கார் - 2000
- ❖ ஊனமுற்ற நபர்கள் தொடர்பான உரிமைகளுக்கான ஐ நா. சமவாயம் (2006)

உட்படுத்தல் கல்வியின் முதன்மைப்பிரயோகம் பாடசாலை வகுப்பறையில் பாதுகாப்பை ஏற்படுத்தல். இதனூடாக ஒத்துழைக்கும் உறவு முறை ஒன்றினை உருவாக் கவும், ஊக்கங்களை வழங்கவும், கற்றலில் ஆர்வமூட்டவும், அனுபவங்களைப் பயன்படுத்த வேண்டும். பல்மட்டக் கற்பித்தல், பரிகாரக்கற்பித்தல், பல்தரக்கற்பித்தல், விசேட தேவை உத்திகளையும் முறைமைகளையும் பல பரிமாணங்களில் பிரயோகிக்க வேண்டும். வேறு பட்ட கவர்ச்சிகரமான வித்தியாசமான கற்பித்தல் முறைகளுக்கு மாணவன் எவ்வாறு துலங் கல் காட்டுகின்றான் அவன் விரும்பும் முறைகள் எவை என்பதை ஆசிரியர்கள் அறிவதன் மூலம் ஆரியர்கள் உட்படுத்தல் திறன்களைப் பெறமுடியும்.

**உட்படுத்தல் கல்வி ஆசிரியர் செயலாற்றுகை:**

1. மாணவர்களின் அடைவு மட்டத்தினை முறைசாரா முறையில் மதிப்பீடு செய்து தேவையான சந்தர்ப்பங்களில் ஒத்துழைத்தல்
2. ஒவ்வொரு மாணவரதும் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு பாடங்களைத் திட்டமிடல்
3. மாணவர்களின் அடைவுமட்ட எல்லைக்குப் பொருந்துகின்ற, படிப்படியாக உயர்ந்து செல்கின்ற பொருத்தமான இலக்குகளை நிர்ணயித்தல்.
4. வகுப்பறையில் சகல மாணவர்களதும் பங்கேற்பினை உறுதிப்படுத்தும் வகையில் ஒப்படைகளை மாற்றியமைத்து நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.
5. கற்றலினை நினைவிற்கொள்ளவும் தெளிவாகக் கிரகித்துக் கொள்வதற்கும் சந்தர்ப் பம் வழங்கும் வகையில் கற்றல் சந்தர்ப்பங்களை திட்டமிடுதல்.
6. மாணவர்கள் பாடசாலைக்கு எடுத்து வருகின்ற அனைத்துவகையான திறமைகளை யும் கல்வி ரீதியாக மாத்திரமல்லாது உயர்வாகக் கருதுதல்
7. விளைவினை அனுபவிப்பதற்கு அனைத்து மாணவர்களுக்கும் நாளாந்தம் சந்தர்ப் பங்களை வழங்குவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஒவ்வொரு மாணவனும் தனது முழுமையான உள்ளார்ந்த ஆற்றலுக்கு அமைவாகச் செயற்படுகின்றனர் என்பதை உத்தரவாதப்படுத்துவது.
9. பெற்றோர்களுடன் கூட்டுறவினை விருத்தி செய்வதுடன் பிள்ளைகளின் முன்னேற்றம் பற்றி தனிப்பட்ட ரீதியில் அவர்களுடன் கலந்துரையாடுவர்.
10. அனைத்து மாணவர்களையும் சமமாக மதிப்பதுடன் அவர்களை உயர்வாகவும் கருதுவர்.
11. அனைத்து மாணவர்களும் தாம் வகுப்பறையின் ஒரு பகுதி என தம்மைத்தாமே இனங் கண்டிருப்பதுடன் அவர்களுக்கு அவர்களின் வெற்றியினை வெளிப்படுத்துவதற்கு சமமான வாய்ப்பு காணப்படுகின்றன என்பதனையும் உத்தரவாதப் படுத்துவர்.
12. வழமையான வரவினைக் கண்காணித்து அதனை உறுதிப்படுத்துவார்.
13. கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிப்பதற்காக உயிர்த்துடிப்பான கல்விக்கு உகந்த சூழல் ஒன்றினை பேணுவர்.
14. விசேட தேவைகள் தொடர்பான நிபுணத்துவ ஆற்றலை ஆசிரியர் பிரயோகிப்பார்.

## உட்படுத்தல், கற்றல் - நேய வகுப்பறையொன்றின் சிறப்பியல்புகள்

- ❖ உயிரோட்டமான உற்சாகமான சூழல்.
- ❖ அமர்வதில் சிறப்பான ஒழுங்குமுறை, சகல வளங்களையும் கொண்டிருத்தல்.
- ❖ பிள்ளைகள் சிந்திப்பதற்கு, கேள்வி கேட்பதற்கு, தேர்ந்தெடுப்பதற்கும் சுதந்திரம் வழங்குகின்ற ஆசிரியர் மாணவர் தொடர்புகள்.
- ❖ மாணவர்களை தனிநபர்களாக மதித்து ஒழுக்கத்தினைப் பாதுகாத்தல்.
- ❖ அனுபவமூலம் கற்பதற்கு சந்தர்ப்பமும் செயற்பாடுகளும் வழங்கல்.
- ❖ கற்றல் தேர்ச்சி மதிப்பீடு, வகுப்பறை மட்டத்திலான மதிப்பீடுகளின் மூலம் மாணவர் கல்வி இலக்குகளை நோக்கி வழி நடாத்துதல் ஆளுமைகளை விருத்தியாக்கல்.

### உட்படுத்தல் கல்விக்கான தடைகளைத் தகர்த்தல்

- ❖ சமகாலக் கல்விமுறையில் பல்வேறு வகையான புதிய மாற்றங்களும் இற்றைப்படுத்தல்களும் நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கும்போது அவை பற்றி அறியாத நிலையில் கல்விப்புலம் சார்ந்தோர் இருப்பதும் கல்வி முறைமையிலும் கொள்கைப் பிரயோகத்திலும் பல்வேறு முரண்பாடுகள் தெளிவின்மைகள் காணப்படுவதும் அதிபர் - ஆசிரியர் பற்றி சமூகம் ஊடகங்களிடையே பொருத்தமான இடை வினைகள் காணப்படாமை, புறக்கணிப்புக்களால் உட்படுத்தல் கல்வியை விரைவாக நடைமுறைப்படுத்தத் தடைகளாகவுள்ளன. இன்றும் கூட பெரும்பாலான பாடசாலைகள் பிள்ளை நேயப் பாடசாலைகளாக (Child - Friendly School) செயற்படாமை, கல்விச் சமூகத்திடம் மனப்பாங்கு விருத்தி போதாமை, கற்றல் பிரச்சினைகள் பின்னடைவுகளைச் சரியாக இனம் காணாமை என்பவற்றுடன்;
- ❖ கேட்டலில் கஷ்டம், பார்வைக் கோளாறுகள், செயற்படு திறன்கள், அவயவங்களில் போதாமை, கை - கண் பார்வை ஒருங்கிணைப்புப் பிரச்சினைகள், எழுதுதல், வாசித்தல், கிரகித்தல், மொழி - தொடர்பாடல் சிக்கல்கள்
- ❖ விசேட தேவை உள்ளவர்களை சாதாரண வகுப்பறைக்குள் உட்படுத்தும்போது தேவையான மனித - பௌதிக - ஏனைய வசதிகள் போதாமை.
- ❖ கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை சமூக - உள்ளார்ந்த தடைகள், மீத்திறன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள், விசேட தேவைகள், அங்கவீனம், உடல் குறைபாடுகள்.

ஆகிய பல காரணிகள் உட்படுத்தல் கல்விப்பிரயோகத்தில் தடைகளை ஏற்படுத்து கின்றன. இத்தனை தடைகளை நீக்கி இனி விசேட கல்வித்துறைக்கே உரித்தான பாடசாலை களை விடுத்து எல்லாப்பாடசாலைகளிலும் இவ்வாறான மாணவர்களை உட்படுத்தி அவர் களது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றும் பொறுப்பு இன்று பாடசாலைகளிடம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணைகளை கல்வியமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், அரச சார்பற்ற நிறுவனங்கள் விரிவாக வழங்கத் தொடங்கியுள்ளன. என்றாலும் கூட உட் படுத்தல் கல்வி தொடர்பான விழிப்பணர்வுகள் இன்றும் போதுமானவையாக இல்லை. இதனை நீக்க கல்வித்துறை சார்ந்தவர்களது ஒருங்கிணைந்த பங்களிப்பு அவசிய தேவை யாகவுள்ளது.

**உட்படுத்தல் கல்வியின் நடைமுறை:**

- தற்போதைய மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களைத் தகர்த்தெறிதல், சகல மட் டங்களிலும் விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் விருத்தி செய்தல், ஆசிரியருக் கான ஒத்துழைப்பை வழங்குதல், பொருத்தமான கற்றல் மற்றும் பயிற்சி முறை மைகளை அளித்தல், கற்பித்தல் நடைமுறையினுள் பயிற்சி இடமாற்றத்தை உறுதிப் படுத்தல், பெருமளவான நவீன கருவிகள், வளங்கள், உபகரணங்களை வகுப் பறைக்குள் கொண்டுவருதல், நெகிழ்வான கற்போன் சிநேக சூழல் ஒன்றை விருத்தி செய்தல், பாடசாலைகள் தமது சுய விருத்திக்கான பொறுப்பினை வகிப்பதுடன் தொடர்ச்சியான மேம்பாட்டுக்கான ஒரு பண்பாட்டையும் விருத்தி செய்தல், சகல பாட சாலைகளுக்குமான ஒரு தெளிவான நியமங்களை உருவாக்குவதுடன் அவற்றை அடைவதில் பாடசாலைகளை அனுமதிக்கும் வகையில் கருவிகளையும் ஒத்துழைப் பையும் வழங்குதல் என்ற வகையில் விரிவாக்கப்படவேண்டும். இதற்குத் தேவை யான வளங்களையும், பயிர்களையும் முன்னெடுப்பதற்குப் பல அர்ப்பணிப்பக்களை கல்வித் துறையில் நாம் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறநெறிப் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும்



அறநெறிப் பாடசாலை மாணவியர்களும் ஆசிரியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமயம் காட்டிய விஞ்ஞானம்

**திரு.சு.கணேசதாசன்**
ஓய்வுநிலை அதிபர்
பன்னாலை - தெல்லிப்பழை



"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற கூற்றுக் கிணங்க சரீர ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்பதற் காகவே இந்து வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. ஆலயம் என்பது மிகவும் சக்திவாய்ந்த மருத்துவமனையாகக் காணப்படுகின்றது. "கோவிலும் உடலும் ஒன்று" என்பார்கள் இரண்டுமே ஆத்ம சக்தியின் உறைவிடமாகவும், ஆலய அமைப்புக்கள் அகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் காணப்படுகின்றது. இன்றைய அறிவியலாளர்கள் கண்டறிந்த விஞ்ஞான தத்துவங்களைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆன்மீகக் கருத்துக்களை மெஞ்ஞானத்தினூடாக எடுத்தியம்பியுள்ளது. உச்சிமுதல் உள்ளங்கால் வரை நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு பொருட்களிலும் விஞ்ஞானமும் ஆன்மீகமும் கலந்து காணப்படுகின்றது.

புத்தாண்டில் பயன்படுத்தப்படும் மருத்துநீரில் உடலைத் தாக்கும் கிருமிகளை அழிக்கவல்லது. முடி உதிர்வு, நரமுடி, வியர்வை நாற்றம், உடல் குளிர்ச்சி, கண்ணெரிவு, இருமல் என பலவற்றிற்கு நிவாரணம் அளிப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் துளசி தீர்த்தம் உடலில் உள்ள விஷ சக்தியை அகற்று வதோடு உடல் சூட்டையும் தணிக்க வல்லது. துளசி மணி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை அணிவதால் இருமல், காச நோய் களுக்கு மருந்தாக விளங்குகின்றது. துளசியின் நறுமணம் புழுபூச்சிகளைக் கொல்வதோடு விஷப்பாம்புகளை அணுகவிடாது பாதுகாக்கும். உருத்திராட்சம் அணிவதால் மன அமைதி, தொழில் முன்னேற்றம், இரத்த கொதிப்பு, இருமல் போன்றவற்றில் இருந்து விடுபடவும் வழிகாட்டுகிறது.

இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவமான முப்பொருள் என்ற கோட்பாடு இன்று ஒரு விஞ்ஞான கோட்பாடாக மாறியுள்ளது. உலகத்தில் உள்ள அனைத்துப் பொருட்களும் "புரோத்தோன், இலத்திரன், நியூத்திரன் எனும் மூவகைப் பொருட்கள் பதி, பசு, பாசம் என்பவற்றிற்கு இந்துமதம் கொடுத்த விளக்கத்தையே விஞ்ஞானம் கொடுத்துள்ளது.

விநாயகரை நாம் மூன்றுமுறை குட்டி தோப்புக்கரணம் போட்டு வழிபடுகிறோம். இதில் மூளையுடன் தொடர்புடைய நரம்புகளில் குட்டுவதனால் விறுவிறுப்பாக செயல்படுவதுடன் ஞாபகசக்தியும் அறிவுக் கூர்மையும் உண்டாகிறது.

இவ்வாறு ஒவ்வொரு சமய ரீதியான செயற்பாடுகளும் விஞ்ஞான ரீதியாக மனிதனுக்கு நன்மை பயக்கவே உருவாக்கப்பட்டுள்ளது. கல் தோன்றோ மண் தோன்றாத அந்தக் காலத்தில் விஞ்ஞான உலகிற்கு பல விடயங்களை எடுத்தியம்பிய மதம் எமது இந்துமதம். இதனால் தான் உலகம் போற்ற இன்றும் நிலைத்திருக்கின்றது.

இன்று விஞ்ஞானத்தில் காணப்படும் நரம்புகளைத் தூண்டும் செயற்பாடு என்பதனை அன்று ஞானிகள் பிரயோக அலைகளின் அதாவது பிராணயோகத்தின் ஊடாக உள்நரம்புகளைத் தூண்டி மந்திரங்களை உச்சாடனம் செய்வதன் மூலம் செய்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் சக்தியைக் கொடுப்பதை காணலாம்.

யசுர் வேதத்தில் யாகங்கள் செய்து ஓமாக்கினி வளர்ப்பது பற்றி கூறப்பட்டுள்ளது. இதனை இன்று ஓமாக்கினி வளிமண்டலத்தைத் தூய்மைப்படுத்துவதாக கூறி ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் ஓமாக்கினி வளர்ப்பதற்கு இரு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளது.

பதஞ்சலி முனிவரினால் அறிமுகப்படுத்தப்பட்ட யோகாசன முறைகள் இன்று பெரும்பான்மை நாடுகளில் உள்ள வைத்தியசாலைகளில் கூட உடல்வலிமை பெறும் பொருட்டு கடைப் பிடிக்கப்படுகிறது. இவ்வாறாக எமது சமயத்தின் பயன்களை அறிந்து ஏனையவர் கடைப்பிடிக்கும் அளவிற்கு இந்துக்கள் நாம் செயல்படுத்துகிறோமா என்றால் கேள்விக்குறியாகவே நிற்கின்றது.

இந்துக்களிடையே அறுகம்புல் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றது. அறுகம்புல்லைத் தினமும் காலையில் (பானமாய்க்) குடித்து வந்தால் சிறுநீரகநோய், தோல்நோய் குணமாகும். மேலும் அடிபட்ட காயத்திற்கு அரைத்து போட்டால் காயம் குணமாகும்.

இதேபோல்தான் சந்தனம் நோய் கிருமி தோல்வியாதி நீக்க வல்லது. இதயம் வலுப்பெறுவதோடு நாவின் ருசியின்மையை அகற்றவும் மலம், பித்தம் ஆகியவற்றைக் குணப்படுத்தவும் குளிர்ச்சியையும் அளிக்க வல்லது.

இத்தோடு, குங்குமத்தை எடுத்துக் கொண்டால் உடலில் நாடி நரம்புகள் சந்திக்கும் நெற்றி நடுவில் குங்குமம் அணிவதால் விஷப்பாதிப்புகள் ஏற்படின் அதை நீக்கவும் பார்வை தோஷம் நெற்றிப் பொட்டு வழியாக உடம்பை அடைவதை தடுக்கவும் பயன்படுகிறது.

சக்தி பொருந்திய மின்சார நிலையத்தில் அபாயம் எதும் ஏற்படாமல் மின் பெட்டியில் சேகரித்து பாதுகாத்து வைப்பது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே ஆலய மூர்த்தியும் பாதுகாப்பான கர்ப்பக்கிரகத்தில் இருப்பது கவனிக்கதக்கது. யாகசாலையில் தேங்கும் தெய்வீக சக்தியை தங்கம் வெள்ளி போன்ற யந்திரங்களின் மூலம் மூர்த்திகளின் அடியில் வைக்கப்பட்டு அடியவர்களுக்கு அருட்சக்தி கிடைக்கிறது. இதில் குறைவேதும் ஏற்படாமல் தான் அர்ச்சனை, ஆராதனை மற்றும் 12 வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்வதையும் காணலாம்.

ஆலயத்தின் கோபுர உச்சியில் தங்கத்தினாலும் வெள்ளியினாலும் ஐம்பொன்னினாலும் செய்யப்பட்ட கலசங்கள் உண்டு. மின்காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியினை இக் கலசங்கள் கொண்டுள்ளன. எனவேதான் கலசங்கள் மின்னலை தாங்கும் சக்தியுடையவை. இதனால்தான் ஆதிகாலத்தில் இடி மின்னலில் இருந்து பாதுகாக்க கோயிலில் தங்குவது வழக்கம். இதைதான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என முன்னோர்கள் கூறியிருந்தார்கள் போலும்.

பொதுவாக நாம் ஆலயத்தில் பெற்ற நைவேத்தியங்கள், விரதகால உணவுகள், வாழையிலை வழக்கம் போன்றன உடல் நலத்தை காக்க உதவுகின்றன. இவை உயிர்சத்துக்கள் நிறைந்த மரக்கறிகள், கனிப்பொருட்கள் நிறைந்த பழங்களில் இருந்து தயாரிக்கப்படுகின்றது. பால் ஒரு நிறையுணவு; இது தீர்த்தத்தில் இருந்து பெறப்படுகின்றது.

அதிகாலையில் எழுந்து முகம்கழுவி வீபூதி அணியும் வழக்கத்தினால் விபூதி நீரை உறிஞ்சும் தன்மை கொண்டதால் நெற்றியின் ஊடாக நீர்த்தன்மை உள்ளே சென்று மூளை விருத்தியில் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கின்றது. மேலும் வீபூதி நோய்க்கிருமிகளை அழிக்கவல்லது என்பதை இன்று விஞ்ஞானிகளே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

விஞ்ஞானி ஜன்ஸ்டின் காலத்திற்கு பின்னரே அணுவைப் பிளக்க முடியும் அதன் ஆற்றலைப் பெற முடியும் என்ற கருத்து வலுப்பெற்றது. ஆனால் அன்று ஔவையார் "அணுவைத் துளைத்து எழு கடலைப் புரட்டி" என பாடியுள்ளார். இவற்றோடு "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற வாக்கும் நினைவில் கொள்ளத்தக்கது. மேலும் "அண்டப் பகுதியில் உண்டைப் பிறக்கும்... இல் நுழை கதிரின் துண் அணுக் புரையச் சிறிய அகப் பெரியோர்" என திருவாசகத்தில் மாணிக்கவாசகர் உலகு, அணு போன்றவற்றை தெளிவாக கூறியுள்ளார். முக்கியமாக பாரதப்போர் நடந்த இடத்தில் இன்றும் கதிரியக்கம் இருக்கிறது என்றால் அன்று அணு ஆயுதங்களை பயன்படுத்தி பாரதயுத்தம் நடந்திருக்கலாம் என கணிக்கப்படுகிறது.

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்துக்கள் நவக்கிரக வழிபாட்டில் சூரியனை சுற்றி மற்ற கோள்களை அமைத்து சூரியக் குடும்பத்தில் சூரியனை மையமாக வைத்து ஒன்பது கோள்கள் சுற்றுகின்றன என்ற உண்மையை வெளிப்படுத்தினர். இந்து மத அறிவியலாளரான ஆரியப்பட்டர் அன்று பூமி சூரியனைச் சுற்றிவருவதை "லாகவ கவுரவா" என்று குறிப்பிட்டார். அதாவது ஒரு சிறிய அமைப்பு ஒரு பெரிய அமைப்பால் ஈர்க்கப்பட்டு சுற்றி வருவது என பொருள்பட அமைந்தது. மேலும் இதனை "வேயுறு தோளி பங்கன்..." எனும் தேவாரத்தில் ஒன்பது கிரகங்கள் பற்றி கூறப்படுகிறது.

சூரிய ஒளியில் ஏழு நிறங்கள் உள்ளது என்பதை நவீன விஞ்ஞானிகள் கண்டறிய முன்னர் இந்துமத நூல்களில் சூரியன் ஏழு குதிரைகளை பூட்டிய தேரில் பவனி வருவான் என கூறப்பட்டுள்ளது. குறிப்பாக இந்துக்களிடம் அதிகாலையில் எழுந்து சூரிய நமஸ்காரம் செய்வது வழக்கம். இதன்படி சூரியனின் இளங்கதிர்கள் நம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலிற்கு வலுவூட்டும் சக்தியை கொடுக்கின்றது. இவ்வாறு எமது பண்பாடு, கலாசாரம் என அனைத்து செயற்பாடுகளிலும் விஞ்ஞானம் புதைந்து கிடந்து நன்மை பயக்கின்றன. அவற்றைப்பற்றியும் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது.

மிக விரைந்து செல்லும் மோட்டார் வாகனம், சாரதி இன்றி இயங்கும் றொக்கட் நோய்களைக் குணப்படுத்தும் பல்வேறு வகையான கண்டுபிடிப்புக்கள் எல்லாம் இன்றுதான் உலகம் கண்டுபிடித்தன. ஆனால் எமது புராண, இதிகாசங்களை புரட்டிப் பார்த்தால் நினைத்த இடத்திற்கு நினைத்த மாத்திரத்தில் செல்ல "புஸ்பக விமானம்", "இந்திர ஞாலத் தேர்" என்பன காணப்பட்டன. மேலும் குறிப்பிட்ட பகைவரை அழித்து வா என்றால் "ஏவா ஆயுதங்கள்" தாமாக சென்று அழித்து வந்தன. இவற்றோடு விஷம் வெட்டுக்காயம், இரண்டு துண்டுபட்ட அங்கங்களை ஒட்ட என அதிசயகற்கள் இருந்தன.

விஞ்ஞான வினோதத்தை இன்று வீட்டுக்குள் இருந்தபடி தொலைக்காட்சி மற்றும் இணையத்தின் ஊடாக நேரடி காட்சி மற்றும் ஒளிபரப்பு செய்வதை காணலாம். இதனை அன்று சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் கைலாயத்தில் நடந்த திருமணத்தை பொதிகையில் இருந்தபடி அகத்தியர் கண்டு பரவசமடைந்ததைக் காணலாம்.

புராண, இதிகாசங்களில் கூறப்பட்ட அசரீரி எனும் செயற்பாடு இன்று வயர்வெஸ் என அழைக்கப்படும். எந்த தொடர்பும் இன்றி மற்றொருவருடன் உரையாட முடியும் என்ற உண்மையை உள்ளடக்கி இருந்தது.

தற்கால விமானங்கள் ரன்வேயில் ஒடி பின் டேக்அப் ஆகுவதை அன்று ராவணனின் தேர் சீதையை கடத்திக் கொண்டு செல்லுகையில் சிறிது தூரம் தரையில் ஒடி பின் இலங்கைக்கு பயணித்தமை முன்னோடியாக திகழ்ந்தது எனலாம்.

அவ்வளவு ஏன் முதன்முதலில் கண்மாற்றும் அறுவைச்சிகிச்சையை அறிமுகப்படுத்தியவர் நம் கண்ணப்ப நாயனார் தான் என்பது யாவரும் அறிந்து விடயமே எனலாம். இவ்வாறு விஞ்ஞானம் புதிது புதியதாக ஆக்கிய அனைத்தும் பழமையான ஒன்றிலிருந்தே உருவாகியது. அது எமது மதமே எனலாம். இவற்றைப் பற்றி மேலும் அறிவிக்க விளைகிறேன்.

காலத்தால் முற்பட்டதும் யாரொருவராலும் தோற்றிவிக்கபடாமல் சனாதனதர்மமாக தொடர்ந்து நிலைபெற்றிருப்பது எமது இந்து சமயமாகும். வெறுமனே கடவுள் நம்பிக்கை சார்ந்தது அல்ல. இது பல பரிமாணங்களை கொண்டமைந்தது. வியக்க வைக்கும் விஞ்ஞான நுணுக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. விஞ்ஞானமும் தெய்வீகமும் இணைந்து விட்டால் பூலோகமே சொர்கமாக அமைந்து விடும். உலகிற்கு வழிகாட்டியாகவும் ஊன்று கோலாகவும் எமது சமயம் விளங்குவது சிறப்பம்சமாகும். இந்த வகையில் சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையிலான தொடர்பினை பேசவிழைவது பயனுள்ள ஒன்றாகும்.

இன்று மனிதனைப் பற்றி விஞ்ஞானம் ஆராய்வதையெல்லாம் என்றோ வகுத்து தெளிவாக வைத்திருக்கிறது. உபநிடதங்களில் கடோபநிடதம் கூறியிருப் பது வியப்பிற்குரியதே. சரீரம் ஐந்து பொருட்களில் நிலைபெறுவது என்றும் ஆறு ஆதாரமுடையன என்றும் ஆறு குணங்களுடன் கூடியது என்றும் ஏழு தாதுக்கள், மும்மலங்கள், இரண்டு பிறப்பிடமும், நாலு விதமான ஆகாரமயமானது என அவற்றை விளக்கிக் கூறியுள்ளது. இதனை

"பஞ்சாத்மகம் பஞ்சாஸி வர்த்தமானம் ஸ்டாச்ரயம் ஷட்குணயாக யுக்தம் தம் ஷ்ப்த தாதும்..." என்ற பாடலடி மூலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். மேலும் குழந்தை உருவாகு வது முதல் வளரும் வரை கருப்பையில் நடக்கும் செயற்பாடுகளை ஓரிரவு முதல் எட்டாவது மாதம் வரை தெளிவாக குறிப்பிடுகிறது. மேலும் குறிப்பாக தந்தையின் வீரியத்தால் ஆணும் தாயின் வீரியத்தால் பெண்ணும் இவை இரண்டும் சமனாகும் பட்சத்தில் அலியும் பிறப்பதாக கூறப்பட்டுள்ளது. இவற்றோடு குறைபாடுகள் உடைய குழந்தைகள் எவ்வாறு பிறக்கின்றன என்றும் உடலில் எத்தனை எலும்பு, நரம்பு, தசை, உரோமம் என்பன பற்றியும் தெட்டத்தெளிவாக கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மனிதனை பற்றி முழுமையான கருத்துக்களை விஞ்ஞானம் கண்டறிந்ததாக நாம் எண்ணியிருப்போம். ஆனால் இவற்றை எம் மதம் வகுத்து வைத்ததைப் பற்றி யாரும் கருத்தில் கொள்வதில்லை.

ஆகவே ஒட்டுமொத்தமாக நோக்குவோமாயின் அக்கால மனிதர்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்ததனால் அவர்களுக்கு நோய்நொடிகள் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இன்றைய உலகில் நாகரீக விஞ்ஞான வளர்ச்சி காரணமாக மக்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். அந்த வகையில் விஞ்ஞானமே வியக்கும் அளவிற்கு மெஞ்ஞானம் தழைத்தோங்கி காணப்படுவதுடன் நமது உடலையும், மனதையும் சுத்தம் செய்யும் மருத்துவமனை போல் ஆலயம் காணப்படுவதனால் முன்னோர்களால் வரையறுக்கப்பட்ட ஆன்மீக முறைகளை பின்பற்றி இறைவழிபாடு செய்வோமாயின் இவ்வுலகில் ஆரோக்கியமாக வாழ்வதுடன் எமது சமயத்திற்கு இளைஞர்களின் பங்களிப்புக்களை வலுச்சேர்த்து எமது சைவ சமயத்தை வளர்ப்பது பாரிய பொறுப்பாகும் என்று கூறினால் மிகையாகாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தின் மூலம் சைவசமயமே

சைவசித்தாந்த கலாநிதி சைவசித்தாந்த பண்டிதர்
பிரசங்கபூஷணம் உரைத்தமிழ் ஒலி, சைவ சொற்பொழிவாளர்
சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்
B.A.(Hons) M.A. in Saiva Sithantham (Jaf) Sce. Tnd.....
ஆசிரிய ஆலோசகர்

சைவசமயம் அனாதியானது. தோற்றமும் முடிவும் இல்லாதது. இதனால் சனாதன சமயம், சனாதனதர்மம் எனும் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. சிவபெருமானே மாஜையை முதற்காரணமாகக் கொண்டு தனது திரோதான சக்தியைத் துணைக்காரணமாகக் கொண்டு தானே தனு எனும் உயிருக்கான உடல்கள். மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம், புத்தி, சித்தம் அகங்காரம் முதலிய 36 கரணங் களையும் இந்தப் புவனங்களையும் பூமியில் இருந்து நாம் அனுபவிக்கும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவற்றோடு தாவரங்களையும் படைத்தார். உயிர்களும் சிவத்தைப் போல் அனாதியானது என்றாலும் தனு, கரண, புவனம், போகம் சிவபெருமானாலேயே படைக்கப்பட்டது. இதனையே படைப் புத் தொழில் என்கின்றோம்.

தமிழில் உயர்வு நவிற்சியாக கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்திற்கே முன்பே தோன்றியது மூத்த தமிழ் என்பார்கள். ஆனால் கல்தோன்றா மண்தோன்றாக் காலத் திற்கே மிகமிக முற்பட்டது. **சைவசமயம்** முற்பட்டவர் சிவபெரு மானேயாவார். இவ்வகையான பழமைக்குப் பழமையாக புது மைக்குப் புதுமையாக விளங்கும் சைவசமயம் இயற்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடும் மனிதரின் வாழ்வியலோடும் பின்னிப் பிணைந்துள்ளது. சைவம், விஞ்ஞான, அறிவியல், மருத்துவ ரீதியாகவும் முன்னேற்றமான பல தகவல்களை எடுத்துக் கூறுகிறது.

சைவ சமயத்தவர்களின் வாழ்வியல், வழிபாட்டு முறைகள் மிக மிக விஞ்ஞான மருத்துவ ரீதியானவையாகக் காணப்படுகின்றது. மனிதன் தாவர உணவுக்குப் பொருத்தமான உடலமைப்பையே கொண்டுள்ளான். எடுத்துக்காட்டாக மனிதனின் வாயில் உள்ள 4 வேட்டைப் பற்களும் மங்கி மற்றைய பல் அளவுக்கே காணப்படுகின்றது. இவை வெட்டவும் பயன்படா அரைக்கவும் பயன்படாது காணப்படுகின்றது. விலங்குண்ணும் நாய், கரடி, புலி, சிங்கம் போன்றவற்றில் இவ்வேட்டைப் பற்கள் ஊனைக்கிழித்துண்ணக் கூடியவாறு நன்கு வளர்ந்துள்ளன.

மேலும் உணவுக் கால்வாய்த் தொகுதியில் சுரக்கப்பட்டு உணவுகளைச் சமிபாடடையச் செய்யும் நொதியங்களும் தாவர உணவுக்கேற்றதாகவே காணப்படுகின்றது. இவைமட்டுமன்றி நீண்ட உணவுக்கால்வாய்த் தொகுதியும் தாவர உணவுக்கேற்பவே அமைந்துள்ளமை யும் குறிப்பிடத்தக்கதாகும்.

சைவசமயம் மண்ணில் நல்லவண்ணம் வாழவும் அதன் மூலம் விண்சென்று சிவனது திருவடியில் இருந்து பேரானந்தம் பெற்று என்றும் இன்பமாக வாழவும் வழிகாட்டுகின்றது. இத்தகு வாழ்க்கையில் இறைவழிபாடுகள், தொண்டுகள், அறப்பணிகள் எல்லாமே மனிதனை இந்த மண்ணில் மகிழ்ச்சியாகவும் உடல், உள ஆரோக்கியத்தோடு வாழவும் வழிகாட்டுகின்றது.

நாம் அதிகாலை நித்திரை விட்டெழுவது, நீராடுவது, விபூதியணிவது, பிராணாயாமம் செய்வது, மலர்கள் பறிப்பது, ஆலயத்திற்கு நடந்து செல்வது, ஆலய வீதியை வலம் வருவது, குட்டிக் கும்பிடுவது, தோப்புக் கரணம் போடுவது அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்வது, தோத்திரங்களைப் பாடுவது, தியானம் இருப்பது என இவை எல்லாமே விஞ்ஞான, மருத்துவ ரீதியாக மனிதனின் உடல், உள ஆரோக்கியத்தை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

பிரம்ம முகூர்த்தத்தில் நித்திரை விட்டெழுந்து அன்றாட காலைக்கருமங்களைச் செய்து குளிர்ந்த நீரில் நீராடும் போது உடலின் உஷ்ணம் குறைகிறது. உடலை சுத்தப் படுத்தும்போது பல மூட்டுக்களுக்கு அசைவு ஏற்படுகின்றது. இரத்தோட்டம் சீராக்கப்படுகிறது. இவற்றால் புத்துணர்வு ஏற்படுகின்றதல்லவா!

மேலும் நீராடி நித்தியகர்ம அனுஷ்டானத்தைக் கடைப் பிடிக்கும்போது நாம் அணியும் விபூதி 16 இடங்களில் அமைகின்றது. இப்பதினாறு இடங்களுமே எலும்புகளின் மூட்டுப் பொருத்தும் தசைச்சுருக்கமும் உள்ள இடங்களாகவே காணப்படுகின்றது. விபூதி இவ்விடங்களில் உள்ளே காணப்படும் அழுக்கு நீர் காற்றுக்குடாவில் தேங்கும் போது நமக்கு தலையிடி வேதனையாக உள்ளது. விபூதியை நெற்றி நிறையவே அணிந்தால் திருநீறு அழுக்கு நீரை உறிஞ்சிக் கொள்கின்றது.

பிராணாயாமம் செய்யும்போது அனேகமாக நுரையீரல் ஆகிய சுவாசப் பையில் இருக்கும் பெருமளவான காற்று வெளியேறுகிறது. சாதாரண சுவாசத்தில் ஓரளவு காற்றே உள்சென்று வெளியேறும் காலையில் 10 தடவைகளுக்கு மேல் பிராணாயாமம் செய்து வர சுவாசப் பையில் உள்ள அழுக்குக் காற்று வெளி யேறிவிடுகின்றது. இதனால் தடிமன், ஆஸ்மா போன்ற நோய்கள் குணமாகின்றன.

ஆலயத்திற்கு நடந்து செல்வதுதான் சரியானது. இப்போ அருகிலிருக்கும் ஆலயத்திற்குக் கூட வாகனங்களில் செல்கிறார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், இதனாலேயே பலநோய்களை வாழ்க கையில் சந்திக்கின்றார்கள். நடப்பது அதுவும் அதிகாலையில் நடப்பது கொலஸ்திரேலைக் குறைக்கின்றது. சுவாசத்தை சீர் செய்கிறது இரத்தோட்டம் சீராக ஓடி மூளைக்கு அதிகரத்தம் கிடைக்கின்றது. நாடிகளில் இருக்கும் அடைப்புக்கள் விலகுகின்றது என இன்று மருத்துவர்கள் கூறுகிறார்கள் நீரிழிவு நோயுடையவர்களுக்கு ஆலய வழிபாடு மிகமிக முக்கியமானதாகின்றது. மேலும் 3/5/7 தடவைகள் வீதியை வலம் வருதல் கைகளை உயர்த்தி வழிபடல், அட்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்து வழிபடல் எம் உடலுக்கு உறுதியைத் தருவதோடு உயிருக்கு நல்லபுண்ணிய பலன்களையும் தருகின்றதல்லவா.

குட்டிக்கும்பிடுகின்றோமே. நாம் சத்தம்கேட்க 5 தடவைகள் தலையில் இறுக்க் குட்டிப் பிள்ளையாரை வழிபடும்போது அந்த அதிர்வுகள் மூளையைத் தூண்டி விருத்தி பெறச்செய்வதோடு தலையில் காணப்படும் கபச்சுரப்பியையும் தூண்டி ஓமோன் சுரக்கச் செய்து ஏனைய கானில் சுரப்பிகள் எல்லாவற்றையும் சீராகச் செயற்பட வழிகாட்டு கின்றது.

தோப்புக்கரணம் போடும் போது கைகளை மாறிக் காதில் பிடித்துக் கொண்டு நன்றாகத் தாழ்ந்து எழல் வேண்டும். இவ்வேளை உடம்பில் காணப்படும் அத்தனை மூட்டுக்களுக்கும் அசைவு ஏற்படுகின்றது. நுரையீரலில் காணப்படும் வளி சுலபமாக வெளியேறி சுலபமாகவே உள்ளே நல்ல காற்று வருகின்றது. இவற்றோடு செவியின் புறப்பக்கம் மிகமிக நுண்மையான பகுதியாகும். செவியை இழுக்கப்படும்போது மூளை யத்தைத் தூண்டி ஞாபக சக்தியை அதி கரிக்கச் செய்கின்றது. விநாயகர் ஞான முதல்வன், புத்தி கணபதியாக இருந்து தோப்புக்கரணம் தினந் தினம் போட்டு வழிபடுபவர்களின் புத்தியைத் தூண்டுகின்றார்.

இறைவனுக்கு அர்ச்சித்து கிடைத்த மலர்களை இறைவன் திருவடியாகவே தலையில் சூட்டுகின்றோம். குடுமியில்லாதவர்கள் காதின் மேற்பக்கம் சூட்டுகின்றார்கள். இக்காதின் மேற் பக்கம் பல நரம்பு அந்தங்களைக் கொண்டமைந்துள்ளது. இவை மூளைக்குக் குளிர்மையையும் புத்துணர்வையும் ஏற்படுகின்றதல்லவா.

ஆலயங்களில் பஞ்சாமிர்தம் இறைவனுக்கு அபிஷேகித்த பின்னர் அடியார்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகின்றது. இன்றைய நவீன விஞ்ஞானிகள் மனிதர்கள் தினம் தினம் மூன்று வகையான பழங்களைக் கட்டாயம் சாப்பிடல் வேண்டும் என்கிறார்கள். பஞ்சாமிர்தத்தில் மா, பலா, வாழை, ஆகிய பழங்கள் முக்கியம்பெறுகின்றது. சைவத்தின் மகத்துவம் தான் என்னே

ஆலயங்களில் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம் போன்றன நடைபெறும் போது ஓம குண்டத்தில் அக்கினியில் பல வகையான சமித்துக்கள் (மரத்தடிகள்) இலை வகைகள், பழங்கள், காய்வகைகள், வித்துக்கள், வேர்கள் என 40 இற்கும் மேற்பட்ட திரவியங்கள் இடப்படுகின்றது. இவை ஒவ்வொன்றுமே மருந்து மூலிகைகள் இவற்றில் இருந்து எழும்புகை எம் மேனியில் படுவதும் சுவாசத்துடன் கலப்பதும் உட லுக்கு ஆரோக்கியமானவை என இன்றைய விஞ்ஞானிகளே கூறுகின்றார்கள் கிருமி நீக்கியாகவும் விசப்பூச்சிகளை, நச்சுவாயுக்களையும் நெருங்கவிடாமல் தடுத்துக்கொள்கின்றதல்லவா 4 தசாப்தங்களுக்கு முன்னர் இந்தியாவில் போபோல் நச்சு வாயுக்கசிவு ஏற்பட்டு இரவோடு இரவாக ஒரு கிராமத்து மக்கள் அனைவரும் நித்திரையோடு நித்திரையானார்களே! ஆனால் அங்கு வாழ்ந்த இரு பிராமணக் குடும்பத்தினர்கள் மட்டும் தப்பித்துக் கொண்டதை அறிவீர்களா? இவர்கள் வீட்டில் அக்கினி குண்டம் வைத்து நித்திய அக்கினி வளர்த்து நித்திய ஹோமம் செய்பவர்கள் அவர்கள் வீடுகளுக்கு இந்த போபோல் நச்சுவாயு உட்புக முடியவில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல்லவா. இனிமேலாவது கும்பாபிஷேக திரவியஹோமம், சங்காபிஷேக ஹோமம் நடைபெறும் காலத்தில் நாமும் கோயில் சூழலிலேயே தங்கியிருப்போம்.

மேலும் கும்பத் தீர்த்தம், சங்குத் தீர்த் தங்கள் குடிக்கும்போது சற்றுக்கசப்பான வைதான். ஆனால் அவை சொட்டு மருந்து கொடுத்தாற் போல் பலநோய்களைக் குணப்படுத்தும் மாமருந்தாகும். பலவகை யான மூலிகைகள் மட்டுமன்றி மந்திரம் உச்சரித்து அந்நீரில் செறியப்பட்டுள்ளது. இவ்வகைத் தீர்த்தம் கிருமிகொல்லியாகக் கூடப் பயன்படுகின்றது. துளசித்தீர்த்தமும் இவ்வாறேயாகும். உணவை சரியாகச் சமிபாடடையச் செய்யும் மருந்தாகவும் உள்ளது.

கோயில்களில் காவடி எடுத்தல் அங்கப் பிரதிஷ்டை, அடி அளித்தல் போன்ற வழிபாடுகள் கூட உடல் ஆரோக்கியத்தை யும் தரக்கூடிய ஒரு சிகிச்சைமுறையே என நவீன வைத்தியர்கள் கூறுகின்றார்கள் உடலுக்கு ஒரு தேக அப்பியாசம் மட்டு மன்றி மண், கல், உடலில் குற்றும் போதும் காவடியின் வெள்ளிவேல் செடில் குற்றும் போதும் அக்கு பஞ்சர் குறிப்பிடும் பல சிகிச்சைகள் நடைபெறுகின்றது என்பதைக் கண்டறிந்துள்ளார்கள். ஊனினை உருக்கி னால் உள்ளொளிபெருகும் என்பதற் கமைய இறைவன் அருள் கிடைப்பதோடு உடல் ஆரோக்கியமும் பேணப்படுகின்றதே.

ஆலயங்கள் என்றால் அங்கே பல வகையான மரங்கள் கட்டாயமாகக் காணப்படல்வேண்டும் கொழும்பு போன்ற நகரங்களில் மரங்கள் இல்லாவிட்டாலும் ஆலய தலவிருட்சம் எனும் வகையில் ஒரு பெரியமரமாவது பேணப்படுகின்றதல்லவா மரங்கள் ($CO_2$) காபனீர்ஒட்சைட்டை அதிகமாகப் பெற்று ஒளித்தொகுப்புச் செய்து ஒட்சிசனை ($O_2$) வெளிவிடுகின்றது. மனிதன் உள்ளிட்ட உயிர்களே ($O_2$) ஒட்சி சனைச் சுவாசித்து ($CO_2$) காபனீர்ஒட் சைட்டை வெளிவிடுகின்றன. வளியில் இவைசமமாகப் பேணுவதற்கும் இத்தாவ ரங்கள் பயன்படுகின்றன. மேலும் அரச மரத்தை தினம் தினம் பெண்கள் சுற்றி வரு வதால் கருப்பையில் குழந்தை உரு வாகும் வாய்ப்பு அதிகம் என்றும் நவீன வைத் தியர்கள் குறிப்பிடுகின்றார்கள் தல விருட் சங்களை வெட்டாது பேணி சூழல் சம நிலையை நாமும் பேணுவோம்.

இசையினால் பல விதமான நோய் கள் சீராகின்றது. மனிதனுக்கு ஏற்படும் மன அழுத்தமானது பல நோய்களைக் கொண்டு வரக்கூடியது ஆலயத்தின் கலை நிகழ்வு கள் இசையோடுகூடிய மந்திரஒலி, தேவாரப் பண்ணிசை ஒலி, மணி ஓசைகள் தவில், நாதஸ்வர, சங்கு, சேமக்கல ஓசை கள் ஒவ்வொருவரையும் கவர்ந்திழுத்து அலைபாயும் மனத்தை ஒரு நிலையில் நிலைநிறுத்த உதவுகின்றது. இசையி னால், பலபேர் மனக்குழப்பம் நீங்கி ஆரோக்கியமான வாழ்வு வாழ்கின்றனர். இவற்றோடு ஆலயங்களில் நிகழ்த்தப்படும் பிரசங்கம், கதாப்பிரசங்கம் அங்கு கூறப் படும் நற்சிந்தனைகள் மக்கள் அகங்களை ஒருநிலைப்படுத்தவும் அறநெறியில் மனி தன் மனிதனாக வாழவும் வழிபாட்டு முறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்கவும் உதவுகின்றது.

இவ்வகை இசையினால் நாயன் மார்கள் ஆழ்கிறார்கள் எத்தனையோ பாடல்களைப் பாடி பல அற்புதங்களைச் செய்தமையை நாம் அறிவோமல்லவா.

மண்ணில் சைவ சமயத்தில் பிறந்த நாம் சைவம்காட்டு வழிவகைகளை நன்கு அறிவதும் அதன்படி வாழ்வதும் எமக்கும் கற்றத்திற்கும் பயன்படும் சைவசமயத்தவர் எண்ணிக்கையை நாம் கூட்டுவோம் வேற்றுசமயத்தவர்களுக்கு சைவத்தின் பெருமையை சிறப்பை எடுத்துக் கூறு வோம். சைவர்களாக வாழ்வோம் என எல்லோரும் உறுதி பேணுவோம்.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் தொன்மம்: நான்காம் திருமுறையை அடிப்படையாகக் கொண்டது

**திரு.சி.ரமணராஜா,**
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம் :

தொன்மங்கள் (myths) செய்தியினை எடுத்துச் சொல்வதில் பிரதான இடத்தைப் பெறுகின்றன. புலன் கடந்த பொருளியலுண்மைகள், சமய உண்மைகள் என்பவற்றை வெளிப்படுத்துவதில் தொன்மக் கூறுகள் உதவவல்லன என்பதனை சமய வரலாற்றாய்வாளர்களும் உளவியலறிஞர்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஒரு செய்தியினை எடுத்துக் கூறி ஒருவரை நெறிப்படுத்தவும் வழிகாட்டவும் ஆலோசனை வழங்கவும் தொன மங்களால் இயலும்.

சைவ நாயன்மார்களுள் சமண சமயம் சார்ந்து மீண்டும் சைவராகி சைவத்தின் இருப்புக்காக பக்தி இயக்கத்தளத்தில் நின்று பணியாற்றியவரில் திருநாவுக்கரசு நாயனார் குறிப்பிடத்தக்கவர். இவரது பாடல்கள் சைவத் திருமுறையில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறையாக உள்ளடக்கப் பட்டுள்ளன. உருக்கமான உணர்ச்சிவயப்பட்ட இறை பக்தியின் மூலம் இறைவனையே அடைய முடியும் என்பதனை அனுபவ நிலையில் வெளிப் படுத்தியவர்களில் இவரும் குறிப்பிடத்தக்கவர். இவர் அங்கம் வகித்த பக்தி இயக்கம் வடமொழி இலக்கிய சிந்தனைகளை தமிழகத்துக்குள் நுழைய வித்திட்டது. வடமொழி இலக்கியக் கருத்துக்களால் பக்தி இயக்கச் செல்நெறி தனித்துவ நிலையெய்தியது. வேதாகமங் கள், இதிகாச புராணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிட்ட வட மொழி நூற்கருத்தியல்களை மக்கள் மத்தி யில் எளிமையாக எடுத்துச் சென்றவர்கள் சொன்னவர்கள் நாயன்மார்களும் ஆழ் வார்களும் ஆவர். நாயன்மார்களுள் எண் பத்தொரு வயது வரை சரியைத் தொண் டின் மூலம் வாழ்ந்தவர் நாவுக்கரசர். இவர், மக்கள் மத்தியில் இறைவனின் இருப் பினை நிலைநிறுத்தும் முயற்சியில் இறை குறித்த தொன்மங்களை அதிகம் எடுத் தாண்டுள்ளார். இதனை, சமயப்பிரசார உத்தியாகவே கருதவியலும். இப்பின்ன ணியிலேயே இவ்வாய்வு நிகழ்த்தப்படுகின் றது.

**திறவுச் சொற்கள் - திருநாவுக்கரசு நாயனார், தொன்மம், தேவாரம், நான்காம் திருமுறை, இறையிருப்பு.**

**ஆய்வின் நோக்கமும் முறையியலும்**

சைவ நாயன்மார்களின் பக்தி இயக்கச் செயற்பாடுகள் தனித்துவம் வாய்ந்தவை. அத்தகைய செயற்பாடுகள் யாவும் சமயத்தின் மையவிடங்களான திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ளன. பிற்காலங் களில் பக்தி என்பதனை கோட்பாட்டு நிலையில் நோக்குவதற்கான சூழலையும் இவ்வியக்கச் செயற்பாடுகளே தோற்றுவித் தன. சமய வரலாற்று நிகழ்வுகள் மற்றும் செய்திகளைப் பதிவு செய்வதானது பக்திக் கோட்பாட்டின் இருப்பிற்கும் உயிர்ப்பிற்கும் இன்றியமையாததாக அமையும். இதனடிப் படையில் இந்து சமயம் சார் தொன்மை யான வரலாறுகள், நிகழ்வுகள் என்ப வற்றை அறிவதற்கு நாவுக்கரசரின் பாடல்கள் துணைபுரிகின்றனவா? நாவுக் கரசர் ஏன் அதிகளவில் சிவனின் திரு விளையாடல்களைப் பதிவு செய்துள்ளார் ? இவ்வுத்தி முறைமையினால் நாவுக்கரசர் செய்ய விழைந்தவை எவை? பக்திக் கோட்பாட்டுருவாக்கத்தில் இவ்வுத்தி முறை மைகள் செல்வாக்கு செலுத்தியுள்ளனவா? சிவசரிதம் மட்டும்தான் நாவுக்கரசர் வெளிப் படுத்திய தொன்மக் கூறுகளா? எனும் பல விடயங்களை ஆராய இக்கட்டுரை எத் தனம் செய்கின்றது. இதுவே இவ்வாய் வின் பிரதான இலக்குமாகும்.

முறையியல் வழி அமையும் தரவு களே துல்லியத் தன்மையுடைய முடிவு களைத் தரவல்லவை எனும் வகையில் இவ்வாய்வானது விளக்கமுறை ஆய்வு மற்றும் வரலாற்றியல் ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் நிகழ்த் தப்படுகின்றது. ஆய்வு சார்ந்த விடயங்கள் ஆய்வின் தேவை கருதி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். பன்னிரு திருமுறைத் தொகுப்பினுள் நான்கு தொடக்கம் ஆறாம் திருமுறைகளில் நாவுக்கரசர் தேவாரங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பினும் இவ்வாய்வில் நான்காம் திருமுறை மற்றும் அதற்கான உரை விளக்கங்கள் என்பன முதனிலை மூலங்களாக அமையப்பெற்றுள்ளன. இத்திருமுறையில் இந்து சமுதாயப் பண்பாடு குறித்த சிந்தனைகள் உள்ள டக்கங்களாகக் காணப்படினும் தொன்மங் கள் பற்றிய சிந்தனைகளே ஆய்வுப் பரப் பாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

**ஆய்வினை நியாயித்தல்**

இவ்வாய்வு திருநாவுக்கரசு நாய னாரை மையப்படுத்தியது. இவரைச் சைவ சமயப் பின்னணியில் நாயன்மார்களில் ஒருவராக வைத்தெண்ணும் மரபே இருந்து வருகிறது. இவ்வெல்லைக்கப்பால் பக்தி இயக்கப் பின்னணியில் இவரை பயில் நிலை உளவியலாளராக, கதை சொல்லி மக்களை மடைமாற்றம் செய்யவல்ல உள வள ஆலோசகராகவும் அணுக இயலும். இத்தகையதான அணுகு முறைகள் நாவுக்கரசர் குறித்த ஆய்வு முயற்சிகளில் புத்தாக்க சிந்தனைகளாக அமையும். இதனடிப்படையில் இவ்வாய்வு இங்கு அவசியமாகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொன்மம்

செய்திகளை எடுத்துச் சொல்வதில் - செல்வதில் தொன்மங்கள் (Myths) பிரதானமான இடத்தைப் பெறுகின்றன. "தொன்மைத்தானே உரையோடு புணர்ந்த பழமை மேற்றே" என்றமைந்த தொல்காப்பிய சூத்திரத்தின் மூலம் தொன்மத்தின் தொன்மை புலப்படும். தொன்மை என்று தொல்காப்பியர் குறித்துக்காட்டும் சொல்லையே தொன்மம் என பிற்கால சிந்தனையாளர்கள் சுட்டுகின்றனர் எனலாம். எனவே, பிற்கால சிந்தனையாளர்களால் தொன்மம் எனும் இச்சொல் பல்வேறுபட்ட பொருள் நிலையில் எடுத்தாளப்பட்டிருப பினும் தொல்காப்பியர் காலத்தில் புராணம் (Myths) என்ற பொருளில் வழங்கியதென லாம்.

மித் (myth) என்ற சொல்; செய்தி, மொழி, உபதேசம், வரலாறு, நிகழ்ச்சி எனும் பன்மைப் பொருள்களில் வழங்கப்பட்டு வருகின்றது. அரிஷ்டோட்டில் தமது கவிதையில் மிதாசு (Mythos) என்ற சொல்லை கதைக்கரு எனும் பொருளிலும் அதற்கு எதிர்ப்பதமாக லோகாசு (Logos) என்பதனையும் பயன்படுத்துகிறார். இன்றைய காலத்தில் தொன்மம் எனும் சொல் மனிதவியல், உளவியல், சமூகவியல், இலக்கியம், நாட்டுப்புறவியல், நுண்கலைகள் முதலான துறைகளில் பல்வேறு பொருள்களிலும் பல்வேறு வகையினதாகவும் ஆய்வாளர்களினால் எடுத்தாளப்படுகின்றது. எஸ்.எச்.ஹீக் என்பார் தொன்மங்களைச் சடங்குத் தொன்மங்கள் (Ritual Myths), மூலத்தொன்மங்கள் (Origin Myths), மரபுத்தொன்மங்கள் (Cult Myths), பெருமிதத் தொன்மங்கள் (Prestige Myths), அழிவுத்தொன்மங்கள் (Eschatological Myths) என, ஐவகையினவாகப் பிரித்து நோக்குகின்றார். பொதுவாக சடங்கிற்கும் தொன்மத்திற்கும் உள்ள இடைவினை பற்றி அறிஞர்கள் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

தொன்மத்தில் நம்பிக்கையிழந்த எந்த நாகரிகமும் அதன் இயற்கையான வளமுடைய படைப்பாற்றலை இழந்துவிடும் என்று, நீட்சே (Nietzsche) குறிப்பிடுகின்றார். தொன்மச் சூழலே ஒரு நாகரிகத்தை , குறித்த சமூகத்தில் நிலைநிறுத்த வல்லது. தொன்மங்களை அழிக்க முயல்வதனால் மனிதன் தனது மரபின் அடிவேர்களைத் தேடி அலையும் அவல நிலையிலுள்ளான் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நார்த்ராப்ஃபிரை என்பவர், சடங்கும் மனிதனின் கனவும் ஒன்றாகச் சேர்ந்த கூட்டின் வார்த்தை வெளிப்பாடே தொன்மம் என்கிறார். இவர், தொன்மம் குறித்து பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளார். தொன்மம் கடவுளர்களையோ கடவுளையொத்த மனிதர்களையோ பாத்திரங்களாகக் கொண்ட கதை என்றும், அது வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்டதென் றும் இயற்கையிகந்த நிகழ்ச்சிகளைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும் என்றும் கூறுகின்றார். அதேவேளை, "தொன்மமானது பழங்குடி மக்களின் அனுபவமாக கடவுளர்களின் செயல்களைக் கூறுவது, அது உண்மையானது, ஏனென்றால் யதார்த்தத்தைப் பற்றியது. புனிதமானது. ஏனென்றால், ஆதி மனித ஆற்றலைப் பற்றிப்பேசுவது" என, அமைந்த Mircea Eliade என்பாரது கருத்தும் சிந்தனைக்குரியது. எனவே, தொன்மங்கள் அதிக சிரத்தையோடு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியவையே. மேலும், ஜே.ஜி.பிரேசர் (J.G. Frazer), சூசான் லாங்கெர் (Susanne K. Langer), பார்பீல்ட் (Barfield), ஜோசப் கேம்பெல் (Joseph Cambell), ரிச்சர்ட்ஸ் சேஸ் (Richard Chase) போன்ற அறிஞர்களும் தொன்மம் குறித்து கருத்துரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளனர்.

இவ்வாறு தொன்மங்களின் தோற்றம், அவற்றின் இன்றியமையாத் தன்மை, தொன்மத்திற்கும் சமயத்திற்கும் - சமய இலக்கியங்களுக்குமான இடைவினைகள் என்பன குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இந்நிலையில் தொன்மங்கள் குறித்த மேற்கூறப்பட்ட அறிஞர்களின் கருத்துக்களில் இருந்து சில அவதானிப்புக்களைப் பெறமுடியும். அதாவது, சமயத்தின் உள்ளடக்கம் கடவுளின் பரத்துவத்தை உணர்தல் என்ற நிலையில், அது குறித்த செய்தியினை எடுத்துச் சொல்வதில் மொழிப்போதாமை காரணமாக தொன்மங்களின் இன்றியமையாமை உணரப்படுகின்றது எனலாம். அத்துடன், மக்களின் அனுபவமாக கடவுளர்களின் செயல்களைக் கூறுதல், அடியவர்களின் யதார்த்த வாழ்வியலைப் பேசுதல், தொல்பழங்கதைகள் மற்றும் மரபுகளை எடுத்துரைத்தல், வாழ்வியல் கூறுகளை விளக்குதல், இறைவன்பால் மனிதர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துதல், இயற்கையிகந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசுதல் எனும் பண்பியல்புகளுடன் தொன்மங்கள் குறித்து அணுகுவது சிறப்பானதாக அமையும். இப்பின்னணியிலேயே நாவுக்கரசரும் தொன்மங்களை அதிகம் பயன்படுத்தியிருப்பதாகக் கருதலாம்.

தொன்மங்கள் தொன்மைக் காலத்தில் பல்வேறு நாடுகளிலும் சிறப்புற்று விளங்கின. தென் இந்தியாவில் பல்லவர் காலத்தில் பக்தி இயக்கத்தை முன்னெடுத்த நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் அதிகளவாக தொன்மங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இறைவனின் பரதத்துவச் செயல்களை வெளிப்படுத்தும் புராண இதிகாசக் கதைகள், திருக்கோயில்களின் தோற்றம் குறித்த தொல்பழங்கதைகள், நாட்டுப்புறக்கதைகள், சமயப்பெரியவர்களின் சரிதங்கள் முதலானவை பயன்படுத்தப்பட்டு கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளன. சைவமதத்தை மீட்டெடுத்தல், இறையிருப்பைத் தெளிவுபடுத்தி விளக்குதல், சமயத்தின்பால் மக்களுக்கான ஈடுபாட்டினை அதிகரித்தல், பழமைபேணுதல், பழைய வரலாறுகளை கூறுவதனூடாக சமூக வளம்படுத்தல் - ஆற்றுப்படுத்தல் மற்றும் சமயப் பெரியவர்களின் வரலாறுகளை எடுத்துரைத்தல் முதலான காரணங்கள், பக்தியியக்கச் செயற்பாட்டாளர்களால் மேற்படி தொன்மங்களைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியதெனலாம். இத்தகைய சிந்தனைகள் குறித்து, திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் நமது அணுகுமுறை எவ்வாறு இருக்கவேண்டுமென்பது பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

நாவுக்கரசர் பல்வேறு தொன்மங்களைத் தனது தேவாரப்பாடல்களில் புகுத்தியிருப்பினும் இறை பரத்துவம் குறித்த வைதிகக் கதைகளையே அதிகம் இழையோடவிட்டிப்பதனை அவதானிக்கலாம். பௌராணிக நூல்களிலும் இதிகாசங்களிலும் வெளிப்படுவது குறிப்பிட்ட தனிநபர்களின் வரலாறுகளாயினும் அவை காலத்தின் தேவை கருதி மீள்நினைப்புச் செய்யப்படுவது இருந்துகொண்டேதான் இருக்கிறது. மக்களின் கூட்டுச்சிருஷ்டித் தன்மையினாலேயே இந்த மீள் நினைப்பும் மீள வலியுறுத்தலும் நிகழ்கிறது. இது தவிர்க்க வியலாதது. இன்றைய காலத்தில் ஆலயங்களை அடிப்படையாகக்கொண்டு நிகழ்கின்ற அல்லது சமயம் சார் பின்னணியில் ஆலயம் கடந்து பொதுவெளியில் இடம் பெறுகின்ற கதாகாலட்சேபம், வில்லிசை, கூத்து, நாடகம், நிருத்தியம், விவாத அரங்குகள், புராணபடனம் மற்றும் கதாப் பிரசங்கம் முதலான நிகழ்வுகளில் தொன்மங்கள் அதிகம் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருநாவுக்கரசர்**

பக்தி எனும் சாதனத்தை அடிப் படையாகக்கொண்டு செயற்பட்ட பல்லவர் காலத்துச் சமூக இயக்கச் செயற்பாட்டாளர் களில் ஒருவரான நாவுக்கரசர் சைவசமூகக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கு எத் தனம் செய்தவர். சமய குரவர் நால்வருள் ஒருவரான இவர் ஞானத்தவமுனிவர், தாண்டக வேந்தர், தமிழ்மொழித் தலைவர் என சேக்கிழாரால் போற்றப்பட்டவர். தன் பிறப்பச் சமயமாகிய சைவத்தினின்றும் நீங்கி பிறசமயம் புக்குநின்று, மீண்டும் தன் சமயம் மீண்டு அதன் வளர்ச்சிக்காக தொண்டாற்றிய உழவாரப் படையாளி. உழவாரம் கொண்டு சமூகத் தூய்மை பேணிய சூழலியலாளர். சமூகச் செயற்பாட் டாளர்.

இவர் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரில் மனையறமாகிய விருந் தோம்பல் என்னும் வேள்வியிற் சிறந்த புகழனார் மாதினியார்க்கு மகனாக மரு ணீக்கியார் எனும் இயற்பெயருடன் பிறந் தார். சைவ உலகில் இவரது வாழ்வியற் கோலமும், அருளியலில் அனுபவ வெளிப் பாடுகளாயமைந்த இவரது தேவாரப் பாடல் களும் தனிச்சிறப்பும், முதன்மையும் பெற்று விளங்குவதற்கு "திலகவதியார்" என்னும் பெண் ஆளுமையே அடியூற்றாய் அமைந்தது. சைவ இலக்கிய வகைமைக் குள் தனித்தவியல்புகளைக் கொண்டிருக் கும் சைவத்திருமுறைகளில், இவரது பாடல்கள் நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறையாக உள்ளடக்கப்பட்டுள்ளன. திருஞானசம்பந்தரின் சமகாலத்தவரான இவர், "திருநின்ற செம்மையே செம்மை யாய்க் கொண்ட திருநாவுக்கரையன்" என சுந்தரமூர்த்தி நாயனாரால் போற்றப்பட் டுள்ளார்.

தமிழ்ச் சமுதாய மரபில் வரலாற் றுக்கு முந்திய காலம் தொடக்கம் உருவாகி வந்த இயங்கியல் மரபின் தன்மையை மாற்றத்திற்கு உள்ளாக்கியவர்கள் நாயன் மார்கள். இவர்களின் செயற்பாடுகள் அனு பவம் என்றொரு வடிவத்தினூடாக "கட வுள்" என்பதன் இருப்பை நிலை நிறுத்தி யது. அனுபவமே இக்கால பக்தியியக் கத்தை தூக்கிநிறுத்தியது. கடவுள் - அனு பவத்திற்குள் மனிதர்கள் செல்வதனை தோத்திரப் பாடல்கள் புலப்படுத்தி நிற்கின் றன. இவ்வாறு தமிழ்ச் சமுதாயம் வைதிக மரபினை நோக்கி மடைமாற்றம் செய் யப்பட்டனர் என்பதனை தோத்திர நூல்வழி புரிந்து கொள்ளவியலும். எனவே, வைதிக மரபொன்றினை கட்டமைத்த பெருமை பக்தி இயக்கத்தை முன்னெடுத்தவர்களைச் சாரும். பொதுவாக திருமூலர் முதற் கொண்டு இன்று வாழும் சமயப் பெரியவர் கள் வரை தமது பக்தி அனுபவத்தைத் திருக்கோயில்களை முன்னிறுத்தியே வெளிப்படுத்தியுள்ளனர்.

திருநாவுக்கரசு நாயனாரின் பாடல் கள் முழுமையும் திருக்கோயில்களை முன் னிறுத்தி, அங்குள்ள இறைவன் பெருமை களைப் பேசுவதாக அமைந்துள்ளது. இவ ரது அனுபவ வெளிப்பாடுகள் கழிவிரக் கத்தை வெளிப்படுத்துவதாகவும் அமை கின்றன. இந்நிலையில் தன்னை '.... பித்த னேன் பேதையேன் பேயேன் நாயேன் பிழைத்தனகள் எத்தனையும் பொறுத் தாயன்றே...' எனப் பல்வகைமையில் சிறுமை செய்திருப்பதனைக் காண வியலும்.

மேலும், அவர் தனது பக்தி அனு பவத்தினை பௌராணிக இலக்கிய மரபின் பின்னணியிலேயே கட்டமைத்தார். ஒவ் வொரு பாடல்களிலும் புராண இதிகாச நிகழ்வுகளை, செய்திகளைத் தந்ததன் மூலம் சைவ சமுதாய கட்டமைப்பைப் பேணுவதில் வைதிக மரபின் அவசியத் தினை உணர்ந்தவராகத் திகழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சமுதாய வரம்பிற்குள் இறையிருப்பு மாத்திரமன்றி விழுமியம் சார் சிந்தனை களையும் வைதீக மரபுக் கட்டமைப்புத் தளத்தினூடாகவே எடுத்துக் கூறவிழைந் தார். பெரும்பாலும் தான் முன்னிறுத்திய திருத்தலங்களைப் புராண இதிகாச கருத் தியல்களுக்கூடாக முதன்மைப்படுத்தியுள் ளார்.

திருநாவுக்கரசு நாயனார் தான் வாழ்ந்த சமூக சூழலை நன்கறிந்து செயற் பட்டவர். இவரது செயற்பாட்டு நடுவண் களாக திருக்கோயில்களே அமைந்திருந் தன. இதன்வழி நிலைபெறுமாறு எண்ணி னால் திருக்கோயில் வரவேண்டும் என்று மனித உயிர்களுக்கு அறவுரைப்போதனை செய்தவரும் இவரே. இதனை அறவுரைப் போதனையாக மட்டுமன்றி உளவள ஆலோசனை என்றும் கருதவேண்டும். ஏனெனில் உளவியலில் ஆலோசனை வழங்குதல் இன்றியமையாப் பகுதியாக - செயற்பாடாக உள்ளது. மனித நடத்தையை ஆராய்வதே உளவியலாகும். புறச்செயல் கள் மட்டுமன்றி எண்ணுதல், உணர்தல், கற்றல், கற்பனை செய்தல் எனும் அகச் செயல்களையும் "நடத்தை" என்பது குறித்து நிற்கிறது. எனவே மனித நடத்தையை ஒழுங்குப்படுத்த விழைந்ததன் பின்னணி யிலேயே அவரது மேற்குறித்த பாடலை இனங்காண வேண்டும்.

**நாவுக்கரசர் தேவாரங்களில் தொன்மம்**

தொன்மங்கள், இலக்கியங்களில் கையாளப்பட்டு வருவதனை சங்க இலக் கிய காலத்திலிருந்து உணரலாம். இதன் தொடருறு நிலையாக எழுந்து பிற்கால இலக்கியங்களிலும் தொன்மங்கள் பிர தான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இந் திய மொழியிலுள்ள இலக்கியங்களில் பெரும்பாலானவை இராமாயணம், மகா பாரதம் எனும் இதிகாசங்களின் தாக்கத் திற்கு உட்பட்டவை. அதுபோன்றே பௌரா ணிக மரபின் செல்வாக்கினையும் பிற்கால இலக்கியங்களில் காணவியலும். நாயன் மார்கள், ஆழ்வார்களின் பக்திப்பாடல் களில் தொன்மங்கள் பதிவுசெய்யப்பட்டுள் ளன. நாயன்மார்களின் பாடல்களில் சிவனின் திருவிளையாடல்கள் குறித்த கதைகளையும் ஆழ்வார் பாசுரங்களில் திருமாலின் அவதாரங்கள் குறித்த கதை களையும் பதிவுகளா கக் காணலாம்.

திருநாவுக்கரசர் கடவுளின் பரத்து வம் குறித்த கதைகளை வைதிக மரபுப் பின்னணியில் திருக்கோயில்களை மையப்படுத்தி எடுத்துரைத்தார். இறை வனின் பரதத்துவச் செயல்களை வெளிப் படுத்தும் புராண இதிகாசக் கதைகள், திருக்கோயில்களின் தோற்றம் குறித்த தொல்பழங்கதைகள், நாட்டுப்புறக் கதைகள், சமயப் பெரியவர்களின் சரிதங் கள் மற்றும் களிவிரக்கத்துடன் கூடிய தன் வரலாற்றுக் கதைகள் என்பவற்றை தனது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இத்தொன்மங்களை தலங்கள் தோறும் சென்று எடுத்துரைப்பதனூடாக தலப் பெருமைகளை எடுத்துக் கூறவும், மக் களை மடைமாற்றம் செய்யவும் அவரால் முடிந்தது. ஒருவகையில் கூறுவதாயின், பிற்கால பிரசங்க மரபு உள்ளிட்ட சமய பிர சார முறைமைகளுக்கும் உளவள ஆற் றுப்படுத்தலுக்கும்" கதை கூறும் யுக்தியை கையாள்வதற்கு நாவுக்கரசரின் மேற் குறித்த தொன்மக் கையாளுகை அடிப்படை யாக அமைந்து விளங்கியதெனக் கரு தலாம். இந்நிலையில், திருநாவுக்கரசரின் தேவாரங்களில் புலப்படுகின்ற தொன்மங் களை,

1. இறைபரத்துவத்தை வெளிப்படுத்தும் தொன்மங்கள்.
2. நாயன்மார்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் தொன்மங்கள்.
3. திருக்கோயில் உருவாக்கம் குறித்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல் பழங்கதைகள்

4. தன்வரலாறு குறித்த தொன்மங்கள்.

எனப்பகுத்து நோக்கலாம். நாவுக்கரசரின் பாடல்களில் இறை பரத்துவம் வெளிப்படுத் தும் தொன்மவியற் கூறுகள் பலவுள்ளன. அவரிடம் ஒரு வளமான தொன்மக் கருவூ லம் வசப்பட்டிருந்தமையினை உணர லாம். சிவசரிதம் கூறும் தொன்மங்களை நோக்கும் போது நாவுக்கரசரின் மூன்று திருமுறைகளும் குறிப்பிடத்தக்க வகையில் அவற்றை அதிகம் பதிவுசெய்துள்ளன. சிவனின் முதன்மை, சிவபரத்துவம், இருப்பு நிலை முதலானவற்றை நிறுவு வதனை நோக்கமாகக் கொண்டே தொன் மக் கையாளுகை இடம்பெற்றுள்ளது.

**இறைபரத்துவத்தை வெளிப்படுத்தும் தொன்மங்கள்**

சிவனின் வீரத்தன்மையை, வல் லமையினைச் சுட்டியுணர்த்துகின்ற அட்ட வீரச் செயல்கள் மற்றும் திருவிளையாடல் களைக் குறித்து நிற்பன இவ்வகைமை யைச் சார்ந்தன. மெய்யியற் கொள்கை களை விளக்க முற்படும் போது அவற்றுக்கு கதை வடிவம் கொடுப்பது வழக்கமாகும். கனமான செய்திகளை எளிமைப்படுத்தும் முயற்சியே இதுவெனலாம். காலப்போக் கில் இத்தகைய தொல்பழங்கதைகள் தமது உள்ளீடுகளை இழந்து வெறுமையாய் ஆகிவிடுகிறபோது அவற்றை காலத்திற் கேற்ப மீண்டும் எடுத்து விளக்கவும் பொருள் விளக்கம் செய்யவும் நேர்கிறது. அரசியல், பொருளாதார பங்களிப்புடன் முன்னேற்றம் கண்ட புறச்சமயங்களின் மேலெழுச்சிச் சூழலில் நாவுக்கரசர் சிவ பரத்துவம் குறித்த செய்திகளை, தொன்மக் கதைகளை தன் விருப்பப்படி மீளவும் நிலைநிறுத்தியுள்ளார்.

அட்ட வீரட்டம் என அறியப்படும் இச் செயல்கள் குறித்த கதைகளின் மூலங்கள் பௌராணிக இலக்கியங்களில் காணப் படுகின்றனவாயினும் அவை குறித்த பதிவு களை நாவுக்கரசர் பாடல்களில் அதி களவில் காணலாம். தமிழ் நாட்டுக் கோயில்களின் வரலாற்றில் அட்ட வீரச் செயல்கள் குறித்த தொன்மங்கள் இன்றி யமையாத இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் அட்டவீரட் டம் குறித்த செய்திகள் ஏலவே மக்களால் அறியப்பட்டிருந்தன. ஆகையால் அவரது நோக்கம் கதை சொல்வதல்ல. அக்கதை களை மீளவும் நினைவுபடுத்துதல் அல்லது இக்கதைகளின் வழி தனது செயற்பாடு களை முன்னெடுத்தல் என்பதேயாகும். எனவே, தான் பதிவு செய்ய விழைந்த தொன்மக் கதைகளை மிகவும் சுருக்கமாக கூறியுள்ளார்.

சிவன் நிகழ்த்திய அட்டவீரட்டச் செயல்களாக திரிபுரங்களை எரித்தல், அந்தகாசுரனை அழித்தல், தக்கனின் செருக்கழித்தல், பிரமன் சிரம்கிள்ளல், சலந் தரனை அழித்தல், கயாசுரன் தோலுரித் தல், காமனை எரித்தல், காலனைக் காய் தல் என்பன கூறப்படுகின்றன.

விண்ணில் அமைந்த மூன்று கோட் டைகளை சிவன் தகனம் செய்த கதை மிகவும் புராதனமானது. கதைக்கு பல் வேறு வடிவங்களிருப்பதாயினும் மையக் கருத்து இதுதான். வலிமை மிக்கவர் களான தாரகாட்சன், கமலாட்சன், வித்தி யுன்மாலி ஆகிய மூவசுரர்களும் பொன், வெள்ளி, இரும்பாலான கோட்டைகளை அமைத்து யாராலும் வெல்லமுடியாத வகையில் ஆற்றல் பொருந்தியவர்களாக விளங்கினர். அவ்வசுர ஆட்சியில் துன் பமே பயனாகியது. இதனால் மக்கள், தேவர், நாகர் முதலியோரின் வேண்டு தலின்படி சிவன், மேருமலையை வில் லாகவும் வாசுகிப் பாம்பை நாணாகவும் நாராயணனை அம்பாகவும் நான்முகனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதியாகவும் கொண்டு முக்கோட்டை களைத் தகனம் செய்தார். இத்தொன்மக் கதையினை நாவுக்கரசர் அதிக இடங் களில் பதிவு செய்துள்ளார். "எண்ணார் புர மெரித்த எந்தை பெருமானே, "புரமெரிய சுனைமல்கு கயிலாயம் எடுத்தானை", மதின் மூன்றும் எரித்தானை", "விண்ணி டையே புரமெரித்த வேதியனே", கவர்ந் திட்ட புரங்கள் மூன்றுங் கனலெரியாகச் சீறிச்சிவந்திட்ட கண்ணர்,"திரிபுர மூன்றும் எய்தார்", "உணர்விலார் புரங்கள் மூன்றும் எரித்திடு சிலையர்", "நகரமூன்றும் எரியுணவெருவ", "மதில்கள் மூன்றுஞ் தீயெழச் செற்ற செல்வர்", "பொய்த்தார் புரமூன்றெரித்தானைப் பொதியின் மேய புராணனை", "மூன்று கொலாம் புரம் மெய் தன தாமே", பெரியன புரங்கள் மூன்றும் பேரழல் உண்ண வைத்தார்", "ஏவடு சிலையினாலே புரமவையெரி செய்தானே, பகைத்திட்டார் புரங்கள் மூன்றும் பாறி நீராகி வீழப், செற்றவர் புரங்கள் மூன்றும் தீயெழச் செறுவர் போலும், செற்றவர் புரங் கள் மூன்றும் செவ்வழல் செலுத்தினானே", "புரங்கள் மூன்றும் ஓரழலம்பினாலே உகைத்துத் தீயெரிய மூட்டி", "புரங்கள் மூன்றுங் கனலெரியாகச் சீறி நின்றதோர் உருவம்", "மருவலார் புரங்கள் மூன்றும் மாட்டிய வகையராகி", "வின்மையாற் புரங் கள் மூன்றும் வெந்தழல் விரித்தார் போலும், தெரித்த கணையாற் திரிபுர மூன் றுஞ் செந்தீயின் மூழ்க எரித்த இறைவன்" 2 என்றவாறு சிவன் திரிபுர தகனம் செய்த வரலாற்றை நாவுக்கரசர் பல்வேறிடங்களி லும் அழுத்திப் பேசியிருக்கிறார்.

இதுபோன்று மார்க்கண்டேயருக் காகச் சிவன் யமனை சங்கரித்தமை பற் றிய தொன்மங்களை பின்வருமாறு வெளிப்படுத்தியிருக்கின்றார். அதாவது, காலம் முடிந்துபோன மார்க்கண்டே யனைக் கொண்டு செல்வதற்காக அங்கே யமன் பாசக்கயிறு வீசவந்தான். இவ் வேளை மார்க்கண்டேயன் இறைவனின் இலிங்கத் திருவுருவை கட்டிக்கொள்ள அதி லிருந்து வெளிப்பட்ட இறைவன் கால னைக் காலால் உதைத்துக் காய்ந்து மார்க் கண்டேயனை இளவயதினனாகவே வாழ வைத்தார். இத்தகைய தொன்மக் கதை யினை, காலன் வீழ உதை செய்த நம்பர்", கூற்றினைக் குமைப்பர், "சீர்மறையோன் உய்தற் பொருட்டு வெங்கூற்றை யுதைத் தன உம்பர்க்கெல்லாம் "3", "காலனைக் கால வைத்தார்", "காலனைக் காய்வர் போலும்"3", "கூற்றுக்குங் கூற்ற தானாய்", "காலனைக் காலாற் செற்றருள்புரி கரு ணையானே", பாலனையோட வோடப் பயமெய்து வித்த உயிர்வவ்வு பாசம் விடு மக் காலனை வீடு செய்த கழல் போலும், காலனைக் காலாற் செற்றார், மார்க்கண் டரக்காக அன்று காலனை உதைப்பர் போலும், காலனை வீழச் செற்ற கழலடி யிரண்டும்", "காலனைக் கடிந்த வெம் மான்", "காலனைக் கண்குருதிப் புனலா றொழுக உதைத்தெழு சேவடியான்4", மார்க்கண்டேயன் வீடு நாளணுகிற் றென்று மெய்கொள்வான் வந்த காலன் பாடுதான் செலுமஞ்சிப் பாதமே சரண மென்னச் சாடினார் காலன் மாளச்" - என்ற வாறு குறித்துள்ளார். சிவவழிபாட்டினால் மரணமிலாப் பெருவாழ்வு அடையலாம் எனும் நம்பிக்கையினை இத்தொன்மக் கதை மூலம் விளக்க முற்பட் டுள்ளார்.

மேலும், யோகத்தில் ஆழ்ந்திருந்த சிவனின் மோனம் குலைக்கக் காமன் செய்யும் முயற்சியைக் கண்டு சினந்த சிவன், காமனைத் தன் நுதல்விழி நெருப் பால் எரித்தார் என்னும் செய்தியினை, "காமனை யன்று கண்ணாற் கனலெரியாக நோக்கி", "காமனைக் காய்ந்த கண் ணார்"4, "விழித்தனர் காமனை வீழ்தர விண்ணின் றழித்தனர்"45, "காமனைக் காய்வர்", "கையராய்க் கபால மேந்திக் காம னைக்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்ணாற் காய்ந்து", "கண்ணி னாற் காமவேளைக் கனலென விழிப்பர் போலும்" என்னும் குறிப்புகளால் வெளிப் படுத்தியிருக்கக் காணலாம்.

மேருமலையில் நான்முகனை குறித்து தவம் செய்து அழியாத ஆயுளை யும் வலிமையையும் வேண்டிப்பெற்ற வனும் யானைவடிவம் பொருந்தியவனு மான கயாசுரனை உக்கிரவடிவம் கொண்டு, திருவடிகளால் மிதித்து திருக் கரங்களால் அவனுடைய தோலை உரித் துப்போர்த்தார். இவ்வரலாற்றுச் செய்தி யினை, "புரிசடை முடியின் மேலோர் பொரு புணற் கங்கை வைத்து கரியுரி போர் வையாக கருதிய காலகாலா", "வேழத்தின் உரிவை போர்த்தும் ஆனையின் உரிவை வைத்தார்", "யானையுரியை மூடினானை 5. அத்தியின் உரிவை வைத்தாரையனை 5, "உரித்திட்டாராணையின் தோல்", "களி யானையின் தோல் மலைமகள் வெருவப் போர்த்த அழகனே", ஆனை உரித்தானை", "வேயுடனாடு தோளியவர் விம்மவெய்ய மழுவீசி வேழவுரி போர்த்ததே யிவராடு மாறு", "மதயானை யுரி போர்த்துப் , விரித்த பல்கதிர் கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை தரித்ததோர் கோல கால பயிர வனாகி வேழம் உரித்து" என்று குறித்துக் காட்டுகின்றார். மேலும், "அறுத்த தோர் கையுடையான் படைத்தான் தலையை", "தாமரையோன் சிரமரிந்து கையிற் கொண் டார் தலைதனிற் பலி கொண்டார்" என வரும் பாடல்களில் பிர மன் தலை கொய்த நிகழ்வுகளையும், தந்திரமறியாத் தக்கன் வேள்வியை தகர்த்து ஞான்று, "சாடவெடுத் தது தக்கன் தன் வேள்வி" என தக்கனின் செருக்கறுத் தமை பற்றிய செய்திகளையும் கூறியுள்ளார். இவ்வாறு சிவனின் எட்டு வீரச்செயல்களையும் பதிவு செய்திருப்பதன் மூலம் சிவப்பெருமை, தலப் பெருமை என் பன கூறப்பெற்றுள்ளமை அவதானிக் கத்தக்கது.

சிவனின் வீரச் செயல்கள் எட்டினை மட்டுமன்றி அவரது ஏனைய மறச்செயல் களையும் பல்வேறிடங்களில் மீள மீள அழுத்திக்கூறியுள்ளமையையும் தெளிவா கக் கண்டுணரலாம். திருமால் சக்கரம் பெற்றமை, அர்ச்சுனருக்கு பாசுபதம் வழங் கியமை, சந்திரனை தலையில் தரித்தமை, திருமாலும் நான்முகனும் அடிமுடி தேடியமை, திருமால் இரணியக் கசிபினை அழித்தமை, மாவலி சக்கரவர்த்தியா னமை (எலி - விளக்கெரித்தல்), முயல கனை அடக்கியது, கங்கையைச் சடையில் தரித்தமை, இராவணன் கயிலையை பெயர்த்தமை, பெண்ணொருபரானமை, கடல் நஞ்சுண்டமை, பிச்சையேற்றுண் டமை, ஆலின் கீழ் அறமுரைத்தமை, திருக்காட்டில் நடனமாடியமை, நந்திக் கருளியமை, வீணைவாசித்தமை, தருமிக் குப் பொற்கிழி ஈய்ந்தமை, உபமன்யு முனிவர்க்கு பாற்கடல் ஈய்ந்தமை பற்றிய தொன்மக் கதைகளையும் பதிவு செய்துள் ளார். இத்தகைய தொன்மங்களை ஓரிரு இடங்களிலென்றல்லாது திரும்பத் திரும்ப பல்வேறு இடங்களிலும் அழுத்திக் கூறி யுள்ளமையைக் காணலாம். சிதம்பரத்தில் ஆனந்த தாண்டவம் செய்யும் பெருமானை நாவுக்கரசர் உயிர்ப்புத்ததும்ப வெளிப் படுத்திய விதம் சிறப்பிற்குரியது.

இவரது பதிகங்களில் வரும் பத்தா வது பாடலில் தன்பிழைக்கு வருந்திய இரா வணனுக்கு சிவன் அருட்பாலித்தமை பற் றிய செய்தியினை மிக நுட்பமாக பொருட்செறிவோடு பதிவுசெய்யப்பட் டுள்ளது. பெண் கவர்ந்தான் எனும் இயல் பினால் இராவணனது பக்தியின் உயரிய திறன் மழுங்கடிக்கப்படினும், அவன் சிறந்த சிவபக்தன் , சிவவழிபாட்டில் உயர்ந்தவன், சிவனருள் பெற்றவன் என்பதனை சமு தாயத்தவர்க்கு எடுத்துரைப்புச் செய்த நாவுக்கரசரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிப்படுத்தல் திறன் அவ ரைப் பயில் நிலை உளவியலாளராக முன் னிறுத்துகின்றது. குறிப்பாக,

"எடுத்தனன் எழிற்கயிலை இலங்கையர்
மன்னன் தன்னை
எடுத்தொரு விரலால் ஊன்ற அலறிப்போய்
அவனும் வீழ்ந்து
விடுத்தனன் கைநரம்பால் வேதகீதங்கள்
பாடக்
கொடுத்தனர் கொற்ற வானாள் குறுக்கை
வீரட்டனாரே"

"விரிகடலிலங்கைக் கோனை விரிகயிலா
யத்தின் கீழ்
இருபது தோழும் பத்துச் சிரங்களும் நெரி
வூன்றிப்
புரவிய பாடல் கேட்டுப் படைகொடுத்தருளிச்
செய்தார்
குரகொடு கொங்கு சூழ்ந்தகோவல் வீரட்ட
னாரே"

என இராவணன் குறித்த தொன்மங்களை பல்வேறிடங்களிலும் கூறியுள்ளார். அதாவது, இராவணன் தன்வலிமையால் திருக் கயிலாய மலையைப் பெயர்த்து பார்வதி தேவிக்கு அச்சத்தை உண்டாக்கவே சிவன் தன் காற்பெருவிரலால் மலையை அழுத் தினார். மலையின் பாரத்தினால் இருபது புயங்களும் நொருங்கின். நாரதரின் ஆலோசனையின்படி யாழமைத்து இசை மீட்டி சிவனின் அன்புக்குப் பாத்திரமான இராணவணன், சிவபக்தனானான் என் னும் தொன்மத்தை, நாவுக்கரசர் தனது பாடல்கள் தோறும் பலவாறு வெளிப்படுத் தியுள்ளார். திருமறைக்காடு திருத்தலத்துப் பதிகத்திலுள்ள பாடல்கள் முழுமையிலும் இராவணனின் மேற்படி தொல்பழங்கதை பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

**நாயன்மார்களின் ஆற்றல்களை வெளிப் படுத்தும் தொன்மங்கள்.**

அட்ட வீரச் செயல்களுள்ளிட்ட இறை வனின் மறச்செயல்களை பல்வேறு இடங் களிலும் மீள மீள அழுத்திக் கூறிய நாவுக் கரசர், பெரிய புராணம் கூறுகின்ற நாயன் மார்களின் வரலாற்றுக் கதைகளையும் குறிப்பிட்டுப் பேசுகின்றார். திருஞான சம்பந் தர், அப்பூதியடிகள், சாக்கிய நாயனார், கண்ணப்ப நாயனார், கணம்புல்லர், சண் டேஸ்வரர், கோச்சொகட்சோழ நாயனார், நமிநந்தியடிகள் மற்றும் முதலியோரது வரலாற்றுத் தொன்மங்களை பதிவு செய் வதன் மூலம் சிறந்த உளவள் ஆலோசக ராக தன்னை முன்னிறுத்துகிறார். ஏனெ னில் இவ்வாறான வரலாற்றுத் தொன் மங்களை குறிப்பட்ட காலச் சூழலில் அழுத் தியுரைப்பதானது அவர்கன் வரலாற்றை மீட்டுருச் செய்வதற்கு மட்டுமன்றி மக்களை வழிப்பு நிலைக்குக் கொண்டுவரவும் உறுதுணை புரியும்.

பெரிய புராணத்தில் கூறப்பட்ட நாயன்மார்களின் சரித்திரங்கள் சைவத் தமிழ் சமுதாயத்தை விளங்கிக் கொள்வதற் கான உண்மைச் சரித்திரங்கள். அவர்கள் குன்றாத உணர்வோடு இறையருள் வழி நின்று பெருவாழ்வெய்தியவர்கள். செயற் கரிய செயல்களால் தமிழ்ச் சமுதாயத்தில் இவர்களைப் பற்றிய கதையாடல்கள் மற்றும் அவை சார்ந்த எடுத்துரைப்புகள் பரவலாக இடம்பெற்று வருகின்றன. இத னால் நாயன்மார்களே மூலப்படிவங்களாக ஆயின்மையை தோத்திரப் பாடல் வழிய றியலாம். சான்றாக,

காப்பதோர் வில்லும் அம்பும் கையதோர்
இறைச்சிப் பாரம்
தோற்பெருஞ் செருப்புந் தொட்டு தூயவாய்க்
கலசமாட்டி
தீப்பெறும் கண்கள் செய்யக் குருதிநீர்
ஒழுகத் தங்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை
வீரட்டனாரே'

என திருக்குறுக்கை வீரட்டத்திருப்பதிகத் திலும், திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகத்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் கண்ணப்ப நாயனாரின் வரலாற்றினை மிகச் சுருக்கமாக குறிப்பிடுகின்றார். இவ்வாறே , சாக்கிய நாயனார்", நமிநந்தியடிகள், அப்பூதியடிகள்", சண்டேசுரநாயனார், கணம்புல்லர், கோச்செங்கட் சோழன் முதலியோர் குறித்த தொன்மங்களையும் எடுத்துரைத்துள்ளார். இவ்வாறு அப்பரடிகள் தனக்கு முன் வாழ்ந்த அல்லது சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்களின் ஆற்றல்கள், இறைவன் மீதான இடைவிடாத அன்பின் உறுதிப்பாடு என்பவற்றை தொன்மங்களாக வெளிப்படுத்தியிருக்கக் காணலாம்.

**திருத்தலங்களின் உருவாக்கம் குறித்த தொன்மங்கள்**

கோயில்களின் உருவாக்கம் குறித்து பல்வேறு வகையிலான கதைகள் வழக்கத்திலிருந்து வருகின்றன. ஒவ்வொரு தலத்தினது உருவாக்கத்திலும் தொடர்புடைய நிகழ்வுகள் பற்றிய கதையாடல்கள் செவிவழிச் செய்தியாக இன்றும் பரிமாறப்பட்டு வருகின்றன. திருநாவுக்கரசர் இத்தகைய தொன்மங்களையும் பதிவுசெய்துள்ளார். திருவானைக்கா என்பது சிவத்தலங்களில் ஒன்று. சிவபெருமானை யானை ஒன்று வழிபட்டதனால் ஏற்பட்ட பெயரே இதுவாகும். திருவானைக்கா எனும் இடத்திலுள்ள இலிங்கத்தின் மீது சருகுகள் விழுந்து விடாமல் இருக்க சிலந்தி ஒன்று தன் உமிழ் நீரால் பந்தல் அமைத்து வழிபட்டது. அதனை தினந்தோறும் யானை ஒன்று அழித்து வந்தது. இச்செயலால் சினந்த சிலந்தி, யானையின் துதிக்கை வழியாகச் சென்று யானையையும் இறக்கச் செய்து தானும் இறந்தது. இறையருளால் சிலந்தி கோச்செங்கணான் என்ற பெயருடன் சோழர் குலத்தில் பிறந்தான். இவன் அரசாளுகையில் முன்னுணர்வு பெற்ற நிலையில் திருவானைக்காவில் மட்டுமன்றி வேறுபலவிடங்களிலும் கோயிலமைப்பித்தான். திருவானைக்காவில் தன் வாய் நூலினால் பந்தர் செய்ய முரணிலாச் சிலந்தி தன்னை முடியுடை மன்னராக்கிய செய்தியினை,

“சிலந்தியு மானைக்காவிற் றிருநிழற் பந்தர் செய்து
உலந்த வணிறந்த போதே கோச்செங் கணானுமாக
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே”

எனக் நாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.

திருவிராமேச்சுரம் மீதான பாடலில், “திருமால் செய்கோயில்“ என்று அக்கோயிலின் தொன்மையினைப் பாடல் முழுமையிலும் வெளிப்படுத்தியுள்ளார். மதியினான் மால் செய் கோயில், முற்றின நாள்களென்று முடிப்பதே காரணமாய் உற்றவன் போர்களாலே உணர்விலா அரக்கர் தம்மைச் செற்றமால் செய்த கோயில் திருவிராமேச்சுரம்“, “மால் வேட்கையால் செய்த கோயில்“, “மால் செய்த திருவிராமேச்சுரம்“, “மால்தான் தேக்கு நீர் செய்த கோயில்“, சிலையினான் செய்த கோயில், கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மையெல்லாம், வீடவே சக்கரத்தால் எறிந்து பின் அன்பு கொண்டு, தேடிமால் செய்த கோயில் திருவிராமேச்சுரம், செங்கண் மால் செய்த கோயில் , “மால் செய்த கோயில்“ என்றவாறு அத்தலம் குறித்த தொன்மங்களை எடுத்துக் கூறியிருப்பதுடன், அத்தலத்தினை நோக்கி மக்களை விரைந்துய்யுமாறு வழிப்படுத்தியுமுள்ளார்.

அட்டவீரட்டத்தலங்கள் உள்ளிட்ட சிவத்தலங்கள் எங்கும் யாத்திரைகளை மேற்கொண்ட நாவுக்கரசர், அவற்றின் சிறப்புகள், ஆலயங்களுடன் தொடர்புடைய தொல்பழங்கதைகள், மற்றும் மூர்த்தி தல தீர்த்த பெருமைகள் என்பனவற்றை

அமுத நாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்தியுள்ளார். இவ்வெடுத்துரைப் புகள் அவ்வத்தலங்கள் குறித்த தொன்மை, பெருமைகளை அறிய மூலங்களாக உள் ளன.

**தன்வரலாற்றைக் கூறும் தொன்மங்கள்**

நாவுக்கரசரின் வரலாறு என்பதாகச் சேக்கி ழாரால் பேசப்பட்டுள்ள விடயப்பரப்பு நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டது. முத லாவது அம்சம் அவர் சமண சமயம் சார்ந்து பின் மீட்சிபெற்ற வரலாறு. இரண் டாவது அம்சமாக அவரது ஊர்ப்பயணங் கள் தொடர்பான நிகழ்ச்சிகள் அமை கின்றன. அவர் மேற்கொண்ட உழவாரப் பணி மற்றும் அவர் புலப்படுத்திநின்ற பக்தி நிலை என்பவற்றை முறையே மூன்றா வது நான்காவது அம்சங்களாகக் கொள்ளலாம். நாவுக்கரசர் சைவம் விடுத்து சமண சமயம் சார்ந்து வாழ்ந்தவர். சமணத்தில் தருமசேனராக திகழ்ந்த இவர், சைவத்துக்கு மீண்டு நாவுக்கரசரான மைக்கு காரணமாக அமைந்தவர் திலக வதியாரே என சேக்கிழார் குறிப்பிடுகின் றார். திலகவதியாரின் வேண்டுதலை நிறைவு செய்யும் நோக்கில் சிவனே நாவுக் கரசருக்கு சூலை நோயைக் கொடுத்தார். இச்செய்தி தொடக்கம் திருக்கயிலைக் காட்சியைக் கண்டது ஈறாக நாவுக்கரசர் தன்வரலாற்றைப் பதிவுசெய்துள்ளார். அதா வது, சூலை நோயால் துன்புற்று ஆட்கொள் ளப்பெற்றமை, நாமார்க்கும் குடியல்லோம் என் மன்னனை எதிர்த்தமை, நீற்றறை யைக் குளிரவித்தமை, மதம் கொண்ட யானையைப் பணிவித்தமை, கல் தெப்ப மாக மிதந்தமை, பல்லவ மன்னனை வைனாக மாற்றி குணபர ஈச்சரத்தை அமைப்பித்தமை, சூல இடபக் குறிகள் பெற் றமை, திருவடி தீட்சை பெற்றுக் கொண் டமை, பாடிப்படிக்காசு பெற்றமை, அப்பூதி யடிகளை சந்தித்தமை, அவர் மகன் விடந் தீர்த்தமை, திருவாய்மூரிற் கண்ட காட்சி, பொதி சோறு பெற்றமை, சம்பந்தர் சந்திப்பு மற்றும் திருக்கயிலக்காட்சி என்றவாறாக தனது வாழ்வியலில் இடம்பெற்ற நிகழ்வு களை தன்பாடல்களில் வெளிப்படுத்தியுள் ளார். இக்குறிக்ப்புகளின் வழிநின்று நாவுக்கரசரின் வாழ்வியற் கோலங்களை அறியலாம். எனவே இவற்றை அவர் குறித்த தொன்மங்களாக இனங்காண இயலும். குறிப்பாக இவர் சமணம் சார்ந்து வாழ்ந்தமை பற்றிய நிகழ்வினை, "குண்ட ராய்ச் சமணரோடே கூடிநான் கொண்ட மாலை , "தட்டிடுஞ் சமணரோடே தருக்கி நான் தவமென்றெண்ணி", "பாசிப்பன் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு நேசத்தால் இருந்த நெஞ்சை நீக்குமாற்றிய மாட்டேன், பல்லுரைச் சமணரோடே பலபல காலமெல்லாம் சொல்லிய செலவு செய்தேன். "எண்ணிலாச் சமணரோடே இசைந்தனை ஏழை நெஞ்சே , ஓதுவித் தாய் அறவுரை காட்டி சமணரோடே" என் னும் பாடல்களில் சமணருடன் இசைவு பெற்ற நினைவுகளை அவர் மீட்டுருச் செய் கிறார். இத்தகைய மீட்டுருவாக்கச் சிந் தனையில் அவரது களிவிரக்கமும் உண ரப்படுகின்றது.

மேலும், சிவனைத் தொழாது சமணம் சார்ந்து இடருற்றமையினை தக்க பழமொழிகள் கொண்டு திருவாரூர் திருப் பதிகத்தில் எடுத்துரைக்கின்றார். "கனியிருப் பக் காய் கவர்ந்த கள்வனேனே", "முயல் விட்டுக் காக்கைப் பின் போனவாறே ", "அற மிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே , பனிநீராற் பாவை செய்யப் பாவித்தேனே", "ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்பட்டேனே, "இருட்டறையில் மலடுகறந்தெய்த்தவாறே , "விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்த வாறே", "பாழூரிற் பயிக்கம்புக் கெய்த்த வாறே", "தவமிருக்க அவம் செய்து தருக் கினேனே, கரும்பிருக்க இரும்பு கடித்தெய்த் தவாறே என் அமைந்த உவமைகள் அனைத்தும் சைவசமயம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விட்டு சமணம் சார்ந்து சென்றமைக்கான கழிவிரக்கங் குறித்த கருத்து வெளிப்பாடுகளே எனலாம்.

தருமசேனராக சமணத்தில் தலைமை பெற்றுத் திகழ்ந்தவர் சூலை நோய்காரணமாக மீண்டும் சைவத்துக்கு மீண்டார் எனக்கொள்வது நாவுக்கரசரின் சைவபக்தி சார் ஆளுமைக்கு நிறைவு தரு வதாக அமையாது. ஏனெனில் அவரது தேவாரப் பதிகங்களை நோக்கும் போது சிவபக்தியில் அவருக்கிருந்த முனைப்பும், ஆழமும் அவரது வாழ்நாள் முழுவதுமான அனுபவத் தேட்டத்தின் பெறுபேறுகள் எனக் கருதத்தக்க வகையிலுள்ளன. இவ் வகையில் நாவுக்கரசரின் சைவபக்தி சார் ஆளுமையாலும் தன்வரலாறு குறித்த பதிவுகளையும் காணலாம்.

தொன்மங்களானவை மக்களின் எண்ணத்திலும் வாழ்விலும் மாற்றங் களை ஏற்படுத்தவல்லன. எனவே நாவுக் கரசரும் தொன்ம உத்திகள் மூலம் மக் களின் எண்ணங்களையும் வாழ்வியல் முறைகளையும் மாற்றியமைக்க முற்பட் டார். இராமாயண மகாபாரத இலக்கியங் களில் வரும் நிகழ்வுகள், பௌராணிக மர புக் கதைகள் பலவும் இவரது பாடல்களில் இடம்பெற்றிருக்கின்றன. இவரது பாடல் களில் இறைபரத்துவம் குறித்த தொன் மங்களின் ஆதிக்கத்தை காணவியலும். சிவனின் அட்டவீரட்டச் செயல்களுள்ளிட்ட மறச்செயல்கள் குறித்த தொன்மங்களில் பௌராணிகக் கதைகளே அதிகம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இறைபரத்து வம், நாயன்மார்களின் செயற்கரிய ஆற் றல்கள், திருக்கோயில்கள் குறித்த கதை கள் என்பன குறித்த தொன்மங்களின் மீட்டு ருவாக்கத்தில் திருநாவுக்கரசர் கொண் டிருந்த ஆர்வம் அதிகமாகும். அத்துடன் சைவபக்தி ஆளுமை குறித்த தன்வரலாறு களையும் பதிவுசெய்துள்ளார். எனவே, திருநாவுக்கரசர் எந்தளவுக்கு தொன்மங் களை எடுத்தாண்டு சைவபக்தி இலக்கிய உலகில் வெற்றி பெற்றிருக்கின்றார் என் பதனை அவரது பாடல்களை ஆராய்வோர் புரிந்து கொள்வர்.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், செய்யுளியல், சூத்திரம். 1493.
2. பஞ்சாங்கம், க., தொன்மத்திறனாய்வு, ப.5.
3. மேலது,ப.8.
4. மேலது,ப. 7.
5. மேலது,ப. 16.
6. அப்பர் தேவாரம், பா.எ. 6:95:7.
7. மேலது, பா.எ. 6:31:3.
8. மேலது, பா.எ. 4:6:6.
9. மேலது, பா.எ. 4:1:10.
10. மேலது, பா.எ. 4:7:8.
11. மேலது, பா.எ. 4:13:7.
12. மேலது, பா.எ. 4:32:2.
13. மேலது, பா.எ. 4:35:10.
14. மேலது, பா.எ. 4:72:7
15. மேலது, பா.எ. 4:44:1.
16. மேலது, பா.எ. 4:44:3.
17. மேலது, பா.எ. 4:15:9.
18. மேலது, பா.எ. 4:18:3.
19. மேலது, பா.எ. 4:30:4.
20. மேலது, பா.எ. 4:51:8.
21. மேலது, பா.எ. 4:54:1.
22. மேலது, பா.எ. 4:56:3.
23. மேலது, பா.எ. 4:56:8.
24. மேலது, பா.எ. 4:57:6.
25. மேலது, பா.எ. 4:58:1.
26. மேலது, பா.எ. 4:58:3.
27. மேலது, பா.எ. 4:66:10.
28. மேலது, பா.எ. 4:80:7.
29. மேலது, பா.எ. 4:68:8.
30. மேலது, பா.எ. 4:66:7.
31. மேலது, பா.எ. 4.100.2.
32. மேலது, பா.எ. 4:38:2.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. மேலது, பா.எ. 4:56:2. .
34. மேலது, பா.எ. 4:51:9.
35. மேலது, பா.எ. 4:51:4.
36. மேலது, பா.எ. 4:14:6.
37. மேலது, பா.எ. 4:43:2.
38: மேலது, பா.எ. 4:31:9.
39. மேலது, பா.எ. 4:37:1.
40. மேலது, பா.எ. 4:63:10
41. மேலது, பா.எ. 4.108.2.
42. மேலது, பா.எ. 4:61:5.
43. மேலது, பா.எ. 4:37:2.
44. மேலது, பா.எ. 4:43:4.
45. மேலது, பா.எ. 4:17:4.
46. மேலது, பா.எ. 4:56:5.
47. மேலது, பா.எ. 4:58.5.
48. மேலது, பா.எ. 4.68.3..
49. மேலது, பா.எ. 4:63:6.
50. மேலது, பா.எ. 4:58:6.
51. மேலது, பா.எ. 4:30:1.
52. மேலது, பா.எ. 4:60:5.
53. மேலது, பா.எ . 4:38:7.
54. மேலது, பா.எ. 4:32:1.
55. மேலது, பா.எ. 4:51:10.
56. மேலது, பா.எ. 4:7:10.
57. மேலது, பா.எ. 4:8:4. -
58. மேலது, பா.எ. 494.
59. மேலது, பா.எ. 4.73.6.
60. மேலது, பா.எ. 4:93:3.
61. மேலது, பா.எ. 6.96.17.
62. மேலது, பா.எ. 4.65.5.
63. மேலது, பா.எ. 4:81:10.
64. மேலது, பா.எ. 4:81:2,4.
65. மேலது, பா.எ. 4:49:10.
66. மேலது, பா.எ. 4:69:10.
67. மேலது, பா.எ. 4:34:1-10
68. மேலது, பா.எ. 4:49:7.
69. மேலது, பா.எ. 4:65:8.
70. மேலது, பா.எ. 4:49:6.
71. மேலது, பா.எ. 4:102:2,4.
72. மேலது, பா.எ. 4:12:10.
73. மேலது, பா.எ. 4:49:3, 4:65:6, 4:73:5.
74. மேலது, பா.எ. 4:49:9.
75. மேலது, பா.எ. 4:49.4.
76. மேலது, பா.எ. 4:49:4.
77. மேலது, பா.எ. 4:61:1.
78. மேலது, பா.எ. 4:61:2.
79. மேலது, பா.எ. 4:61:4.
80. மேலது, பா.எ. 4:61:6.
81. மேலது, பா.எ. 4:61:7.
82. மேலது, பா.எ. 4:61:8.
8. மேலது, பா.எ. 4:61:9.
84. மேலது, பா.எ. 4:61:10.
85. மேலது, பா.எ. 4:61:11.
86. சுப்பிரமணியன், நா., 2002, நால்வர் வாழ்வும் வாக்கும், ப.61.
87. அப்பர் தேவாரம், பா.எ. 4:39:1.
88. மேலது, பா.எ. 4:39:3.
89. மேலது, பா.எ. 4:39:4.
90. மேலது, பா.எ. 4:39:7.
91. மேலது, பா.எ. 4:39:8..
92. மேலது, பா.எ. 4:99:1.
93. மேலது, பா.எ. 4:5:1.
94. மேலது, பா.எ. 4:5:2
95. மேலது, பா.எ. 4:5:3.
96. மேலது, பா.எ. 4:5:4.
97. மேலது, பா.எ. 4:5:5.
98. மேலது, பா.எ. 4:5:6.
99. மேலது, பா.எ. 4:5:7.
100, மேலது, பா.எ. 4:5:8.
101. மேலது, பா.எ. 4:59.
102. மேலது, பா.எ. 4:5:10,
103. சுப்பிரமணியன், நா., 2002, மு.கு.நூ, 1.63.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சைவ சித்தாந்தத்தில் பதிக் கோட்பாடு

**சு.சுரேஸ்**
இந்து நாகரிக ஆசிரியர்

இந்து தத்துவக் கோட்பாடுகளில் முதன்மை வாய்ந்த கோட்பாடாக விளங்குவது சைவ சித்தாந்த தத்துவக் கோட்பாடு ஆகும். சைவ சமய சார்பான தத்துவ ஆய்வுகளைக் கொண்ட கோட்பாடு இதுவாகும். முதனூல்களான வேத, ஆகமங்களில் ஆரம்பிக்கப்பட்ட தத்துவ ஆய்வுகளை முழுமைப்படுத்தித்தரும் கோட்பாடு சைவ சித்தாந்தக் கோட்பாடு ஆகும். இந்தக் கோட் பாட்டினுடைய அடி அத்திவாரமான தத்துவ ஆய்வு முப்பொருள் உண்மைக் கோட்பாடு ஆகும். பதி, பசு, பாசம் என்பனவே முப்பொருளாகும்.

சைவ சித்தாந்த தத்துவம், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களை பிரமாண நூல்களாகக் கொண்டு உருவாக் கப்பட்டது. மெய்கண்ட சாஸ்திரங்கள் சிவாகமங்களினுடைய ஞான காண்டக் கருத்துக்களினை விரிவுபடுத்திக் கூறுவன வாகும். சிவாகமங்களினுடைய ஞானகாண்டப் பகுதியினிலே பதி, பசு, பாசம் என்பவை பற்றி முதலில் குறிப்பிடப்பட்டது. அவற்றை சிவாகமங்கள் திரிபதார்த்தம் என்று கூறியுள்ளன. இதனையே சைவசித்தாந்தம் புறச் சந்தான பரம்பரைக் குரவர்களின் அருள் வெளிப்பாடாக முப்பொருள் கோட்பாடாக விளக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தினுடைய முடிந்த முடிவாக உள்ள கொள்கை சைவசித்தாந்தம் ஆகும். சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மை பற்றிப் பேசுகிறது பதி என்பது இறைவனையும் பசு என்பது ஆன்மாவையும் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் குறித்து நிற்கின்றது. முப்பொருள் உண்மையை விளக்குவதற்கு காட்சி, அனுமானம், ஆப்த வாக்கியம் என்ற மூன்று வகைப் பிரமாணங்களை ஏற்றுக் கொடுக்கப்படுகிறது. உண்மையை உணர்ந்தோர் கூற்றுக்களே ஆப்த வாக்கியம் ஆகும். வேதங்களும் ஆகமங்களும் ஆப்த வாக்கிய பிரமாணங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவ்வகையான பிரமாணங்களையும் பிரமாண நூல்களையும் கொண்டு முப்பொருள் பற்றி விளக்கப்படுகின்றபோது அதில் மேலான பொருளாகக் குறிப்பிடப்படுவது பதியாகும். இதனை சிவப்பிரகாசம்,

"பல கலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரிதல் பதிபரமே"

எனக் கூறுகின்றது.

சைவ சித்தாந்தம் கூறும் பதி பற்றிய கருத்துக்களில்,

01. பதியின் உண்மைத் தன்மை நிறுவுதல்

02. பதியின் இயல்புகள், இலக்கணங்கள் என்பவை அடங்குகின்றன.

வேதங்கள் ஆகமங்கள் முதலான நூல்கள் கடவுள் உண்மையைச் சிறப்பாக விளக்கும் நூல்களாகும். வேத, ஆகமங்களை ஆப்த வாக்கியங்களாகக் கொண்டு சைவ சித்தாந்தம் கடவுள் என ஒரு பொருள் உண்டு எனக் கூறி அதனை பதி என்ற பெயரினால் அழைக்கின்றன.

உலகம் நமது புலக் காட்சிக்கு உட்படக் கூடிய பொருளாகும். எமது புலன்களால் கண்டறியப்படுகின்ற உலகம் இந்த நியதியின் அடிப்படையில் உலகை படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும் அவனே இறைவன் என்று சித்தாந்திகள் குறிப்பிடுகின்றனர். ஒரு பானையை உருவாக்குவதற்கு மண் முதற்காரணியாகவும், நீர், திரிகை என்பன துணைக் காரணியாகவும் குயவன் நிமிர்த்த காரணியாகவும் உள்ளான். இது போல உலகம் படைக்கப்படுவதற்கு மாயை முதற் காரணியாகவும் திருவருட் சக்தி துணைக் காரணியாகவும் பதி நிமிர்த்த காரணியாகவும் உள்ளார். பானையைக் கொண்டு அதனை உருவாக்கிய நிமிர்த்த காரணியான குயவன் உள்ளார். என அறிவது போல உலகைக் கொண்டு அதனைச் சிருஷ்டித்த நிமிர்த்த காரணியாக பதி உள்ளார் என்று அனுமானித்து அறிந்து கொள்ளலாம்.

உலகின் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு இறைவனின் உண்மையை அறிந்து கொள்ளலாம். உலகம் ஓர் அறிவற்ற சடப்பொருளாகும். இது பல பகுதிகளை உடையது. அந்தப் பகுதிகள் ஒவ்வொன்றும் அறிவற்றவை. எனவே அவை ஒருபோதும் தாமாக ஒன்று சேர மாட்டாதவை. அவை அனைத்தையும் ஒன்று சேர்த்து உலகமாக இயங்கச் செய்வதற்கு அறிவுடைய ஒருவன் வேண்டும். அவனையே இறைவன் என்று சித்தாந்தம் கூறுகின்றது.

ஆன்மாக்களினுடைய கன்மம் மறுபிறப்பினை அடிப்படையாகக் கொண்டு இறைவனது உண்மை நிறுவப்படுகிறது. ஆன்மாக்கள் அநாதியாகவே மலங்களினால் பந்திக்கப்பட்டவை. இதன் காரணமாக ஆன்மாக்கள் அறியாமைக்குட்பட்டு மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கின்றன. ஆன்மாக்கள் சிற்றறிவுடையவை. ஆனால் கன்மங்கள் அறிவற்றவை. ஆன்மாக்களுக்கு தமக்குரிய கன்மங்களைச் சேர்த்து பிறவியைப் பெறும் வல்லமை இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோல கன்மங்கள் தன்னைச் செய்த ஆன்மாவைத் தானாகவே தேடி அறிய மாட்டா தவை. எனவே ஒரு ஆன்மா செய்த கன்மத்தை அந்த ஆன்மாவிடமே சேர்ப்பிற்பதற்கே அறிவுடைய ஒருவன் வேண்டும். அவனே இறைவன் என சித்தாந்தம் கூறுகின்றது. இவ்வாறு சைவ சித்தாந்தம் கூறும் பதியினுடைய உண்மைத் தன்மையை சிவஞானபோதம் முதலாவது சூத்திரப் பாடல் மூலமாக விளக்குகிறது.

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்"
என அமைந்துள்ளது.
சிவஞான சித்தியார் இந்தக் கருத்தினை,
"ஒருவனோடொருத்தி ஒன்றென்றுரைத்திடும் உலகெலாம்.
வருமுறை வந்து நின்று போவது மாதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான் முதலீறுமாகி
மருவிடு மநாதி மூத்த சித்துரு மன்னி நின்றே"

என்ற பாடல் மூலம் விளக்குகின்றது. அதாவது அவன், அவள், அது கூறப்படும் சேதன, அசேதனப் பிரபஞ்சமெல்லாம் தோன்றும் முறையிலே தோன்றி நின்று ஒடுங்குதலும் உடமையினால் அவ்வாறு அவற்றைத் தோற்றுவித்து நிலைப்படுத்தி ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படும் அக் கருத்தா முதல்வனின்றி தானே எவற்றிற்கும் நிமிர்த்த காரணனும் சங்கார காரணனுமாய் இயல்பாகவே பாசம் நீங்கி ஞானமாகிய சக்தி வடிவத்தைப் பொருந்தி நின்று அவற்றைக் காரியப்படுத்தும் இயல்புடையவன் என்று கூறப்படுகின்றது.

சைவ சித்தாந்தத்திலே பதிக்கு இரு வகையான இலக்கணங்கள் குறிப்பிடப்படுகின்றன. சொரூப இலக்கணம் தடத்த இலக்கணம் என்பன அவையாகும். சொரூப இலக்கணம் எனப்படுவது குணங்குறிகள், நாமங்கள் வடிவங்கள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையாகும். தடத்த இலக்கணம் எனப்படுவது குணங்குறிகள் நாமங்கள் வடிவங்கள் என்பனவற்றோடு கூடிய நிலையாகும். இறைவன் யாவற்றையும் கடந்த பரம்பொருளாகும். அதாவது சொரூப இலக்கணம் உடையவர் ஆவார். இந்த இறைவன் ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி தனது நிலையை விட்டு தடத்த நிலைக்கு எழுந்தருளுகின்றார். அவ்வாறு எழுந்தருளி தனது சக்தியாகிய திருவருட் சக்தியைக் கொண்டு ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி தொழிற்படும் போது பஞ்ச கிருத்தியங்களைப் புரிகின்றார். படைத்தல், காத்தல், அழித் தல், அருளல், மறைத்தல் என்பன பஞ்ச கிருத்தியங்கள் ஆகும். இவற்றுள் முதன்மையானது படைத்தல் ஆகும். தனது கரண, புவன போகங்களைத் தோற்றுவித்தல் படைத்தல் ஆகும். ஆன்மாக்களின் ஈடேற்றமே படைத்தலின் நோக்கமாகும்.

சைவ சித்தாந்தத்திலே கூறப்படுகின்ற பதி சத் சித் ஆனந்தம் என்ற இயல்புகளை உடையவர். சத் எனப்படுவது அநாதியான உள் பொருள் எனவும் சித் எனப்படுவது அறிவு மயமான பொருளெனவும் ஆனந்தம் எனப்படுவது ஆனந்த மயமானது எனவும் கொள்ளப்படுகிறது. இதனையே பரிமேலழகர் எண் குணங்களாக விபரிக்கின்றார். தன் வயத்தனாதல், தூய உடம்பினநாதல், இயற்கை உணர்வின நாதல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், முற்று முணர்தல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன அந்த எண்குணங்களாகும். சைவ சித்தாந்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு முத்திருமேனிகளும் நவதருபேதங்களும் குறிப்பிடப்படுகின்றன. இதனைத் திருவருட் பயன்

"அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம்

உருவமுடையான் உளன்" என்ற குறளின் மூலமாக குறிப்பிடுகின்றது அருவத் திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி என்பன மூவகைத் திருமேனி களாகும். சிவம், சக்தி, நாதம், விந்து, மகேஸ்வரன், உருத்திரன், மால், அயன், சதாசிவன் என்பன நவதருப் பேதங்களாகும். சைவ சித்தாந்தத்திலே இறைவன் யாவற்றையும் கடந்த ஒப்புயர்வற்ற பரம்பொருளாவர் என்று குறிப்பிடப்படுகிறது. இதனை திருவருட்பயன் "பெருமைக்கும் நன்மைக்கும் பேரருட்கும் பேற்றின.

அருமைக்கும் ஒப்பின்மையான்" என்ற குறளின் மூலமாக குறிப்பிடுகின்றது.

வேதங்களும் ஆகமங்களும் இறைவன் எத்தொழிலைச் செய்தாலும் விகார மடைவதில்லை என்று கூறுகின்றன. வேதாகமக் கருத்துக்களை ஆப்த வாக்கியமாகக் கொண்ட சைவ சித்தாந்திகளும் இறைவனுக்குரிய இயல்பாக இதனைக் குறிப்பிடுகின்றன. இறைவனுக்குரிய தொழில் படைத்தல் ஆகும். இறைவனிடமிருந்து உலகம் தோன்றினால் இறைவனும் மாறுதலிற்குட்பட வேண்டும். ஆனால், மாறுதலடையாத தன்மையே இறை வனுக்குரிய இயல்பாகும். இதனை விளக்குவதற்கு மாயையிலிருந்து உலகம் தோன்றியது என சித்தாந்தம் கூறுகின்றது. சூரியனால் தாமரை மலர்ந்தாலும் சூரியன் எவ்வித விகாரமும் அடைவதில்லை. இதே போன்று மாயையிலிருந்து இறைவன் உலகைத் தோற்றுவித்தாலும் எந்த விகாரங்களும் அடைவதில்லை அறிவுக்கு அறிவாய் விளங்குகின்ற பரம்பொருளான இறைவன் தேவர்களால் கூட கண்டறிய முடியாத மேலான தன்மை உடையவராவார். இதனைத் திருவருட்பயன்

"ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு
வானாடர் காணாத மன்"

இக் குறளின் மூலமாகக் குறிப்பிடப்படுகின்றது. உமாபதி சிவாச்சாரியார் அருளிய சிவப்பிரகாசம் என்னும் நூலில் இறைவனுடைய இயல்புகள் அனைத்தையும்

"பல்கல ஆகம வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரிதல் பதிபரமே அதுதான்
நிலவும் அருவுருவன்றிக் குணம் குறிகளின்றி
நின்மலனாய் ஏகனாய் நித்தனாகி
அலகிலுயிர்க் குணமாகி அகலமாகி
அகண்டிகமாய் ஆனந்த உருவ மானறியச்
செலவரிதிதாய் செல்க்யாய்க் குறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது நற்சிவம் என்பர் தெரிந்துளரோ

என்ற பாடலின் ஊடாகத் தெளிவுபடக் கூறியுள்ளார். சித்தாந்தக் கோட்பாட்டிலே இந்துக்களின் உடைய தத்துவத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குள் பதிக் கோட்பாடான அதாவது இறைக் கோட்பாடு வேதங்கள் ஆகமங்கள் முதலான சுருதிப் பிரமாணங்களின் அடிப்படையிலும் மெய்கண்ட சந்தான பரம்பரைக் குரவர்களின் அருள் வெளிப்பாடாகிய மெய்கண்ட சாத்திரங்களின் அடிப்படையிலும் தெளிவாக விளக்கப் பட்டிருந்தமையைக் காண லாம். இந்தப் பதிக்கோட்பாடே சைவசமயத்திலும் இந்து சமயத்திலும் இறை கோட்பாடாக வளர்ச்சி பெற்று சமயத்திற்கு ஆதாரமாக அமைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்துக் கவிதை மரபில் சோமசுந்தரப் புலவர்

சைவப்புலவர் **ஜனகா சிவசுப்பிரமணியம்**
சைவசித்தாந்த பண்டிதர் (Mphil in Tamil)

ஈழத்து இலக்கியங்கள் தமக்கெனத் தனித்துவமான தன்மையினைக் கொண்டு விளங்குகின்றன. ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளில் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் தனித்துவம் மிக்க ஆளுமையாளராக விளங்குகின்றார். இவர் யாழ்ப்பாணத்தின் மானிப்பாய் கோவில் பற்று என்னும் இடத்தில் உள்ள நவாலி என்னும் சிற்றூரில் கதிர்காமருக்கும் இலக்குமிப்பிள்ளைக்கும் மகனாய் 1878 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி பிறந்தார். இவருக்கு வேலுப்பிள்ளை என்னும் சகோதரன் இருந்தார். சோமசுந்தரப்புலவர் தன்னுடைய ஆரம்பக்கல்வியை நவாலி அருணாசலம், கந்த நயினார் தம்பையா ஆகியோரிடமும் ஆங்கிலக் கல்வியை மானிப்பாய் மாரிமுத்து ஆசிரியரிடமும் கற்றார், தனது கல்வியை முடித்து 1899ஆம் ஆண்டு சித்தங்கேணியில் உள்ள ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆசிரியத் தொழிலுடன் தன்னுடைய சமயமாகிய சைவசமயத்தில் இருந்த அதீத நம்பிக்கையாலும் பற்றினாலும் "சைவ வாலிபர் சங்கம்" என்ற அமைப்பை அமைத்து அதன்மூலம் சமயபாடங்களைக் கற்பித்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் இளமையில் அருணாசல உபாத்தியாயரிடம் கற்ற தமிழ் இலக்கண, இலக்கிய அறிவினால் எழுத்தாற்றல் மட்டு மன்றி பேச்சாற்றலும் விவாதத் திறனும் இயல்பாகவே பெற்றிருந்தார். இல்லறமே நல்லறம் என்று எண்ணி 28ஆவது வய தில் சின்னம்மையை தன் வாழ்க்கைத் துணையாக்கினார். இவருக்கு இளமுருக னார், நடராசன், வேலாயுதபிள்ளை, மங் கையற்கரசி, சரஸ்வதி என ஐந்து பிள்ளை கள் பிறந்தனர்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற முதுமொழிக்கேற்ப அட்டகிரி முருகன் பதிகம், அட்டகிரி திருவூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின்கதை போன்ற இலக்கியங்களைப் படைத்தார்.

இவர் தன்னுடைய படைப்புக்களில் ஊஞ்சல், கலம்பகம் நான்மணிமாலை, அட்டகம், அந்தாதி, சிலேடை, வெண்பா, திருப்பள்ளியெழுச்சி ஆகிய வடிவங்களைப் பயன்படுத்தி பதிகங்களைப் பாடினார்.

சைவத்திருத்தலங்களை மைய மாகக் கொண்டு அட்டகிரிக் கலம்பகம், தில்லை அந்தாதி, கதிரைச் சிலேடை வெண்பா ஆகிய பிரபந்தங்களைப் பாடி சிறப்புப் பெற்றர்.

மேலும் 400 இற்கு மேற்பட்ட அடி களைக் கொண்ட கலி வெண்பாப் பாவகை யால் அமைந்த "தால விலாசம்" என்ற இவ ரது நூல் பனையின் பெருமைகளைக் கூறு கின்றது. 1940 ஆம் ஆண்டு பாடப் பெற்ற இந்நூல்
"மன்னுநீர் ஞாலத்து வான் பனையின் மேன்மையெல்லாம் பன்னுகலி..." என் னும் காப்புச் செய்யுளுடன் ஆரம்பமாகின் றது. யாழ்ப்பாணத்தில் பிரித்தானியர் ஆட் சிக் காலத்தில் இருந்தபோது மக்கள் பிற நாட்டுப் பொருட்களின் மீது அதிக ஆர்வம் காட்டினர். உள்நாட்டுப் பொருட்களின் மதிப் புக் குறைந்தது. யாழ்ப்பாணத்தில் பல நூற் றாண்டுகளாகப் பயன்பாட்டில் இருந்து வந்த பனம் பொருட்களுக்கு மீண்டும் மதிப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வந்தன இக்கருத்துக்களினை தாலவிலாசப் பாடலில் பின்வருமாறு காண லாம்.

"திங்கட்குடையுடைச் சேரனும்
சோழனும்
அதன்னவனும் ஔவை
"சொற்படியே
மங்கலமாயுண்ட தெய்வப் பனம்பழம்
மரியாதை அற்றதோ
ஞானப் பெண்ணே...."

மேலும் பிறநாட்டுப் பொருட்கள் மீதுள்ள மோகத்தை கண்டிப்பதை
"செங்கதிரோன் சுடும் இந்தப்பலகாரம்
செய்து வைத்துத் தின்னமாட்டாமல்
அங்கே பிறர் சமைத்திங்கே
விரம் வைக் காசைப் பட்டோடி
ஞானப் பெண்ணே..." எனக் கூறுகின்றார்.

இறுதிப் பாடலில் மழை, பூடு, உயிர் கள், அறம், பனை, தமிழ் ஆகியவற்றிற்கு நான்கு அடியில் நன்றி கூறுகின்றார்.

தாலவிலாசத்தில் அணிகளை அழ காகப் பயன்படுத்தி உள்ளார். எடுத்துக் காட் டாக பனாட்டினை பாயில் இருந்து பிரித் தெடுப்பதனை கெட்டவர்கள் நாசூக்காகப் புகழ்ந்து அவர்களிடம் இருந்து தந்திரமாக பொருள் பெறுவதனை உவமையாகக் கூறு கின்றார். மேலும் பனையின் விதையானது ஆடு, மாடுகளுக்கு தப்பிப் பிளைப்பதை முனிவர்களின் வாய்மொழிக்கு உவமிக்கப் பட்டுள்ளது. பனம் மட்டையின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் போது இருபக்கமும் கூரான வாள் போலத் தோன்றும் அதனை பகை ஒழித்து வெண் கொற்றக் குடையின் கீழ் ஆட்சி செய்யும் உருக்கினால் ஆன வாளை ஏந்திய வேந்தனுக்கு உவ மிக்கிறார். அதுமட்டுமன்றி பழமொழிகள் உவமைத் தொடர்களையும் கையாண்டுள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

ளார். இந்நூலினை 1940ஆம் ஆண்டி லேயே தொல்புரம் பனைத் தொழில் விருத்தி ஐக்கியசங்கம் அச்சிட்டு வெளியிட்டது. இந்நூல் சோமசுந்தரப் புலவரின் கவித்துவ ஆளுமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது.

சோமசுந்தரப் புலவர் யாப்பிலக் கணங்களைச் சிறப்பாகக் கற்றிருந்தமை யினால் தனிப் பாடல்கள் பலவற்றைப் பாடி னார். இதனால் இவரை எல்லோரும் வர கவி என அழைத்தனர். அதுமட்டுமன்றி 1925ஆம் ஆண்டு உயிரிளங்குமரன் என் னும் நாடகத்தை எழுதினார். இந் நாடகத் தின் சிறப்பைப் பாராட்டி இவருக்குப் 'புலவர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத் தினை மகாவித்துவான் ஆறுமுகம் பிள்ளை உடையார், மயில்வாகனன் முத லியார், இராசநாயகம் என்பவரால் வழங் கப்பட்டது.

மேலும் மருதனோட்டம், இலங்கை வளம், செந்தமிழ் செல்வியாற்றுப்படை, ஆடிப்பிறப்பு, இலவுகாத்தகிளி போன்ற 15000 செய்யுள்களை இயற்றினார். தாடி அறுந்த வேடன், சேவலும் எலியும், கத்தரி வெருளி போன்ற பல சிறுவர் பாடல்களை இயற்றினார். ஈழத்தின் சிறுவர் இலக்கிய முன்னோடியாக சோமசுந்தரப் புலவரே விளங்குகின்றார். இதனால் இளம் பிராயத் தினர் இவரை "தங்கத்தாத்தா" என அன் புடன் அழைத்தனர்.

1910ஆம் ஆண்டு சைவபாலிய சம்போதினி என்ற சைவசித்தாந்தக் கருத் துக்களைக் கொண்ட மாத வெளியீட்டினை ஆரம்பித்து ஐந்து ஆண்டுகளாக நடாத்தி வந்தார்.

மேலும் 1929ஆம் ஆண்டு புலவர் சன்னிநோயால் பாதிக்கப்பட்டு இருந்த காலத்திலும் மீதிக் காலத்திலும் தன்னைப் பேணிப்பாதுகாத்த தன்மனைவியின் கையைக்குறித்து கலிவெண்பாவால் "தார மாய் தாயானாள் கை" என்ற பாடலைப் பாடினார்.

"சீராரு மன்றற் றிருதாளிற் செந்தீயை
நேராகச் சூழ்ந்துவரு நேர்த்தி - வரராநல்
அன்புடனே என் கை விரலோ
டனையவந்த
பொன் புனையுஞ் செல்வப் புதுமலர்க்கை
யன்புடனே...?

என்ற அடிகள் மனைவிமேல் கொண்ட அன்பின் அதீதத்தைப் புலப்படுத்துகின்றது.

மேலும் செந்தமிழ் தாய் மீது அதிக அன்பு கொண்டுள்ளதோடு அறிவுரைகளை மையமாகக் கொண்டும் கவிகள் படைத் துள்ளார். அந்த வகையில்

கற்பித்த பத்து
ஒழுக்கமுரைத்த பத்து
விதித்ததுரைத்தபத்து
விலக்கியதுரைத்த பத்து
முதுமொழிப்பத்து என்ற பாடல் களைக் கூறலாம்.

"இருவிளக்கில் ஒளிவிளக்காம் வெண்ணிலாவே
இராக்காலத் தொளி கொடுப்பாய் வெண்ணிலாவே" என நிலவைப் பற்றிப் பாடிய பாடல் சிறுவர்முதல் பெரியவர்கள் வரை விரும்பிப் படிக்கும் வண்ணம் உள்ளது.

மற்றும் காத்திருந்து ஏமாந்துபோதல் என்ற தொனிப் பொருளில் பச்சைக்கிளி ஒன்று இலவமரத்தில் இருந்த பூ பிஞ்சாகி காயாகி கனியாகும் உறவுகளோடு உண்டு மகிழலாம் என எண்ணியிருந்து ஏமாந்து போன தன்மையையும் உறவுக் கிளிகள் வெக்கிச் சிரித்ததையும் இலவு காத்தகிளி என்ற தலைப்பில் பாடப்பட்ட பாடல் மிகவும் அருமையானதாக அமைந்துள்ளது.

மேலும் புலவரின் கவி ஆளுமைக் குச் சிறந்த எடுத்துக்காட்டாக பவளக்கொடி பாடல் அமைகின்றது. வறிய சிறுமி ஒருத்தி யினுடைய கனவும் அது சிதைந்தவிதமும் இப்பாடலில் கூறுகின்றார். பருத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் பவளக்கொடி என்னும் சிறுமி ஒருத்தி இருந்தாள் அவள் பால் விற்று வரு பவள் வழக்கம்போல தலையில் பாற் பானையை வைத்துக் கொண்டு சென் றாள். மனக்கோட்டை கட்டியபடி சென்ற நிகழ்வை இப்பாடலில் கூறுகின்றார்.

பருத்துறை யூராம்
பவளக் கொடி பேராம்
பாவை தனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்...... எனத் தொடங்கி
"...பாரும் பாரும் என்று
பவளக்கொடி நின்று
சற்றுத் தலை நிமிர்ந்தாள்
தையலென்ன செய்வாள்

பாலுமெல்லாம் போச்சு
பாற்குடமும் போச்சு
மிக்கதுய ரோடு
வீடுசென்றாள் மாது" என பாடலை நிறைவு செய்கின்றார். இப்பாடலில் இறுதியாக கைக்கு வருமுன்னே நெய்க்கு விலை பேசேல் என முடிகின்றார். இதே போன்று நாட்டுப் புறத்திலே நன்னியன் என்னும் விறகு வெட்டியின் கதையினூடாகவும் அறிவுரை கூறுவதனைக் காண லாம்.

மேலும் இன்று சைவக் கோயில் களில் மிருகபலியிடுதல் பற்றி கண்டனங் கள் எழுந்துள்ளன. இதனை ஆடு கதறியது என்னும் தலைப்பில் பிள்ளையைப் போல் வளர்த்த ஆட்டை பலியிடும் இச்செயல் நரகத்தைத் தரும் மக்களின் கொடுஞ் செயலை அறிந்து தாய் ஆடு புலம்புவதை பாடுகின்றார்.

".....ஆசை மகனேயென் அன்பான
கண்மணியே
தேசத்துரையே நெடும்பயணம் போனாயே
அல்லும் பகலுமவர் அன்பாய்
வளர்த்ததெலால்
கல்லுங் கரையக் கழுத்தவெட்டு
வெட்டிடவோ
ஓங்கியகத்தி விழும் போ துடல் நடுங்க
ஏங்கி அனை நினைந்தென் னம் மாவோ
என்றனயே" என்று உள்ளம் கசிந்துருகப் பாடியுள்ளார்.

மேலும் சிறுவர்களுக்காகப் பாடப்பட்ட பாடல்களில் "கத்தரித்தோட்டத்து மத்தியில் நின்று காவல் புரிகின்ற சேவகா" என கத்தரி வெருளி பற்றிப் பாடும் பாடல் மிகவும் நகைச் சுவையான இனிமையைத் தருவதாக அமைகின்றது. கத்தரி வெருளியின் தோற் றம்பற்றிக் கூறும்போது

"வட்டமான பெரும் பூசணிக்காய் - போல
மஞ்சள் நிற உறுமாலைப்பார் தலையில்
கட்டியிறுக்கிய சட்டையைப்
பாரங்கே
கையில் அம் பொடு
வில்லைப்பார்
தொட்டு முறுக்காத
மீசையைப் பார்" என அழகாக பாடியுள்ளார்.

அதேபோன்று 'தாடி அறுந்த வேடன்' என்ற பாடலில் அணிலைத் துரத்தும் நாயின் கதையும் "பசு" என்ற பாடலில்
"...ஏழைக் கமக்காரன் வேலைக்
குதவி செய்
ஏவற் காரன் நீயே
சிங்கத்தின் தோலினைப்
போர்த்த கழுதைபோல்
தேசத்திலே பலர் உண்டு காண்" என பசுவிற்காக வருந்துவதனைக் காணலாம்.

சோமசுந்தரப் புலவரின் பாடல் களுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல் ஆடிப்பிறப்பு என்னும் பாடல் அமைகின் றது. ஆடிப்பிறப்பு என்பது தமிழர்களின் பண்டிகை. இந்த நாளை

"ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர் களே...." எனப் பாடல் தொடர்கின்றது பனங் கட்டிக் கூழ் தயாரிக்கும் முறை கொழுக் கட்டை அவித்தல், படையல் படைத்தல் பலாவிலை கோலி குடித்தல் போன்ற விட யங்கள் இங்கே கூறப்படுகின்றது. இந்தப்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடல் இன்றுவரை மக்களால் படிக்கப்படு வதனைக் காணலாம்.

மேலும் இலங்கைத் திருநாட்டி னைச் சிறப்பித்து இலங்கை வளம் என் னும் பாடல் பாடியுள்ளார். இப்பாடலில் இலங்கையின் தோற்றம் வடிவம் பெயர் எல்லை அரசு போன்ற அனைத்து சிறப்புக் களும் கூறப்படுகின்றது.

ஈழத்துக்கவிதை மரபில் பாமரர் தொடக்கம் பண்டிதர் வரையும் படித்து இன் புறும் இனிய கவிதைகளைத் தந்ததுடன் நமது உள்ளமும் உணர்ச்சியும் தெவிட் டாது தித்திக்கும் கவிதையைத் தந்து ஈழத்து கவிதை மரபில் நிலையான ஓர் இடத்தை சோமசுந்தரம் அவர்கள் பெற்றுள் ளமை சிறப்பிற்குரி யதே!

**உசாத்துணை நூல்கள்**

1. சோமசுந்தரப் புலவர் க.தாலவிலாசம், தொல்புரம் பனைத் தொழில் அபிவிருத்தி, ஐக்கிய சங்கம் 1940
2. சோமசுந்தரப் புலவர் க.இலங்கைவளம், வண்ணார்பண்ணை ஸ்ரீசண்முகநாத அச்சகம், விரோதி ஆண்டு ஆவணித்திங்கள்
3. சோமசுந்தரப்புலவர் க.சுகாதாரக்கும்மி, சைவபரிபாலன சபையார் பதிப்பு
4. சோமசுந்தரப் புலவர்,க ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம், 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் வெற்றிப் பயணங்கள்



**கௌ.மாதுளன்**

தேசிய மட்டம் பொது அறிவு
2ம் இடம் - 2016



**நி.கிருத்திகா**

தேசிய மட்டம் பொது அறிவு
1ம் இடம் - 2016
தேசிய மட்ட கட்டுரை
1ம் இடம் - 2017



**தி.மணிமோகன்**

தேசிய மட்டம் பொது அறிவு
1ம் இடம் - 2016
தொடர்ந்து 5 வருடம் 1ம் இடம்
பெற்றதை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது



**வி.டிசானி**

மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
1ம் இடம் - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனுக்கு உகந்த திருவெம்பாவை விரதம்

**வேலுப்பிள்ளை நந்தீஸ்வரர்**
செயலாளர்,
கனடா இந்து மாமன்றம்.



மார்கழி மாதம் மிகப் பழங்காலத்திலிருந்தே இறை வழிபாட்டுக்குரிய சிறந்த மாதமாகக் கொள்ளப்படுவதை அறிய முடிகிறது. உலகிலுள்ள பல சமயங்களும் மார்கழி மாதத்தைப் புனித மாதமாகப் பிரகடனப்படுத்தி, இறையருள் வேண்டி மக்கள் விரதங்களை அனுஷ்டிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் இம்மாதத்தில் கிறிஸ்து பெருமான் பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். வைஷ்ணவ சமயத்தினர் மார்கழி சுக்லபட்ச ஏகாதசியை மோட்ச ஏகாதசி என்றும், வைகுண்ட ஏகாதசி என்றும், ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதம் அனுஷ்டித்தும் வழிபட்டு வருகின்றனர்.

9599(P)

சைவர்களாகிய நாம் திருவெம்பாவை விரதம் இருந்து சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றோம். மார்கழி மாதத்தில் வரும் சஷ்டியும் சதயமும் இணையும் நன்னாளில் தொடங்கி, திருவாதிரையுடன் முடிவடையும் விரதம் திருவெம்பாவை யாகும். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் அளக்கலாகாப் பெரும் புகழை வீதிதோறும் பாடிச்சென்று எல்லோரையும் துயிலெழுப்பி, ஆலயத்துக்கு அழைத்துச் சென்று திருவாசகம், திருவெம்பாவை பாடிப் பணிந்து இறையருளைப் பெறும் அற்புதம் நிறைந்தது திருவெம்பாவை விரதம்.

இவ்விரதம் "பாவை நோன்பு", "கார்த்தாயினி விரதம்" எனவும் அழைக்கப்படும். பனி நிறைந்த மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பொழுது புலர்வதற்கு முன் எழுந்து, ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி, கூட்டமாகச் சென்று பொய்கையில் நீராடி, ஆலயம் சென்று இறைவன் புகழ்பாடி வழிபடுவதை மிகவும் அழகாகத் திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார் மாணிக்கவாசகப் பெருமான்.

திருவெம்பாவை என்பது மாணிக்கவாசகப் பெருமானால் திருவண்ணாமலையில் இருக்கும் சிவபெருமானைத் தரிசிக்கும்போது பாடப்பட்ட பாடல்களாகும். இருபது பாடல்களைக் கொண்டது திருவெம்பாவை. ஒவ்வொன்றின் ஈற்றடியும் "ஏலோர் எம்பாவாய்" என முடியும். சிவ சக்தியின் அருட்செயலையும், நவசக்திகள் ஒன்று சேர்ந்து சிவபெருமானைத் துதிப்பதும் திருவெம்பாவையின் தத்துவமாகும்.

சைவத் திருமுறைகளின் உலகம் உய்யத் தோன்றி அருளிய மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகப் பாடல்கள் உயிருக்கும் உள்ளத்திற்கும் உறுதி சேர்க்க வல்லன.

"திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது அனுபவ வாக்கு.

**"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்**
**சுவைகலந்து**
**வான்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

என்பது, வடலூர் வள்ளல் பெருமான் திருவாய்மொழி. மாணிக்கவாசகப் பெருமானின் ஒருவாய் மொழி அனைத்தும் படிக்குந்தோறும் பக்தி வெள்ளம் பீறிட்டு ஓடும். எம் மெய் சிலிர்க்கும். திருவாசகத்தைப் படிப்பவரின் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, ஆனந்தமாய அன்பினில் ஈடுபடச் செய்யும். இது ஓர் அற்புத மருந்தாகும். அத்தகு பெருமைமிகு திருவாசகத்துக்குள் திருவெம்பாவை ஒரு தனி ரகம். எல்லாம் வல்ல எம்பெருமானின் அருமை பெருமைகளை எடுத்துக் காட்டும் அற்புதப் பகுதியாகும்.

திருவெம்பாவையின் தத்துவப் பொருள் யாது என்ற நோக்கின் ஆன்மாவினது மலமாகிய துன்ப இருளில் கிடந்து அல்லற்படாது விண்ணுக்கொரு மருந்தாக, வேத விழுப் பொருளாக விளங்கும் எம் பெருமானினது திருவருளைப் பெற்றுப் பெருவாழ்வு பெற்றிட வேண்டும் என்பதே யாகும்.

அதனை மிக அருமையாகத் தெரிவிக்கும் பாடலாக "பைங்குவளைக் கார்மலரால்" என்று பாடல் விளங்குகிறது. அப்பாடலில் –

**"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்**
**தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்**
**எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த**
**பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்**
**சங்கம் சிலம்பச் சிலம்பு கலர்ந் தார்ப்பக்**
**கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்**
**பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்"**

என்று கூறப்பட்டிருப்பதன் மூலம், அனைத்தையும் அறியக் கூடியதாய் உள்ளது.

அமுத நாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பாவைக் கடைசி நாளாகிய திருவாதிரை மிகமிக முக்கியமான ஒன்று. அன்றுதான் தில்லையம்பதியிலே நடராசப் பெருமானின் தரிசனம் நடைபெறும். திருவாதிரை நட்சத்திரத்திலே அது நடை பெறுவதால், "ஆருத்திரா தரிசனம்" எனப் பெயர்பெற்றுள்ளது.

நடராஜப் பெருமானின் திரு நடனத்தை திருமூல நாயனார் இருந்த இடத்திலே இருந்து கண்டு அனுபவித்தார். திருநாவுக்கரசு சுவாமிகள் இந்நடனத்தைக் காண மீண்டும் பிறவி எடுக்க வேண்டு மென்றார். அவர் கண்ட நடனக் காட்சியை

**"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்**
**இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே"**

என்ற பாடல் மூலம் மிகவும் அருமையாக எடுத்துக் காட்டியுள்ளார். எனவே சைவர்களாகிய நாம் பல்வகைத் திருவும் நிறைந்த திருவெம்பாவை நோன்பை மனம், மொழி, மெய்யால் உய்த்துணர்ந்து பாடிப் பரவி உன்னத பதவியைப் பெற்றிடுவோமாக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆடும் பெருமானின் ஆனந்த தாண்டவம்

**கனகராயர் மாயக்கிருஷ்ணன்**
மின்னியலாளர், பன்னாலை.

சிவ மூர்த்தங்களில் முதன்மையாகத் திகழ்வதும் அழகிலும், தத்துவ நோக்கிலும் கலைச் செறிவிலும் மிகச் சிறந்ததாக விளங்குவதும் நடராஜ வடிவமாகும்.

வலக்காலை சிறிது மடக்கி முயலகன் மீது ஊன்றி, இடக்காலை வலப்பக்கமாக சிறிது தூக்கி குஞ்சிதமாக்கி, இடது முன் கரத்தை வலப்பக்கம் நேராக நீட்டி கைத்தலத்தை கீழ் நோக்கி தொங்கவிட்டு, வலது முன்கரத்தில் அபயமுத்திரை காட்டி, இடது மேற்கரத்தில் அக்கினியும், வலது மேற்கரத்தில் துடியும் (டமருகம்) கொண்டு கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும் பொங்க மூன்று கண்களுடன் சாந்த சொரூபமாய் விளங்க, தலையில் கொக்கின் இறகும், ஊமத்தை, கொன்றை எருக்கு மலர்கள் அணிந்து, கங்கையும் பிறையும் சிரசில் சூடிக்கொண்டு, இடக்காதில் குழையும், வலக்காதில் மகரகுண்டலமும் பூண்டு தீச்சுடர் கொண்ட திருவாசி சூழ்ந்திருக்க அதன் நடுவே நின்றாடும் நடராஜனின் நடனத் திருக்கோலமே ஆனந்த தாண்டவ வடிவமாகும்.

சிவன் கூத்தனாகி தாண்டவமாடும் நடனத் திருக்கோலங்களை நாயன்மார்களும், கவிஞர்களும் அனுபவித்துப் பாடியிருக்கின்றார்கள். சிற்பக் கலைஞர்கள் சிலையாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வடித்து கண்முன்னே காட்டியிருக்கிறார்கள். நாட்டியக் கலைஞர்கள் அபி நயித்து ஆடிக் காட்டியிருக்கின்றார்கள்.

அண்டத்தின் இயக்கமே நடராஜரின் "ஆங்கிகா - அபிநயம்" என்றும் அண்டம் அமைகின்றபோது எழுகின்ற ஒலி "வாசிகா - அபிநயம்" என்றும் வானமும் விண்மீன்களும் அவரது "ஆதார்யா - அபிநயம்" என்றும், இவ்வியக்கத்தின் உட்கிடையான பாவத்தை "சாத்வீகா - அபிநயம்" என்றும் சிறப்பித்துக் கூறுவர்.

அண்டசராசரங்களின் இயக்கமே நடராஜரின் திருநடனம். இயற்கையே இந்த நடனத்தின் முக்கிய பொருள். இதுவே "சிவகாமி" என்ற நாணமுள்ள அழகிய பெண் வடிவம். சிவன் ஆடும் கூத்து சிவகாமியுடன் சேர்ந்து ஆடும் கூத்தாகும். இதனால்தான் நடராஜ படிமத்தின் அருகே சிவகாமியின் படிமமும் அமைக்கப்பட்டிருக்கின்றது. சிவனின் திருக்கூத்து எங்கும், எப்பொழுதும் நிகழ்கின்றது. எமது உள்ளத்திலும் நிகழ்கின்றது. இது பல தத்துவ உண்மைகளை உணர்த்துகின்றது.

ஐந்தொழில் விளக்கம்:-

கடவுள் அனாதியானவர் உயிர்களும் அனாதியானவை. உயிரானது அனாதி தொட்டு பாசம் என்ற மலங்களின் இருளில் மூழ்கிக்கிடக்கின்றது. இவ் ஆன்மாக்களை மீட்டு தூய்மைப்படுத்தி முத்தியடையச் செய்வதற்காக இறைவன் ஆற்றுபவையே ஐந்தொழில்களாகும். இது பஞ்சகிருத்தியம் எனவும் அழைக்கப்படும். உயிர்கள் தாமாக பாசத்தை நீக்கிக்கொள்ள முடியாதவை. அதனால் பாசத்தை நீக்கும் பொருட்டு இறைவனே ஐந்தொழில்களையும் மேற்கொள்கின்றார்.

1. படைத்தல் - சிருஷ்டி உயிர்களின் மீட்சிக்காக தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்தல்

2. காத்தல் - ஸ்திதி உடம்பு பெற்ற உயிரானது தான் செய்த வினைப்பயன்களை (நல்வினை, தீவினை) அனுபவிக்கச் செய்தல்

3. அழித்தல் - சம்ஹாரம்: தனு, கரண, புவன, போகங்களை நீக்குதல்

4. மறைத்தல் - திரோபவம்: ஒரே பிறவியில் வினைப்பயனை தீர்த்துக் கொள்ள முடியாத உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்கும்போது வெறுப்படையாது இருக்க, பாசம் தேயுமளவு வினைப் பயன்களை துய்க்குமாறு ஆழ்த்துதல்

5. அருளல் - அனுக்கிரஹம் உயிர்கள் மீது படிந்த பாசம் அகன்றதும் ஞானம் ஏற்பட்டு கடவுளை நாடும். இவ்வாறு தூய்மையடைந்த ஆன்மாவை துய்க்குமாறு செய்தல்

இவ் ஐந்தொழிலையும் ஒருங்கே ஆற்றுவதே ஆனந்த தாண்டவமாகும். ஒவ்வொரு தொழிலுக்கும் தனித்தனியான தாண்டவமும் உண்டு. சிவ தாண்டவங்கள் 108 ஆனந்த தாண்டவத்தில் படைத்தலை துடியும், காத்தலை அபயமும், அழித்தலை அக்கினியும், மறைத்தலை ஊன்றிய திருவடியும், அருளலை தூக்கிய திருவடியும் உணர்த்துகின்றன. இறைவன் தாமரைப்பூ பீடத்தில் நின்றாடுகின்றான். இது நமது இதயக் கமலத்தில் நின்றாடுவதைக் குறிக்கின்றது. முயலகன் மீதும் நின்றாடுகின்றான். முயலகன் மும்மலங்களின் உருவம். தூக்கிய திருவடி அருளலை குறிப்பதால், அதனை அடைவதே ஆன்மாக்களின் குறிக்கோள் என்பதை வீசிய கரத்திலுள்ள சுட்டுவிரல் சுட்டிக்காட்டுகின்றது. மற்றைய 4 விரல்களும் முயலகனை சுட்டிக்காட்டி மும்மலங்கள் அற வேண்டும் என்பதனை உணர்த்துகின்றன.

அபயகரம் இறைவன் உயிர்கள் மேல் கொண்ட கருணையின் அபிநயக் குறிப்பு. குமிண் சிரிப்பு திருவுள்ளத்தின் கருணை வெளிப்பாடு. திருவாசி இயற்கையைக் குறிக்கும். திருவாசிக்குள் நின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றாடுவது இயற்கையுடன் இணைந்தும், அவற்றின் உடனாகியும் இருப்பதைக் குறிக்கும். விரிந்த செஞ்சடை, பறக்கும் ஆடை ஆட்டத்தின் வேகத்தைக் காட்டு கின்றது. எத்தகைய வேகத்தில் இருந் தாலும், அதிலிருந்து வேறுபட்டு விகார மடையாதவனாய் இருப்பதைச் சாந்தமுக மும், கருணைபொங்கும் விழிகளும் காட்டு கின்றன. முடி, அக்கினி, உத்தரியம், ஊன் றிய திருவடி, தூக்கிய திருவடி, துடி ஆகிய ஆறும் 60 பாகைக்கொன்றாக அமைந்து திருவாசியாகிய பிரபஞ்சத்தைத் தொட்டு நின்று, பிரபஞ்சத்தையே இயக்கும் ஆரக் கால் போன்றிருக்கின்றன. அத்துடன் அறு கோண அமைப்பிலும் அமைந்திருக்கின் றமை விஞ்ஞானிகளையே வியப்புக்குள் ளாக்குகின்றது.

ஆனந்த தாண்டவத்தை ஓங்கார தாண்டவம் என்றும் கூறுவர். அத்துடன் "நமசிவாய" என்னும் பஞ்சாட்சர மந்திரத் தின் வடிவமாகவும் கொள்வர். எனவே திருநடனம் உணர்த்தும் ஒவ்வொரு தத்துவக் கருத்தையும் புரிந்து காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி நாள்தோறும் தவறாது வழிபாடு செய்துவர மனம் தெளிவு பெறும். புத்துணர்வடையும் ஆணவம் மெல்ல மெல்ல அகன்று மெஞ்ஞானம் கைவரப்பெறும். சாந்தி தவழும். பிறவாப் பேரின்ப நிலை வந்தடையும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் வெற்றிப் பயணங்கள்



**கௌ.மகிழினி**

மாவட்ட மட்டப் பேச்சு – 2015 2ம் இடம்
மாவட்ட மட்டம் பேச்சு 1ம் இடம்
தேசிய சிறப்பு பரிசு – 2018



**கி.யதுசன்**

மாவட்ட மட்டம் கட்டுரை
3ம் இடம் – 2015



**ம.டிலான் கிருஷ்ணா**

மாவட்ட மட்டம் பொது அறிவு போட்டி
1ம் இடம் – 2015
மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
1ம் இடம் – 2017
மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
2ம் இடம் – 2019



**ம.சர்மிகா**

மாவட்ட மட்டம் கட்டுரை
3ம் இடம் – 2015
மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
1ம் இடம் – 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் வெற்றிப் பயணங்கள்



**சி.கரண்யா**

தேசிய மட்டம் கதாப்பிரசங்கம்
3ம் இடம் - 2017
மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
2ம் இடம் - 2019



**ஜெ.யந்துசன்**

மாவட்ட மட்ட கதாப்பிரசங்கம்
1ம் இடம் - 2017



**க.கனிமொழி**

மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
1ம் இடம் தேசிய சிறப்பு
பரிசு - 2018



**மோ.அபிசன்**

மாவட்ட மட்டம்
நீதிநூல் மனனம்
1ம் இடம் - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிரை நாளில் சிவன்



சிவநெறிச் செம்மல் க.நித்தியபாபுதரன்
ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு பெண்கள்
உயர்தரப்பாடசாலை

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியை…" என்னும் மணிவார்த்தையாகிய திருவெம்பாவைப் பாடலடியை மணிவாசகர் அருளினார். சிவத்தோடு சைவமும் ஆதியந்தம் இல்லாத நெறியாகும். சைவத்தின் மேல் சமயம் இல்லை எனக்கூறுவார்கள். அதனையே மணிவாசகர் சிவத்துடன் அண்ணிப்பாய் சித்தம் மகிழ்ந்து பாடியருளினார். உணர்வரிய மெஞ்ஞானப் பொருளை ஞானத்தமிழாய் அருளினார். அதன் வழி இவ்வுலகம் இயக்கம் பெற மார்கழி நீராடல் நவசக்திகளாய் காட்டி உண்மைப் பொருளாய் இறைவனை நிலைநிறுத்தினார்.

இச்சங்கார காரணநாயகன் அனைத்தும் கடந்து சூக்குமப் பொருளாய் சொரூப இலட்சணம் கொண்டவர். பரந்தாபனார் உணரும் ஞானப்பொருளாய் விளங்குவார். இதனை மணிவாசகர் கூறுகின்றார்.

"மாலறியா நான்முகனும் காணாமலையிலை…
(திருவெம்பாவை)
"தேவர்கோ அறியாததேவ தேவ…?
(திருவாசகம்)

என்னும் கருத்தினை சிவஞான சித்தியாரில் அருவம், உருவம், அருவுருவம் இல்லாத நிலை எனச் சித்தரிக்கப்படுகிறது.

'சிவனுரு அருவுமல்லன் சித்தினோட சித்துமல்லன்
பவந்தரு தொழில்களொன்றும் பண்ணிவோனுமல்லன்'
(செ - 10)

எனச் சொரூப லட்சணம் உடையோன் சிவன் என்பர். ஆனால் ஆன்மாக்களின் சிந்தனைக்கு சித்தமாகி அருள் சுரந்தளிக்கும் வடிவம் கொள்நிலையினைச் சாத்திரங்கள் தடத்தலட்சணம் எனக் கூறுகின்றன. திருவாசகத்தில் மணிவார்த்தையில்

'சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி…'
'பக்தி வலையில் படுவோனைக் காண்க…'
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க…'

எனச் சித்தம் தெளிந்த அருளார்கள் எனப் பெற்றனர். நடத்த நிலையில் முத்திருமேனி யுடையோன் சிவன் என்பர். மணிவாசகர் கூறுகிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உருமூன்றுமாகி உணர்வரிதாம் ஒருவனுமே....' (திருச்சாழல்)
' அருவம் உருவமும் ஆனாய் போற்றி...' (போற் - திரு அகவல்)
'அருவாய் மறைபயில் சுந்தணனாய்...' (கோத்தும்பி)
அதனை சிவஞான சித்தியார் கூறுகின்றபோது.
'அருவமும் உருவரூம் ஆனதும் அன்றிநின்ற
உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்கு
மேலும் உமாபதிசிவாச்சாரியார் திருவருட்பயனில்,
'அருவும் உருவும் அறிஞர்க்கறிவாம்
உருவும் உடையான் உளன்'

இவ்வாறு முத்திருமேனி நாயகனின் உருவத் திருமேனியூடாக சிவமூர்த்தம் கூறப்படுகிறது. சிவாகமங்கள் அறுபத்துநான்கு மூர்த்தம் கூறி அதனிலும் சிறப்புடையது இருபத்தைந்து ஆகும். போக இன்பமூர்த்தியாய் விளங்குபவரே தரிசனநாயகர் ஆவார்.

சைவர்கள் மார்கழி மாதம் முழுமையாக திருவாசக மாதமாய் சிவனையே பாடி வழிபாடு செய்யும் திருவெம்பாவை காலத்து இறுதிநாளாம் திருவாதிரை நட்சத்திரம் கூத்தப்பெருமானின் நாளாகும். அந்நாளே ஆருத்தர் தரிசனம் என்பர். தில்லையில் கூத்தனே என சிவபுராணம் கூறுகிறது.
'தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலம்...'
'பொன்னம்பலத்தெம் முடியாமுதலே.....'
'ஈசா பொன்னம்பலத்தாடும் அமுதே...'
'அணங்கோடனி தில்லை அம்பலத்தேயாடுகின்ற...'
'பொன்னம்பலக் கூத்தா...'

இவ்வாறு பெருமானை நெக்குநெக்குருகி பாடியருளினார். இவர்போல் நாவுக்கரசரும் இருந்துருகி அவருடைய அழகினைப் பாடியருளினார்.
'குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமின்சிரிப்பும்...'
(தேவாரம்)
என்னும் பாடலினூடாக அறிய முடிகிறது.
நர்த்தனநாயகன் அழகுடன் மந்திர வடிவினன் ஆவார். சைவர்கள் வாழ்வில் ஒலிப்பது நகராதிபஞ்சாட்சரம் என்னும் நமசிவாய மந்திரம் சூக்குமபஞ்சாட்சரம் என்னும் சிவாயநம மந்திரம் என்பர். இம்மந்திர நாயகனாய் மணிவாசகர் காண்பித்தார். அதாவது நடராஜரை நமசிவாய என்னும் தூலமந்திர வடிவமாகக் காட்டுகின்றார்.
'நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க...'
என்றார்.
அதனை அருணந்தி சிவம்
'மந்திரமத்துவாவின் மிகுத்தொருவடிவமாக...' (சி.சி)
கூறுகின்றார்.
இந்நாயகனின் நர்த்தனமே ஆன்மாக்கயின் இயக்கம் பஞ்சபூத இயக்கம் ஆகும். அதனையே பஞ்சகிருத்தியம் என்பர். ஊனநடனம், ஞானநடனம் கொண்ட பெருமானின் நடனமே ஆன்மாவின் பிறப்பறுக்க பிறவிப் பெருவாழ்வு பெற்றுக்கொள்கின்றன. அதனை சுட்டும் நிலையில்
"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருந்தருவாய்
போக்குவாய்..."

(சிவபுராணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் வழிநடராஜர் ஆன்மாவின் மலங்கழுவார்சார்தலில் பஞ்சகிருத்தியச் செயலை மணிவாசகம் கூறுகிறது.

"காத்தும் படைத்தும் காரந்தும் விளையாடி...."
"ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்யவர்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்"

இதனைச் சாத்திரங்கள் தெளிவுபடுத்திச் செல்கின்றன.

"சொன்ன இத்தொழில்கள் என்ன காரணம் தோற்றலெனின்
முன்னவன் விளையாட்டென்று மொழிந்தாலுமாம்..." (சி.சி.சுப)
அக்கருத்தினை உமாபசிவம் சிவப்பிரகாசத்தில்
"ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக..." (சிவப் 18-1)

பெருமானின் விளையாட்டினால் வினைபோம் என்பதனை கூறியிருப்பதனைக் காணலாம். மேலும் மணிவாசகர் திருவெம்பாவையின் இறுதிப் பாடலில் மலர்ப்பாதங்கள் ஒவ்வொரு தொழில்களைப் புரிகின்றன என்பதை உணர்ந்து அருளினார். பாதங்களை பாவித்தால் பாவம்போம் "பாதந் தொழுவார் பாவம் தீப்பார்" என ஞானக்குழந்தை கூறினார்.

நர்த்தன நாயகனின் மலர்பாதம் என்று எண்ணியபடி நோக்கும்போது
"போற்றியெல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்.."

இதன்வழி தோற்றம் என்பது படைத்தல், போகம் என்பது காத்தல், ஈறாம் என்பது அழித்தல், காணாத என்பது மறைத்தல், அருளும் என்பது அருளல் என்பர் என்பதனை ஒவ்வொரு பாதங்களாய் மலர்ந்துள்ளது. பொற்பாதம், பூங்கழ் இணையகள் புண்டரிகம் (தாமரை) பொன்மலர் பாதம் (குஞ்சிதபாதம்) ஆகும்.

'தோற்றம் துடியதனில் தோயுதிதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் மூத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு' எனத் திருவதிகை மனவாசம் கடந்ததேவர் கூறினார். தூக்கிய திருவடித் தரிசனம் காணப்பெற்றால் அல்லற் பிறப்பு யாவும் நீங்கிப் பேரின்பம் அடைவர்.


'தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல்பிறப்பு அறுப்பானே ஒவென்று சொல்லற் கரியானைச்
சொல்லித் திருவடிக் கீழ்...' என்பதன் ஊடாகப் பெறுதற்கரிய முத்தியின்பம் பெறுதலே திருவாதிரை தரிசனம் ஆகும். அத்தரிசனநாயகனே நடராஜர் அவரே ஆருத்தரா தரிசன நாயகன் ஆவார். அதனாலே ஞானக்குழந்தை கூட "ஆதிரை காணாது போதியோ.." என்று கூறுகின்றார். அத்தரிசனம் பெற்றுக்கொண்டோர் சிவலோகப் பேறு பெற்றிடுவார் என்பதை தான்வாழ்வில் சிதம்பரத்தின் ஊடாகச் சிவபுரம் சேர்ந்து இன்புற்றார் மணிவாசகர்.

'கூசு மலர்பாதம் தந்தருளும் சேவகன்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்தே...'

எனக் கூறியிருப்பதைக் காணலாம். எனவே சிவனடியார்களே ஆருத்தாராதரிசன நாயகரினால் என்றும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதோடு பேரின்பப் பேறும் பெற்றிடுவோம்.

சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவசமயம் வழி காட்டும் ஆன்மீக வாழ்வு



**சைவப்புலவர் செல்வி ரஜீதா கையிலாயநாதன்**
ஆசிரியர்,
மன./ஆண்டாங்குளம் றோ.க.த.ம. வித்தியாலயம்.

மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழி சமைப்பன சமயம் என்றால் அது மிகையாகாது. இவ் உடலைப் பெற்றதனால் ஆன பயனை நாம் பெற வேண்டும். அவ்வாறு பிறந்த பயனைப் பெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் வாழும் வகையறிந்து வாழ வேண்டும். எனக் கூறுகின்றன சமய நூல்கள்.

சைவசமய நூல்களிலே புனிதமான நூல்களிலே ஒன்றான வேதங்கள் வாழ்க்கையின் இலட்சியத்தின் அம்சங்களுக்கும் நன்மை பயக்கும் கொள்கைக்கும் தோற்றுவாயாகக் காணப்படுகின்றன. ஆத்மா எல்லையிலடங்காதது பிறப்பும் இறப்பும் அற்றது. பல சரீரங்களை எடுத்து இறுதியில் மனித சரீரத்தில் இருந்து பூரணத்துவமாகிய விடுதலையை அடைகின்றது என்பது சைவ சமயத்தவர்களின் அடிப்படைக் கொள்கை. இதனையே மாணிக்கவாசகரும் புல்லாகி பூடாய் புழுவாய் மரமாகி.... என்ற திருவாசகப் பாடலில் பல்வகைப் பிறப்புக்களை உணர்த்துகிறார்.

எண்ணற்ற பிறவிகளில் மானிடப்பிறவிதான் அரிதிலும் அரிது என்றும் பிறப்பிலே உயர்ந்த பிறவி என்றும் கூறப்படுகிறது. பிறந்ததன் நோக்கத்தைச் சரிவர அறிந்து அதற்கேற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்பவனே நிறைவான மனிதன், மனித வடிவத்தில் பிறப்பெடுத்தால் மட்டும் போதாது. மனிதனாகப் பிறந்தவனிடத்திலே மனிதத் தன்மை பொருந்தியிருக்க வேண்டும். அப்பொழுது தான் மனிதன் தனது மனதை உயர்தகுதி உடையதாக ஆக்கிக் கொள்ள முடியும். இதற்கு மேலும் வழிவகுப்பன ஒழுக்கமாகும்.

நெறிமுறையான வாழ்க்கைக்கும் ஒழுக்கமுடமைக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. உள்ளத்தில் எழும் சிந்தனைக்கேற்ப எப்படியும் நடந்து கொள்ளலாமே என எண்ணத் தூண்டுவது இயல்பே. மக்களின் ஆன்மீக வாழ்வைப் பொறுத்தவரை ஒழுக்கம் சமய வாழ்வுக்குப் பக்க பலமாக அமைகின்றது. மனித மனம் தனக்கு தானே உருவாக்கிக் கொண்ட செயல்களை சிந்தனை என்கின்றோம். சிந்தனைகள் ஒழுக்கங்களைத் தனதாக்கிக் கொள்ளும் போது அது ஞானமாக நிறைவடைகின்றது. வாழ்க்கையின் வளர்ச்சி, நீடித்த மகிழ்ச்சி ஆகியவற்றிற்கு மட்டுமன்றி ஆன்மீக வாழ்வுக்கும் ஞானம் வழிசெய்கின்றது. இதனாலே சைவசமய நூல்களும் ஞானத்திற்கு சிறப்பிடம் வழங்கியுள்ளன. உபநிடதங்கள் ஞானத்தைப் பொருளாகக் கொண்டுள்ளன. பகவத்கீதை ஞான யோகத்தை உபதேசிக்கின் றது. ஆகமங்களிலே ஞானபாதம் சிறப்பிக்கப்படுகின்றது. ஞான நிலையில் ஒருவன் கடவுள் திருவுளத்துக்கு ஏற்ப ஒழுக வேண்டும் என்பதை மனிதன் உணர வேண்டும். ஒழுக்கத்துடன் கூடிய வாழ்க்கையின் வாயிலாக மனிதன் தனது விழுப்பத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை வள்ளுவர்

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.”

என வலியுறுத்திக் கூறியுள்ளார். மலரானது தன்னிடத்தே உள்ள அழகையும், நறுமணத்தையும் இயல்பாகவே வெளிப்படுத்துதல் போல மனிதனும் தன்னிடத்தே உள்ள புனிதத் தன்மையையும், பேரன்பையும், பண்பையும் புலப்படுத்த கடமைப்பட்டுள்ளான். அதற்காகவே மனிதப் பிறவியை எடுத்த ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தின் வழியில் வாழ்கின்றபோது, நாளடைவில் தெய்வ சந்நிதியில் கொண்டு சேர்த்து விடுகின்றது.

மக்களது சிந்தனையின் தன்மைக்கு ஏற்ப வாழ்க்கையின் நோக்கங்களும் வேறு படுகின்றன. சிலர் உலகியல் வாழ்க்கையில் இன்பமுற்று இருப்பதை நோக்கமாகக் கொண்டு வாழ்கின்றனர். மனித வாழ்க்கையின் நோக்கங்கள் பல வித அனுபவங்களைப் பெறுவதி லும் அதற்குண்டான வழிகளைத் தேடுவதிலுமே அமைகின்றன என கருதுபவர்களும் உளர். ஆனால் மனிதர்களின் ஒவ்வொரு செயல்களும் நல்லவை தீயவை என்றும், உயர்ந்தவை - தாழ்ந்தவை என்றும், ஏற்றுக் கொள்ளத்தக்கவை - ஏற்றுக் கொள்ளத் தகாதவை என்றும் விமர்சிக்கப்படுகின்றன. இதே போல் வாழ்க்கையின் நோக்கங்களும் மனிதர்களுக்கு மனிதர் வேறுபடுகின்றன. ஆனால் மனிதன் வாழ்வின் அடிப்படை இலட் சியத்தையும் அதனை அடைவதற்கான வழிகளையும் காண முயல வேண்டும். அப்பொழுது தான் ஆன்மீக வாழ்க்கையை நாடி மனிதன் செல்ல முடியும்.

தனி மனிதனின் வளர்ச்சி அவன் அனுபவிக்கும் அமைதியைப் பொறுத்தது என அறிஞர்கள் கூறுவர். அமைதி எப்பொழுதும் ஞானத்தின் எல்லையைக் காட்டுவனவாக அமைகின்றது. அமைதியின் மறுபெயர் ஆத்மா என்பதாகும். இவ் ஆத்மாவின் தெளிவான ஞானமே ஆத்ம ஞானம் எனப்படுகிறது. எது சாந்த வடிவாகவும் தன் சுய அமைதியைத் தானே உணரும் அறிவு ரூபமாகவும் இருக்கின்றதோ அதுதான் ஒவ்வொரு மனிதனதும் பிறப்பு இறப்பு அற்ற சுயநிலை என ஞானிகள் கூறியுள்ளனர். இந்த நிலை தற்போது




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எம்மிடையே மறைக்கப்பட்டு எட்டாத ஒரு பொருள் போன்று காணப்படுகின்றது. அதை அடைய ஆயிரமாயிரம் முயற்சிகளை நாம் எடுக்க வேண்டும் என்பதுதான் இன்றைய மன நிலையாக அமைகின்றது.

மனிதனைப் பொறுத்தவரை மரணம் நிகழ்ந்தே தீரும். அதனைத் தவிர்க்க முடியாது. நமக்கு முன் வாழ்ந்த எத்தனையோ மகான்களும், சாதாரண எளிய வாழ்க்கையினை வாழ்ந்த மக்களும் இறந்துள்ளனர். அதனை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆயினும் ஆன்மீக கருத்துக்களின் ரீதியாக ஆராயும் போது இருக்கு வேதம் இறப்புப் பற்றியும், இறப்புக்கு பின் உள்ள வாழ்க்கை பற்றியும் கூறுகின்றது. இருக்கு வேதத்தில் பத்தாம் மண்டலத்தில் உள்ள நாசதீய சூக்தப் பகுதி இதற்கு சான்றாகும். இது போல சமய நூல்கள் பல இறப்பின் பின்னான வாழ்க்கை பற்றி பேசுகின்றன. எல்லா நூல்களினதும் பேசு பொருள் ஒன்றாகத்தான் அமைகின்றது. அதாவது செய்யும் வினைக்கு தக்க வகையிலே மறுமை வாழ்வு அமையும் என்பது திண்ணம்.

மலங்களை நீக்கி அறிவோடு கூடிய நல் வினைகளைச் செய்யும்போது இறைவனது உலகை அடைய முடியும். மாறாக மலபந்தங்களால் அகப்பட்டு வாழும் போது மீண்டும் மீண்டும் வினைக்கு தக்க பிறப்பினை எடுத்து வாழ வேண்டிய நிலை ஏற்படும். அதனை விடுத்து ஆன்மீக ரீதியான வாழ்க்கையை வாழுகின்றபோதும் ஆன்ம ஈடேற்றத்தினை பெறமுடியும்.

உடல் உயிரோடு இருக்கும் போது ஆற்ற வேண்டிய நற்கருமங்கள் பற்றி நாயன்மார்கள் வற்புறுத்தியுள்ளனர். நாம் பிறப்பதும், இறப்பதும் எப்போது நிகழும் என்பதை யாரும் நிச்சயமாக கூறமுடியாது. இந்த உடலில் இறைவன் ஆன்மாவை வைத்ததன் நோக்கம் பிறப்பென்னும் உலையில் உருக்கி உருக்கி ஆன்மாவைச் சூழும் கழிம்பினை அறுத்தலாகும். இப்பிறவி நிலையில்லை இறப்பு என்பது நிச்சயமானது என்பதை உணர்ந்து நாட்களை வீணாக்காமல் இறைவனை வணங்க வேண்டும். உயிருள்ள போதே நாம் இறைவனின் திருவருளுக்கு பாத்திரமாக வேண்டும். சமய குரவர்களும், சைவப் பெரியார் களும் பிறவிப் பிணிகளை நீக்குவதற்கான வழிகளை தமது நூல்களிலே குறிப்பிடுகின்றனர். உதாரணமாக மாணிக்கவாசகரின் திருவாசகமாகிய தேன் பிறவித் துன்பத்தை நீக்கும் மருந்து மனித வாழ்வில் அல்லல்கள் அனைத்தும் அறியாமையால் விளைவன தொல்லையிரும் பிறவி நீங்க வழிவகுப்பது திருவாசகத்தேன் ஆகும்.

சிவபுராணத்திலே

"சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறு நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்..."

என்று போற்றுகின்றார்.

காரைக்காலம்மையார் இறைவன் தாள் சேரும் நிலையில் கிட்டும் அனுபவத்தை அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிடுகையில்

இனியோம் நாம் உயந்தோம் இறைவன் தாள் சேர்ந்தோம்
இனியோர் இடர் இல்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக் கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண்..."

என்கின்றார்

திருவள்ளுவர் தனது திருக்குறளிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார்..."
எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக சைவசமய மரபிலே ஆத்மீக வாழ்வுக்கேற்ற வழிவகைகள் எண்ணற்றவையாகக் காணப்படுகின்றன. ஏதாவது ஒன்றினை பற்றுக் கோடாகக் கொண்டு ஆத்மா நலம் பெற எவருக்கும் வாய்ப்புண்டு. பிறவிப் பயனைப் பெற எமது உடலைப் பயன்படுத்துவதே சிறந்த முயற்சியாகும். நவீன காலத்திலே ஆன்மீகம் சார் செயற்பாடுகள் அருகி வருவதனை கண்கூடாகக் காண்கின்றோம். இதனால் அவலங்களோடும் துன்பங்களோடும் நாம் அலை மோதுகின்றோம். அதனை விடுத்து இப்பிறவியை உரிய வாய்ப்பாகக் கொண்டு ஆத்மீக வாழ்வில் மேன்மை அடைதல் வேண்டும். ஆன்மீக மயமான வாழ்வு எம்மையும், எம்வாழ்வையும் வளம்படுத்தும் என்பதிலே எவ்வித ஐயமுமில்லை. உலகில் உள்ள உயிர்கள் உய்வு பெறும் பொருட்டு ஆறு வழிகளை மாணிக்கவாசகர் குறிப்பிடுகின்றார். உனது திருவடியை நினைத்து உள்ளம் குழைய வேண்டும். மனம் தனலிடைப்பட்ட மெழுகு போல உருக வேண்டும். நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்துத் துதிக்க வேண்டும். உனது புகழை இனிது ஓத வேண்டும். உனது திருக் கோயிலைக் கூட்டி மெழுக வேண்டும். ஆனந்த மிகுதியால் ஆட வேண்டும் என்பது ஆத்மீக வழிகளாகும். இவ்வழிகள் இலகுவானவை எம் அனைவராலும் பின்பற்றத் தக்கவை ஆன்மீக வாழ்வு மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்து தெய்வத்திடம் நம்மை கொண்டு சேர்க்கும். நம் பிணியறுத்து எம்மை உய்விக்கும், உயர்விக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம்

சைவப்புலவர் **கா. கனகதுர்க்கா**
ஆசிரியர்,
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியை எடுத்த நாம் சிறப்புற்று வாழ வேண்டு மாயின் அறவழி வாழ்தல் வேண்டும் என்பதுதான் சைவசமய சித்தாந்தம். எனவே தான் அறம் செய விரும்பு என்ற ஔவையின் கோட்பாட்டை ஆரம்ப வயதினிலேயே பிள்ளைகளுக்குப் போதித்து, அவர்களின் ஆணிவேர்ச் சிந்தனையாக ஆக்கும் முயற்சியில் ஆரம்பகால மக்களின் வாழ்வியல் சிந்தனையும் இன்றைய அறநெறிக்கல்வியும் இயைபுபட்டிருக்கின்றது.

அறம் என்பது, வெறுமனே தான தர்மம் செய்தல் என்ற பொருள் தரும் பதம் அல்ல என்பது வள்ளுவம். அறம் எனப்படுவது மனிதர்களின் பண்பு நலன், மனம், சொல், செயல் சார்ந்ததாகும். இதன் அடிப்படையில் அறம் செய விரும்பு என்ற சொற்றொடரை ஆழ்ந்து நோக்கினால் மனிதர்கள் மனத் தூய்மையுடன் வாழ்வில் அறநெறியைக் கடைப் பிடித்து வாழ நாட்டம் கொள்ளுதல் வேண்டும் என்ற கருத்து தெளிவு படுத்தப்படுகின்றது.

இவ்வாறான அறம் சார்ந்த வாழ்வை நாம் மேற்கொண்டு வாழ்வதற்கு அடிப்படை அத்திபாரமாக அமைவது கல்வியும் ஒழுக்க நெறியுமே ஆகும். ஆகவேதான், மனித வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவப் பெருந்தகை, "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்று கூறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் செல்வத்துக்கு நிகரான செல்வம் இந்த உலகில் வேறொன்றுமில்லை என்பதை அறிவுறுத்தியதோடு ஒழுக்க நெறியின்றி ஒருவன் எத்தகைய கல்வி அறிவைப் பெற்றிருந்தாலும் அவன் அறிவற்றவனே என்றார். இதனையே,

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"

என்னும் குறட்பா வலியுறுத்துகின்றது. ஆனால், தகவல் தொழினுட்ப யுகமாகப் பரிணமித்துள்ள இன்றைய மனித வாழ்வில், கல்வி என்பது ஒழுக்க நெறி சார்ந்தது என்பதைப் பல பெற்றோர்கள் உணராமல் இருப்பதுதான் இன்று எம் கண்முன்னே நடைபெறுகின்ற மிகப்பெரிய சமூக அவலங்களுக்குக் காரணமாகியுள்ளது. தமது பிள்ளைகளின் ஒழுக்கம், திறமை, விருப்பம் இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு அவர்கள் மருத்துவர்களாக வேண்டும், பொறியியலாளர்களாக வேண்டும் என்ற நாகரிக மோகத்தில் தங்களின் வணிக நோக்கம் கொண்ட எண்ணத்தைத் திணித்து தனியார், கல்விக் கூடங்களை நோக்கிப் படையெடுப்பது இன்றைய காலப் பெற்றோர்களின் வாடிக்கையாகி விட்டது.

பெற்றோர்களின் இத்தகைய மனநிலையைப் புரிந்து கொண்டு வணிக நோக்குடன் செயல்படும் தனியார் கல்வி நிறுவனங்களும் இன்று பெருகிவிட்டன. ஆனால், மாணவர்களின் பண்பு நலனைச் செழித்தோங்கச் செய்வதற்கான ஒழுக்க நெறியைப் புகட்டுதல் என்னும் மகத்தான பணி பெரும்பாலான கல்விக் கூடங்களில் இன்று அருகிவிட்டது என்பதே ஏற்றுக் கொள்ளத்தக்க உண்மை. இத்தகைய நிலையில்தான் இன்றைய சமூகத்தை நெறிப்படுத்தி மீட்டெடுக்க, அறநெறிப் பாடசாலைக் கல்வியை அனைத்துப் பிள்ளைகளும் பெறுவதற்கு ஆவன செய்யும் நோக்கில் இன்று கல்விக்கூடங்கள் தோறும் அறநெறியைப் போதிப்பதற்கான சிந்தனை முகிழ்த்துள்ளது.

இந்த நிலையில் முன்னைய காலங்களில் கல்விக் கூடங்கள் எவ்வாறு செயல்பட்டன என்பதை நாம் திரும்பிப் பார்ப்பதும் நன்று. அன்றைய காலகட்டத்தில், எந்தவொரு பாடசாலையிலும் கல்வி கற்பித்தலுக்கான நேர அட்டவணையில் வாரம் ஒருமுறை நீதி போதனைக்கென்று ஒரு வகுப்பை ஒதுக்கி, தனிமனித ஒழுக்கத்தின் அவசியத்தை உளவியல் ரீதியாகப் போதித்தார்கள். ஆன்மீகச் சுற்றுலா மற்றும் கல்விச் சுற்றுலா என விவசாயம், நெசவு, தச்சு போன்ற தொழில் செய்யும் இடங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், கோயில்கள், கோட்டைகள் போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை மாணவர்களின் மனதில் பதிய வைத்து மனவளத்தைச் செம்மைப்படுத்தும் பணியினை மேற்கொண்டனர்.

ஆனால், இன்றைய காலகட்டத்தில் இத்தகைய சுற்றுலாக்கள் பொழுது போக்கிற்கான களப்பயணமாக அமைகிறதே தவிர, இத்தகைய ஒழுக்கநெறி சார்ந்த கல்வி முறை கானல் நீராகிவிட்டது என்றே கூறவேண்டும். ஒருகாலத்தில் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமானது கந்தபுராண கலாசாரமாக மிளிர்ந்து கந்தபுராணக் கதைகளைக் கேட்டு, இரசித்து, இதன் வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்த நிலையில், இன்று வீடுகள் தோறும் மனம் நொந்த புராணக் கதைகளையே கேட்டு, வெந்த புண்ணில் வேலோச்சும் மிலேச்சத்தனமான செயல்களையே கண்டு தவிக்கின்றோம். இன்று இந்த நிலைக்கு எமது சமூகம் தள்ளப்பட்டதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்தால், மனித மனங்களில் அறநெறி சார்ந்த வாழ்வியற் கூறுகள் செத்துவிட்டதே காரணமெனலாம்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அறநெறி வாழ்வின் அஸ்தமனத்தால், கல்வியின் மேன்மையை அறியாத கயவர்கள் ஒருபுறமும், கல்வியின் மகத்துவம் உணர்ந்தும், ஒழுக்கமிலாச் சிந்தனையால் சமூகத்தைச் சீரழிப்போரும் இக்காலப்பகுதியில் அதிகரித்துள்ளனர். இவ்வாறான காரணங்களினால்தான் எதையும் பகுத்தாய்ந்து பார்க்கும் மனப் பக்குவம் அற்று, பள்ளிப் பருவத்திலேயே சில மாணவர்கள் திசை மாறி மது மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமையாகுதல், பாலியல் குற்றங்களில் ஈடுபடுதல், வழிப்பறி செய்தல் போன்ற விரும்பத் தகாத செயல்களில் ஈடுபட்டு தங்களது வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்ளும் அவல நிலையை நாம் கண்கூடாகக் காண்கிறோம்.

கல்வியின் மேன்மையை உணராது இடைவிலகியவர்கள் ஒழுக்க நெறியற்று இருப்பதால், அருகிலே ஆபத்து குவிந்திருக்கும் சமுதாயமாக இன்றைய சமுதாயம் உருவாகியிருக்கிறது. “அயல் ஆயிரம் பொன் பெறும்” என்ற பழமொழி நலிந்து போய், அயலிலுள்ளவர்களாலேயே ஆபத்து உண்டாகும் பயங்கரமான சூழல் இன்று உருவாகி யிருக்கிறது. பேதையர்களின் போதைவஸ்து பாவனை, இன்று பாரம்பரியத்தைப் பேணுவதற் கான மிகப்பெரும் சவாலாக உருமாறியுள்ளது. ஒழுக்கமில்லாத கல்வியால் உயர்ந்தவர்கள் ஊழல் வாதிகளாகவும் நிதி மோசடிக் காரர்களாகவும், பெற்றோர்களை, சான்றோர்களை மதிக்காதவர்களாகவும் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களாகவும் சமூக சீரழிவு களுக்குத் துணை போகின்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதனால்தான், புத்திஜீவிகள், கல்வியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பதை, மனதில் கொண்டு வருங்காலச் சமுதாயத்தைத் தாங்கும் தூண்களாகிய இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஒழுக்கம் சார்ந்த அறநெறிக் கல்வியைப் புகட்டுவதற்கான ஆக்கப் பணிகளைக் காலந்தோறும் முன்னெடுத்து வந்துள்ளனர். முன்னைய காலத்தில் ஆலயம் தோறும் அறநெறிக்கல்வி” என்ற கொள்கையின் அடிப்படை யில் ஆரம்பிக்கப்பட்ட அறநெறிக் கல்வியானது. இன்றைய காலத்தின் அத்தியவசிய தேவை கருதி “பள்ளித்தலங்கள் தோறும் அறநெறிக்கல்வி” என்ற கொள்கையாக பரிண மித்துள்ளமை, காலத்தின் தேவையை உணர்த்தியுள்ள காத்திரமான கொள்கை எனலாம்.

இன்றைய காலத்தில் இக் கொள்கையை அமுல்படுத்தும் பொருட்டு, இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டுள்ள அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, வட மாகாண கல்வி அமைச்சும் கைகோர்த்துப் பயணிக்கின்றமை சாலச் சிறந்த, வரவேற்கத்தக்க விடயமாகும். எனினும் இவ்விடயத்தில் அதிக கரிசனை கொள்ள வேண்டியவர்கள் பெற்றோர்களே. ஏனெனில், பிள்ளைகளுக்கு சகல விடயங்களிலும் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் இருப்பவர்கள் பெற்றோர்களே. மேலும் ஆசிரியர்களும், பாடசாலை அதிபர்களும் கூட இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்படு வது நன்று. அரசமட்டத்தில் நாடளாவிய ரீதியில் இவ் அறநெறிக்கல்வியைச் செயற்படுத்தும் போது, முன்பு கூறிய சவால்களிலிருந்து எமது சமூகத்தை மீட்டெடுக்கலாம் என்பதில் துளியள வும் ஐயமில்லை .

அறநெறிக் கல்வியானது வெறுமனே சமயக் கல்வி என்று எண்ணுவோர் பலர். தேவாரத்தையும் சமயப் பாட நூலையும் கற்கின்ற பாடசாலை என்ற எண்ணத்தில் பலர் அதை நாடாமல் போகின்றார்கள். ஆனால் முதலில் அறநெறிக் கல்வி என்பது சமயக்கல்வி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல என்பதில் அனைவரும் தெளிவு பெறவேண்டும். மனித வாழ்வைச் செம்மைப்படுத்து வதற்கான ஆன்மீக சிந்தனைகளை அதாவது தார்மீக எண்ணங்களை வளர்த்தெடுக்கும் கல்விதான் இந்த அறநெறிக் கல்வி. மனதை ஒருமுகப்படுத்திக் கற்கும் சக்தியையும், உடலுக்கும் மனதுக்கும் உறுதி தரும் யோகாசானப் பயிற்சியையும், கலைகளை ரசிக்கவும், வெளிப்படுத்தவும் ஆற்றுப்படுத்தும் தன்மையையும், ஒருசேர அளிக்கும் கல்வியே அறநெறிக் கல்வி.

நவீன கல்விக் கொள்கைகளை உள்வாங்கிச் சீர்திருத்தப்பட்டுள்ள தேசிய கல்வித் திட்டத்திற்கு அமைவான சகல விடயங்களும் இன்றைய அறநெறிக் கல்வியில் பின்பற்றப்படு கின்றன. இலவசப் பாடநூல், இலவசச் சீருடை, இலவசக் கல்வி என்பவற்றோடு அறநெறிப் பாடசாலை மட்டம் தொடக்கம் பிரதேச மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் வரையிலான ஆக்கத்திறன் விருது வழங்கும் போட்டிகளையும் நடாத்தி தேசிய ரீதியிலான சாதனையாளர் களுக்குக் கல்வி மட்டத்தில் கிடைக்கக் கூடிய பல்கலைக் கழகத்துக்கான புள்ளிச்சேர்க்கைச் சலுகைகளையும் கிடைக்கச் செய்கின்றது. உயர்தரக் கல்வியின் பின்பு பல்கலை அனுமதியைத் தவறவிடுவோருக்கும் கூட அறநெறி இறுதிநிலைப் பரீட்சையில் தோற்றி, பின்னர் தர்மாசிரியர் பரீட்சையில் தோற்றிச் சித்தி பெற்றால், சமயபாட போதனாசிரியராக வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய தன்மையும் இக்கல்வியில் உண்டு.

இன்றைய காலகட்டத்தில் வேலை வாய்ப்புக்களின் போதான நேர்முகத் தேர்வு களிற்கான புள்ளியிடல்களில் அதிக கவனம் பெறும் சான்றிதழாக அறநெறிக்கல்விச் சான்றிதழ் திகழ்வதும் கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். மன ஒருமைப் பாட்டோடு கற்கவல்ல திறன் இங்கு விருத்தி செய்யப்படுவதால் எத்துறை சார்ந்து கற்கவிரும்பும் மாணவரையும் அத்துறையில் எளிமையாக உயர்த்திவிடக்கூடிய தன்மை இக் கல்விக்கு உண்டு. உதாரணமாக மருத்துவம், பொறியியல் கற்கும் மாணவர்கள் ஒரே பாடத்திற்கு அதிகமான தனியார் கல்வி நிலையங்களை நாடிச் செல்லும் அவலம் இப்பொழுது நடைமுறையில் உள்ளது. ஆனால், குறித்த மாணவர்கள் மன ஒருமைப் பாட்டோடு குறித்த பாடத்தைக் கற்பார்களாயின், நேரமும், செலவும் , அலைச்சலும் மீதப் படுத்தப்பட்டு ஆன்மீக பலமுள்ளவர்களாகவும், ஒழுக்க முடையவர்களாகவும் திகழ இவ் அறநெறிக் கல்வி வழி கோலுகிறது. மேலும் இக்கல்வியைப் பயின்று ஆன்மீக ஈடுபாட்டோடு வாழ்பவர்களுக்கு வேறு சில தகைமைகளையும் பூர்த்தி செய்யும் பட்சத்தில் பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பின் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான (சைவ சித்தாந்த முதுமாணி) ஏற்பாடுகளும் செய்யப் பட்டு வருகின்றன.

எனவே, சமயம் வேறு ஒழுக்கம் வேறு, கல்வி வேறு என்று பாகுபாடு காட்டாத தமிழ்ப் பாரம்பரியத்தில் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கக் கூடியதும், நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியையும் பண்பாட்டு மீட்சியையும், எதிர்கால சமுதாயத்தின் மாட்சிமையையும் ஒரு சேரத் தரவல்லது அறநெறிக் கல்வி. அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இக் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் அனைவரும் ஒன்றுபட்டுத் திகழவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அறநெறிப் பாடசாலைகளின் முக்கியத்துவம்

**திருமதி இந்திராணி ஈஸ்வரானந்தம்,**
பொறுப்பாசிரியர்,
கணேசா அறநெறிப்பாடசாலை

மனிதன் மனிதனாக மனிதப் பண்புகள் நிறைந்த வனாக வாழ வழிகாட்டுபவை அறநெறிப் பாடசாலைகள், மனித வாழ்வு மேம்பாடானது எனக் கருதுவதற்கு உதவுகின்ற பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகளை அறநெறிப் பாட சாலைகள் மாணவர்களிற்குப் போதிக்கின்றன. ஒழுங்குபடுத் தப்பட்ட பண்படுத்தப்பட்ட சீரிய ஒழுக்கங்களை சமயம் சார்ந்த அறப் பண்புகளை மாணவர்களிற்கு எடுத்துக்கூறி நெறிப் படுத்துகின்ற இடமே அறநெறிப்பாடசாலை.

ஒருவன் உயர்வான ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வானாகில் அவனிடத்து ஆன்மீக ஒளி பிரகாசம் அடை யும் அந்த ஆன்மீக ஒளி பிரகாசம் அடையும். அறநெறிப் பாட சாலைகள் அறநெறிப் பாடசாலையின் குறிக்கோள் வாசகமும் இதனையே எடுத்துக்காட்டுகின்றது.

"இளம் இந்துச் சிறார்களின் இதயங்களில் உள்ள
தெய்வீகத் தாமரையை மலரச் செய்து அவர்களின்
ஆளுமையையும் திறமைகளையும் மலர்ந்து விரிவடையச்
செய்கின்ற கல்வியை வழங்குதல்"

தெய்வீகத் தாமரை எல்லோர் உள்ளங்களிலும் இருக் கிறது இதனை மலர்ந்து விரிவடையச் செய்வதன் மூலம் ஆன்மீக ஒளியைப் பிரகாசிக்கச் செய்யலாம்.

இன்றைய காலகட்டத்தில் நிறைந்த உலகறிவு உள்ள வர்கள் இருப்பார்கள் ஆனால், அவர்களிடம் நற்குணம் என் பது மருந்துக்கும் கிடையாது. இன்றைய கல்வி உயிர்வாழ் வதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது தரமான பண்புகள் உடைய கல்வியாக அமையவில்லை.

மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப் பெண்பெற்று





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் புகுந்து உயர்ந்த பட்டங்கள் பெற்று உத்தியோகங் கள் பார்த்து விட்டால் எல்லா நலனும் பெற்று விடலாம் என்று எண்ணுகிறார்கள். ஒருவன் தான் பெற்ற கல்வியால் நல்ல பண்புள்ளவனாக வாழவில்லையெனில் அவன் பெற்ற பட்டங்களால் என்ன பயன்?

மாணவர்கள் மத்தியில் சிறுவயதில் இருந்தே ஒழுக்கம் போதிக்கப்படுகிறது. அவர்களை ஒழுக்கசீலர்களாக வாழ் வதற்கு அவர்களிற்கு நீதிநூல்கள் போதிக் கப்படுகின்றன. இந்து கலாசார அமைச்சி னால் தற்போது ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை (உலக நீதி) திருக்குறள் போன்ற நூல்கள் வழங்கப்பட்டு கட்டாயமாக போதிக்கப்படுகின்றன.

கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட் பம் போன்ற பாடங்களைக் கற்பித்தாலும் அவற்றுடன் மனித நேயப் பண்புகளையும் போதிக்க வேண்டும். குறிப்பாக 5 முதல் 16 வயது வரை உள்ள மாணவர்களிற்கு அறநெறிக் கல்வியை போதிப்பதன் மூலம் சமுதாயத்திற்குத் தேவையான நல்ல பண்புகளைக் கொண்ட மனிதர்களாக மாற்ற முடியும். இன்றைய சமூகத்திற்கு அதிகம் தேவைப்படுவதும் மனித நேயப் பண்புகளே.

இன்றைய இளைஞர்கள் சமூகப் பிறழ்வுகளிற்கு அடிமையாகிறார்கள் இதற் குக் காரணம் அவர்கள் சிறுவயதில் ஒழுங் காக அறநெறிக் கல்வியைப் பெற்றுக்கொள் ளாமையே. மாணவர்கள் சிறுவர்களாக இருக்கும்போது தூய உள்ளம் கொண்ட வர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் வளர வளர ஆசிரியர், பெற்றோர், சமூகம் மூலம் சரியான வழிகாட்டல் கிடைக்காத விடத்து தவறான பாதையை நாடிச் செல் கிறார்கள். அவ்வாறு தவறான பாதைக்குச் செல்லாது நல்ல வழிகாட்டிச் சமயக் கதை களைக் கூறி, அறப்பண்புகளைக் கூறி, நாயன்மார்களின் வரலாற்றைக் கூறி நல்வழிப்படுத்துபவை அறநெறிப்பாடசாலைகளே.

ஒவ்வொரு மனிதனுள்ளும் மனித மேம்பாடுகள் மறைந்திருக்கின்றன. அவை உள்ளே மறைந்திருப்பதால், மனிதர்களுக்கு அவை பற்றித் தெரி வதில்லை. மாணவர் களுக்கு மனிதப் பண்புகளை வெளிப்படுத்த உந்து சத்தியாக அறநெறிப் பாடசாலைகள் அமைகின்றன. தூய உணர்வுகளை வளர்ப்பதே உண் மையான கல்வியாகும். நற்குணங்களைப் பெறுவதுதான் கற்றுக் கொள்வதன் பயன்.

அறநெறிக் கல்வி மூலம் இந்துக் களின் செழிப்பான பண்பாட்டினையும் ஆன்மிக பாரம்பரியத்தினையும் இந்து சமய வாழ்க்கை முறைகளையும் ஞானி யர், சமய குரவர்களின் வாழ்க்கை முறை களையும் இவர்களுடைய அருட்பாடல் களையும் தற்காலச் சூழலுக்கு ஏற்ப அற நெறிப்பாடசாலைகளில் குழந்தைகளிற்கு வழங்கப்படுகின்றன. இவையே மாணவர் களின் வாழ்வை வளம் படுத்தக்கூடிய கரு வூலங்களாகும். இக் கல்வி குழந்தை களிற்கு ஒப்பற்றதோர் கல்வியமைப்பாகும். ஆழ்ந்து அகன்ற நுண்ணிய கருத்துக்கள் அனைத்தும் அறநெறிக் கல்வியில் இடம் பெறுகின்றன.

உலகக் கல்வி வாழ்வதற்கு என்றால் அறநெறிக்கல்வி வாழ்க்கைக்காகும். இந்த இரண்டும் இருந்தால்தான் சமூகத்தில் மனிதனாக தலை நிமிர்ந்து வாழமுடியும். உலகக் கல்வி மனிதனை புத்திசாலியாக் கும் அறநெறிக் கல்வி மாணவனை நல்ல பண்புள்ளவனாக்கும். ஒரு பறவை மேலே பறப்பதற்கு இரு சிறகுகள் தேவைப்படுவது போல ஒருமாணவனின் நலமான வாழ் விற்கு இருவித கல்வியும் தேவைப்படுகிறது.

தினமும் அறநெறிப் பாடசாலையில் வகுப்புத் தொடங்குமுன் ஆலயபூசை நடை பெறும். தொடர்ந்து பஜனை நடைபெறும். அடுத்து தியானம் நடைபெறும். ஆலய வழிபாட்டின் மூலம் தாழ்த்துச் சென்னியும் நினைக்க மட நெஞ்சும் தந்த தலைவனை வழிபட்டு அவனருள் பெறுகின்றோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் இசைப் பிரியன் அல்லவா? இசை வல்ல காந்தர்வர்களை குண்டலங்களாக அணிந்து இசையை நயக்கின்றான் இறை வன் எனவே நாமும் இசைபாடி இறை வனை வழிபடும்போது இறைவன் எமக் கருள் செய்வார்.

அறநெறிப் பாடசாலைகளில் நாயன் மார்களின் குருபூசைகள் நடைபெறுகின் றன. அவற்றில் சொற்பொழிவுகளும் நடை பெறுகின்றன. இதனால் மாணவர்கள் பயன் பெறுவார்கள் வருடாவருடம் மாண வர் மத்தியில் பேச்சு, கதாப்பிரசங்கம், நாட கம், நடனம், வில்லுப்பாட்டு, சொல்லாடல் போன்ற போட்டிகள் நடைபெறுகின்றன. மாண வர்கள் மத்தியில் இலைமறை காய் போன்று இருக்கின்ற திறமைகள் எல்லாம் வெளிக்கொண்டுவரப்படுகின்றன. இத னால் சிறந்த பேச்சாளர்கள், நடிகர்கள் உரு வாக வாய்ப்புகள் உண்டாகின்றன. வில்லுப் பாட்டு, கதாப்பிரசங்கம் போன்ற எமது பாரம் பரியக் கலைகள் புத்துயிர் பெறுவதற்கு அறநெறிப் பாடசாலைகள் ஒரு களமாக அமைகின்றன.

தேசிய ஆக்கத்திறன் போட்டியில் மாணவர்களிற்குக் கிடைக்கின்ற சான்றி தழ்கள் பெறுமதி வாய்ந்தவை. இவை இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்படு கின்ற சான்றிதழ்கள். இச் சான்றிதழ் களிற்கு பல்கலைக் கழக அனுமதிக்குப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. அறநெறி சார்ந்த தர்மாசிரியர் பரீட்சையில் சித்தி யடைந்த மாணவர்களிற்கு சமயபாட ஆசி ரிய நியமனம் வழங் கப்படுகின்றது.

அறநெறி இறுதிநிலைப் பரீட்சையில் சித்தியடைந்து பெறப்படுகின்ற சான்றிதழ் மிகவும் பெறுமதி வாய்ந்தது. அச் சான்றி தழிற்கு நேர்முகத் தேர்வில் கூட புள்ளிகள் வழங்குகிறார்கள். எனவே மாணவர்கள் அனைவரும் அறநெறிப் பாடசாலை களுடன் இணைந்து கல்வி கற்று நல்ல பண்புள்ளவர்களாக வாழ்வார்களாகுக.

**கணேசா அறநெறிப் பாடசாலை ஆரம்பித்த ஆண்டு - 2002ம் ஆண்டு**

| | | |
|---|---|---|
| **ஆசிரியர்கள்** | **திருமதி இ. இந்திராணி (பொறுப்பாசிரியர்)** | |
| | **திரு. பா. கலாவதி** | **செல்வி ஈ. நவிஷா** |
| | **பிரம்மஸ்ரீ ம. மகேந்திரசர்மா** | |
| **வருகைதரு ஆசிரியர்கள்** | **சிங்கனம் சிவசக்தி சயந்தன்** | |
| | **நடனம் செல்வி பி. தர்சினி** | |
| | **மிருதங்கம் பிரம்மஸ்ரீ க. வரதயா சர்மா** | |
| | **பண்ணிசை செல்வி. செ. சுவேதா** | |

**திறமைகள்**

- ✦ **2015ம் ஆண்டு தேசிய மட்டத்தில் மா. டிலான் கிருஷ்ணா முதலாம் இடம் (பொது அறிவு)**
- ✦ **2016ம் ஆண்டு தேசிய மட்டத்தில் நாவலரின் நீதித்துவம் முதலாம் இடம்**
- ✦ **2016ம் ஆண்டு சிறந்த பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டது**
- ✦ **2016ம் ஆண்டு திருமதி ஈ. இந்திராணி ஆசிரியர் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டது.**
- ✦ **2016ம் ஆண்டு தேசிய மட்டத்தில் கௌ. மாதுளன் இரண்டாம் இடம்**
- ✦ **2016ம் ஆண்டு தேசிய மட்டத்தில் தி. மணிமோகன் முதலாம் இடம்**
- ✦ **2016ம் ஆண்டு தேசிய மட்டத்தில் வி. டிசான் முதலாம் இடம்**
- ✦ **2017ம் ஆண்டு தேசிய மட்டத்தில் நி. கிருத்திகா கட்டுரை முதலாம் இடம் சி. சரன்யா கதாப்பிரசங்கம் 3ம் இடம்**
- ✦ **2018ம் ஆண்டு தேசிய மட்டத்தில் க. கனிமொழி கதாப்பிரசங்கம் கௌ. மகிழினி பேசுதல் சிறப்புப் பரிசு**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் வெற்றிப் பயணங்கள்



**மு.ஜனந்தினி**

மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
2ம் இடம் - 2019



**சி.தனோயா**

மாவட்ட மட்டம்
நீதிநூல் மனனம்
2ம் இடம் - 2019



**த.விஸ்ணவி**

மாவட்ட மட்டம் கதாப்பிரசங்கம்
3ம் இடம் - 2019



**ரி.டனுஷ்குமார்**

மாவட்ட மட்டம் பேச்சு
3ம் இடம் - 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் இந்துவாய் இருந்திடு மானிடா.....

பசிப்போர்க்கு உணவும் ரசிப்போற்கு கலையும்
வசிப்போற்குக் கொடுத்திடவே பொசிப்புடையதாகும்
நசிப்போற்குக் கரமாகி ருசிப்போற்கு விருந்துமிடல்
மசித்து மானிடத்தைப் புசிப்பதற்குச் சமமாகும்

விருந்தென்று சொல்லிநாம் அருந்திடக் கொடுப்பதும்
பெருந்திரள் மத்தியில் பேருரை நிகழ்த்தலும்
இருந்திட்டால் போதுமோ வருந்துவோற்கு அரு மருந்தோ
பொருந்திடும் வகையிலே தருந்துணைதான் வேண்டாமோ

ஜனனிப்போம் என்று நாம் எண்ணியே இருந்ததில்லை
மரணிப்போம் என்பதையே ஜனனத்தில் அறிந்துள்ளோம்
சயனிக்கும் வேளையிலும் பிறர் நலனை எண்ணிடில் நாம்
பயணத்தின் முடிவினிலே பரமனையே அடைந்திடலாம்

நன்றி மறக்கின்ற மானிலத்து மாந்தரும்
மன்றில் மட்டும் மனிதநேயம் உரைப் போரும்
வென்றுவிட்டோம் வாழ்வினை என்றெண்ணி மகிழ்ந்திடலாம்
செல்லுமிடம் அறிவாரோ சொர்க்கம்தான் இவர்க்குண்டோ?

பட்டமும் பதவியும் கிட்டுவது பெருமைதான்
எட்டவே முடியாத செல்வமும் செழுமைதான்
வட்ட முகத்தோடு வர்ணமும் அழகுதான் ஆனாலும்
இவற்றைச் சுட்ட இடத்தில்தான் சிவனார் ஆடுகின்றார் அறிவாரோ

வெண்கட்டி கூறுவது வெள்ளை நிறம் மட்டுமன்று
எண்ணத்தில் தோன்றுகின்ற எண்ணற்ற விடயமும் போல்
கண்ணெதிரில் தோன்றுவது கற்சிலை மட்டுமன்று
விண்ணின்று எமைக் காக்கும் வடிவமென்றே வணங்கிடுவீர்

அறியாமை உடையோராய் அவனியிலே சிலபேரைக்
குறிப்பிட்டுக் கூறிநாம் இழித்துரைப்பதுண்டு
அறியாமை அவ்வளவு இழிவன்று அவனியதில்
எதையும் அறிய முயற்சிக்காமையே மிகமிக இழிவாகும்

கோடிகள் குவித்திடவும் கோமான் ஆகிடவும்
நாடியே வந்திறையைப் பாடிப் பணிதல்விட்டு
தேடிய பிறப்பிலுயர் மானிடப் பிறப்பையீந்தான்
ஆடிய பாதநன்றி கூறியே பணிதல் நன்றாம்.

**வற்சலா வைரமுத்து**
பன்னாலை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மகிழ்ச்சியான உலகை உருவாக்குவோம்

**திருமமி பா.கலாவதி**
ஆசிரியர்,
கணேசா அறநெறி பாடசாலை

எல்லோருமே ஆனந்தமாக மனம் நிறைந்த மகிழ்வோடு வாழ விரும்புகின்றனர். அந்த ஆனந்தம் கிடைப்பதற்கு ஆனந்தத்தை உருவாக்கும் வகையில் அகமும் புறமும் அமைந்திருக்க வேண்டும். நாம் வாழும் சூழல் வேதனையும் துன்பமும் தருவதாக அமைந்திருந்தால் மகிழ்ச்சியோடு வாழ முடியாது. எம்மைச் சூழ நல்ல நிலைமை இருந்தாலும் எமக்குள் அதிருப்தியும், கோபமும் பொறாமையும் இருக்குமாயின் எம்மால் சந்தோஷமாக இருக்கவியலாது.

ஒவ்வொரு தனிமனிதனும் நல்ல முறையில் நற்பண்புகளுடன் வாழ்ந்தால், அந்தச் சமுதாயம் தீய செயல்கள் அற்றதாக அமைதியும் மகிழ்ச்சியும் கொண்டதாக இருக்கும். அந்த சமுதாயத்தில் வாழ்வோர் அச்சம், வேதனை போன்றவையின்றி நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழமுடியும்.

அத்தகைய ஒருநிலை இன்று எமக்குக் கிட்டாததாக ஆகிவிட்டது. கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள், அச்சந்தரும் பலகொடூர வன்செயல்கள் நடைபெறுவதால் அமைதியற்ற ஒரு சமுதாயத்தில் நாம் வாழ நேர்ந்துள்ளது.

இந்தப் பாவச் செயல்கள் யாரால் செய்யப்படுகின்றன?


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்த சமுதாயத்தின் அங்கமாக உள்ளவர்களால்தான் செய்யப்படுகின்றன. இவற்றை எவ்வாறு நடைபெறாது தடுக்கலாம்? ஏன் இவற்றைச் செய்வோர் உருவானார்கள்? இந்த வினாக்களுக்கு பல்வேறு விடைகள் கூறப்படுகின்றன. எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு எழுதுவது கடினமாகையால், பெரும்பாலோர் கூறும் ஒரு காரணத்தை மட்டும் இங்கு நோக்குவோம்.

இன்றைய இளைஞர்களிடம் துர்நடத்தைகள் அதிகரித்து விட்டன. இதனால் சமுதாயத்தில் தீயசெயல்கள் மலிந்து விட்டன. முன்னையவர்களிலும் பார்க்க இவர்கள் தீய ஒழுக்கமுடையவர்கள் ஆகியுள்ளதற்கு காரணம் அல்லது காரணங்கள் இருந்தாக வேண்டும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பார்கள். பிஞ்சு மனங்களில் பதிபவை கல்லில் எழுதியது போல் நிலைத்துவிடும். எனவே சிறுவயதில் நற்பண்புகளைப் போதிக்க வேண்டும். நல்ல வண்ணம் வாழ சிறுவர்களுக்குப் பெரியோர் முன்னுதாரணமாய் இருந்து பழக்க வேண்டும்.

முற்காலத்தில் பாலகர்களுக்கு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, திருக்குறள் என்பவற்றை கற்பித்து அதன் வழி வாழ்ந்து காட்டியதை இன்று நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டோம். இன்று வேடிக்கை விநோதங்களும் அசாதாரண செயல்களும் திரையில் தோன்றி குழந்தைகளைக் கூடுதலாக ஈர்க்கின்றன. கொலையும் சித்திரவதையும் செய்வது தவறென்ற எண்ணமே சிறுவர்களுக்கு ஏற்படாத நிலையொன்று உருவாகியுள்ளது. அத்தகையவற்றையே அவர்கள் பார்த்து மனதில் பதித்துக் கொள்கின்றனர். விதைக்கப்பட்ட தீய பண்புகள் வளர்ந்து அவற்றின் பயனை உலகிற்குத் தருகின்றன.

அப்படியானால் எமது சிறார்கள் நவீன உலகின் புத்தாக்கங்களுக்குப் பழக்கப்படாதவர்களாக பழைய முறைகளிலேயே வாழவண்டுமா? என்ற வினா எழலாம். அப்படியல்ல, எதனிலும் நல்லதை நாம் எடுத்துக் கொண்டு அல்லததை நீக்கி விடவேண்டும். எமது சிறந்த போதனைகளை இலத்திரனியலூடாகச் சிறுவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தால் அவர்களது மனங்களில் நல்ல குணாம்சங்கள் வேர்விடும். குழந்தைகளுக்கு விருப்பமான சித்திரத் தொடர்களில் வரும் கதைகள் நல்ல பண்பாட்டு விழுமியங்களைக் கூறுவனவாக அமைக்கப்பட வேண்டும். தீய செயல்களால் ஏற்படும் தீமைகளையும் அவர்களுக்கு விளங்கவைக்க வேண்டும். இதற்காகத் துறை சார்ந்த அறிஞர்கள் சேர்ந்து திட்டமிட்டு செயற்படவேண்டும். தீய பழக்கங்களை சிறுவர்கள் பழகாது பெரியவர்கள்தான் கவனிக்க வேண்டும். பெரியவர்கள் தீய பழக்கங்களை தம்மிடமிருந்து அகற்றினால்தான் பிள்ளைகளுக்கு நல்லவற்றைப் பழக்க இயலும்.

எதிர்கால உலகம் சீராகவும் சிறப்பாகவும் இருப்பதற்கு சிறுவர்களை நற்பண்புகள் கொண்டவர்களாக வளர்ப்பது அத்தியாவசியமாகும். அதற்கு வேண்டிவற்றைத் திட்டமிட்டு செயற்படுத்த நாம் ஒன்று கூடி முயற்சிக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கிய வாழ்வு தரும் யோகக்கலைக்கு யோகாசன கலாநிதி சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களின் பங்களிப்பு

திரு. ஆதித்தன்
யோகக்கலை ஆசிரியர்,
கணேசா அறநெறிப் பாடசாலை.

## முன்னுரை -

இந்திய நாகரிகத்தின் தொன்மையை சிந்துவெளி காலத்தினை மையமாக கொண்டு ஆராய்ச்சியாளர்கள் விளக்குவர். சிந்துவெளியில் இடம்பெற்ற ஆராய்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெற்ற யோகி போன்று அமர்ந்திருக்கும் தொல் பொருள் வடிவம் இதன் தொன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்து சமய புலத்தில் யோகம் என்பது தத்துவ முறை யாக விருத்தியுற்று இருப்பினும் அது ஒரு கலையாக மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்து விட்டமை சிறப்பம்சமாகும்.

மேலும் இந்துசமய வாழ்வினூடாக வாழ்ந்து வாழ்க் கையின் அர்த்தங்களைப் புரிந்து கொண்ட ஞானிகள் , சித்தர் கள், நாயன்மார்கள் போன்றோர் உடல், உள மேம்பாட்டுக் குரிய உபாயங்களை வகுத்து இருக்கின்றார்கள். அவ்வாறு வகுக்கப்பட்டவற்றில் இன்று உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றிருக்கின்ற யோகாவும் ஒன்றாகும். விவேகத்தினை இடைவிடாது பயில்வதே அறியாமையை ஒழிப்பதற்கான வழி யாகும் என்பது பதஞ்சலி முனிவரின் சிந்தனையென அறிய முடிகின்றது. இந்த விவேகத்தினை நாம் யோகப்பியாசத்தி னால் பெற முடியும்.

யோகம் என்பது “இணைதல்” என்ற பொருளைத் தருவ தாக சமஸ்கிருத மூலங்கள் குறிப்பிடுகின்றன. யோகத்தின் மூலம் ஜீவாத்மா (ஆன்மா) பரமாத்மாவோடு (இறைவன்) இணைவதாக அறியப்படுகின்றது. இறைவனை அடையும் நான்கு மார்க்கங்களான சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றில் யோக மார்க்கம் மூன்றாவது இடத்தை வகிக் கின்றது. மேலும் யோகக்கலையானது சமய, இன, மொழி பேதத்துக்கு அப்பாற்பட்டு நமது வாழ்க்கையை ஆரோக்கிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக வாழ வழி காட்டுகின்றது. யோகாசனம் என்றவுடன் அனைவரும் ஆன்மீகத்தேடல் உள்ளவர்களும், துறவியாகி செல்பவர்கள் மட்டும் பயிலும் கலை என்றும், நோயாளர்களும், உடல் ரீதியான குறைபாடுகள் உள்ளவர்களும் மட்டுமே பயிலும் கலை என்ற தப்பான அபிப்பிராயத்தினைப் பலர் கொண்டுள்ளனர்.

இக்கலை இலங்கையிலும் இலைமறை காயான சில நிபுணர்கள் மூலமும், யோகக் குருமார்கள் மூலமும் பயிற்றுவிக்கப்பட்டது. அத்தகையோரில் யோகாசன கலாநிதி சுவாமி சிதானந்த சரஸ்வதி யோகி அவர்கள் இக்கலையை கற்பித்தும் பயிற்றுவித்தும் இன்றைய இலங்கை வாழ் மக்களுக்கு யோகக்கலை பற்றிய அறிவை வெளிப்படுத்தியவர்களுள் ஒருவராக விளங்கினார். இலங்கைத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் செயற்பட்ட, அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபத்தின் ஸ்தாபகரான சுவாமிகள், இந்த யோகாசன கலையினை அனைவரும் கிரமமாக பயின்று வரும் போது உடல் ஆரோக்கியமாக இருப்பது மட்டுமன்றி உள்ளமும் அமைதியடைந்து, செயற்படும் என்ப தனை நடைமுறை வாழ்வில் வாழ்ந்து காட்டி, அனைவருக்கும் முன்னுதாரணமாக திகழ்ந் துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி அவர்கள் இருந்து ஆசனப் பயிற்சிகளை மக்களுக்கு வழங்கிய காலப்பகுதி மிகவும் மக்கள் உளரீதியாகவும், உடல் ரீதியாகவும் யுத்த நெருக்கடிக்கு உட்பட்டு தமது வாழ்க்கையினை நடாத்தி வந்தார்கள். அந்த சூழ்நிலையில் சுவாமி அனைவரும் ஆனந்தமாகவும், நீண்ட காலம் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு உரிய நுட்பங்களை தனது மாணவச்செல்வங்கட்கு வழங்கிச் சென்று இருக் கின்றார்.

அக்காலப்பகுதியில் இலங்கையில் சுவாமிகள் யோகக்கலையின் மகிமையை உணர்ந்து அதனை நாடு முழுவதும் பரப்ப தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவராவார். தற் காலத்தில் குறுகியகால யோககலையினைப் பயின்றுவிட்டு அதனை மக்களுக்கு கற்பிக்கும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபடுகின்றனர். ஆனால் அதன் நுட்பங்களையும், ஆன்மீக ரீதியாகவும் உணர்வு பூர்வமாகவும் உணர்ந்து பழகியவர்கள் இல்லை என்றே கூற முடியும்.

ஆனால் சுவாமி அவர்களால் அனுபவரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் உணர்ந்து வழங்கப்பட்ட அந்த யோகாசன வழிமுறைகளை இன்றைய தலைமுறை அறிந்து அதன் பலனை அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல் காரணமாக அவர் அருளிச்சென்ற “யோகக் கலையின் தத்துவ விடயங்களை இவ்விடத்தில் ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமானது என்று கருதுகின்றேன்.

**அட்டாங்க யோகம்**

❖ அட்டாங்க யோகத்தில் எட்டுவகை உண்டு. அதில் முதலாவதாக கூறப்படுவது இயமம் ஆகும். இயமம் எனப்படுவது ஒழுக்கமாக இருக்க நினைப்பதே ஆகும். யாருக்கும் இம்சை புரியாமை, சத்தியத்தைக் கடைப்பிடித்தல், களவு செய்யாமை, புலன்களை அடக்குதல், பொருளாசையின்றி வாழ்தல் ஆகிய இயமம் என்ற வரையறையினுள் அடங்கும். இவற்றில் ஈடுபட எமக்கு முதலில் எண்ணத்தில் தூய்மை வேண்டும் என்பதே ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நியமம் என்பது தூய்மை (உடல், உள்ளம்), திருப்தி, விரதங்கள் மேற்கொள்ளல், வேத பாராயணம், இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல் (சரணாகதி), தற்போது காணப்படும் மனவிகாரங்களுக்கும் இவை இரண்டையும் கடைப்பிடிக்காமையே காரணம் ஆகும். மனவிகாரமானது தனி மனிதனைப் பாதிப்பதை விட அந்த சமூகத்தையே வேருடன் சாய்த்து விடும்.

❖ இவற்றில் மூன்றாவது படிநிலையில் உள்ள ஆசனத்தினை தியானத்திற்கும், உடல் தூய்மைக்கும் உட்காரும் முறை என குறிப்பிடலாம். இது உடல், உள ஆரோக்கியம் இரண்டினையுமே மேம்படுத்துவதற்குரியதாகும்.

❖ பிராணாயாமம் - ஜீவசக்தியை ஒழுங்காக நடத்துதல் என குறிப்பிடலாம்.

❖ பிரத்தியாரம் - மனதை பிற பொருட்களில் செல்லவிடாது தடுத்தல்

❖ தாரணை - மனதை ஒரு வழிப்படுத்துதல்

❖ தியானம் - ஒன்றையே சிந்தித்தல்.

❖ சமாதி - மனநிலைக்கு அப்பாலான ஒன்றிணைந்த நிலை.

உடலினை உள்ளம் அடக்கியாளும் அளவுக்கு உள்ளத்தை உடல் அடக்கியாள முடியாது. ஆகவே தான் இயம, நியமங்களை ஞானிகள் முதற்படி ஆக்கினர்.

**சுவாமிகளும் ஆசனங்களும்**

எல்லா ஆசனங்களும் உடல், மன விருத்திக்கு உகந்தவை ஆகும். முக்கியமாக இன்றைய காலகட்டத்திற்கு தேவையான ஆசனங்களை சுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். இவை நாளாந்த லௌகீக வாழ்க்கை வாழ்பவர்களுக்கு போதுமானவை ஒவ்வொரு ஆசனங்களும் ஆரோக்கியத்தை தருவது விஞ்ஞான ஆராட்சி மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

சூரியன் காலையில் உதிக்கும் போது மரம், செடி, கொடி,புல், பூண்டுகள் மலர்கின்றன. பட்சிகள் ஆடிப்பாடி பறந்து மலர்கின்றன. அதே போன்று மனிதனும் மலர்கின்றான். உடல் மலர்ந்தால் நல்ல சுறுசுறுப்பு ஆரோக்கியம் கிடைக்கும். மனிதனை வாழ வைப்பதற்கு யோகிகள் தங்கள் விஞ்ஞான ஆராட்சியில் கண்டு பிடித்த முறைதான் இந்த ஆசனம். சூரியன் எவ்வாறு உலகத்தினை ஒளிமயமாக்குகின்றதோ அவ்வாறே எமது உள்ளத்தில் இருக்கும் ஒளிக்குழம்பு மனத்தை ஒளியாக்கி எங்கள் வாழ்க்கையை ஒளியாக்குகின்றது.

இறைவன் படைத்த அனைத்து உயிர்களும் இன்பத்தினையே நாடுகின்றன. இன்பம் வேண்டாம் என்று கூறும் ஓர் உயிர்தனையும் நாம் இவ்வுலகில் காண முடியாது. இந்த இன்பத்தை நாம் பெற வேண்டுமானால் நாம் உடலை ஆரோக்கியமாக வைத்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தான் ஆனந்தமாகவும், அமைதியாகவும் நீண்ட ஆயுளுடன் அனைவராலும் போற்றப்பட வாழ வேண்டும் என்றே விரும்புகின்றான் உடல் உழைப்பு இன்றி தேக ஆரோக்கியம் எமக்கு கிடைக்காது. இயற்கை கூட எந்த நேரமும் இயங்கி கொண்டு இருப்பதன் இரகசியம் என்ன? இயக்கங்கள்தான் ஆரோக்கியத்தின் இருப்பிடம். இவற்றையெல்லாம் நன்கறிந்த எமது முன்னோர்கள் இதற்கென்று யோகாசனம் என்ற அரிய சஞ்சீவியை எமக்கு ஆக்கித் தந்துள்ளனர். இவ்வாறான அரும்பெரும் கலையைக் குருவின் மூலமே சகலரும் கற்று வந்தனர் என்பது உண்மை .

சுவாமிகள் ஆசன நிலைகளுடன் மூச்சுப்பயிற்சியினையும் இணைத்து செய்யும்போது யோகப்பயிற்சியின் தத்துவங்களை உணர்ந்து ஆரோக்கிய வாழ்வு வாழும் நுட்பத்தினை மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினார். இலகு ஆசனங்களை சுவாமிகள் தெரிந்தெடுத்து வெளிப்படுத்தியமை மிகமுக்கியமாக குறிப்பிடக்கூடிய அம்சம் ஆகும். மேலும் உடல், உள




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீக ஆரோக்கியத்துக்கென பிரத்தியேக ஆசனங்கள் சுவாமிகளால் குறிப்பிட்டு காட்டப்படு கின்றது. மேலும் சுவாமிகள் ஆசன ஒழுங்குகளை இரண்டு வகுதிகளாக வகைப்படுத்தி பயிலுநர்கட்கு இலகுவாகவும் ஒழுங்கு முறைகட்கு இணங்க மாற்று ஆசனங்களையும் உட்புகுத்தி உள்ளார்.

**ஆசனங்களின் நிலைகள்**

ஆசனங்களை நான்கு வகையாக பிரிக்கலாம். அவையாவன: படுத்திருந்து செய்தல், இருந்து செய்தல், நின்று செய்தல், காலை மேலே உயர்த்தி செய்தல் என்பனவாகும். பொது வாக முன்வளையும் ஆசனங்களை செய்யும் போது சுவாசத்தை வெளியேற்றியும் பின் வளையும் ஆசனங்களை செய்யும் போது சுவாசத்தை உள் இழுத்தும் செய்தல் வேண்டும்.

இவர் சூரிய நமஸ்காரம் முதற்கொண்டு ஏனைய பல ஆசனங்களை தான் செய்து காட்டி, தமது மாணவர் திறம்படப் பயின்று கொள்ள சிரத்தையாக செயற்பட்டார். அவ் ஆசனங் கள் வருமாறு:-

01. சூரிய நமஸ்காரம்
02. பத்மாசனம்
03. சித்தாசனம்
04. வச்சிராசனம்
05. புஜங்காசனம்
06. தனுராசனம்
07. பஸ்சிமோத்தாசனம்
08. ஹாலாசனம்
09. மயூராசனம்
10. சர்வாங்காசனம்
11. பஸ்சிமோத்தாசனம்
12. சிரசாசனம்
13. விபரீதகரணி
14. அர்த்த மத்சேந்திராசனம்
15 யோகமுத்திரா
16. திரிகோணாசனம்
17. ஒட்டியானா
18. சாந்தியாசனம்
19. பிராணாயாமம்

**பிராணாயாமமும் யோகமும்**

சுவாமி அவர்கள் தனது அறிவுரை என்ற அருள்மொழியில் பின்வருமாறு கூறி யுள்ளார். "எனது அன்புச்செல்வங்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் நான் வேண்டிக் கொள்வது யாதெனில், இந்த ஆத்மீக வாழ்க்கையில் நீங்களும் ஒத்துழைத்து உங்கள் ஒவ் வொருவரின் உள்ளங்களிலும் படர்ந்து நிற்கும் எண்ணங்கள், கவலைகள், உங்களை பீடித்து பின்தொடர்ந்து வரும் நோய்கள், இன்னோரன்ன வேதனைகளில் நின்று வில கிக்கொண்டு மனத்தூய்மையுடனும் உளசாந்தியுடனும் வாழ்வை வழிநடத்த சித்த சுத்தி பெற வழி தேடுங்கள். இதனால் உங்கள் பின் சந்ததிகளும் நல்வழி ஆரோக்கிய நிலையில் வளர்ந்து வர வழி பிறக்கும்" இதிலிருந்து அவரது உள்ளக்கிடக்கையினை நாம் புரிந்து கொள்ள முடியும். இது சுவாமிகள் எழுதிய "ஆத்மீக வாழ்வு நல்கும் யோகக்கலை" என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய நவீன உலகில் இயந்திரமயமான அவசர வாழ்க்கையில் உணவு, ஒழுக்கம், உழைப்பு இருந்தால் போதாது. இதனால் மட்டும் நோய்களை தடுக்க இயலாது. இவைகளுக்கு சக்தி வாய்ந்த ஒரு கவசம் வேண்டும். அந்த கவசம் தான் இந்த யோகாசனம், பிராணாயாமம் என்பன ஆகும்.

**நூல்களின் ஊடாக சுவாமியின் கருத்துரைகளும் பங்களிப்பும்**

யோகாசன கலாநிதி சுவாமி சிதானந்த சரஸ்வதி யோகி அவர்களைப் பற்றி பல புத்தகங்கள் அவரால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் தற்காலத்தில் யோகக்கலையின் அடிப்படை விடயங்களில் மாறுபட்ட விடயங்களை உட்புகுத்தி அதனை நவீன யோகாவாக மக்களுக்கு வழங்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது. இந்தநிலையில் யோகக்கலையின் அடிப்படை தத்துவங்களையும் அதனை மக்கள் இலகுவில் விளங்கிகொள்ளும் வகையில் தெளிவுபடுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. பதஞ்சலி முனிவரால் அருளிச் செய்யப்பட்ட யோகாசன நுட்பங்களை மாறுபாடின்றி அளிக்கை செய்ய இது பயன்படும் என்று கருதுகின்றேன்.

**உடற்பயிற்சி யோகப்பயிற்சி வேறுபாடுகளும், சுவாமியின் பங்களிப்பும்**

சாதாரண உடற்பயிற்சிகள் பொதுவாக உடல் நலனை அடிப்படையாக கொண்டவையாகத் திகழ்கின்றன. ஆனால் யோகாசனம் என்பது மனத்திலே ஏற்படும் சஞ்சலம், குழப்பம், கலக்கம், சோர்வு, விரக்தி, போன்ற கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கவும் மனவலிமை, மன ஆரோக்கியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதும் ஆகும். இதுதான் சாதாரண உடற்பயிற்சிக்கும் யோகாசனத்திற்கும் இடையே காணப்படும் பாரிய வேறுபாடு ஆகும். நல்ல ஆரோக்கியமாக இருக்க பல்வேறு நவீன அப்பியாச அமைப்புக்கள் தசைநார்களை விருத்தி செய்ய அமைந்துள்ளன. இயந்திரகதியிலான அசைவுகள் மூலம் பௌதீகப்பயிற்சியாளர் இத்தசைநார்களை விருத்தி செய்ய உதவுகின்றார். தசைநார்கள் வேகமாக இயங்கு வதால் இருதயம், சுவாசப்பை என்பன வேகமாக தொழிற்படுகின்றன. இதனால் உடற்பயிற்சி செய்பவருக்கு விரைவில் களைப்பு உண்டாகி உளரீதியில் இறுக்கம் ஏற்படுகின்றது. யோக ஆசனங்களில் தசைகளிலும், நரம்புகளிலும் மேலும் உடல் அமைப்பிலும் அமைதியான முன்னேற்றம் காணப்படும். யோகாசனத்தில் அசைவுகள் மெதுவானவையாகவும், ஒழுங்காகவும் நடைபெறும். அத்துடன் அவை பிராணசக்தியை சேமிக்கும் தன்மை உடையவை. யோகாசனங்களில் இன்னொரு தனித்துவமான நாளமில்லா சுரப்பிகளின் தொழிற்பாடுகளை சரிவர இயங்கவைத்து புத்துயிரூட்டும் செயற்பாடு இடம்பெறுகின்றது. மேலும் ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்வதுடன் ஆளுமை கவர்ச்சிகரமானதாகவும் மனங் கவர்வதாகவும் அமைகின்றது.

ஆனால் இயமம், நியமம் ஆகியவற்றினை கடைப்பிடித்தாலேயே யோகக்கலையின் முழுமையான பலனைப் பெறமுடியும். பகவத்கீதையில் பகவான் கண்ணபிரான் யோகத்தினைப் பற்றி கூறுகையில் "அர்ஜுனா! தபஸ்விகளைக் காட்டிலும் நித்திய நைமித்திய காமிய கர்மங்களைச் செய்பவரைக்காட்டிலும், நியமா நியமாதிகளுடன் கூடிய யோகப்பியாசம் செய்யக்கூடிய யோகியானவன் சகல விஷயங்களிலும் உத்தமனாக திகழ்கின்றான்." இவ்வாறு பகவான் அர்சுனனுக்கு மட்டுமல்ல உலகம் முழுவதிலும் வாழும் மனிதர்கள் அனைவருக்கும் உபதேசித்துள்ளார். அத்துடன் உலக நிகழ்ச்சிகளினால் பாதிக்கப்படாத ஓர் உயர்ந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை யோகாசனம் செய்வதன் மூலம் மனிதன் பெற முடியும்.

**உடம்பைப் பற்றிய உண்மைகள்**

உடலானது என்றும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு யோகத்தை விட்டால் வேறு சாதனமேயில்லை என்றும் கண்ணபிரான் கூறியுள்ளார். மேலும் உலகப்பொதுமறை யான திருக்குறளும், யோகக்கலையும் சமய, இன, மொழி பேதத்துக்கு அப்பாற்பட்டது. திருக் குறள் மனிதன் வாழும் வழியை வகுத்து தந்தது. யோகாசனம் வாழ்க்கையை ஆரோக்கிய மாக வாழ வழி காட்டுகின்றது. திருமூலர் "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்" என்று குறிப்பிடுகின்றார். இப்புற உடல் அன்னமய கோசத்தினால் உருவாக்கப்பட்டது. இந்த உடம்பு பற்றி ஔவையார் குறிப்பிடுகையில், "உடம்பினாலன்றி உணர்வு தானில்லை உத்தமனை காண்" என்கின்றார். பதஞ்சலி யோக சூத்திரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாவங்களின் ஊடாக ரஸங்களின் வெளிப்பாடு

**செல்வி ச.தர்சினி**, நடன ஆசிரியர்,
கணேசா அறநெறிப் பாடசாலை

**ஞா**னவடிவாகிய இறைவன் தன் அருட்சக்தியால் உலகில் உயிர்களைப் படைத்து அவை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருட்களின் முறையே அடைவதற்காக வேதம், ஆகமம், புராணம், அறுபத்துநான்கு கலைகள் ஆகியவற்றை ஆக்கி அருளினார். அந்த வகையில் அறுபத்து நான்கு கலைகளுள் தலைசிறந்து விளங்குவதும் அனைவராலும் போற்றிப் புகழப்படுவதும் பரதக்கலையே ஆகும்.

இத்தகு பார்போற்றும் பரதக்கலையை பாமரர் முதல் படித்தவர் வரை பயின்று பட்டம் பெறும் பாங்குடன் பரத முனிவர் படைத்தார். இப் பரத நாட்டியமானது மானுட ஆன்மாவின் உந்துதலால் உடலுறுப்புக்களால் உருவெடுக்கும் அழகியல் கோலங்களில் ஆடல் கோலங்கள் சிறப்பானவை இதில் ப- பாவம், ர - ராகம், த - தாளம், ம் - ஸ்ருதி இவை நான்கும் சேர்ந்ததே பரதம் எனக் குறிப்பிடப்படுகிறது. இப் பரதநாட்டியம் முக்கிய அம்சங்களில் ஒன்றான பாவங்களின் ஊடாகவே பரத நாட்டியத்தில் ரஸம் வெளிப்படுத்தப்படுகிறது.

பாவத்திலிருந்து இரஸமும் இரஸத்திலிருந்து பாவமும் உண்டாகின்றன. இரண்டும் ஒன்றேதான் என பரத முனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

